Koviloor Digital Library

உ

சிவமயம் - பொதிகாசலம்

'பொக்கிஷம்' எனும் சமய ஆன்மீகச் செய்திகள்

பாகம் - 1

ஸ்ரீ பஞ்சாட்சரம்

பீமரத சாந்தி விழா மலர்

ஆடி 22-ம் தேதி (07.08.2018) செவ்வாய்க்கிழமை

Acc. No. 30177
2-6

Koviloor Digital Library

பீமரத சாந்தி விழா நாயகர், நாயகியர் மற்றும் குடும்பத்தினர்கள்

Koviloor Digital Library

2-6

உ

சிவமயம் - பொதிகாசலம்

'பொக்கிஷம்' எனும் சமய ஆன்மீகச் செய்திகள்

பாகம் - 1

ஸ்ரீ பஞ்சாட்சரம்

பீமரத சாந்தி விழா மலர்

ஆடி 22-ம் தேதி (07.08.2018) செவ்வாய்க்கிழமை

A. No. 3017
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library

2-6

உ

சிவமயம் – பொதிகாசலம்

நூல் விளக்கக் குறிப்பு

நூல்	:	**'பொக்கிஷம்' எனும் சமய ஆன்மீகச் செய்திகள்**
பொருள்	:	வழிபாட்டுப் பயன்களும் பொருட்களும்
மொழி	:	தமிழ், ஆங்கிலம்

நூலினை வெளியிட்டு ஆசி வழங்குவோர் :

ஸ்ரீ குருநாதர் 'விகாஸ் ரத்னா' சிவஸ்ரீ **அண்ணா** அவர்கள்
ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பூஜை
ஸ்ரீ கற்பக விநாயகர் வேதாகம வித்யாலய நிறுவனர் & தலைமை ஆசிரியர்
நிறுவனர், சிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி

தொகுப்பாசிரியர் :

'சிவாகம ரத்னம்' 'அகஸ்த்யம்' சிவஸ்ரீ **K. செல்லமணி பட்டர்**

வெளியீடு :

ஸ்ரீ அகஸ்திய குடீரம்
48/44, வடக்கு மாட வீதி, விக்கிரமசிங்கபுரம் – 627 425
Cell : 99521 57265, 86084 52931

வெளியீட்டிற்குத் துணை :

K. முத்துக்கிருஷ்ணன் (எ) கணேஷ் குருக்கள்
குருக்கள், லண்டன் ஸ்ரீ முருகன் கோயில் பூஜை, லண்டன் (அம்பை)

வெளியிடும் இடம் :

ஸ்ரீ கோமதி அம்பாள் சமேத ஸ்ரீ சங்கரலிங்க சுவாமி திருக்கோவில்,
சின்ன சங்கரன் கோவில், அம்பாசமுத்திரம்.
(வேல் சாமி ஆடிட்டோரியம், அம்பை)

வெளியிடும் நாள் : ஆடி 22-ம் நாள் (07.08.2018)

பக்கம்	:	200 (102 + 98)
பிரதிகள்	:	500
அச்சிட்டோர்	:	கோமதி பிரிண்டர்ஸ், அம்பை
விலை	:	அன்புடனே படிப்பது

Koviloor Digital Library

ஸ்ரீ சதாசிவ மூர்த்தி

ஸ்ரீ கண்ட குரு



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

Koviloor Digital Library

பிள்ளையார்பட்டி குருநாதர் விகாஸ்ரத்னா Dr. ஸ்ரீ அண்ணா அவர்கள்
தலைமையில் நடைபெற்ற காசி, ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத
ஸ்ரீ காசிவிஸ்வநாத சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேகம் நிகழ்வு (படங்கள்)







Koviloor Digital Library

ஸ்ரீ காசிவிஸ்வநாத சுவாமி, விமானம், யாகசாலை மற்றும்
கும்பாபிஷேக திருக்காட்சி தரிசிக்கும் பக்தர்கள்

Koviloor Digital Library

உ

சிவமயம் – பொதிகாசலம்

அகஸ்தியர் துதி

'தண்டகவ னத்துஉறைதி'
என்றுஉரைத ரக்கொண்டு
உண்டுவரவு, இத்திசை
எனப்பெரிது உவந்தேன் ;
எண்தகு குணத்தினை !
எனக்கொடுஉயர் சென்னித்
துண்டமதி வைத்தவனை
ஒத்தமுனி சொல்லும். – கம்பராமாயணம்.

தாமிரபரணி துதி

பாரிலே நமக்கொருவர் சரியோ தென்றற்
பருவத்தில் வருதாம்ப்ர பர்ணியாற்று
நீரிலே மூழ்கிவினை யொழிந்தேஞ் சைவ
நெறியிலே நின்றுநிலை பெற்றேஞ் சிங்கை
யூரிலே குடியிருந்தே மெமது கீர்த்தி
யுலகமெலாம் புகழ்ந்தேத்த வுலகமாதின்
பேரிலே கவிதையெல்லாஞ் சொன்னேஞ் சொன்னேம்
பிறப்பிலெழு பிறப்பு மறப் பெறுகின்றேமே.
– சிங்கை அருள்திரு. நமச்சிவாய கவிராயர்

காசி ஸ்ரீ விசுவநாத சுவாமி ஆலய கும்பாபிஷேகம் செய்தருளிய ஸ்ரீ குருநாதருக்குச் சமர்ப்பணம்

"காசிநகர்க்காளுமையான கடவுளர்க்கொரு
நேசமுடன் நிமலரானவாசிரியர் செய்தளித்த
பூசைமிகு திருவடித் தாமரைக்குப் போற்றியோர்
வாசமிகு தமிழ்ச் சொல்லால் வழங்குவித்தோம்".

பூங்கவிதை

காசிக்கு நிகர் காசி இதனை அன்புடனே நாளும்
நேசித்தவரெங்கள் தலைவரிடமே ஞானம் பல
யாசித்தவர் பலர் ! நாளில் நேயத்துடணவு நித்தம்
போசித்தே ஞானவமுதூட்டும் விந்தையாளரிவர்ச் சொல்
லாசிக்கே (Logic) பல்லுலகமேங்கி நிற்கும் சித்தாந்தத்துரை
பேசித்தேற்ற இவரைவிட யாவருண்டு? ஞாலம் தனை
வாசித்தே வழியறிய வந்து நிற்குமிவர் பால் அருகில் நீ

Koviloor Digital Library

வா ! சித்து நாம் புரிவோம் எனக் 'கண்பார்க்கும்' இவர் கால்
தூசிக்கும் மகிமையுண்டு வாழ்நாளிவர் பற்றிப்
பேசித்திரிந்து பிறப்பறுப்போம் ! இறைப் பிஞ்ஞகனொரு
வேசத்திலிவர் போல் வெளியில்வர நம்பவமறுக்குங்
காசித்திருநர் வாழ்ப் பண்டிதர் பெருங் கூட்டத்தார்
யோசித்திருந்து உவமையிலாக் 'கும்பாபிஷேக'த்
தேசிகரிவரெனவே தீர்மானித்து நடத்துவிக்கத் திருவருளை
யாசித்தே 'விசுவேசர்' திருமுன்னர் வேண்டினர் நீறு
நேசித்தே 'நித்திரையாளுமான்மா' காதிலே தம்மோங்கார
யோசையொலி உரைத்திருப்பர் உவகையினால் நாளு முடுக்கையடித்து
ஆசிசெய்ப் பயிரவ ருரை யுமிட முலகம் போற்றும் மருதன்குடி
பூசித்திருந்த குருநாதர் பண்டிதரொலி கேட்டு யாம்
வாசித்திருப்போம் ! மறையாதி யாகமங்கள் மனமிகு யாகசாலை
மாசிலாவாசிரியரொரு தலைமையின் கண் பூவுலகத்
தாசிலா வாதிசைவரா மந்தணரோடு பலரும் நாத, கீத
வோசைச் சொல்லாங்கு ஓம்புவித்த செய்கையினைப்
பாசங்களைவார் மகிழ்ந்திருந்து தென்னாட்டுக் 'கற்பகம்'
ஆசையுற எந்நாட்டிற்கு வந்ததோ ! என மகிழீசர் கங்கை
ஓசையுடன் மனிதம் புனிதமாக்குமவள் செய்கை
தோசமுற வந்ததனா லவள்பாங்கே கருணையுடன்னீ
நேசமுடன் 'தாமிரபரணி' நதிலாடி தம்முடற்கரும்
பாசமானதைப் போக்குவாய் என்றோத ! யாதலினாற்
கூசையுடன் வந்தயவள் திருமேனி பொலிவுற்றுநம்
ஈசனவர்க்கிடமான 'பாவநாச' ப்படித்துறையில் பாவமானது
நாசமானதாற் 'பாவநாசினி' என்ற பெயரிதனாலே வருணிக்குக்
கோசையுடனே வந்ததாம் பலநாள்க் கும்பமுனிக்கு
தாசனென நாம் வழிபாடாற்றி யுலகம் வாழச் சைவம் வாழ
ஆசையுடனே ஆசிரியர்பதம் பணிந்தோம் அன்பிதுவே !!

ஸ்ரீ குருநாதர் திருவடியில் அழுந்தும்,
K. செல்லமணி பட்டர், விக்கிரமசிங்கபுரம்

Koviloor Digital Library

உ

சிவமயம் – பொதிகாசலம்

பீமரத சாந்தி தம்பதிகளின் வாழ்க்கைக் குறிப்பு

விழா நாயகர்	:	சிவஸ்ரீ **M. கைலாச பட்டர்** அவர்கள்
விழா நாயகி	:	திருமதி. **K. நாகலட்சுமி** அவர்கள்
தந்தையார்	:	ஸ்வர்க்கஸ்ரீ **R. முத்துசுவாமி பட்டர்** அவர்கள், அம்பாசமுத்திரம்
தாயார்	:	ஸ்வர்க்கஸ்ரீ **M. அகிலாண்டம்** அவர்கள்
மாமனார்	:	ஸ்வர்க்கஸ்ரீ **கிருஷ்ணக் குருக்கள்** அவர்கள், பிள்ளையார்பட்டி
மாமியார்	:	ஸ்வர்க்கஸ்ரீ **முத்தம்மாள்** அவர்கள்
மகவுகள்		
மகள்	:	திருமதி. **K. நித்யகல்யாணி (எ) செல்வி**
மாப்பிள்ளை	:	சிவாகமரத்னம் சிவஸ்ரீ **S. கல்யாணசுந்தர பட்டர் (எ) சிவா**
பேரன்	:	**K. சிவசுப்பிரமணியன் (எ) ராஜேஷ்,** வி.கே.புரம்
பேத்தி	:	**K. கற்பக விசாலாட்சி (எ) அட்சயா,** வி.கே.புரம்
மகன்	:	சிவாகமரத்னம்,
		சிவஸ்ரீ **K. முத்துக்கிருஷ்ணன் (எ) கணேஷ் குருக்கள்**
		லண்டன் ஸ்ரீ முருகன் கோவில் அர்ச்சகர், லண்டன்
மருமகள்	:	திருமதி. **G. பொன்னம்மாள் (எ) சுதா,** M.Com.,
பேர்த்தி	:	**G. முத்து அகிலா (எ) நித்யஸ்ரீ**
பேரன்கள்	:	**G. கற்பகராம், G. கார்த்திக்ராம்**
பிறந்த ஊர்	:	கங்கை கொண்டான் (திருநெல்வேலி மாவட்டம்)
பூர்வீக சொந்த ஊர்	:	பாப்பான்குளம்
கல்வித் தகுதி	:	S.S.L.C., தீர்த்தபதி மேல் நிலைப் பள்ளி, அம்பாசமுத்திரம்
உத்யோகம் பார்த்தது	:	மதுரா கோட்ஸ், நூற்பாலை, விக்கிரமசிங்கபுரம்
ஆன்மீகப் பணி	:	துப்பாக்குடி, பாப்பான்குளம்
		சிவாலய கும்பாபிஷேகத் திருப்பணி
உடன் பிறந்தவர்கள்	:	சகோதரர்கள் மூவர்

சிவஸ்ரீ. **மு. ராஜாமணி பட்டர்** – ஸ்ரீமதி. **முத்துலெட்சுமி**

சிவஸ்ரீ. **மு. மரகத சுப்பிரமணிய பட்டர்** – ஸ்ரீமதி. **பிச்சம்மாள்**

அம்பாசமுத்திரம்.

மாப்பிள்ளை : சிவஸ்ரீ **இரா. ராஜ பாஸ்கர குருக்கள்**

ஸ்ரீமதி. **செல்வி முத்து கோமதி,** சுவாமிமலை.

சிவஸ்ரீ. **மு. நாகராஜ பட்டர்** – ஸ்ரீமதி. **சங்கரி,** திண்டுக்கல்.

Koviloor Digital Library

சகோதரிகள் இருவர்

ஸ்வர்க்கஸ்ரீ. **ராமநாத பட்டர்** - ஸ்வர்க்கஸ்ரீ. **ஆனந்தம்** சுசீந்திரம்.

சிவஸ்ரீ. **பா. ஹரிஹர சுப்பிரமணிய பட்டர்** - ஸ்ரீமதி. **கல்யாணி** திருச்செந்தூர்.

திருமணத் தேதி : 25.10.1972

திருமணம் நடந்த இடம் : பிள்ளையார்பட்டி

தற்போது வசிப்பிடம் : பிள்ளையார்பட்டி

மணிவிழா நடந்த இடம் : பிள்ளையார்பட்டி

பீமரத சாந்தி நடைபெறும் இடம் : சின்ன சங்கரன்கோவில், அம்பாசமுத்திரம்

பீமரத சாந்தி நடைபெறும் நாட்கள் : 06, 07.08.2018 (ஆடி 21, 22)

Koviloor Digital Library

பீமரத சாந்தி தம்பதிகளுக்கு வந்த ஆசிச் செய்திகள் & வாழ்த்துக்கள், நூலுக்குத் தந்துள்ள கட்டுரை மலர்கள்

அருள் வாழ்த்துரைகள்

1. திருக்கைலாய பரம்பரை செங்கோல் ஆதீனம் 103வது குரு மஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்திஞான பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
2. பிள்ளையார்பட்டி குருநாதர் ஸ்ரீ அண்ணா அவர்கள்
3. நாராயண ஆசிரமம் ஸ்ரீ கோவிந்தானந்தா சுவாமிகள் அவர்கள் சித்தா மற்றும் ஆயுர்வேதா வைத்தியசாலை
4. சீனி. சம்பத்குமார், அவர்கள், தலைவர், இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில் அறங்காவலர் மற்றும் நிர்வாகக் குழுவினர் சார்பாக
5. இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய சிவாச்சார்யார்கள்
6. சிவாகம வித்யா ரத்னம், சிவாம்ருத வார்ஷி K. ராஜப்பா சிவாச்சார்யார் அவர்கள், காஞ்சிபுரம்
7. சிவாகம சிரோன்மணி, சிவாகம கலாநிதி சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர், அவர்கள் திருப்பரங்குன்றம்
8. சிவாகம கலாநிதி, சிவாகமச் செல்வர், சிவாகம சித்தாந்த சரபம் சிவஸ்ரீ A.V. சுவாமிநாத சிவாச்சார்யார் அவர்கள், மயிலாடுதுறை
9. சிவாகம விசாரதா, சிவாகம பிரவீனா, சிவாகம ஞானத்திலகம், சிவஸ்ரீ A.S. சுந்தரமூர்த்தி சிவாச்சார்யார் அவர்கள், பெங்களூர்
10. வேதாந்த சிரோன்மணி, வேதாந்த் விசாரதா, முனைவர் தி.ஸா. சண்முக சிவாச்சார்யார், M.A., Ph.D., அவர்கள், சென்னை
11. சிவாகமரத்னம், சிவஸ்ரீ R. செல்வம் பட்டர் அவர்கள், தூத்துக்குடி
12. கயிலை, பிரம்மஸ்ரீ A.N. சோமாஸ்கந்த சர்மா, M.Phil., அவர்கள், இலண்டன்
13. சிவாச்சார்ய சிரோன்மணி, சிவஸ்ரீ சிவசச்சிதானந்த குருக்கள் அவர்கள், இலண்டன்
14. சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ பா. வசந்த் குருக்கள், அவர்கள், இலண்டன்
15. சிவாகமரத்னம், சிவஸ்ரீ. ரகு கமலநாத குருக்கள் அவர்கள், இலண்டன்
16. கற்பக விநாகர் டிரஸ்ட், இலண்டன்
17. ஜோதிட கலாநிதி, சிவஸ்ரீ. K.P. ராமநாத குருக்கள் அவர்கள், இலண்டன்
18. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, அவர்கள், இலண்டன்
19. சைவ முன்னேற்றச் சங்கம், U.K.
20. இலண்டன் தமிழ்ச் சங்கம்
21. தொண்டர் திலகம், வ.இ. இராமநாதன், அவர்கள், U.K.
22. கலாநிதி, பொன். பாலசுந்தரம், அவர்கள், இலண்டன்
23. சிற்பக் கலா ரத்னம், S. தேவசேனாபதி ஸ்தபதி, அவர்கள், சுவாமிமலை
24. திருமதி. பொன்ராஜ் புனிதவதி, அவர்கள், இலண்டன்
25. சைவ சமயத் தொண்டர், திருமதி. புவனேஸ்வரி நடராஜன் அவர்கள், இலண்டன்

Koviloor Digital Library

உ

சிவ சிவ

அழகிய திருச்சிற்றம்பலமுடையார் துணை

திருக்கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீனம்

103வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாச்சார்ய சுவாமிகள்

ஆதீன கர்த்தர் செங்கோல் ஆதீனம், பெருங்குளம் - 628 752. தூத்துக்குடி மாவட்டம்.

அருள் வாழ்த்துரை

அம்பாசமுத்திரம் சின்ன சங்கரன்கோயில் தலத்தில் 06.08.2018 மற்றும் 07.08.2018 அன்று சிவஸ்ரீ M. கைலாச பட்டர், திருமதி K. நாகலெட்சுமி தம்பதியரின் பீமரத சாந்தி விழா நடைபெறுவது அறிந்து மகிழ்கிறோம். சிவபெருமான் ஒரு உயிரை ஒரு உடம்பினுள் செலுத்தும் போது அந்த உயிரின் ஆயுள், போகம் போன்றவற்றையெல்லாம் நிர்ணயம் செய்தே பிறப்பைத் தருகிறான். விழா காணும் தம்பதியர் முப்போதும் திருமேனி தீண்டி சிவபெருமானுக்கு அகத்தடிமை செய்யும் சிறந்த புண்ணியச் சீலர்கள் என்பது அவர்கள் வாழ்வின் மூலம் அறிய முடிகிறது.

சிவநேயம் மிக்க விழாகாணும் தம்பதியர் நீடிய வாழ்வு பெறவும், விழா மலர் சிறக்கவும் நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய அழகிய திருச்சிற்றம்பலமுடையார் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சிவ சிவ

செங்கோல் மடம் ஆதீனம்
சிவம் சிவம்
பெருங்குளம்-628 752. தூத்துக்குடி மாவட்டம்.

Koviloor Digital Library

SIVASRI. K. PITCHAI GURUKKAL
Chief Priest, Sri Karpaga Vinayakar Temple,
Principal, Karpaga Vinayakar Veda Agama Vidhyalayam
Founder, Sivaneri Kazhakam
Secretary, Karpaga Vinayakar School,
Pillayarpatti – 630207 Sivaganga District, Tamilnadu, South India.

1.6.2018

வாழ்த்துரை

ஸ்ரீ கற்பக விநாயகர் திருவருளாலும் அருள்மிகு கோமதி அம்பாள் உடனுறை அருள்தரு சங்கரலிங்க சுவாமி திருவருளாலும் எமது சகோதரி திருமதி.நாகலெக்ஷ்மி மாப்பிள்ளை திரு.கைலாசம் ஆகியோரின் பீமரத சாந்தி விழாவில் "பொக்கிஷம்"என்ற நூல்வெளிவருவது அறிந்து மிக மிக மகிழ்ச்சி.

மணிவாசகப் பெருமான் "மூலபண்டாரம் வழங்குகிறான் வந்து முந்துமினே"என்பார்.

இந்த வெளியீடும் ஆன்மீக உலகிற்கு ஒரு சிறந்த கருவூலமாக திகழும் என்பதில் ஐயமில்லை.

பொதிகை மலை அகத்தியரிடம் அளவற்ற ஈடுபாடு கொண்ட ஆன்மீகப் பொக்கிஷம் நமது மாணவர் சிரஞ்சீவீ.செல்லமணிபட்டர் உள்ளிட்ட அனைவர்க்கும் வாழ்த்துக்கள்.

K.பிச்சைக்குருக்கள்

பிள்ளையார்பட்டி

Ph: 0091 (0)4577-264275. H/P: 00919443362320 / 9842462320
Website: www.pitchaianna.com / e-mail: pitchaianna@gmail.com

Koviloor Digital Library

✆ : 04577 - 264236
Cell : 9443154236

SHRI NARAYANA ASHRAMAM
SHITHA AND AYURVEDIC VAITHYASALA

Dr. A. GOVINDHANANDHA

Pillayarpatti (Post)
Sivagangai District
Pin - 630 206

Date : 10-07-2018

ஓம் நமோ
நாராயணாய நம:

எங்கள் உயர் மாண்பினர்களுக்கு

அன்பான வாழ்த்துகள்

இன்னல் வாக்கினு இருள் நெறியு
கொன்னல் வினைக்கு கூற்று உண்ணு
பன்னல் வாக்கினு பாரும் கானியு
நன்னல் வினைக்கு நமச்சி வாயவே.

அப்பர் தேவாரம்.

அம்பாசமுத்திரத்தை ஆரம்பிடமாகக் கொண்டு எங்கள் மூர் மாண்பினையாக வந்து அப்பர் பெருமான் வாக்கின்படி இன்று வாழுவை ஒரு மையமாக கூடிய இன்று (04.08.2018). மேலாக கர்ணாடகா மாநிலம் சிவஸ்ரீ M. கைலாசமட்டம் ஸ்ரீமான் K. நாகராஜ்ஜி அம்பாள் தம்பதியினர் மிகச் சிறந்த மனமார் அடக்கமானவர். ஆன்மீகம் மனிதம் தம்மை அர்ப்பணித்து மனிதனாகுமவர். அவர்கள் இன்னும் சதாபிஷேகம் கனகாபிஷேகம் காணவேண்டும். விஜய நாராயணரின் ஒருவன் என்கிறமையும் தனதுண்ணப் பெற்று. தம்பதியினர் நீண்ட ஆயுளும் நினைத்த காரியம் பெற்றுச் சிறந்திட வேண்டுமென நமது வணிகர் தெய்வமாகிய அருள்மிகு கொங்கு நாச்சி அம்பாளின் திருவடி மலர்களை வணங்கி வாழ்த்துகிறோம்.

Koviloor Digital Library

வாழ்த்துரை

நாள் : 31-07-2018

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீமுருகன் திருவருளால்...

நமது அன்பிற்கினிய நமது ஆலய குருக்கள் சிவஸ்ரீ. **K.கணேஷ்** குருக்கள் அவர்களின் தந்தையாரின் 70 வயது பீமரத சாந்தி விழா வைபவம் ஆடி மாதம் 21, 22 தேதி **(6, 7-8-2018)** அவர்களுடைய சொந்த ஊரில் நடைபெறுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

பீமரத சாந்தி விழா அன்று பக்தி மனம் கமழும் பொக்கிஷம் என்னும் சைவ சமயம் சார்ந்த நூல் வெளியிடுவது குறித்து மிக்க மகிழ்ச்சி. நூல் ஆசிரியர் சிவஸ்ரீ. **K.செல்லமணி பட்டர்** அவர்கள் ஆன்மீகத் துறையில் பல்வேறு நூல்களை அவ்வப்பொழுது வெளியிட்டு, ஆன்மீகப் பணியாற்றி வரும் அவர்களை வாழ்த்துகிறோம்.

பீமரத சாந்தி விழா காணும் தம்பதிகள் சிவஸ்ரீ. **M.கைலாச பட்டர் – K.நாகலெட்சுமி** அவர்களுக்கும் எதிர்காலங்களில் ஆன்மீக சேவையும், சமூக சேவையும் புரிந்து பவள விழா, சதாபிஷேகம், முத்து விழா, கனகாபிஷேகம் கண்டு பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீமுருகப் பெருமானை வேண்டி வாழ்த்துகிறோம்.

தங்கள் அன்புள்ள,

சீனி. சம்பத்குமார்

தலைவர் இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில் அறங்காவலர்
மற்றும் நிர்வாகக் குழுவினர் சார்பாக

Koviloor Digital Library

உ
சிவமயம்

இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலய சிவாச்சாரியார்கள்
பீமரத சாந்தி விழா வாழ்த்து

இந்து சமய ஆன்மிக பெருவழியில் ஆச்சார்ய ஸ்தானம் மிக முக்கியமானது. சிவபெருமானின் திருஉருவாய் ரிஷிகள் வம்சத்தில் வந்து வேத சிவாகம பேரறிவோடு உலக நன்மையும் ஆன்மா ஈடேற்றதையும் குறிக்கோளாகக் கொண்டு சிவப்பணியாற்றி வருபவர்கள் சிவாச்சாரிய பெருமக்கள்.

திருநெல்வேலி மாவட்டம் கங்கை கொண்டானில் பிறந்து பாப்பான்குளத்தை பூர்வீகமாகக் கொண்டு தமிழ், ஆங்கிலம் சமய கல்வியறிவோடு சாஸ்திரங்களைக் கற்று தேர்ந்தவர். சிவஸ்ரீ.கைலாசபட்டர் அவர்கள். வேத சிவாகம கலாநிதி. பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ. K.பிச்சைகுருக்கள் அவர்களின் சகோதரியை மணமுடித்து இருவருக்கும் கணேஷ், செல்வி நித்திய கல்யாணி என இரண்டு குழந்தை செல்வங்கள். சிவஸ்ரீ. கணேஷ் குருக்கள் அவர்கள் லண்டன் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவஸ்ரீ. கைலாச பட்டர் அவர்தம் பெருமைமிகு சம்பந்தியாகிய பிள்ளையார்பட்டி விகாஸ்ரத்னா. சிவஸ்ரீ. K.பிச்சை சிவாச்சார்யார் அவர்களின் வழிகாட்டுதலில் லண்டன் சிவஸ்ரீ. கணேஷ் சிவாச்சாரியார் – ஸ்ரீமதி. சுதா தம்பதிகள் விக்கிரமசிங்கபுரம் சிவஸ்ரீ.கல்யாணசுந்தர பட்டர் – ஸ்ரீமதி. செல்வி நித்திய கல்யாணி தம்பதிகள் பெருமையுடன் நடத்தி மகிழும் பீமரத சாந்தி பெருவிழா வெகு சிறப்பாக நடைபெறவும், விழா தம்பதிகள் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று, சதாபிஷேகம், பூர்ணாபிஷேகம் ஆயிரம் பிறை கண்டு பெரு வாழ்வு வாழ வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீமுருகப் பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறோம்.

இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலய சிவாச்சாரியார்கள்

கயிலை. சிவஸ்ரீ. R.நாகநாத குருக்கள்
சிவஸ்ரீ. M.K.S.ரமேஷ் பட்டர்
சிவஸ்ரீ. K.கல்யாண குருக்கள்
சிவஸ்ரீ. G.கணபதி சுந்தர குருக்கள்
சிவஸ்ரீ. S.ஜனார்த்தன சர்மா

கயிலை. சிவஸ்ரீ. K.சங்கர குருக்கள்
சிவஸ்ரீ. M.சந்தான குருக்கள்
கயிலை. சிவஸ்ரீ. K.சோமஸ்கந்த குருக்கள்
சிவஸ்ரீ. G.கௌரி சங்கர குருக்கள்
மற்றும் ஆலய பணியாளர்கள்

Koviloor Digital Library

ஶைவஸித்தாந்த ஆகம ஸாகரம், ஶிவாகம ஞானபாநு, ஶிவாகம கல்பத்ருமம், ஶிவாகம ரத்னாகரம், ஶிவாகம திருத்தொண்டர், மந்த்ரஸேவாமணி. ஶிவாகம பாஸ்கர, ஶிவாகம வித்யா ரத்னம், ஶிவாம்ருத வார்ஷி

K.ராஜப்பா ஶிவாசார்யார்

ஸ்தானிகர்- ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானம்,
ஸ்ரீ கைலாஸநாதர் தேவஸ்தானம்
121-45,ஏகாம்பரநாதர் சன்னதி தெரு,காஞ்சிபுரம் - 631502.
போன்-944525747

ஆசியுரை

வித்யாதானம் ஸர்வ தானாத் ப்ரதானம் எனும் முதுமொழிக்கேற்ப, ஆகம வித்யையை ஶைவஸமூஹம் ஸம்பூர்ணமாகப் பெறவேண்டும் எனும் நோக்கோடு, விழா நாயகர் ஶிவஸ்ரீ ***M.கைலாஸபட்டர்*** *மற்றும் விழாநாயகி* ***K. நாகலக்ஷ்மி*** *அவர்களின் தவப்புதலவன் ஶிவஸ்ரீ.* ***K. கணேஷ் குருக்கள்*** *அவர்கள், தனது பெற்றோரின் பீமரத ஶாந்தியில் பொக்கிஷம் எனும் ஆன்மீகச் செய்திகளை தெரிவிக்கும் நூலொன்று வெளியிடுவது கேட்டு மகிழ்ச்சியுற்றோம்.*

இதனால் இவன் முடிப்பான் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

- திருக்குறள் - தெரிந்து வினையாடல் - எண் 517

எனும் திருக்குறளுக்கேற்ப இப்புத்தகம் வெளியிடும் திருப்பணியை பிள்ளையார்பட்டி - ஶிவஸ்ரீ ***Dr.பிச்சை ஶிவாசார்யாரின்*** *அருளாசியினைப் பெற்ற அவரது மாணவர். விக்ரமசிங்கபுரம்.* ***K.செல்லமணிபட்டர்*** *அவர்கள் இப்பொக்கிஷத்தை தொகுத்துத்தர உள்ளார் என்பதறிந்து அடைந்த ஆனந்தந்திற்கு எல்லையில்லை எனில் அது மிகையாகாது. அவரின் குருபக்தி - ஶிவபக்தி - ஶைவபக்திக்கு இணை அவரே. தமிழ் மற்றும் வடமொழியில் அவரது புலமை அனைவருமறிந்ததே!!*

இப்பொக்கிஷத்தில் எனக்கும் ஒரு பங்களிப்பை அளித்ததற்கு இறைவன் ஶிவனாருக்கு நன்றியினைத் தெரிவித்து, ***வழிபாட்டுப் பயன்களும்*** *பொருட்களும் எனும் தலைப்பிற்கு இணங்க, இறைவனால் எனக்கு அளிக்கப்பட்ட சிற்றறிவிற்கு எட்டியரை கட்டுரையை எழுதியுள்ளோம். மேலும் இப்புத்தகத்தில் எழுதப்பட்ட கட்டுரைக் களஞ்சியங்களை அனைவரும் படித்து, உணர்ந்து அதன்படி நடக்க முயல்வதே ஶைவஸமூஹத்திற்கும் – ஆசிரியருக்கும் ஏனைய கட்டுரையாளருக்கும் செய்யும் கைமாறாகும் !!*

எல்லாம் வல்ல ஶிவபெருமானின் அருளால், தனது மனம் – மெய் – மொழிகளை அர்பணித்து இப்புத்தகம் வெளிவர காரண கர்தாக்களான நூல் ஆசிரியரின் ஆசிரியர் –ஆசிரியர் – விழா நாயகர் – நாயகி – அவரது திருமகனார் அவரது குடும்பத்தார் அனைவரும் பௌதிக ஸமயாசார பாஶங்களை சந்த்ர – ஸூர்யர்கள் இருக்கும் வரை அனுஷ்டித்து மென்மேலும் ஶதாபிஷேகம், கனகாபிஷேகம், பூர்ணாபிஷேகம் ஆகியவற்றைச் செய்து கொள்ள காமாக்ஷி நாதனின் திருத்தாளினைப் போற்றி அமைகிறேன்.

Koviloor Digital Library

உ.
ஸ்ரீ குருப்யோ நம:
சத்தன் பாதம் கலைநிறும் துணை செய்யும்

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி
சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர் (எ) சந்திரசேகர பட்டர்
ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி - ஸுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
முதல்வர், ஸ்ரீ ஸகந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

பீமரதசாந்தி வாழ்த்து

ப்ரீதிமத்-ப்ரீதி-தாதாரம் ஸுப்ரியம் ப்ரியதர்ஶனம் !
உமாப்ரியம் ஸதாகாந்தம் ப்ரணதோஸ்மி ஸதாஶிவம் !!

- ஸ்ரீமத்-ரௌரவாகமம்

லண்டன் அருள்மிகு முருகன் திருக்கோயில் அர்ச்சகரும், நமது பேரன்புக்குரியவரும், பிள்ளையார்பட்டி அண்ணா அவர்களின் மாப்பிளையுமான அம்பாசமுத்திரம்சிவஸ்ரீ K. கணேச குருக்கள் அவர்களின் பெற்றோர், அம்பாசமுத்திரம் "சிவஸ்ரீ M. கைலாச பட்டர் ஸ்ரீமதீ K. நாகலக்ஷ்மீ தம்பதிகள்" பீமரதசாந்தி விழாவும், அதனை முன்னிட்டு விக்கிரமசிங்கபுரம் சிவஸ்ரீ செல்லமணி பட்டர் தொகுத்திருக்கின்ற 'பொக்கிஷம்' என்ற நூல்வெளியீடும் வருகின்ற 07.03.2018 நடைபெற இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

சிவஸ்ரீ கைலாச பட்டர் அவர்கள் ஆதிசைவர்களின் நித்யக்கடமைகளுள் ஒன்றாகிய பரார்த்த பூஜையை இடைவிடாது செய்து தனது பிறவியைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டிருக் கின்றார்கள். குழந்தைகளையும் நன்னெறியில் ஆட்படுத்தி வழிகாட்டி நிறைவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வாலுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற பொய்யாமொழியை மெய்ப்பித்து வாழும் சிவாசார்யர் அவர்கள் நம் ஸமுதாய மக்களுக்கான ஓர் வாழ்க்கை வழிகாட்டி என்றால் அது மிகையாகாது.

சிவஸ்ரீ M. கைலாச பட்டர் ஸ்ரீமதீ K. நாகலக்ஷ்மீ தம்பதிகள் மணிவிழாவும், நூல்வெளியீடும் மிகச் சிறப்பாக நடைபெறவும், சிவாசார்ய தம்பதிகள் சதாபிஷேக - கனகாபிஷேகங்கள் கண்டு பல்லாண்டு வாழவும், மதுரையம்பதியில் வீற்றிருந்தருளும் ஆலவாயண்ணல் மீனாக்ஷி உடனமர் சொக்கநாதப் பெருமானின் திருவடிமலர்களையும், திருப்பரங்கிரிதனில் கோயில்கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் திருத்தாள் மலர்களையும் போற்றிப்பணிந்து வணங்கி வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

க. ராஜா பட்டர்
திருப்பரங்குன்றம்

Koviloor Digital Library

உ
Sivamayam
SIVAGAMA KALANIDHI, SIVAGAMA CHELVAR, SAIVA SIDHDHANTHA SARABHAM
A.V. SWAMINATHA SIVACHARIYAR
FOUNDER & PRINCIPAL
SIVAPURAM VEDA SIVAGAMA PATASALAI, MAYILADUTHURAI.
Email : avssivachariyar@yahoo.com
Web Site : www.vedaagamavidhyamandir.com

உ

சிவமயம்

வாழ்த்துரை

எல்லாம் வல்ல உமையொருபாகனின் திருவருளையும் குருவருளையும் சிந்தித்து மகிழ்கிறோம். அம்பாசமுத்திரம் சிவஸ்ரீ மு.கைலாசபட்டர் திருமதி. கை.நாகலக்ஷ்மி தம்பதிகளின் எழுபதாண்டுநிறைவு பீமரதசாந்தி பெருமங்கலப் பெருவிழா ஆடிமாதம் 22 ந்தேதி {7.8.2018} செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதையும் அதுசமயம் "பொக்கிஷம்" எனும் நூல் வெளியிடவிருப்பதையும் அறிந்து பெரிதும் மகிழ்கிறோம்.

விழாநாயகர் சிவஸ்ரீ மு.கைலாசபட்டர் பெரிதும் போற்றுதலுக்குரியவர். அபிராமிபட்டர் அருளியவாறு அன்பு அகலாத மனைவியும் தவறாத சந்தானமும் வாய்க்கப்பெற்றவர். அவரது காதல் மனைவியார் உலகம்போற்றும் உத்தமராகிய பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ.கே.பிச்சை சிவாசாரியாரின் அருமைச்சகோதரியார் என்பது போற்றுதலுக்குரியது. மேலும் விழாநாயகரின் குமாரர் சிவஸ்ரீ.கை.கணேசசிவம் பிள்ளையார்பட்டி குருநாதரின் சீடர். குருநாதரும் தாய்மாமனும் ஆகிய நமது ஸ்ரீஅண்ணாவின் மகளை மணம்புரிந்த அன்பு மருகர். இது காரணங்கள் பற்றி பெருமைக்குரியவர்களின் குடும்பத்தில் பெருமங்கலவிழா நடைபெறுகிறது என்பதை நினைவுகூரவே விரிவாகக் கூறியுள்ளோம்.

இனி, ஆதிசைவசமூகத்தின் நல்வழிகாட்டியும், சிறந்த சித்தாந்தவல்லுனரும், அடுத்தத்தலைமுறையினரை நல்வழிப்படுத்தவேண்டும் என அயராது பேசியும் எழுதியும் வருபவராகிய தே.செல்லமணிபட்டர் சைவப்பேருலகிற்கு வாய்த்த ஒரு பொக்கிஷம் என்றால் மிகையில்லை. கடந்தகாலங்களில் அவரோடு உரையாடிய சமயங்களில் நாம் எண்ணியதுண்டு. "இவ்வளவு அற்புதமான விஷயங்களைக்கூறும் இவரது படைப்புகள் தொகுக்கப்பட்டால் அது ஒரு பொக்கிஷமாகும்" என்று. அவ்வெண்ணம் இறையருளாலும் குருவருளாலும், நமது அன்பிற்கினிய சகோதரரும், விழாநாயகரின் தவப்புதல்வரும், பிள்ளையார்பட்டியண்ணாவின் அன்புமருகரும், லண்டன் ஸ்ரீமுருகன் திருக்கோயில் அர்ச்சகருமாகிய சிவஸ்ரீ.கை.கணேசசிவத்தின் அருமுயற்சியினால் நிறைவேறுவதில் பெருமிதமும் ஆனந்தமும் அடைகிறோம்.

பீமரதசாந்திப்பெருவிழா சிறக்கவும், விழாமலர் சைவப்பேருலகிற்குப் பயனளித்திடவும் எல்லாம் வல்ல உமையொருபாகனின் திருவடிகளை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறோம்.

தங்கள் அன்பன்
ஏ.வி.சுவாமிநாதசிவாசாரியார்.
மயிலாடுதுறை.

Koviloor Digital Library

A.S.Sundara Murthy Sivam

வாழ்த்துரை

அன்புடையீர்,

வணக்கம். நலம். தங்கள் நலம் அறிய ஆவல். நாங்கள் அனுப்பிவைத்த தங்களது தந்தையின் பீமரதசாந்தி விழா அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளோடும் குருவருளோடும். (07.08.2018) இந்த பொன்னான தருணத்தில் "பொக்கிஷம்" என்னும் ஆன்மீக குறுஞ்செய்திகளை கொண்ட ஒரு பொக்கிஷமான நூல் வெளிவருவது அறிந்து மிக்க மகிழ்ச்சியை அடைக்கிறேன்.

இந்த வைபவத்தில் விழாநாயகர் சிவஸ்ரீ. M. கைலாசபட்டர் மற்றும் திருமதி K.நாகலட்சுமி அவர்களின் பீமரத சாந்தி வைபவம் நல்முறையில் நடைபெறவும், இந்த ஒரு பெண்ணான தருணத்திலே, "விகாஸ் ரத்னா" சிவஸ்ரீ பிள்ளையார்பட்டி அண்ணா, அவர்களின் ஆசியோடு பற்பல சிவதர்மங்களை செய்து வரும் நாங்கள், தங்களது குடும்பத்தினர் மற்றும் இந்த அறிய நூல் வெளியிட உதவிய நிர்வாகக்குழுவினர் அனைவருக்கும் எனது வாழ்த்தையும், தம்பதியருக்கு பெருங்கருணைநாயகி உடமை ஸ்ரீ அவிநாசியப்பர் அருளோடு அனைத்து நலனும் பெற்றிட பிராத்தனை செய்து வணங்குகிறேன்.

நன்றி
வாழ்க பல்லாண்டு

Koviloor Digital Library

உ
ஸ்ரீ காளிகாம்பாள் துணை
வேதாந்த சிரோமணி, வேதாந்த விசாரதா
முனைவர் தி.ஸா.ஷண்முக சிவாசார்யர், M.A., Ph.D.,
66/101, இராமசாமி தெரு, மண்ணடி, சென்னை - 600 001, தமிழ்நாடு, இந்தியா
Dr. T.S. Shanmukha Sivacharyar, M.A., Ph.D.,
66/101, Ramaswamy Street, Mannady, Chennai - 600 001.

26-07-2018
Date :

மகிழ்வுரை

எனது அன்பு நண்பர் சிவஸ்ரீ K. கணேச குருக்கள் அவர்களின் பெற்றோர் சிவஸ்ரீ M. கைலாச பட்டர் திருமதி K. நாகலட்சுமி அவர்களின் பீமரத சாந்தி விழா விளம்பி வருடம் ஆடி மாதம் 21, 22 ஆகிய தேதிகளில் (6, 7-8-2018) திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் நடைபெற இருப்பதை அறிந்து அடியேனின் மகிழ்ச்சியையும், விழா தம்பதியருக்கு எனது நமஸ்காரங்களையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த சிறந்த தருணத்தில் எமது நண்பர் "பொக்கிஷம்" எனும் நூலை வெளியிட இருப்பதை அறிந்து மேலும் மகிழ்வுற்றோம். பல சித்தாந்த வல்லுனர்களின் கட்டுரைகளையும், தம்பதியினருக்கு பெரியோர்கள் அளிக்கும் ஆசிச்செய்திகளையும் விக்கிரமசிங்கபுரம் சிவாகமரத்னம், அகஸ்தியம் சிவஸ்ரீ K. செல்லமணி பட்டர் அவர்கள் தொகுத்து அளிப்பதையும் , தனது கடுமையான உழைப்பாலும், சிறந்த பக்தியாலும் அன்பர்கள் எளிதில் அடைந்து ஆறுதல் பெறக்கூடியவரும், மஹா கணபதியின் அருளைப் பெற்று செல்லும் இடம் எல்லாம் இருக்கும் விக்னங்களை போக்கி நல்ல ஒரு சாந்நித்யத்தை ஏற்படுத்தி வருபவரும், எங்கள் தந்தையார் மீதும், சஹோதரர் சிவஸ்ரீ காளிதாஸ சிவாசார்யர் மீதும் அளவற்ற அன்பு கொண்டவரும், பல மாணவ செல்வங்களை உருவாக்கி உலகம் முழுவதும் ஸநாதன தர்மத்தை பரப்பி வருபவரும், "அண்ணா" என்று அனைவராலும் அன்புடன் போற்றக் கூடியவருமான பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ அண்ணா அவர்களால் வெளியிடப்படும் இந்த புத்தகம் பெறுபவர் அனைவருக்கும் மிகப் பெரிய பொக்கிஷமே.

வழிபடுதல் எனில் யாது? அவற்றை எப்படி, ஏன், எதற்காக செய்திடல் வேண்டும் என்று பல அறிய கருத்துக்களை தாங்கி வரும் இந்நூல் எதிர்காலத்தில் ஆங்கிலம் மற்றும் பிறமொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு உலகமக்கள் அனைவரும் பயன்பெற வேண்டும் எனும் எனது அவாவினை நண்பர் சிவஸ்ரீ கணேஷ் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். விழா தம்பதியினருக்கு நமஸ்காரங்ககைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ காளிகாம்பிகையின் பேரரருளினால் தம்பதியருக்கு சதாபிஷேக, கனகாபிஷேக பூர்ணாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்று எங்களை வழி நடத்திட பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க இந்தியா ,
அண்ணாமலையார் அடிமை,

தி. சா. ஷண்முக சிவாசார்யர்

தி.சா.ஷண்முக சிவாசார்யர்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

'சிவாகம ரத்னம்'

சிவஸ்ரீ இரா. கல்யாண சுந்தரம் (எ) செல்வம் பட்டர்

முதல்வர், ஆலால சுந்தர வேதாகம பாடசாலை, தூத்துக்குடி.

எல்லாம் வல்ல ஈசனின் பரிபூரண அருளால் சிவஸ்ரீ. M.கைலாச பட்டர், திருமதி k.நாகலட்சுமி தம்பதியினரின் பீமரதசாந்தி விழாவானது நடைபெறுவது மிக்க மகிழ்ச்சி. அவ்வமயத்திலே வழிபாட்டு பயன்களும், பொருட்களும் என்ற பொருள் கொண்ட சமய, ஆன்மிக செய்தி குவியலாக " பொக்கிஷம்" எனும் நூலை எனது குருநாதர் சிவஸ்ரீ. அண்ணா அவர்கள் வெளியிடும் தருணம் அவர் தம் வாழ்விலே உள்ளபடியே பொக்கிஷமான ஒன்று என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. மேலும் அந்நூலை பலப்பல நூல்களை தொகுத்து வெளியிட்டு கொண்டிருக்கும் சிவஸ்ரீ. K. செல்லமணி அண்ணா அவர்கள் தொகுத்து அளிப்பது இன்னும் சிறப்பு. நெல்லை மாவட்டம் கங்கை கொண்டானில் பிறந்து பாப்பான் குளத்திலே வளர்ந்து தன்னுடைய பள்ளி இறுதி படிப்பை முடித்த பின்னர் விக்ரமசிங்க புரத்தில் உள்ள நூற்பாலையில் தனது வாழ்வை தொடர்ந்த சிவஸ்ரீ .M.கைலாச பட்டர் அவர்கள் அவர்தம் வாழ்க்கை துணையான திருமதி. K.நாகலெட்சுமி
அவர்களுடைய
இல்வாழ்வின் சிறப்பு, மக்கட் செல்வங்களை பெற்று அவர்தம் மழலை செல்வங்களுடன்
கற்பக விநாயகரின் அருளால் மணி விழா வை கடந்து
பீமரதசாந்தி விழா காணும் தம்பதியர்கள் மென்மேலும் சதாபிஷேகம் மற்றும் கனகாபிஷேகம் கண்டு எங்களை ஆசீர்வதிக்க வேண்டி வணங்கும். .....

இரா.செல்வம்பட்டர் (எ)
கல்யாண சுந்தர சிவாச்சாரியார்.

Koviloor Digital Library

1

"Vaedyavisharath, Kalaviththakar,
Kalajothy, Kriyarathna, Sivaagamavitpannar"
Satyothathasivachcharyar
KAILAI Brahmasri A. N. Somaskanda Sarma M. Phil
Hindu Priest - Vethagama Sabah, London.
Lecturer - Mirdangam & International Music Examiner

பிமரதசாந்திமங்களவைபவம் ஆசிச்செய்தி

பாரததேசத்தின் தென்பாங்கான குற்றாலம் பாபநாச தீர்த்தப்பிரசித்திபெற்றதும், சிமயகிரவர்களால் திருமுறை அருளப்பெற்றதும், அருளுறை அம்பாசமுத்திரம் கங்கைகொண்டான் பாப்பான்குளம் என்னும் விப்ரப்பிரசித்திபெற்ற பாரம்பரிய பட்டாம்சத்தில், சங்கரனைப் போற்றும் அந்தணர் வம்சத்தில் ஸ்ரீமதி ஸ்ரீ முத்துலஷ்மி பட்டர் அவர்கள் வரிதம்பதிகளின் தவப்புதல்வனாகிய ஸ்ரீ கைலாஸபட்டர் நாகலஸ்ரீமிதம்பதிகளுக்கு, அவர்கள் குலதெய்வ ஆசிகளுடன் இவர்தம் புதல்வன் புதல்விகள் தம்பதிசகிதம் நல்ல திருத்தணையுடன், எழுபது அகவைநிரம்பும்வேளையில், பிமரதசாந்திமங்களவைபவம், அவர்கள் பூர்வீகஸ்தானமான அம்பாசமுத்திரம் சின்னசங்கரன்கோயில் திருச்சந்நிதியில் நிகழ அமைந்திருப்பது மகிழ்ச்சிப்பெருக்கு ஆகும்.

"பெற்றதாயும் பிறந்தபொன்நாடும்
நற்கவி வாணியும் நனிசிறந்தனவே" என்னும்முது வாக்கியத்திற்கு அமைவாக நிகழ்கிறது, என்பது கைலாச பட்டர் வம்சாவழியினர் முன்தவப் பயன் என்பதுந்தெளிவாகின்றது. பிமரதசாந்திவைபவம் சிறந்த விழாவாக அமைய மாதாபிதா குலதெய்வ அனுக்கிரக ஆசிகள் இங்கே உண்டு என்பதை அறியத்தருகின்றது. இவ்வைபவம் சிறப்பு விழாவாக நிறைவுபெற எல்லாம்வல்ல எமதுகுல குலதெய்வம் ஸ்ரீ சிவகாமசுந்தரியமேதசிதம்பரேஸ்வரப் பெருமானின் திருஅருள்துணையுடன் ஆசீர்வதிக்கிறோம்.

சிவஸ்ரீ கைலாச பட்டர் வம்சாவழியினர்
இந்தியாவின் சிறப்பு குருவேஸ்நாபகர் பிள்ளையார்பட்டி
வேதாகமபாடசாலைஅதிபர் உலகப்பிரசித்திபெற்ற
சிவாசாரியதிலகர் ஸ்ரீ பிச்சைக்குருக்கள் குடும்பத்தாருடன்
நெருங்கிய உறவினர்களாக அமைந்திருப்பது மகிழ்ச்சிப்பெருக்கு.

3, MAYFLOWER DRIVE, COVENTRY CV2 5NL
Tel: 0044-2476721784 Mobile : 0044-79-51908227 / 0044-79-61421722. Email: somaskanda3@gmail.com

Koviloor Digital Library

2

மேலும் பிள்ளையார்பட்டி பிச்சைக்குருக்களின் மகளை நமது மாட்டுப்பெண்ணாக தம் ஏகபுதல்வன் ஸ்ரீகணேச குருக்களுக்கு ஏற்றுக்கொண்டமை "நன்றாரை நல்லாரே காமுறுவர்" என்னும் வாக்கிற்கேற்ப வொருங்கியைந்தது என்பது வெளிப்படையும் ஆன்றோர் சூதியும் ஆகும். இது முன்பு செய்த பூர்வபுண்ய பலனாகும்.

விநாதநாம பதிகளின் குமாரன் ஸ்ரீ கணேச சிவாச்சார்யர் அவர்கள் எம்முடன் குடும்பமாக எம்முடன் பதினைட்டு வருட காலமாக அன்பாக படிக்கிறார். மேலும் இலண்டன் பதியில் லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம் உட்பட சிவாச்சார்ய சேவையை அன்பாகவும் பண்பாகவும் அனைவரின் விருப்பத்திற்குரியவராக தொண்டாற்றுபவர். இளம் சிவாச்சார்யர் வரிசையில் சிறப்புடையவர். இவருடைய தந்தையாருடைய பிமரத சாந்தி விநாயகர் கணேச சிவாச்சார்யர் குடும்பம், நித்ய கல்யாணி கல்யாண சுந்தரப்பட்டர் குடும்பம் இணைந்து நிகழ்த்துவதும் விநாயகரின் பேரப்பிள்ளைகள் சூடி மகிழ்கிறதுண்பதும் மிகப் பொருத்தமானது. தந்தை தாயின் பெருமை இவ்விநாவின் மூலமாக பிரதிபலமாகின்றது.

70 அகவை பீமரத சாந்தி வைரவிநா காணும் ஸ்ரீ கைலாச பட்டர் நாகலட்சுமி தம்பதிகளை நீடும் சிறப்புடன் பல்லாண்டுகள் வாழ்வாங்கு வாழ்வும் தீர்க்காயுஷ்மான் தீர்க்க ஸுமங்கலியாக சகல ஐஸ்வர்யங்களுடன் கூடி ஸகாபிஷேகம், விஜயரத சாந்தி என்னும் மங்களவைபவங்களையும் பெறவேண்டும் என்று எல்லாவல்ல எமது குலதெய்வ அனுக்ரஹத்துடன் ஆசீர்வதிக்கிறோம்.

மேலும் இவ்விநாவின் முத்திரையாகிய "யோக்கியம்" என்னும் மலராகிய நூல் வடிவில் மலர்கிறது. இது வித்யா தானத்தில் சிறப்புடன் பெறுகின்றது. இந்நூல் வெளியீடு சிறப்பாய் அமைய இவ்விநா அமைப்பாளர்களுக்கு சிறப்புறு சிவமுங்குகிறேன்.

"ஸத்யம் வத - தர்மம் சர" "ஸத்யமேஜயம்"

ஸர்வமங்களாநி பவந்து:

ஸுபம்

இங்ஙனம்

கைலைசிவமணி அ.நா. சோமாஸ்கந்த சிவாச்சார்யர் M.Phil

தொலைவன்றி

இங்கிலாந்து

U.K

Koviloor Digital Library

சிவமயம்

சிவசரணம்

"SIVACHARYA SIROMANI"
SIVA SATCHITHANANDA KURUKKAL
23. Turner Road, Edgware, Middlesex, HA8-6AT 0208-952-9692 Mobile : 07956-312908

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி நிற்பவை சமய அனுஷ்டான லட்சணங்களாகும். இத்தகைய சமயக் கிரியைகளை பக்தி பூர்வமாகவும் நம்பிக்கையுடனும் மேற்கொள்பவர்களுக்கு சகல நலன்களும் கிடைத்து நீண்ட ஆயுளுடன் வளமுடன் வாழ்வார்கள்.

அவ்வகையில் பிரமாத சாந்தி காணும் பெரியவர் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சிவஸ்ரீ கைலாசபட்டர் தம்பதிகள் நீடு வாழ எமது ஆலய தெய்வம் திருவேணுமலை வாழ் ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமான் திருவடிகளை வணங்கி மகிழ்ச்சி அடைகிறோம்.

வைதீக சைவ மரபில் தோன்றிய எல்லோரும் நமது முன்னோர் நமக்குத் தந்த சாஸ்திர முறைப்படி செய்ய வேண்டிய இல்லற வாழ்வியல் நெறி முறைகளை செய்வதன் மேலாக நிதி கடனைக் கழிக்கிறோம்.

தெய்வ ஆசிகளுடன் நமது பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆகிய இவ்வாறான வைபவங்கள் நடைபெறும் போது அதில் பங்ு கொள்ளும் அனைவரும் தேவ ஆசி பெறுகின்றார்கள்.

எமது அன்புக்குரிய வண்டன் ஆகேன் கோவில் சிவஸ்ரீ கணேச சிவம் ஐயா அவர்களும் மற்றும் அவர்களது சகோதரிகள் - உறவுகள் அனைவரும் உரிய நற்பணிய செய்து நல்லதொரு நூல் வெளியிடுவது பாராட்டப்பட வேண்டியது.

Koviloor Digital Library

"SIVACHARYA SIROMANI"
SIVA SATCHITHANANDA KURUKKAL
23. Turner Road, Edgware, Middlesex, HA8-6AT 0208-952-9692 Mobile : 07956-312908

மைதிக மைல நெறிப்படி வாடகிளையாகக் கொண்டாடும் வேளையில் தம்பதிகள் இருவரும் இளையவள் திருவருளால் தீர்க்காயுள், - ஆரோக்கியம், ஐஸ்வர்யம், சௌபாக்கியங்கள் அனைத்துடன் நூற்றாண்டு காலம் மனநிறைவான பெருவாழ்வு வாழ்ந்து ஆயுளாம் மாபெரு தர்சனம் செய்து சதாபிஷேக ஒத்துவாடிக - பூர்ணாபிஷேக விழாவாகக் கண்டு ஆனந்தமடைய இளையவளுடைய திருப்பாத கமலங்களை வணங்கி வாழ்த்துகிறோம்.

வாழ்க வளமுடன்.

சிவம்.

என்றும் பணிவன்புடன்.

சிவ. சச்சிதானந்த குருக்கள்
வணக்கம்.

Koviloor Digital Library

B. Vasantha Gurukkal BA (Hons)

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்

சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்

கற்பக்பதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

18 Chingford Road, Walthamstow, London, E17 4PJ

Home: 02085233802 |Temple: 02085273819 |

Mob: 07903707878 | Email: Vasanthan@live.co.uk

சைவமொடு சாஸ்திரங்களும் சார்ந்திருக்கும் வேதங்களும்
உய்யும் நெறியை உணர்ந்து போற்றும் உத்தம வழியில்
வையகம் போற்றும் வைதிக மரபில் வந்து தோன்றிய
கைலாச பட்டர் நாகலட்சுமி தம்பதிகள் காணும் விழாவில்
மெய்யன்புடன் மேன்மை தரும் ஆசிகளும் வேண்டி
கையிரண்டும் கூப்பி கற்பகன் அருள் நாடுவோம்.

திங்கள் சடைக்கணிந்த எங்கள் பிரான் சிவன் அணியும்
கங்கை கொண்டான் கடித்தலத்தில் பிறந்து வளர்ந்து
மங்கை நாகலட்சுமி அம்மையை மணந்த இடமாம்
ஐங்கரன் பிள்ளையார் பட்டியில் அணைந்து வாழ்ந்து
இங்கிதமாய் இனிய வார்த்தை பேசி அன்புடன்
கங்கணம் கட்டும் எங்கள் பெரியார் கைலாசபட்டரொடு
தங்கிடும் நாகலட்சுமியும் நீடு வாழ்ந்து வாழ்த்த வேண்டுவோம்

வளமோடு வாழ்க்கையை வனப்புற வாழ்ந்து வாய்த்த நற் சந்தானங்கள்
நலமுற நன் மகளாம் நித்திய கல்யாணியுடன் ஒரு மகனாம் கணேசனும்
பலமுற பந்தமுறும் மங்கள மண வாழ்க்கை மாண்புறச் செய்து வைத்து
குலமுறை பேணும் கல்யான சுந்தரப் பட்டர் மாப்பிள்ளையாக வர
தலமோங்கும் பிள்ளையார் பட்டி அண்ணா மகள் சுதா மருமகளாக வர
இலமோங்க இனிய தம்பதிகள் இனிது வாழ்ந்து வாழ்த்த வேண்டுவோம்

பேரன்புடைய பெரியார் பேணும் பேரன்களும் பேர்த்திகளும்
கூறும் பெருடை ராஜேஷ் குலமகள் அட்சயா கூடிவர
தேறும் நித்தியஸ்ரீ தேன்இரட்டையர் கற்பகராம் கார்த்திக்ராம்
வீறு கொண்டு தழ்ந்துவர விளங்கும் விழா பொலிவுற பீமரதம்
ஏறும் நாயகன் நாயகி நலம் போற்றி நாடுவோம் ஆசிகள்.

அரிய இல்லறக் கடமைகளுடன் அலுவலகக் கடமையுமாற்றி
உரிய ஆன்மீகச் சேவைகளும் உன்னதாமாய்ச் செய்து உரிமையுடன்
பெரிய அருட்பயனாய் துப்பாக்குடி தூய கிராமத்தில் சிவாலயம்
தெரிய கும்பாபிஷேகத் திருப்பணி தேர்ந்து பூர்வீக இடமாய்
புரியும் பாப்பான் குளத்தில் புண்ணியம் புரிந்த புனிதர்
சொரியும் பீமரத விழாவில் ஆசிகளை வேண்டுவோம்.

தத்துவங்கள் நிறைந்த தாத்பரியம் சைவத்தில் சார்ந்திருக்கும்
முத்துக்கள் அகிலாண்டமும் சென்று சேர புத்தகாமய்
வித்தகப் பொக்கிஷம் என்னும் விரி நூல் வெளிவர சுத்தமுடன்
எத்தினமும் ஏற்றிவரும் இனியோர்கள் இலங்கி நிற்க நித்தமும்
இத்திறம் கொண்டநூல் அன்புடன் படிப்பதே இணைந்த விலையாக
முத்தான இவ்விழாவில் சேர்த்திருக்கும் பணி பரவ தம்பதிகள் ஆயுள்
சொத்து அதிகரித்து ஆண்டு நூறு ஆசிநல்க அன்புடன் போற்றுவோம்

சிவஸ்ரீ பா.வசந்தன் குருக்கள் தம்பதிகள்

Koviloor Digital Library

ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE
என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

Tel: 00447985527429

வாழ்த்துரை

வட லண்டன் என்பீல்டு நாகபூசணி அம்பாள் திருவருள் துணை நிற்க.

எனது குருநாதரின் பாதம் பணிந்து.. 07.08.2018 அன்று பீமரத் சாந்தி விழா காணும் சிவஸ்ரீ கைலாச பட்டர் ஸ்ரீமதி நாகலட்சுமி அம்மா தம்பதிகளின் ஆசி வேண்டி வணங்குகின்றோம்.

தமது தாய் தந்தையரின் பீமரதசாந்தி விழாவை நடாத்தி "பொக்கிஷம்" எனும் ஆன்மீக நூலை வெளியிடும் அவர்தம் மகன் சிவஸ்ரீ கணேஷ் குருக்களின் பணி போற்றுதற்குரியது. அவர் தம் தாய் தந்தையர் தமது மகனை வள்ளுவனின் 'தந்தை மகன் காற்று நன்றி அவையத்து இன்பம் செயல்'என்னும் கூற்றுகிணங்க தம் மகனை பிள்ளையார்பட்டி அண்ணாவிடம் பயிற்றுவித்து, உயர்ந்த நிலையை எய்த செய்த பெருமை பெற்றோரை சாரும்.

அதற்கு கைமாறாக தமது தாய் தந்தையரின் பீமரத சாந்தி விழாவில் "பொக்கிஷம்" எனும் நூலை நமது அண்ணாவின் ஆசியுடன் சிவாகம ரத்தினம் அகஸ்த்யம் சிவஸ்ரீ K.செல்லமணி பட்டர் அவர்கள் தொகுத்து அந்நூலை வெளியிடுகின்றார்கள்.

நமது சமயம் கூறும் விடயங்கள் ஆன்மீகநெறி மட்டுமின்றி, அறிவுசார் விடயங்களையும் உள்ளடக்கிய ஓர் உன்னத சமயமாகும். வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தர்ம சாஸ்திரங்கள், நீதிநூல்கள், தேவார திருவாசகங்கள் என எண்ணில் அடங்காத விடயங்களை உள்ளடக்கி மனிதன் மனிதனாக வாழ்ந்து வானுயர தெய்வத்துள் வைத்து போற்றப்படும் உயர் நிலையை எய்வதற்கான வழிவகைகளை கூறி நிற்பன. அவற்றுள் உள்ள விடயங்களை தொகுத்து ஆதாரபூர்வமாக வெளியிடுவதே, இந்நூல். இந்நூலில் உள்ள விடயங்களை வைத்து அனைவரும் பயன் பெற்று உயரிய வாழ்வு வாழ உதவும் ,பொக்கிஷம் அனைவராலும் போற்றப்படும்.

சிவஸ்ரீ கணேஷ் குருக்களின் பணி தொடர வாழ்த்துகின்றேன்..

வாழ்க வளமுடன்..

சிவாகம இரத்தினம்,சைவசித்தாந்த இரத்தினம்

சிவஸ்ரீ இரகுகமலநாதகுருக்கள் B A HONS. (புங்குடுதீவு)

(என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலய பிரதமகுரு)

Koviloor Digital Library

KATPAKAPATHY

SHREE KARPHAHA VINAYAGAR TRUST (TEMPLE)

Charity No: 1092252
2 - 4, Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 020 8527 3819 | Web: katpakapathy.com | Email: katpakapathy@gmail.com

Board of Trustees:

President
Mr M. Gopalakrishnan

Secretary
Mr.C.P.Thiagarajah

Treasurer
Mr. Aruljothy

Ministers of Religion
Sivasri Sarveswarasarma Balasubramania Iyer

Sivasri Athithan Uruthiramoorthy Sarma

Sivasri Amirthalinga Sarma Panchchara Sarma

பெருமதிப்பிற்குரிய சிவஸ்ரீ கைலாச பட்டர் ஸ்ரீமதி நாகலட்சுமி தம்பதிகள் அவர்களது பீமரத சாந்தி நன்னாளில் அவர்களது ஆசியை வேண்டுவதோடு அவர்கள் நூறாண்டுகாலம் வாழ்ந்து சைவ சமூகத்திற்கும் சிவாச்சாரிய மரபு விளங்கவும்கற்பகபதி கற்பக விநாயகப் பெருமான் பாதம் போற்றுவோம்.

எமது சைவ நெறி தழைத்து ஓங்க ஆலயங்களும் சிவாச்சாரியப் பெருந்தகைகளும் வேர் போன்று நாம் பராமரிக்க வேண்டிய அவசியம் ஒவ்வொரு ஆலய நிர்வாக அன்பர்கள் ,மற்றும் அடியார்கள் ,சைவத் தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் பாரிய பொறுப்பு உண்டு.

குரு பாரம்பரியம் என்பது மிகவும் மதிக்கப் படவேண்டியதாகும். அந்த வகையில் விழாத்தம்பதிகளின் அவர்களது ஏக புத்திரன் சிவஸ்ரீ கைகணேசக் குருக்கள அவர்கள் லண்டன் முருகன் ஆலயத்தில் பணியாற்றி வரும்சிறந்த பாரம்பரிய குருக்கள் ஆவார்கள்.அவர்கள் எமது ஆலயத்திற்கும் பலமுறை விசேட தினங்களில் வந்து கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

ஆன்மீக விடயங்களை பேணி பாதுகாக்க ஆலய வழிபாடுகள் அங்கு நடைபெறும் கிரியைகள் அவசியமானவை.அதேபோல் அவற்றிற்கு நீர் ஊற்றுவது போல் ஆன்மார்த்த கிரியைகளும் அவசியமாகின்றன.இங்கு நடைபெறும் பீமரத சாந்தியானது ஒருவகையில் ஆன்மார்த்த வழிபாடாக இருந்தாலும் அனைவர்க்கும் நன்மை பயக்கும் அருள் விழாவாகவே அமைகிறது.இவ்வாறன விழாவில் பங்கு கொள்பவர்கள் அனைவரும் மன மகிழ்ச்சி அடைவதோடு ஆயுள் அதிகரித்தும் வாழ்வார்கள். இவர்களது இச் சாந்தி வைபவத்தில் நல்லதொரு நூல் வெளியீடு வெளிவருவதையிட்டும் நாம் வரவேற்கிறோம்.ஆலய வழிபாட்டு தத்துவங்கள் அதன் கருத்துக்கள் பல வழியிலும் வெளிப்படுத்த வேண்டியது அறிஞர்கள் சான்றோர்கள் அனைவரதும் கடமையாகும். அக்கடமையை விழாத் தம்பதிகள் சார்பாக அவர்களது பிள்ளைகள் உறவினர்கள் சைவத் தமிழ் சமூகத்திற்கு பயனளிக்கும் வகையில் வெளியிட்டு வைத்து சமய நம்பிக்கைக்கு நல்ல ஆதாரம் கொடுப்பது பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

விழாத் தம்பதிகள் நீடு வாழ்ந்து எமக்கும் ஆசி நல்கி அவர்களது சந்தான சௌபக்கியங்களும் இனிது வாழ கற்பகபதி கற்பகப் பெருமானைப் பணிந்து போற்றுவோம்.

தலைவர் மு.கோபாலகிருஷ்ணன்
தேவஸ்தான சிவாச்சாரியார்கள் சிவஸ்ரீ பால .வசந்தக் குருக்கள்
சிவஸ்ரீ உ.ஆதித்தக் குருக்கள்

ஆலய நிர்வாகம்

Koviloor Digital Library

உ

'ஜோதிட கலாநிதி' சிவஸ்ரீ K.P. இராமநாதக் குருக்கள்
இலண்டன்.

கனனி கன்ம லக்னமாகும் வர்க்கனி
லெ லம்பதாம் பதனி பூர்வ புண்யாகம்
லக்னதெ கன்ம பதினொன்:-

மாத்	லக்கினம்	நவ புதை கன்
		கனி
1948-7-6 மீனகிரிடம்		லெக்
ஜூ	மெஜ	

பிரதிஷ்ட சிரேஷ்டமி. சிவ. ஸ்ரீ M. கைலாசபட்டர்
சிரேஷ்டி. K. நாகலக்ஷ்மி அவர்கள், மீனாக்ஷி கான்கிரீட்
ஒன்றிட் லொக்கறும் எல்லாம் சகல யாட மகள்
மகள் வகுதியிட்டு பிரியும் இன்றுமும். வேதாந்தின் ஆறு பாகங்களில் ஜோதிடம்
ஆன்று. மனாவிலி பதாகரின் ஒரு- கைமினி மனுவின் ஒரு- நாகநாதரது ஒருவிய
பின்பற்றப்பட்டு வந்துள்ளது, மீனாக்ஷிடம்- திருமண யோகங்களாகவும் காதலாகவும்
தாமதங்கள் செய்பவர்களாகவும் எனினும் நன்றாகவும் சகல சௌபாக்கிய
வெற்றிகளாகவும் வாழ்வு அமைப்பவராகவும் விளங்கு வாழ்வுகள், அதனால் கெ 6 ப
நன்ன எண்கள். 2.7.9. நன்ன நிறம்- சக்கரம், கிழிகுதன் அதிபதி ஜோதிடம். ஜோப்பு
அதிஷ்டகல். நீலம். புஷ்பராகம். வாரி அதிபதி- புதனும். சுதந்திரமிதி. அம்பாளின்
அருள். நாகயோனியும், தேவ கணமும். வெற்று மகள் மீனாக்ஷி கான்கிரீட்
மகள் அதிகம் வெற்று வெகுதூரத்து ஆதியுள். 6வது அம்சத்தின் ஜீவனம் சுபம்
சுக சௌபாக்கியம் வெற்று வரு வேண்டு. மீனாக்ஷி. கான்கி
வாழ்த்துக்களை கொண்டு வாழ்த்துகிறேன்.
வாழ்க. வளம்
நன்றி.
இஜோதிட கலாநிதி:
சிவ. ஸ்ரீ. K.P. இராமநாதன்
சிவாகமப்பயிற்சி

Koviloor Digital Library

C. Sithamparapillai LL.B; LL.M. (Lon)
Diploma in Air and Space Law (Ins. Of World affairs)
Attorney-At Law (Sri Lanka)
Solicitor (England and Wales)
Solicitor (New South Wales, Australia)

Dr. M. Sithamparapillai
M.B.B.S F.F.A.R.S (Ire)

சிவஸ்ரீ முத்துசுவாமி கைலாசப்பட்டர்
திருமதி கை. நாகலட்சுமி தம்பதிகளின் பீமரத சாந்திவிழா

குருக்கள் ஐயா அவர்கள் அகவை எழுபதை எட்டும் இவ்வேளையில் அவருக்கும் அவரின் அன்பு அகலாத மனைவிக்கும் எனதும் எனது அன்புத் துணைவி மகேஸ்வரியினதும் நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் எனது தனிப்பட்ட முறையிலும் நான்தலைமை தாங்கும், வழிநடத்தும் பல சமய, சமூக, பொதுப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் சார்பாகவும் இவ் வாழ்த்துரையை வழங்குவது இறைவன் செயலாகக் கருதி பெருமிதமடைகிறோம். வாழும்போது வாழ்த்துவோம். ஏற்கனவே மணிவிழா கண்ட பெருமைக்குரிய தம்பதிகள். பெரிய உயர்ந்த குடும்பத்தில் பிறந்த இவர் திருமணம் செய்த குடும்பமும் மிகவும் சிறப்புவாய்ந்தது. இவரின் கையைப் பிடித்த துணைவியார், சிவஸ்ரீ. பிச்சை குருக்களின் சகோதரியாவார்.

விழா நாயகர், நாயகியின் இல்லத்திற்கு நானும் எனது மனைவியும் சென்றபோது சந்தோஷத்துடனும், அன்புடனும் வரவேற்ற பண்பு இன்றும் எமது மனதில் பசுமையாக இருக்கின்றது. எங்களின் உறவு காலப்போக்கில் மிகவும் நெருங்கிய, விசுவாசமான ஒன்றாக இருந்து வருகின்றது. இதற்கு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக விகாஸ்ரத்னா டாக்டர் சிவஸ்ரீ பிச்சை குருக்களுடன் உள்ள தொடர்பு, அன்பு மரியாதை, அவரின் குரு ஆசி. மற்றொரு முக்கிய காரணம் விழா நாயகன், நாயகியின் புத்திரர் சிவாகமரத்தனம் சிவஸ்ரீ கணேஷ் குருக்களுடனும், அவரின் குடும்பத்தினருடனும் உள்ள நெருங்கிய தொடர்பு. இவர் இலண்டன் ஸ்ரீ முருகன் கோவிலில் அர்ச்சகராக பல ஆண்டுகள் சேவை ஆற்றி வருகிறார். நாங்கள் இருவரும் இவ்வாலயத்திற்கு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சென்று வருகிறோம்.

குருக்கள் ஐயா அவர்கள் உத்தியோகம் பார்த்தாலும் ஆன்மீகப் பணியில் மிகவும் ஈடுபாடுடையவர். கவியரசு கண்ணதாசனின் வரிகள் இவரின் வாழ்விற்குப் பொருத்தமாகும் - "சத்தியத்தை உன் வீட்டுத் தலையணையில் வைத்திருந்தால் தத்துவங்கள் உன் காலடியில் தானாக வந்து நிற்கும். செய்வதை நீ திறமையாகச் செய்து வாழ்ந்திருந்தால் தெய்வமெல்லாம் உனக்கு கைகட்டி சேவை செய்திருக்கும், உன் செயல் திறனை ஆண்டிருக்கும், காத்திருக்கும்."

மனைவி அமைவது இறைவன் நியதி. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்பார்கள். திருமதி. நாகலட்சுமி அம்மையாரைப் பொறுத்தளவில் இது முற்றிலும் உண்மை. அத்தோடு இத் தம்பதிகள் இல்லற வாழ்வில் 45 ஆண்டுகளுக்கும் மேல் பார்வதி பரமேஸ்வரன் போல இணைந்தமை இன்னுமொரு சிறப்பாகும். இதன் பலாபலனாக கிடைத்தது இரு முத்துக்கள் மகள் திருமதி. செல்வி நித்தியகல்யாணி, மகன் கை. கணேஷ் குருக்கள். இவ்வாறான உன்னத தம்பதிகள் பல்லாண்டு பல்லாண்டு நோய் நொடியின்றி வாழ்ந்து சதா அபிஷேகம் (முத்து விழா), கனகாபிஷேகம் கண்டு பெரு வாழ்வு பெற வேண்டுமென எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானையும், சைவ முன்னேற்றச் சங்க மனையில் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானையும் வேண்டி வணங்கிப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம். இன்றுபோல் என்றும் இன்புற்று வாழ்க வளத்துடன்.

இப்படிக்கு

உங்கள் அன்பின்

குமாரசாமி சிதம்பரப்பிள்ளை

Koviloor Digital Library

"Community Service Through Saiva (Hindu) Concern"

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

Saiva Munnetta Sangam (UK)

"Community Service Through Saiva (Hindu) Concern"
2 Salisbury Road, Manor Park, London E12 6AB
Tel: 020 8514 4732
Registered Charity No: 292085
www.saivamunnettasangam.com email: smsukinfo@gmail.com
ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீநம்பரேஸ்வரர் ஆலயம்

45th Year Management Committee

Vice-Patrons
Dr (Mrs) Indra Siva-yoham
Mr R Pathmanathan

President of Trustee
Mr Sathasivam Anandathiyagar

Vice-President of Trustee
Mr D Rabindramohan

Hony. General Secretary of Trustee
Mr M Induseganan

Hony. Treasurer of Trustee
Mr S Niranjan

Hony. Deputy Gen. Secretary of Trustee
Mr S Balasingam

Trustees
Mr W Nagaratnam
Mr G Parameswaran
Mr C Sithamparapillai
Mr S Thamboo

Building Project Secretary
Mr V R Loganathan

Executive Secretary
Mrs S Chandrakobal

Membership Secretary
Mr S Rainarajah

Overseas Project Secretary
Mrs P Saharatnam

Publication Secretary
Mr V Sivanarutchelvar

Religious Secretary
Mr S Kugarajah

School Secretary
Mrs S Abthonan

Social Service Secretary
Mr V C Vamanarathan

Assistant Treasurer
Mr V R Ramanathan

Committee Members
Mrs K Balasubramaiyam
Mr M Jeyakumar
Mrs P Kunathasan
Mrs V Mahadevan
Mr M Ravendradas
Mrs S Renukanthan
Mrs N Surandran

22.07.2018

உ

பெருமதிப்பிற்குரிய சிவஸ்ரீ கணேஷ் குருக்கள் அவர்களுக்கு வணக்கம். தங்களின் பெற்றோர் சிவஸ்ரீ கைலாசபட்டர், நாகலட்சுமி அம்மையார் தம்பதிகளின் பீமரத சாந்தி விழாவின்போது எங்களையும் நினைவில் கொண்டுள்ள உயரிய பண்பாட்டை எண்ணி மகிழ்கிறோம்.

'தம்மின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்' -திருக்குறள், கல்வி, 399. கல்வி

நாம் இன்பமடையவும் வாழ்வில் உயரவும் காரணமாக இருந்த அறிவால் இந்த உலகம் இன்பமடைகிறது என்பதை உணரும் பெரியவர்கள் அக்கல்வியை மேலும் மேலும் விரும்புவார்கள் என்பதை உண்மையாக்கும் வகையில் ஒரு பெருவிழா நடைபெறத் திருவருள் வாய்த்துள்ளது. அதன் வழியில் நாம் அனைவரும் பெரும் பலன் அடையப் போகிறோம்.

சமய வழிபாட்டின் பலன்களையும், சுருதிகளையும் எங்களுக்கு அறிவிக்க பொக்கிஷம் என்ற பெயரில் ஒரு சிவானந்த அமுதம் சுரக்க, கிடைக்க நன்நாள் கைகூடியுள்ளது. உங்கள் பெற்றோரின் நெறியான சமய வாழ்க்கையின் சாதனையை பயனுள்ள வழியில் நினைவாகப் பதிவு செய்ய நீங்களும், உங்களின் உடன் பிறப்புக்கள் ஐவரும், ஏனைய குடும்பத்தினரும் எடுத்துள்ள இந்த சிவ புண்ணிய கைங்கர்யம் பெரிதும் பாராட்டத்தக்கது. ஆன்மிக உலகம் இதை நிச்சயம் வரவேற்கும். ஏற்றிப் போற்றும்.

முழு நிறை பூசி, முப்போதும் திருமேனி தீண்டும் சிவார்ச்சனை மரபில் வாழ்ந்த அறுபதுவத்தாலும், அறிவாலும் முதிர்ந்த வழிகாட்டியாகத் திகழும் உங்களின் தந்தையாரின் பீமரத சாந்தித் திருவிழா மக்களுக்கு மேலும் பல நன்மைகளைக் கொண்டுவர நல்ல வாய்ப்பாக அமையும் என்பது திண்ணம்.

உலகத்தில் முறையாக வாழ்பவர்களால் பிறருக்குக் கிடைக்கும் பயன்னிது என்பதற்கு இந்த விழாவும் 'பொக்கிஷம்' நூல் வெளியீடும் உதாரணமாகின்றன. இந்த நூலின் தொகுப்பாசிரியராகிய சிவாகமரத்னம், அகஸ்த்தியம் சிவஸ்ரீ K. செல்லமணிபட்டரையும் நாம் பாராட்டுகின்றோம்.

ஆடி மாதம் 21, 22ம் நாள்களில் நடக்க இருக்கும் இந்த பீமரத சாந்தித் திருவிழாவும் நூல் வெளியீட்டு விழாவும் வெற்றிகரமாக அமைந்து சிவப்பணி தொடர நாங்கள் அனைவரும் வாழ்த்துகின்றோம். விழா நாயகர்கள் மதிப்பிற்குரிய உங்களின் பெற்றோரின் ஆசிகள் எங்களுக்கும் கிடைக்க இறைவன் அருள் பாலிக்க வேண்டும். அதே வேளையில் நாம் வணங்கும் இறைவன் உங்களின் பெற்றோருக்கும் அவர்களின் சந்ததிக்கும் எல்லா நன்மைகளை மேலும் மேலும் கொடுத்து வழி நடத்த வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்..

ஆயிரக் குழுவின் சார்பில்

[illegible]

சதாசிவம் ஆனந்தராஜா

Koviloor Digital Library

இலண்டன் தமிழ்ச் சங்கம்
The London Tamil Sangam

Tamil Community & Education Centre | Enriching Community Life. Driven by Values

Estd.1936 / Regd.1960

Board of Directors

President
Mr. N. Kuttiyandisamy

Secretary
Mr. Uthayakumaran Arumugam

Treasurer
Mr. Vijay Sooriya

Vice Presidents
Mr. Sethurajan Balasubramaniam
Mr. Vetrivel Ramasamy

Asst. Secretaries
Mrs. Nageshwari Moorthy
Mr. Shanmugha Sundaram Subramani

Asst. Treasurer
Mr. Krishna Kumar Somasundaram

Trustees:
Mr. Ratnam Sandanasamy
Mr. Valyapuri Chettiar
Mrs. Leela Radhakrishnan
Mrs. Mumtaj Moorthi
Mr. A. H. Sahabudeen
Mr. Rajesh Sivagurunathan
Mr. Chelliah Murugesan
Mr. Gopikrishna Govindarajan
Mr. Rajmohan Ramadass
Mr. Sakthivel Karuppiah

திருமிகு சிவாகமரத்னம் சிவஸ்ரீ K கணேஷ் குருக்கள் அவர்களுக்கு

தங்கள் தந்தையார் சிவஸ்ரீ M கைலாச பட்டர் அவர்களின் பீமரத சாந்தி விழாவின் அழைப்பிதழ் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சி அடைந்தேன் .

இந்த விழாவில் பொக்கிஷம் எனும் சமய ஆன்மிக செய்திகள் அடங்கிய நூல் ஒன்றும் வெளியிட இருப்பது சிறப்பம்சம்.

ஆகஸ்ட் மாதம் 2018, 6,7 தேதிகளில் நடைபெற இருக்கிற இந்த நிகழ்ச்சிகள் சிறப்பாக நிகழவும் தங்கள் பெற்றோர்கள் எல்லாம் வல்ல இறைவனின் அருள், சமையப் பெரியோர்கள், அறிஞர்கள் , உற்றார் , உறவினர்கள் ஆகியோரின் வாழ்த்துக்கள் பெற்று நலமுடன் நீடுழி வாழ இலண்டன் தமிழ்ச்சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் .

வாழ்க தமிழ்! , வளர்க தமிழர் பண்பாடு !

நன்றி.

வாழ்த்துக்களுடன்

N K சாமி

தலைவர் , இலண்டன் தமிழ்ச் சங்கம்

369 High Street North, Manor Park, London E12 6PG
T: 020 8471 7672, F: 020 8470 1013, E: admin@ltsuk.org
Registered Charity No.: 1097724
Registered in England Company No.: 657373
www.ltsuk.org

The London Tamil Sangam is a company incorporated with limited liability, with authority to omit "Limited" from its name.

Koviloor Digital Library

"தொண்டர் திலகம்"
வ.இ.இராமநாதன்

நிலையம்

3 The Orchard,
Wick ford
Essex,
SS12 0HB
England
U.K.
vrramanathan@hotmail.com

பீமரத சாந்தி சிறப்புற வாழ்த்துக்கள்

தெரிந்துணரின் முப்போதும்
செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின்
வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிஅர்ச் சனைகள்சிவ
வேதியர்க்கே யுரியனஅப்
பெருந்தகையார் குலப்பெருமை
யாம்புகழும் பெற்றியதோ - பெரியபுராணம்

அகண்ட பாரதத்திருநாட்டின் கன் தென்னாடு எனப்போற்றப்படும் தமிழ்நாட்டின் கங்கை கொண்டான் எனும் பதியில் பிறந்து தனது பாடசாலைக் கல்வியை பூர்த்திசெய்து ஒரு உத்தியோகத்தராக பணியாற்றினார். இல்லறவாழ்வின் துணையாக நாகலட்சுமி அம்மையாரைக் கரம்பிடித்து இரண்டு குழந்தைச் செல்வங்களைப் பெற்றெடுத்து அதன் பயனாக பேரன் பேத்திகளை கண்டு நிறைவாக வாழ்ந்து வருகின்றார்.

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தமது பிள்ளைகளையும் நல்லொழுக்கமிக்கவராகவும், வேதசிவாகமங்களில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் உருவாக்கியிருப்பது பாராட்டத்தக்கது. நாம் பலகாலமாக அறிந்த அவரது மகன் கணேஷ் குருக்கள் இலண்டனில் தனது ஆன்மிகப்பணியை மிகவும் நேர்த்தியாக செய்து வருவது யாவரும் அறிந்ததே.

ஐயா அவர்களும் தனது பிறவிப் பெரும்பயனால் கற்றுணர்ந்த வேதசிவாகமங்களின் வழியே நின்றொழுகித் தமது பூர்வீக ஊரில் உள்ள சிவாலய கும்பாபிஷேகத் திருப்பணியை நிறைவு செய்து எம்பெருமானின் பேரருளுக்குப் பாத்திரமானவர்.

இறைவனின் திருவருளோடும், வேதசிவாகமங்களைக் கற்றுணர்ந்த சான்றோர்களின் குருவருளோடும் நடைபெறவிருக்கும் ஐயா அவர்களின் பீமரதசாந்தி விழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம். அத்துடன் பெருவாழ்வு கண்ட ஐயா அம்மா அவர்களது ஆசியையும் வேண்டுகின்றோம்.

அவ்விழாவைபொட்டி வெளிவரவிருக்கும் "பொக்கிஷம்" ஆன்மிகத்தேடலுக்கு அரியதொரு வரப்பிரசாதமாக அமைய வாழ்த்துகின்றோம்.

"மேன்மை கொள் சைவ நிதி விளங்குக உலகமெல்லாம்"

தொண்டர் திலகம்

வ.இ.இராமநாதன்
ஸ்தாபகர் சைவ முன்னேற்றச் சங்கம் (U.K)
20-07-2018

"LOVE ALL SERVE ALL"

Koviloor Digital Library

மஹா புஷ்கரவாழ்த்துடன் சிவஸ்ரீ கைலாசப் பட்டருக்குபீமரதவிழா

கலாநிதி பொன் பாலசுந்தரம் - இலண்டன்

தமிழ் நாட்டில் கோயில்கள் இல்லாதஊரே இல்லைஎனலாம். கோடிபுண்ணியத்தை அள்ளி வழங்கும் வானளாவிய கோபுரங்களுடனான கோயில்களும் ஏராளம்.

ஆலயங்களில் ஓதப்படும் வேதஒலி பூமாதேவி தாங்கிநிற்கும் இப்பரந்த பூமியில் வாழும் மக்களை ஆன்மீகப் பற்றாளர்களாக வாழவைப்பதைக் காண்கிறோம்.

இப்படியாக வேதஒலி தழைத்தோங்க ஆதிமூலமாக இருப்பவர்கள் சமயபாரம்பரியம் பேணும் அந்தணப் பெருமக்கள்தான் என்பதைப் பெருமையாகக் கூறலாம். "வேதம் ஓதிய வேதியர்க்கு ஒரு மழை" எனக் கூறுவதுண்டு. இப்படி தமிழ்நாட்டின் வளப்பெருமைக்கு அணிகலனாக இவர்கள் மதிக்கப்படுகிறார்கள்.

இச்சிறப்புக்களுடனும், சரித்திரப் புகழ்பெற்ற சங்கரன்கோயில் உட்பட மற்றும் திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயம் உட்பட பல ஆலயங்களைத் தாங்கி நிற்கும் திருநெல்வேலி மாவட்டத்தின் கங்கைகொண்டான் கிராமத்தை பிறப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ மு.கைலாசபட்டர் அவர்களுக்கு பீமரத சாந்தி விழா (அகவை 70) விழாக் கொண்டாடப்படுவது மகிழ்ச்சி தருகிறது.

144 வருடத்திற்கு ஒருமுறை கொண்டாடப்படும் சரித்திர–ஆகம சம்பிரதாயங்களுடன் சம்பந்தப்பட்ட தாமிரபரணி ஆற்றின் மஹா புஷ்கரவிழா நடைபெறும் சமயத்தில் சிவஸ்ரீ. மு.கைலாசபட்டர் அவர்களின் பீமரத சாந்தி விழா கொண்டாப்படுவது ஒரு புனித நிகழ்வாகும்.

சமயத்தோடு இணைந்தும், பிணைந்தும் வாழ்ந்துவரும் பட்டர் அவர்கள் ஒரு தர்ம கைங்கர்யப் பிரியராவார். ஆலயங்களின் வளரச்சியில் அக்கறை உடையவர். இவருக்குள்ள இந்த ஆர்வம் திருநெல்வேலியில் உள்ள சின்னசங்கரன்கோயில், பாப்பான்குளம் கோயில்களின் திருப்பணியை நிறைவு செய்தவற்கு துணையாக இருந்தவர்.

இப்படியான பெருமைக்குரிய ஸ்ரீபட்டர் அவர்களும், விழா நாயகி திருமதி. நாகலட்சுமி அம்மையாரும் சீரும், சிறப்பும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனைவேண்டுகிறோம்.

Koviloor Digital Library

GSTIN : 33AAWFS0834Q1ZG

Mfrs. of Chola Bronze Icons & Exporters
19/9, Raja Veedhi, Swamimalai - 612 302. Thanjavur Dt. Tamil Nadu, India.

S. DEVASENAPATHY STHAPATHY SONS 1952-2017 65 SRI JAYAM INDUSTRIES

FOUNDER :
Kalai Chemmal, Sripakala Mani, Sirpakala Rathnam
S. Devasenapathy Sthapathy
National Awardee - 1984

Ph : 0435 - 2454429, 2454058
Resi : 0435 - 2454757 Fax : 0435 - 2454329
e-mail : srijayamindustries@gmail.com
Website : www.sthapathi.com

பாராட்டு மடல்.

இந்தியாவும், ஆங்கிலமும் தெய்வ வழிபாட்டிற்கு இன்றியமையாத ஒன்று. அதேபோல் தெய்வ வடிவங்களை வடிக்கின்ற பஞ்சலோக சிற்பங்களும், அதனோடு தொடர்புடைய அந்த பஞ்சலோக சிற்ப வடிவங்களால் மாந்தர்கள் தாங்கள் உயர்படுகின்ற சிவ ஆகம பெரியவர்களை - சிவாச்சாரியார்களையும் வேறு வழிபாட்டிற்கு பிரதானமாக விளங்குபவர்கள். தமிழகத்தில் உள்ள முக்கிய கோயில்களுக்கு வெளிநாடுகளில் உள்ள கோயில்களுக்கும் சிலைகளை வடித்து உலகப் புகழ் பெற்ற சிற்பி: சிற்ப கலாமணி: வி. தேவ சேனாபதி ஸ்தபதி அவர்களையும் சிவ ஆகம பெரியவர் உலகப் புகழ் பெற்ற சிவ ஸ்ரீ. பிள்ளையார் பட்ட பெரியவர் அவர்களையும் ஆன்மீகப் பணியால் கிடைத்தன் வெளிப்பட்டு வெங்கிலால் மாநிலங்களில் மறக்க முடியாத ஒன்று. லண்டனில் பல கிருஷ்ண கோயில்களுக்கு பஞ்சலோக தெய்வ வடிவங்களை, எங்கள் சிற்பக் கூடத்தில் உயர்ப்படம் செய்யும் பொருட்டு, சிவ ஸ்ரீ

D. Radhakrishna Sthapathy - D. Srikanda Sthapathy - D. Swaminatha Sthapathy

Koviloor Digital Library

பிரதி : 2

ஸ்ரீமத் பிரஸன்னாசார்ய பதவி அண்ணா அவர்கள், தன் பெயர் கொண்டவர்கள், திருக்கோயில் மற்றும் வெளியில் உலோகங்களை சேர்த்து அந்த திருக்கோயில் எங்களின் வாழ் காலம் மறக்க முடியாத ஒன்று. கிரகத் தொடர்புடைய அவரது மருமகனார் ஸ்ரீமத் கணேச தீக்ஷிதர், அவருடைய ஆன்மீக ஸேவையையும், தன் குடும்பத்துடன் அன்புடன் பழகும் தன்மையையும் எங்களால் மறக்க முடியாது.

இதுகாலம் வரையில் ஆலயங்களில் வெளிநாட்டவரும் பற்றி வணங்குகின்ற அளவில் கொண்டு செல்லும் அவரது பணி போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியது. திருக்கோயில் அன்னாரின் குடும்பத்தாருடைய பிரவாத சாந்தி விழாவில் ..... பெரியவர்: ஸ்ரீமத் M. கைலாச நாத பட்டர் - திருமதி: K. நாக லக்ஷ்மி அவர்கள் கீண்ட ஆயுளை பெற்று அவருடன் வாழ, எல்லாம் வல்ல சிவாமியவி பரு சிவாமி நாத சிவாமியை பிரார்த்தித்து, பிரவாத ..... சாந்தி விழா நிகழ்ச்சியை வணங்குகின்றோம்.

இவண்:

தேவ. நாகராஜ கிருஷ்ண ஸ்தபதி,
தேவ. பரு கீண்ட ஸ்தபதி,
தேவ. சிவாமி நாத ஸ்தபதி,
பரு தேவ சேனாபதி ஸ்தபதி சன்ஸ்,
19/7 - வாஞ்சிநாதன் தெரு, சிவாமிமலை - 612302.
தஞ்சை மாவட்டம் - தமிழ் நாடு.

Koviloor Digital Library

சிற்பக் கலை வளர்க்கும் சிவாமணி "சிற்ப கிலாமணி" பதி தேவசேனாபதி ஸ்தபதி சிற்ப கூடம்.

உலகப் புகழ் பெற்ற இந்தியக் கலைகளில், சோழர் காலை (மானி) சிற்பக்கலை கிகிலும் பழமை வாய்ந்தது. இச் சிற்பக் கலை ஆயிரம் வருடங்கள் கடந்தும், பழமையான இச் செம்முறை மாறாமல் இன்றும் சிவாகமவிதியால் இலக்கணப்படுத்தப்பட்டு வருகின்றது. உலக அளவில் புகழ் பெற்றுள்ள இச் சிற்பக் கலை, கலை மாணவர்களால் (பல்வேறு நாடுகளில் உள்ள கலை மாணவர்களால்) இன்றும் கற்கப்பட்டு, தேர்ச்சி பெற்று வருகையாகி, இவர்தம் படைப்புக்கள் திருக்கோயில், மற்றும் அருங்காட்சிகளில் வைப்பதற்கு மிகவும் ஆர்வம் கொண்டுள்ளனர். இந்து சமயம் தோன்றிய முதல், வழி வழியாக, பாரம்பரிய முறையுடன் சமயம் சார்ந்த, தொகுதிகள் மற்றும் பண்பாட்டை வளர்க்கும் கலையாக இது விளங்கி வருகின்றது.

இக் கலையால் புகழ் பெற்ற இந்தியாவை உலக அளவில் பல நாடுகளில் தன் படைப்பை பஞ்ச லோக சிற்ப வடிவங்களாக வடித்து வழங்கிய ஆன்மீக இந்தி சிவாமணி "சிற்ப கிலாமணி" பதி தேவ சேனாபதி ஸ்தபதி ஆவார். இவர் இந்திய ஜனாதிபதி விருதினை 1984ல் பெற்றவர். மேலும், லண்டன் முருகன் கோயில், லண்டன் பதி முத்து மாரியம்மன் கோயில், லண்டன் ஸ்ரீ சிவன் கோயில், லண்டன் பதி சிவபாகி அம்மன் கோவில் ஆகியவற்றுக்கு உற்சவர் சிலைகள் வடித்துக் கொடுத்தவர். இவர் திறமையைப் பாராட்டி லண்டன் வாழ் தமிழர்கள் ஸ்ரீவரதராஜன் அவர்கள் லண்டனுக்கு அழைத்து, "சிற்ப கிலா ரத்தினம்" என்ற பட்டத்தினை 18.05.1993ல் வழங்கினார். மேலும், கிராஞ்சியம் சிவ கோடி மடம் பதி சிவாகாச சிவாசார்ய சிவாமணி இவருக்கு "சில்ப கிலாமணி" என்ற பட்டத்தினை 08.02.1995ல் வழங்கினார்.

இவர்களின் முன்னோர்கள், தீவுக்கை பொய்ய கோயில் நிர்மாணம் செய்த ஸ்தபதிகளாவர் வழி வந்தவர்கள். தீவுக்கை பொய்ய கோயில் நிர்மாணத்திற்கு பிறகு, சிவாகமவிதி

Koviloor Digital Library

சிவாலயமலையில் ஏறியேறி, இம்பலேனைத்துக்கு அருகில் உள்ள தூரவாசலம் கோயிலில் நிர்வாணம் செய்துள்ளனர். அதன் பிறகு, சிவாலயமலை கோயில் நிர்வாணம் செய்த பின் சிவாலயமலையையே தேர்ந்தெடுத்தனர். காரணம், சிவாலயமலை நீலகிரி ஆற்றங்கரையில் ஒரு கிளை மலைப் பாதத்தில் படுகின்ற பண்டல் மண் இந்த உலோக இற்ப வேலைக்கு மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளது. இந்த கோடுகள் சில நாண் ஆரப்பட இற்பக் கலையான, கோடுகள் சிலவும் முதல் சிவாலயமலையில் செய்து வருகின்றனர். இவர்களின் பாரம்பரிய படையல் இந்திய அரசின் வெளியீடான: CENSUS OF INDIA - 2001 என்கின்ற புத்தகத்தில் இந்திய அரசு வெளியிடப்பட்டுள்ளது.

1952 ல் புதிதேவ வேணுபதி ஸ்தபதி அவர்களால் ஆரம்பக்கப்பட்ட: "புதிய நெறியம் இண்டஸ்ட்ரீஸ்" என்கின்ற இந்த நிறுவனம் அறுபது வருடங்கள் கடந்து தன் இற்ப பாரம்பரியக் கலையான உலகறிய செய்து வருகின்றது. இவருக்குப் பிறகு இவரது மகன்கள்: தேவ. இராஜாராஜேந்திர ஸ்தபதி, தேவ. புதிவேண்ட ஸ்தபதி, தேவ. சிவாலயதேவ ஸ்தபதி ஆகியோர் தம் சீர்தையட இந்து, இறு வயது முதல் இக் கலையைக் கற்று இறந்த இற்பக்களாக விளங்கி வருகின்றனர்.

Koviloor Digital Library

பிரத சாந்தி விழா

விழா நாயகர் : கைலாசபட்டர் **விழா நாயகி : K.நாகலட்சுமி**

நாள் 06,07.08.2018 இடம் : சின்ன சங்கரன் கோவில் அம்பாசமுத்திரம்

மலைக்கொ ளானை மயக்கிய வல்வினை

நிலைக்கொ ளானை நினைப்புறு நெஞ்சமே ....

திருக்கடவூர் தேவாரம் திருநாவுக்கரசர்

வண்ணத்தில் காண்கின்றேன் எண்ணம் பற்றிய சிந்தனை

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது! பிறந்தும் விட்டோம்!
ஆம் பல எண்ணப் பிறவிகளாக! இவ்வுலகில்-வலம் வருகிறோம்,
ஆறுவித சிந்தனை சிற்பிகளாக, சுழலும் வாழ்க்கை என்னும் படகில்
அழகாக கரையேற எத்தனித்த வண்ணம்! வண்ணம் என்றவுடன் ஏழில்,

ஆறு வர்ணங்கள் என் நினைவுக்கு வருகின்றது! எண்ணமாம்
அதன் சிந்தனைகளை ஆறு வகை படுத்துவோம் வெள்ளை,
அதிசிவப்பு, கருப்பு, மஞ்சள், பச்சை, ஊதா - என்ற வர்ணங்களாக!
அவை பற்றி நாம் இப்போது சிந்திப்போம் சிலநிமிடத் துளிகள் வரை

வெள்ளை உள்ளம் வர்ணம் கொண்டோர் - உள்ள தகவலை
வெளிப்படையாக உள்ளபடி உரைப்பர் தத்தம் உணர்வுகளை,
வெளியாரிடம் திணிக்காமல், யார் ஒருவர் எது கூறினாலும்
வெகுளிபோல் அது அப்படியே கூறுவர் கணிபொறியின் இயல்பு போல!

சிவப்பு நிற சிந்தனையாளரே! வெள்ளை உள்ளதாருக்கு மாறுபட்டோரே! உங்கள்
சிந்தனை,எண்ணங்களை வெளியிடும் போது, உங்கள் உணர்வுகளையும்
சீராக வெளிப்படுத்துவீர்! மிரளுகிறோம் நாங்கள், தங்கள் கோபக்கனல் கண்டு!
சீருடன் இவ்வுலகில் வேறு வழியில்லாமல் உங்களையும் அரவணைத்த வண்ணம்!

கருமை வண்ணம் என்றவுடன் சிறிது நேரம் என் மனம் மொத்தமாகக்
கலக்குகிறது! எதிர்மறை சிந்தனையை தனக்குள் வைத்து,ஆக்கம் தரும்
காரியங்கள் அனைத்தும்,தடங்கல்கள் பல கூறி, தாமதப்படுத்தி தடுத்தால்,
கலங்காத மனம் தான் உண்டோ? - சபையோரே நீவிர் பதில் கூறும்!

எதிரிமறை சிந்தனையற்ற மஞ்சள் நிறமே! பழமையில் நீ
எப்போதும் ஊறிடுவாய்! புதுமையை தவிர்த்திடுவாய்! ஆக்கப்பூர்வ காரியம்
என்றும் நீ ஆற்றிடுவாய் என்பதனை ஆதி முதல் நாள் அறிவேன்!
எத்தனை தடங்கல் பல வந்தாலும் தடுத்தாலும் சிந்தனை சிற்பி நீ!

Koviloor Digital Library

புதிய எண்ணம் புதிய பார்வை புதிய சிந்தனையில் பூத்து குலுங்கும்
பச்சை வர்ண சிந்தனையாளரே புகுத்திடுவாய் நிந்தன் புது சிந்தனையை,
புதுவாழ்வுடன் கூடிய சமுதாயம் வளர! தடுத்திடுவாய் பழக்கத்திற்கும்,
விளக்கத்திற்கும் இடையே போராடும் மானிடரின் போராட்டத்தை!

ஊதா எண்ணம் போல் உயர்ந்த எண்ணம் கொண்டோரே! தரம் பிரிப்போரே!
உள்ளால் மற்ற வர்ண எண்ணங்களில் எது சிறந்தது எனறு தரம் பிரித்து,
உள்ளத செயலாக்கம் கொடுக்கும் தலைமை பொறுப்பினை ஏற்க முடியும்!
உம்மை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்,உரிய முறையில் நீ நடப்பாய் என்று!

விழா நாயகர் M.கைலாச பட்டர், நாயகி K.நாகலட்சுமியின் *பீமரத சாந்தி*
விழாவில் இலண்டன் K.கணேஷ் சுதா, பிள்ளையார்பட்டி முனைவர் K.பிச்சை குருக்கள்
விழாநூல் 'பொக்கிசம்' படைப்பாளி K.செல்லமணி பட்டர் மற்றும் உற்றார் உறவினர்களை
விழாவினை கண்டு களிக்கும் பேறு பெற்ற உத்தம புத்திரர்களாகக் காண்கின்றேன்.!

பீம ரத சாந்தி விழாவாம் இன்று, மெய்யன்பர்களே நிறங்கள் ஆறு பார்த்தோம்
பார்த்ததுடன் நிற்க வேண்டாம்! காலம் இடம் பார்த்து எல்லா நிறங்களையும்
பயன்படுத்த, எந்த நேரத்தில் எந்த நிறத்தை பயன்படுத்த வேண்டும் என்பதனை
பதம் பார்த்து அனுசரிக்கும் முறையை நாம் பழகிக் கொண்டால் அதுவே

பண்புகள் பல பயின்ற பல்கழகத்தில் படித்தமைக்கு ஒப்பாகும் - அதன்
பயனால் மண்ணில் நல்ல வண்ணம்,பலரும் மெச்ச வாழலாம் என்பதனை
பண்போடு கூறிக் கொண்டு! பீமரத சாந்தி விழா காணும் நாயக நாயகர்களை
பாசத்துடன் வாழ்த்தி! பாப்பன் குளம் திருக்கருத்தீஸ்வரர்,கங்கைகொண்டான்

கயிலாசநாதர்,அம்பை காசிபேஸ்வரர்,கோமதி அம்பாள்,சங்கரலிங்க சுவாமியின், அருள்
கயிலாசபட்டர்,நாகலட்சுமி அம்மையார் பீமரத சாந்தி காணும் இத்தம்பதியருக்கு
கருணையுடன் காலம் முழுவதும் சீருடன் வாழ கொடுக்க வேண்டும்! என்று
கனிவான உள்ளத்துடன் கூறி, வாழ்த்துக் கூற வாய்ப்பு நல்கிய கணேஷ் குருக்களுக்கு

அடியேனின் நன்றியினை எனது குடும்பத்தாருடன் கூறி வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்

வாழ்க வளமுடன்

ச.பொன்ராஜ் புனிதவதி
பவித்திரா செந்திற்குமார்
ponpuni2002@gmail.com
00 44 75536 27767
இலண்டன்

06,07.08.2018

Koviloor Digital Library

திருமயிலை - சொற்பொழிவுகள்

சிவபுரி ம. கைலாசபட்டர் அவர்களின் பிரகதீசுவரர்
வாழ்த்துப் பா

கலைமகளொன்றுடனே பதியில் அமர்ந்திடு அருங்கலை கேள் கைலாசபட்டர்
பொன்னுலகுண்ணிடத் புரிந்தே புதுநிலவாய் வந்துதித்த பேதுமையாள்
முத்துமணாளிப் பட்டர் அருளாண்டு அம்மையின் மணிவயிற்றில் தோன்றிய
விந்தையப் பதிதனில் இந்த வேத விநோதன் வியந்தருள் திருமுடையாள்.

மதிமுகத்தாள் மங்கைநல்லாள் - மலையரசன் மகளாகி மகிழ்சுமிலம்மையாளின்
பதியாகி - பதிஉணர்வாக உத்தமியாய் வேதமுதல்வனாகி உலகுக்
மதிநிறை தாய்தந்தையாக வண்பதி ஒருங்கே அமைய அர்க்கமாகி
நிலைமலர்த்தி மனமாக மகேசனுக் கறிவுக் சித்திரம் பேரவைமுதிர்தான்

தங்கமகளின் தாரமாக சுதந்த அம்மை பெற்று பெருநிதிகளை
மங்கைதன் செல்வங்களாய் சித்திர பதி, சுற்றகாரம் கர்ந்திகாரம்
மங்கையர் திலகமான மகிழ் சித்திரணி கிரியமான சிந்தாப் பட்டயிலே
பங்கய மலர் கானாதி பேரன் பேத்தி தாஜேன் அட்சய அருட்கொடைகள்

பொலிந்து செல்வங்களும் பதினவாழ்வும் பெறும் பேறுகளைவிக்க
ஞானக்கடலான வேதவல்லுனர் சுதந்தனைச் சிகரமாக வாழ்விக்கலாகி!
இம்பரமிலேதுக் திருப்பணியில் தீரராய் சிவனடிச் செல்வராய்
கொடுமை போல் இவ்வாலயம் போற்றப் பல்லாண்டுவாழ வாழ்த்துகிறோம்

வேத நெறி தழைக்கவும் சைவ நெறி மேலோங்கி வளரவும்
மறை பயிலும் மாண்புறு பள்ளிகொண்ட பிரணவப் பட்டியில்
இறைபணியும் இன்பவாழ்வும் பெறும்புகழும் செல்வங்களும் பெருக
குறையாத இளமையுடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்

உறவுகள் உடன்பிறப்புக்கள் உதுதுணையாய் வாழ்வேண்டும்
உலகமும் சிவமுமாக இணைந்து உன்னதப்பணி சிறக்க வேண்டும்
இடைப்பெருகுதும் விவேகத் தொண்டியும் சிவநேயமும் நிலவ வேண்டும்
மங்கைதுகளும் மகிழ்வுடனும் பெற்று நீடுவாழ வாழ்த்துகிறோம்

Koviloor Digital Library

BLESSINGS

Very happy to note that Shri. Kailasa Pattar's Bheemaratha shanthi function is arranged. Given a chance I would have been happy to join you all more so to visit Ambai and also to have Darshan at Sivanthiappar Kovil. My Best wishes and Aseervathams to Kailasam and Sowbagyavathi Nagalakshmi. Wish the function all sucess

Namaskarams

K. Narayanaswamy

8 , Third Avenue Besantnagar,

Chennai 600 090

Cell : 9840177346

Koviloor Digital Library

கட்டுரை மலர்கள் வழங்கியோர்

1. சிவாகம வித்யா ரத்னம், சிவாம்ருத வார்ஷி
   K. ராஜப்பா சிவாச்சார்யார் அவர்கள், காஞ்சிபுரம்

2. சிவஸ்ரீ B. பிச்சுமணி சிவாச்சார்யார் அவர்கள்
   நிறுவனர், ஆசிரியர், வேதாகம கலா சாலை, சென்னை

3. முனைவர் சரசுவதி இராமநாதன் அவர்கள், பள்ளத்தூர்
   தலைவர், கண்ணதாசன் தமிழ்ச் சங்கம் சென்னை
   தலைவர், ஔவைக் கோட்டம், திருவையாறு

4. பிரம்மஸ்ரீ. தியாக. மயூரகிரிக் குருக்கள், அவர்கள், நீர்வேலி, யாழ்ப்பாணம்

5. வேதோவாச ஆகம வித்துவான்,
   சங்கானை பிரம்மஸ்ரீ. நித்யானந்த சுதானந்த சர்மா அவர்கள்

6. முனைவர். தேவகி முத்தையா, M.A., M.Phil., Ph.D., அவர்கள், இலண்டன்

7. பேரா. அரிமா. ந. பாலசுப்பிரமணியன், அவர்கள்
   த/பெ. பெரும்புலவர். பேரா. பா. நமசிவாயம்
   இணைப் பேராசிரியர், வணிகவியல் துறைத் தலைவர் (பணி ஓய்வு)
   ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்

8. சைவ சித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி அவர்கள்

9. ஸ்ரீ ச. பொன்ராஜ், அவர்கள்
   7,497இ 'டி' பகுதி, 58வது தெரு, சிட்கோ, வில்லிவாக்கம், சென்னை.

10. ஸ்ரீ ச. பொன்ராஜ் புனிதவதி, அவர்கள், இலண்டன்

11. திருமதி. அருளாம்பிகை குணராஜா, அவர்கள்,
    சைவ சமய வித்தகி, இலண்டன்

Koviloor Digital Library

ஸைவஸித்தாந்த ஆகம ஸாகரம், ஸிவாகம ஞானபாநு ,
ஸிவாகம கல்பத்ருமம், ஸிவாகம ரத்னாகரம், ஸிவாகம
திருத்தொண்டர், மந்த்ரஸேவாமணி, ஸிவாகம பாஸ்கர,
ஸிவாகம வித்யா ரத்னம், ஸிவாம்ருத வார்ஷி

K.ராஜப்பா ஸிவாசார்யார்

ஸ்தானிகர்- ஸ்ரீ ஏகாம்பரநாதர் தேவஸ்தானம்,
ஸ்ரீ கைலாஸநாதர் தேவஸ்தானம்
121-45,ஏகாம்பரநாதர் சன்னதி தெரு,காஞ்சிபுரம் - 631502.
போன்-944525747

உ

வழிப்பாட்டுப் பயன்களும் பொருட்களும்

ஔதா³ர்ய-வீர்ய-கா³ம்பீ⁴ர்ய-மாது⁴ர்ய-மகராலய:|
அதுலஸ்ஸர்வபூ⁴தானாம்' ராஜராஜோ மஹேஶ்வர:||
- ஸ்ரீமத் அப்பய்யதீ³க்ஷித: - ஸிவார்சனா சந்த்³ரிகா

தர்ம-அர்த்த-காம-மோக்ஷங்கள் எனும் சதுர்வித புருஷார்த்தங்களை அடைவதற்கு உபதேஶிக்கப்பட்டது வேதங்களும் ஸிவாகமங்களும். அவ்வாறே அப்புருஷார்த்தங்களை அடைய வேதத்தால் ஞான – க்ரியா – யோகம் என மூன்று வழிகளும், ஸிவாகமத்தால் சர்யா – க்ரியா – யோக -ஞானம் எனும் நான்கு வழிகளும் உபதேஶிக்கப்பட்டன. அவற்றில், வேதாகமங்களால் புருஷார்த்தங்களுக்கான எளிமையான வழியாக ஞான - கர்ம வழிகள் கூறப்பட்டுகின்றன. மேலும், ஞானவழியும் – கர்மவழியும் தமக்கென தனித்தனி பாதையைக் கொண்டிருந்தாலும் அவை ஒன்றையொன்று சார்ந்தே இருக்கின்றன என்பதை

ஜ்ஞானம்' ப்ரதா⁴னம்' ந து கர்மஹீனம்'
கர்மப்ரதா⁴னம்' ந து பு'த்'தி⁴ஹீனம்|
தஸ்மாத் தயோரேவ ப⁴வேத் ப்ரஸித்'த⁴:
ந ஹ்யேகபக்ஷோ விக'ஹ: ப்ரயாதி||

கர்மாக்கள் அற்ற ஞானம் முக்யம்! என்பதும், ஞானமற்ற கர்மா முக்யம்! என்பதும் சரியில்லை. ஆதலால் இரண்டிற்கும் வேதாகமங்களில் முக்யத்துவம் உண்டு. எவ்வாறு, ஒரு இறக்கையை மட்டும் கொண்டு பக்ஷிகள் பறக்காதோ, அவ்வாறு இவ்விரண்டையும் விட்டால் புருஷார்த்தங்களை எளிதில் அடையமுடியாது என ஸ்ரீமத்ஸிவாக்'ரயோகி' அவர்கள் தமது ஸ்ரீ ஸைவபரிபா⁴ஷை எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

Koviloor Digital Library

முதலாவதான, ஞானம் என்பது மனோவைராக்யத்தால் உண்டாவது. **வைராக்'யாத் ஜாயதே ஜ்ஞானம்** – ஸ்ரீமத் வாயுபுராணத்தின் உத்தரபாகத்தில் கூறிப்பிடப்பட்டுள்ளது. வேதத்திலும் **ஸத்யம்' ஜ்ஞானம் அனந்தம் ப்'ரஹ்ம** என ஞானஸ்வரூபம் உண்மையை – உண்மையான பக்தியை ஊடுருவியதாக உள்ளது.

இரண்டாவதான கர்மா என்பது க்ரியை ஊடுருவியது. **க்ரியயா ஆப்தம் கர்ம** க்ரியையால் அடையப்படுவது கர்மா. அனுஷ்டானம் - யக்ஞ – யாக – பூஜைகள் அனைத்தும் க்ரியைகளே.

இஞ்ஞானக்ரியைகள் அனைத்திற்குமே பலனை அளிப்பவர் பரமேஶ்வரனே. அதை **அஹம் ஹி ஸர்வ யஜ்ஞானாம் போ⁴க்தா சைவ ப'லப்ரத³:** (பரமேஶ்வரனே! அனைத்து யக்ஞங்களுக்கும் பலனை கொடுப்பவர்) என கூர்மபுராண வாக்கியம் தெளிவுறுத்துகிறது. அவ்வாறே,

ப்'ரஹ்மாதி'பி'ர்தே'வ முனயஶ்ய நாக³
க³ந்த⁴ர்வ யக்ஷாப்ஸரஸாம்' க³ணைஶ்ச |
முகை²ரனேகை: அஹமேவ பூஜ்யோ
மாமேவ ஸர்வே வத³ந்தி வேதா³:||

(பரமேஶ்வரனே! மற்ற ப்ரஹ்மா தேவர்கள் – முனிவர்கள் – நாகர்கள் – கந்தர்வர்கள் – யக்ஷர்கள் – அப்ஸரஸ்கள் மற்றும் ஏனைய முக்யர்களில் பூஜிக்கப்படவேண்டியவர் என வேதங்களில் கூறுவதாக தேவிகாலோத்தரம் எனும் நூலின் வாக்யம் நமக்கு தெரிவிக்கிறது, **தபோபி'ருக்³ரை: விவிதை⁴ஶ்ச தா³நை: மாமேவ ஸர்வே ப்ரதிபூஜயந்தி** (உக்ரமான தவம், பலவிதமான தானங்கள் என அனைத்தும் என்னையே வந்தடைகின்றன) எனும் கூர்மபுராண வாக்யம் குறிப்பிடுகிறது. ஆக இவ்வாக்யங்களை உற்று நோக்கில், ஞான, க்ரியைகளின் மூலம் செய்யப்படும் அனைத்து விதமான வழிபாடுகளும் பரமேஶ்வரனையே அடைகிறது எனத் தெளிவாகிறது.

அவ்வாறாகவே, ஶிவபெருமான் ஶிவாகமங்களில் ஆதிஶைவர்களுக்கும் மற்ற ஶைவர்களுக்கும் எளிதான ஞான, கர்ம மார்கமாக ஸமயசார பாஶங்களை (ஶிவானுஷ்டானம்) பக்தியாகச் செய்வதை விளக்கியுள்ளார்.

இச்சமயாசார பாஶங்கள் திருநீறு பூசுதல், ருத்ராக்ஷமணிதல் முதற்கொண்டு அனைத்தையும் கூறி, அவற்றால் ஏற்படும் பயன்களையும் கூறுகிறார் இறைவன். அவற்றைச் சுருக்கமாக இங்கு பார்ப்போம்.

- திருநீறணிதல்

ப'ஸ்மீயதே அனேநேதி ப'ஸ்ம- நம் பாவங்கள் விபூதி பஸ்மமாக – தவிடு பொடியாக்குவதால் திருநீற்றுக்கு பஸ்ம எனும் பெயரும் பயனுமாக கூறுகிறார்.

- ருத்திராக்ஷமணிதல்

ருத்'ராக்ஷதா'ரணாத் ஶ்ரேஷ்ட²ம்' ந கிஞ்சித்'பி வித்'யதே

Koviloor Digital Library

ஶிவபலனைப் பெற ருத்ராக்ஷரமணிவதைக் காட்டிலும் வேறேதுமில்லை என – ஶிவஜ்ஞானபோ³த⁴ ஶிவாக்³ரபா⁴ஷ்யம் கூறுகிறது.

- ஆவாஹனம் முதலியன

ஆவாஹனம் ஸ்வாத்மனி சித்ப்ரகாஶ:
தத்ர ஸ்தி²தி: ஸ்தா²பன மீஶ்வரஸ்ய|
ஸான்னித்⁴யமாத்மேஶ்வரஸன்னிதா⁴னம்
ஸம்ரோத⁴னம்' ஸ்வஸ்ய ஶிவே நிரோத⁴:|| ஶிவபூஜாஸ்தவம் - 36

ஆவாஹனம் என்பது பூஜகனின் ஆத்மாவில் ஞான ஸ்வரூபகரான ஶிவபெருமானை ப்ரகாஶிக்கச் செய்தல், அவ்வாத்மாவில் ஶிவபெருமானை அங்கேயே நிலைநிறுத்தச் செய்வதே ஸ்தாபனம். நிலைநிறுத்தப்பட்ட அச்சிவபெருமானை எப்பொழுதுமே ஆத்மாவில் இருக்கச் செய்வது ஸாந்நித்யம், ஸந்நிரோதனம் ஶிவபெருமானிடத்தே தமது ஆத்மாவை லயித்து அடங்கி இருக்க ச் செய்வதாகும்.

- பாத்யம் – ஆசமனம் – அர்க்யங்கள்

ஸ்வபா⁴வஶுத்³த⁴ஸ்ய ஶிவஸ்ய பாத்³யம்
ஆசாமமாத்மீய விஶுத்³தி⁴ஹேதோ:|
அர்க்⁴யப்ரதா³னம் குஸுமார்பணம் ச
ஸதே³ஶதா⁴மாப்தினிமித்தமேதத்|| ஶிவபூஜாஸ்தவம் - 39

ஸ்வபாவமாகவே மலங்கலற்றஶிவபெருமானுக்கு பாத்யம் – ஆசமனம் ஆகியவற்றை அளிப்பது பூஜகனின் ஆத்மாவின் மலங்களின் நீக்குவதன் உபாயங்கள். அர்க்யம், பூக்களை ஸமர்ப்பிப்பது முதலியவற்றால் ஸதாஶிவனின் நிலையை அடையவதன் பொருட்டு.

- ஸ்நானாதி உபசாரங்கள்

ஸ்னானம் ஸ்வாத்மமலாபஹம் ஶுபா⁴மயைர்க³ந்தை⁴: ஸமாலேபனம்|
ஸத்³வஸ்த்ராபா⁴ரணம் ஶுக³ந்த⁴குஸுமை: மால்யாபி⁴ரப்⁴யர்சனம்|
ஸாலங்கார-ஸதா³ஶிவஸ்ய விதி⁴வத் தூ⁴பப்ரதா³னம் த்வணோ:
போ⁴கா³ர்த²ம் ஹி ஸதே³ஶதா⁴ம்னி விமலம் தீ³பம் ஶிவஜ்ஞானத³ம்|| 40

- ஶிவபூஜாஸ்தவம் - ஶ்லோ 40

ஶிவபெருமானுக்கு ஸ்நானம் செய்வித்தல், நறுமணமான சந்தனங்களைபூசுதல், நல்ல ஆபரணங்களை அணிவித்தல், வாசனைப் பூக்களால்அர்ச்சித்தல் போன்றவற்றால் ஆத்ம மலங்களை அழிக்கின்றன. நன்றாக - விதிப்படி அலங்காரம் செய்வித்தல் , தூபமிடுதல் போன்றவற்றால் நம் ஆத்மா ஶுத்த வித்யா தத்வ புவனத்தில் ஆனந்தமடைகிறது. தீபோபசாரம் செய்வதால் குற்றமற்ற ஞானம் நமக்கு ஏற்படுகிறது.

Koviloor Digital Library

- அன்னம் முதலிய நிவேதனங்கள்

த்ருப்தஸ்யான்னநிவேத³னாம்பு³ முக²வாஸாதி³ ப்ரதா³னம்
மனஸ்த்ருப்த்யர்த²ம் – ஶிவபூஜாஸ்தவம் - ஶ்லோ – 42

அன்னம் முதலியவற்றை நிவேதனம் செய்தல், ஶுத்தமான ஜலம், நறுமணமூட்டும் தாம்பூலம் ஆகியவற்றை திருவாய்க்கு அளித்தல் என்பது வழிபடுவோரின் மனநிறைவுக்காக.

- பவித்ரம் – ஜபம் – ஸ்தோத்ரங்கள் படித்தல்

பவித்ரபூ⁴தஸ்ய பவித்ரதா³னம்'
தாபத்ரயாக்⁴னம்' ஸகலார்த²' ஸித்³த்⁴யை |
ஜபஸ்ய பீ⁴க்த்யா ப்ரணதி: ஶிவஸ்ய
ப்³ரஹ்மேந்த்³ரவிஷ்ணுவாதி³' பத³த்வ ஹேது:- ஶிவபூஜாஸ்தவம் - ஶ்லோ 43

பவித்ரரான – புனிதரான ஶிவபெருமானுக்கு பவித்ரம் ஸமர்ப்பித்தல் என்பது ஆத்யாமிகம் – ஆதிபௌதிக – ஆதிதைவிகம் எனும் மூன்றுவகையான துன்பங்களில் இருந்து வெளிபடச் செய்யும். மூலமந்த்ர ஜபங்களைச் செய்தல், அதன் பலனை ஶிவபெருமானுக்குச் சமர்ப்பித்தல், ஸ்தோத்ர வந்தனம் செய்தல் முதலியன ப்ரஹ்மா - விஷ்ணு – இந்த்ரன் முதலியோரின் நிலையை அடையச் செய்யும்.

- ப்ரார்த்தனை – அக்நிகார்யம் – பலஸமர்ப்பணம் -ஆத்ம நிவேதனம்

அன்யோன்யம் த்வவலோகனாய பு⁴வனே பா⁴கா³ய ஸாதா³ஶிவே
ஈஶாக்³ன்யர்சனமர்பணம்' க்ஷபயிதும்' ப³ந்த⁴த்ரயம்' கர்மணோ
ஜ்ஞேயம் ஸ்வாத்ம நிவேத³னம் பரஶிவே ஸ்தி²த்யர்த²மேவாத்மந: ||

- ஶிவபூஜாஸ்தவம் - ஶ்லோ 45

ஶிவபெருமானிடம் ப்ரார்த்தனை செய்வது அவரை நேரில் காண்பதற்கான உபாயம். ஶிவாக்நியில் ஹோமம் செய்வது பூஜகனின் ஆத்மா ஸதாஶிவ புவனத்தில் போகங்களை பெறுதற்கான வழி. ஶிவபூஜா பலனைச் சமர்பித்தல் மும்மலங்களை போக்கும். ஶிவபெருமானுக்கு ஆத்மாவை அர்ப்பணம் செய்தல் என்பது ஶிவபெருமானிடத்தே அவ்வாத்மா எப்போதும் லயித்திருக்கவே.

இவ்வாறாக பூஜை முறைகளும் அவற்றால் ஏற்படும் பயன்களும் ஶிவாகமங்களிலும், அதன் ஸாரமான ப்ரகரண க்ரந்தங்களிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. பூஜாத்ரவ்யங்கள் இல்லாத போதும் பாவனையாக அனைத்து உபசாரங்களையும் மனதினால் செய்வது உத்தம பூஜையாகும். இதை அனைத்து பத்ததிகார்களும் பூதஶுத்தியின் அந்தர் யஜநத்தில் குறிப்பிடுகின்றனர்.

Koviloor Digital Library

ஶிவமானஸ ஸ்தோத்ரமும் மனதால் செய்யப்படும் பூஜை முறையை வேதாந்த ஸாரமாக விளக்குகிறது.

ஸித்தாந்த ஶைவமான நம் ஶைவாகமத்தில் ஞான, க்ரியை இவ்விரண்டையும் இணைத்து செய்யப்படும் பூஜைக்கே பலன் அதிகம். அதிலும் பக்தியுடனும் அநுஷ்டிக்கும் பூஜையின் பலன்கள் அக்நிஷ்டோம யாகத்தினால் கிடைக்கும் பலன்களுக்கு ஸமமானவை. இதனை **ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதர் அவர்கள் தனது ஶிவத்யானபத்ததியில்**

ஸர்வோபசாரவத் ப⁴க்த்யா பா⁴வபுஷ்பைஸ்ஸமர்சயேத் |
ஏவம் த்⁴யாத்வா க்ஷணமஹோ அக்²நிஷ்டோமாயுதாத் ப²லம்|
உமாஸஹாயம் விஶ்வேஶம் த்⁴யாத்வா ப்ராப்நோதி மானவ:|| என்று குறிப்பிடுகிறார்.

ஸ்ரீமத் ஸ்ரீஶம்புபூஜாவிதியில் **ப⁴க்த்யா ஶங்கரநாமகீர்தமதோ² ..., ப⁴க்த்யா ஸ்வாந்த ஸரோஜமத்⁴யமதலே...., ப⁴க்த்யா மூலமஶக்திமான் ஸவினயம் ..., ப⁴க்த்யா தான் ஸகலோபசார நிவஹை:** என பக்தியைக் கொண்டே அனைத்து பூஜோபசாரங்களைக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே வாயுபுராணத்திலும் **யதா² ஸம்ப⁴வ பூஜாபி⁴: கர்மணா மனஸா கி²ரா | ஶிவப⁴க்தி: ஸதா³கார்ய:** கிடைக்கும் த்ரவ்யங்களைக் கொண்டு பக்தி பூர்வகமாக கர்மா, மனம் மற்றும் வாக்கினால் அநுஷ்டிக்கப்படும் ஶிவபூஜை முறையே உத்தமமாகும்.

ஆகவே பக்தியை பொருளாக்கிச் செய்யப்படும் ஶிவபூஜையினால் கிடைக்கும் ஶிவ ஸாலோக - ஶிவ ஸாமீப்ய - ஶிவ ஸாரூப்ய - ஶிவ ஸாயுஜ்யங்களே ஶிவ வழிபாட்டின் பரம பயனாகும்.

Koviloor Digital Library

ஸ்ரீமதுரை காமாக்ஷி துணை

வேதாகம கலா கலை வல்லுனர்,
ஆயுர்வேதர், ஜோதிடர்
சிவஸ்ரீ. ந. மகாலிங்கமணி சிவாச்சாரியார்
PX. 99 620 62621.

பீமரத சாந்தி வைபவம் காணும்
தம்பதியினர்
சிவஸ்ரீ M. கைலாசபட்டர் மாதுஸ்ரீ K. காசாம்பிகை அம்மாள்
அவர்கள்.

ஆகியோரை ~~[illegible]~~ வாழ்த்து வயதினை வணங்கிநின்றேன்

இவ்வினிய நாளில் "பொக்கிஷம்" - என்னும் மலர
இன்பமிக மெய்திடுக் தூவகிய தூனை மரியாதைக்குரிய
V.K. புரம் கைலாசநாதம் அகஸ்தியமாமுனிவரின் அருள்வாக்கு பெற்றார்
சிவஸ்ரீ K. செல்லமணிபட்டர் அவர்கள் தொகுத்து வழங்க
உற்ற இந்நூலுக்கு அடியேனையும் விரும் பணிந்தமை
அன்புகட்டளையிட்ட விநாதப்பதியின் இமயர்
மெண்டன் ஸ்ரீ ஜெகன் ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ K. கணேச
குருக்கள் மற்றும் அவர்களது சகோதரி
தம்பதியரிடத்திலே எனது நன்றியை தெரிவித்து
கொண்டு பீமரதசாந்தி வைபவம் இனிதே
எல்லாம் வல்ல இறைவனை ப்ரார்த்திக்கிறேன்

"ஜனனாதிப்ரபம் ப்ரதிஜ்ஞே ஜன்ம மாஸே
ஜன்ம நக்ஷத்ரே ஆயுஷ்ய உபாவஸ்ஸிர்யாத்"

அதாத: ஸம் ப்ரவக்ஷ்யாமி சாந்திம் பீமரதா மிதாம்
உதாயனே ஸப்ததிமே மத்யே பீம ரதோ பவேத்
ஜன்மாயான் மத்ய மாப்ணோதி தனவாநி ஸ்தாதைவச
புத்ர தாராதி நாதஸ்ச த்ரவய தான்ய பசுஸ்ரிய
தத்தோஷ அநாவர்த்தாய சாந்திம் குர்யாத் ~~[illegible]~~ விதானாத்
ஜன்ம மாஸே ஜன்மதினே நம்பகேஷ்வர பலாவிதே (சொன்னார்)

நம் தேவ்வொருவரின் வாழ்க்கையின் 70 ஆம் ஆண்டில் பீமரதம்
(மிகப்பயங்கரமானரதம்) என்னும் வாகனத்தில் ஏறி மிருத்யு (யமன்)
நம்மை தாக்க வருவதாக சொல்லப்படுகிறது. அதை வியாதி என்னத்தில்
பலவிதமான கீழ்க்கண்டவை ஏற்படுத்துகிறார் அதுவும்
முதுமையுடன் திரிபடு, தனநாசம் சண்டை, சச்சரவுகளை ஏற்படுத்துகிறான்
இதனையும் தடுத்து என்றிருப்பும் வேண்டாமல் இருக்க
மிருத்யுஞ்சயனான ஸ்ரீபரமேஸ்வரனை "ஸ்ருதி ஸ்தோத்ரம்" என்னும் மந்திரம்
கொண்டு வழிபடுதல் மேலும் ப்ரம்ம, துர்க்கை அர்ச்சிக்க பாவங்கள் இவிய
தெய்வங்களை பிரதிஷ்டை" என்னும் கிரமங்களில் வழிபட்டு நோய்களும்
வியாதியற்ற வாழ்க்கை இல்லை ஐஸ்வர்யம், சம்பத்து

Koviloor Digital Library

மோக்ஷசாந்தி ஆகிய எல்லா நன்மைகளும் கிடைக்கப்பெறுகிறோம்
மனோவ்யாதி மிகுந்த பயம் அனைத்தும் நீங்குகிறது.

சாதாரணமாக ஒரு மனிதனுக்கு 50 வயது வரை
ஆயுது தீவவும் யோக செய்ய வேண்டிய நிலையான புனர்க்க
மேலாத சாந்தி என்று பெயர் என்பது அனைவரும் அறிந்தது
சௌனகர் போதாயனர் உற்றிட்ட மகரிஷிகள் இதற்கான
விதிகளைத் தெளிவாக வகுத்துள்ளனர் - நமது ஆயுளில் ஒவ்வொரு
கால கட்டத்திலும் ஒவ்வொரு தேவதைகளின் கட்டுப்பாட்டில்
வாழ்கின்றோம்

குழந்தை பிறந்து 1 வயது வரை ஆயுர் தேவதை
எனப்படும் அக்னியின் கட்டுப்பாட்டில் இருக்கிறோம்
அந்த ஆயுர் தேவதைக்கு ப்ரீதியாக முதல் வயது பூர்த்தி அடையும்
போது அப்த பூர்த்தி ஆயுஷ்ய ஹோமம் செய்கின்றோம்

1 வது வயது முதல் 10 வயது வரை மனிதனாகிய நாம்
ப்ரம்மாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறோம். அதனால்தான் அந்த
குறிப்பிட்ட காலகட்டத்தில் உபநயனம் என்று ப்ரம்மோபதேசம்
செய்கின்றோம். அவ்வயதுடைய இளைஞனை ப்ரம்மச்சாரி
என்று அழைக்கப்படுகிறார்

10 வயது முதல் 40 வயது வரை மகாவிஷ்ணுவின்
ஆட்சி நடக்கிறது. இந்த குறிப்பிட்ட காலத்தில்தான்
ஒருவன் தானம் செய்வதற்கும் தானம் பெறுவதற்கும்
தகுதியாகிறான். ப்ரம்மச்சரியானவன் இல்லறத்தர்மத்திற்கு வர
கன்னிகா தானம் வாங்கி எல்லா வளமும் அடைந்த அவனை
நாராயண ஸ்வரூபனாக சாஸ்திரம் வர்ணிக்கிறது.

40 வயது முதல் ருத்ரனின் (பரமேஸ்வரன்)
கட்டுப்பாட்டில் வருகிறோம்.

ருத்ரனுக்கு பல்வேறு தேவர்கள் உள்ளனர் 50 வயது வந்து
60 வது வயது தீவவும் போது உக்ரத சாந்தி என்று
அழைக்கப்படும் உக்ரத ருத்ரனுக்கான பூஜையை செய்ய
வேண்டும். 60 வயது பூர்த்தி அடைந்து 61 வது தீவவும் போது
செய்யும் வைபவத்தைத்தான் சதாபிஷேகம் அந்த பூர்த்த சாந்தி என்று
சொல்கிறோம்

Koviloor Digital Library

அதிலே ஒன்றாகி பிரம்மை கலந்த மகிழ்ச்சியை அவர்களுக்கு
விசேஷ பூஜைகளும் ஹோமங்களும் செய்கிறோம்

ஒரு வயது முடிந்து 70 வயது நிறைவுறும் பொழுதான
பீமரத சாந்தி என்று ஒரு சிறப்பான பீமரத ஹோமத்தான
பூஜை ஹோமங்களை செய்கின்றோம்

77 வயதும் 7 மாதம் 7 வது நாள் அன்று
விஜயரத சாந்தி என்று விஜயரத ஹோமத்தோடு பரிதிஷேகம்
விதமாக பூஜைகளை செய்கின்றோம்

84 வது வயதுதான் மனிதன் மீண்டும் பிரம்மாவுடன்
கட்டுப்பாட்டுக்குள் வருகிறான் அதை சதாபிஷேகம்
என்று அழைக்கப்பட்டு முதானமாக பிரம்மா ~~[illegible]~~
புகழ்கப்படுகிறார் இப்படி ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு
தேவதைகளின் கட்டுப்பாட்டில் வாழ்கிறோம்
பீமரத சாந்தியை அனைவரும் புரிந்து ஏகாதசி படியாக
70 ம் கல்யாணம் என்று வேண்டுமானால் இப்படலாம்
இந்த 70 வயது ஆரம்பத்தில் எல்லா மனிதர்களுக்கும் உடல்
தளர்ச்சியுடைய வயதாகும் இது இயற்கையான என்று
உடல் தளர்ந்தாலும் மனிதனுடைய மனம் தளராமலும்
சந்தோஷமாக இருக்க வேண்டி இறைவனை வேண்டி செய்ய
கூடியதுதான் பீமரத சாந்தி
மகாபாரதத்தில் வரக்கூடிய பாண்டவர்களில்
பீமன் செய்த சிவபூஜை எல்லோர்க்கும் தெரிந்த விஷயம்
அவன் செய்ததுபோலவே மகிழ்ந்து தன்னுடைய எட்டு
நாமாவளியை விட்டுக் கொடுத்தார் அதன்படி
1. பவன், 2. சர்வன், 3. ஈசானன், 4. பசுபதி, 5. உக்ரன், 6. ருத்ரன்
7. பீமன் 8. மகாதேவன் அதுவே நாமாவளியின்
எனவே பீமன் போல் மனதுடனும், உடல் அளவிலும்
ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று இறைவனை வேண்டி
பிரார்த்தனை செய்வதே பீமரத சாந்தி

மேலும் விபரங்கள்

கி. மீனாக்ஷி சுந்தரம் சாஸ்திரியார்
P. ஜானகி
மற்றும் குடும்பத்தினர்.

Koviloor Digital Library

உ

சிவத்திரு. நாகலிங்கப்பட்டர்
சிவத்திருமதி நாகலட்சுமி

பீமரத சாந்தி நல்வாழ்த்து

முதல்வர். தாசுவதி இராமநாதன். பள்ளத்தூர்
குடும்பம். கண்ணதாசன் கழிப்கலம். சென்னை
" ஏனைய கோட்டம். குடும்பமாக

இப்பொன்னீ, இம்மணியீ என்றோர் அப்பர்! பெருமைக்கிய மனைப்பிறவி எனக்கு நாம். இம்பர் உய்தானால் பொன்வாடா; அறுபதுக்கு மணிவாடா. எண்பதுக்கு முத்துவாடா. நூறுண்டுக்கு வைரவிடா எனக் கொண்டாடுகிறோம். எழுபது நிறைவு பெற்றதும் பீமரத சாந்தி 75 இல் விமரிசையாக சாந்தி வேள்வி நடத்துகிறோம். நமது குடும்பத்தாருக்கு நாம் ஆன்மிகம், உபநயனம், திருமணம். சீமந்தம் எனவிழாக்கள் நடத்துகிறோம். பிள்ளைகள் நமக்குப் பொன்வாடா, மணிவாடா, முத்துவாடா நடத்தி மகிழ்வது பெருமைக்கே! பெருமையே.

பள்ளியர் பட்டத்தும் எங்கள் குடும்பத்திலும் மிகத் தொடர்புண்டு! எங்கள் அப்பனார் சேய் (அப்பரடிகள் என்பர்) அன்னார், மனிய காரராக 1950 களில் பணிபுரிந்தவர். விகாரம் ஏற்ற பிள்ளை அன்னார், எங்களுக்கு உறவுக்கும் மேலே உயர்வான தகுதியார். உலக முதலும் அன்னாரிடம் பயின்று நன்மாணாக்கர்கள் சிவாச்சாரியர்களாக விளங்கி, அவர் புகழைக் காத்து, தெய்விகப் பணிகள் செய்கின்றனர். அவருடைய மருமகன் (மாப்பிள்ளையார்) கணேசு சிவம் என் அன்புக்கிய மருமகன். நான் மாமி என்றும் அவர் மருமகன் கணே!

அவரது சுற்றத்து சிவத்திரு. நாகலிங்கப்பட்டர் - சிவத்திருமதி நாகலட்சுமியுடன் பீமரத சாந்தி விழாக் காண்பது மிக்க மகிழ்ச்சி - நித்ய கல்யாணியும் மகளும் மாப்பிள்ளை சிவமும் நதியும் சிவா(ள) கல்யாணசுந்தரப்பட்டரும், பேரனும் பேத்தியும் சிவாகமசுந்தரம் கணேசு மோகனும். சுகா. M.Com என்னும் மருமகளும். நித்யஸ்ரீ, கார்மேகம், சுந்தரராம் ஆகிய பேத்தி, பேரர்களும், இவ்விழாவை நடத்தி மகிழ்வது பேருவகைக் கருகிறது!

Koviloor Digital Library

இந்த தம்பதிகள்
"நூறாண்டுக் காலம் வாழ்க"
நோய் நொடியில்லாமல் வளர்க
என வாழ்த்தி மகிழ்கிறேன்!

"பொக்கிஷம்"

நல் விடுதலைக்கனவில் நன்றாகக்க எனவி யட்டுத்துறையு கிட்டியிய ஆனை காணும்! 'பொக்கிஷமது' நடைக்கு 'வழிபாட்டுப்பயன்களும் பொருள்களும்' என்ற நூலை வழங்க இருக்கிறார்கள்! 'ஆசான் சந்த' டாக்டர். பச்சை அண்ணா எனவி யிடமுள்ள இந்தப் பொக்கிஷத்தைத்தொகுத்து நடைக்குச் சிறுபவர் 'அகில்ஷியம்' K. சென்னமணி பட்டர் அவர்கள். இதில் நானும் ஒரு சிறு பகுதி - இவர்களுக்கு ஒரு இடையை வைப்பது என் பேறு!

வழிபாடு

எல்லாவற்றையும் நடக்கவிருந்த கடவுள், இயற்கை, தலைவன் (அதோ ஒரு பெயரிட்டு அழைப்போமே!) அருள்தரும் நாம் நன்றி சொல்வது எப்படி? பாராட்டுவது எப்படி? அதுதான் வழிபாடு வேட்கை. எல்லாவிடம், எப்பொழுதும் 'பார்க்கிட மெல்லாம் நிறைந்த பரிபூரணர்க்கு' "நாம் கொடுத்து என்ன ஆகப் போகிறது?" "என்பர்கள்', நமது அகம் குளிர்தலுக்கு வழிபாடு'. பேரறிவு புல்லறிவுக்கு போகவேட்டும். இருட்டறை எரிச்சல் பட வேட்டும் இறைவன்! அவனைப் புகழ்வதால் தேவையா - என்பர்கள்! இறைவனைப் புகழ்வதால் உனக்கென்ன நஷ்டம்? அவன் 'ஸ்துதி ஆர்ஹதன்!' ஆன்'.

'தன்னையே புகழ்ந்து கிச்சை பேசுகிறான்' - சிலர் ஆரூம் சாடுவர்! 'அகமுக்கிலாதாகட் பாவியென்றும் 'மதுக்கிலாதான் வாழ்வீணே! வீணனே!' என்றும் சாடுவர். இறைவனை

'மன்னும் மலையும் மறுமையும் ஆகியான்
பேரறமும் ஆகியும் புணர்ப்பான்
என் பிறவி பெறுப்பான் அவன்கட்
பாடுறவு என்ன'?

Koviloor Digital Library

'வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க' என்றான் ஆண்டாள் நாச்சியார்! சிந்தித்தலையே மனம், செயல் நாக்கு, ~~[illegible]~~, வணங்குதல், காணக்கண் கூடிய தலைக் கைகள், சுற்றிவரக் கால்கள் கருவிகளுக்கு, அந்த அவயவங்களால் வழிபடல் அறிவுடைமை!

மனத்தால் நினைத்தால் போதாதா

நீ கேள்விகள் வரும் ஆய் வதாக என்னை மனம் ஆய் மையாக, நினைத்தால் போதாதா? பூஜை அவசியமா! என்பர்! மனம் ஒரு குரங்கு. எதையாவது பற்றிக்கொண்டு ஒரு நிலையில் நிற்காது. அதை அபிமான விடாமல் கட்டுபட வைப்போரால் முடியாது! மானிடருக்கு சாத்தியம்! ...

சிவன் வழிபாடு, சக்தி வழிபாடு, இயற்கை வழிபாடு, முருக வழிபாடு, கிராம தேவதை வழிபாடு, வைணவர்களும் சாக்த மரபுகள் கிருஷ்ணரும், வேள்வி (யாகம்) அபிஷேகம் எனும் திருமஞ்சனம், அர்ச்சனை (மலர்வழிபாடு) எனாது! இவை வழிபாட்டில் கிரகக்கருவிகள் பயன்படும்!

அதுவே ஆலயம், வழிபாடு, அர்ச்சனை வைபவம் ஆகிறது! 'மங்கா மரத்துக்கு புகழ் வேண்டா' கருவறையில் நாம் அறிகிறோம் இல்லையே! பெரிய மன்னர்கள், குறுநில மன்னர்கள், அமைச்சர்கள், நகரத்தார் என்று பலரும் பல ஆலயங்களைக் கட்டி நம் பாரதத்தைப் பொன் உலகம் போல் ஆக்கியுள்ளனர். தமிழ் நாட்டைச் சிவலோகம் ஆக்கியுள்ளனர். அந்த ஆலயங்கள் பராமரிப்பு, அன்றாட உணவாயினும் சரி, ஆராதனையாகட்டும், திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்துவது சிறப்புள்ளியமே!

'நீ எப்படி என்னுடையவனே எங்கே நீ வா' என்று கொடுக்க, அப்பர் சுவாமி வழிபாடு செய்யக் கொள்கிறார். புலர்வதன் முன் கோவிலுக்கு விரைவதைக் கட்டுப்படுத்த!

நமது! நுகர்கட்டு! புகழ்ச்சி பாடு! தமிழாகும் கும்பிடு! ஆடியபாடு! பேரிரை வழிபாடு சரி! இவைகளை உயிரும் ஆகு என்கிறார்!

Koviloor Digital Library

வேள்வி (யாகம்)

புத்தபுதுப்பொலிவு பெற உயர்ந்தது. அனைத்தையும் தாங்கும் ஆக்கியளிக்கும்! எங்கும் எதிலும் மேலே நிறைந்து போட்டாம் கீழே ஊற்று விடும். ஆனால் மட்டும் தான் மேல் நோக்கி எரியும்! அந்த அக்னி தேவர்களின் வாய் போன்றது. ஆகுதி நெய்யும் எரியுங்கள் அந்தந்த தேவருக்கு எடுத்துச் சென்று தரும் என்பது ஐதீகம்! பசு நெய்யில் சமித்து நெல்லுக்கு தீயில் போடும் வழிமுறை தான் யாகம் எனும் வேள்வி. அந்தப்புகை சுவாசம், நன்மை செய்வதாகும் நன்மை தரும்!

நாம் திருக்கோயில், 48 - மண்டலம் என்பதை நிறுப்பதாக கொண்டு முடிகிறோம். மண்டலமுறை 48 நாள், விரதம் / மண்டலம் 48 திருக்கோயில் என்கிறோமே! உலகம் உயிர்களும் வாழ மண்டலத்தின் 48 ஜோதிகளின் சக்தியாகும்! 27 நட்சத்திரங்கள் + 12 ராசிகள் + என்பது கோள்கள் = 48 இந்த 48 ஒளி 48 மாதங்கள் சூரியனிடம் ஒளிக் கோர்வை தொடர்பு பெறுப்படும் சக்தியாகிறது! அந்த 48 மாதச்சுழற்சியின் ஆகுதி செய்து யாகம் நடத்தும்போது அந்த ஒளி, சக்தி, உயிர்களுக்கு சேர்கிறது. யாகத்தின் பயன் அளப்பரிது!

மனித ஒளி சக்திகள் ரீ.ர்க்கம் கோபாக்கவசங்கள் அமைக்கப்பட்டன! அந்தச் சக்தி குறைவாயிருக்கிறவர்கள் வழிபாட்டுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறது

1. அபிஷேகம் நெய்யும் போது ஆக்கிரகங்கள் ரீ.ர்க்கப்பட்ட தீர்த்தம், நெய், தீபங்கள் காட்டப்படும் போது அந்த சக்திகள் நம் கண்களின் வழி புகுந்து, மனம், சுத்தம், அறிவு இவற்றை காப்பது ஏதோ ஒரு புத்துணர்ச்சி தருவதை உணர்கிறோம்.
2. திருவாசங்கள் கூட்டுப் பாடும் போது, மனம் ஒன்றி இவற்றின் வழி சக்தி நம் உள்ளம் பாய்கிறது.
3. தூவி தொடுத்து வணங்கும் போது உச்சியிலுள்ள மேட்டுப் பள்ளம் சக்தியை ரீ.ர்க்கிறது.
4. ஓம் நமசிவாய, மந்திரஜபம், மனப்பூர்வமாகும் நாதஸ்வரம் தவில் இவற்றின் வழி இதுகாலங்களின் சக்தி பாய்ச்சப்படுகிறது
5. அகில், சந்தனம் நறுமணங்கள் பன்னீர், குங்கும் நாணல் வழி நாடிகளின் ஒளி சக்தி புகுகிறது.

Koviloor Digital Library

உடல் உறுப்புக்கள் வழி மனமும் ஆரோக்கியமாக 5
சுகம் பெறுகிறது!

எங்கும் எதிலும் இறைவனுக்குத் துணைப்படுத்துவது
அது அவன் கருணை என்ற பண்பாகத்தான் இருக்கிறது
தோழா! நான் என்ற அகங்காரம்
எனது என்ற மமகாரம் - இறைவனிடம்
வேண்டாமே! நீ மனக்கால் அறி; வாயால் பாடு; கையால்
வணங்கு எது செய்வதும் என்ன சுவாசம் அது
அங்கப் பாதன் சுந்தரே!

'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'
பேரின்பப் பெருவாழ்வு பெறுவோம்!

ஓம்

Koviloor Digital Library

வேல் உள்ள போது வேறு பயம் ஏன்...?

- பிரம்மஸ்ரீ. நியாக. மயூரகிரிக்குருக்கள்,
நீர்வேலி, யாழ்ப்பாணம்

இலங்கைத் திருத்தலங்களைப் பற்றிச் சிந்திக்கிற போது, வடபுலத்தே இருக்கிற யாழ்ப்பாணமே முதலில் ஞாபகத்திற்கு வரும். அவ்வளவுக்கு முற்றிலும் தமிழ் பேசும் மக்களையே தன்னகத்தே கொண்ட இந்து மதம் பழம் காலம் தொட்டு செழித்து வளர்ந்திருக்கிற பூமி இது.

யாழகம்

மிகவும் புராதன காலத்திலே பழந்தமிழ் இசைக் கருவியான யாழ் இசைக்க வல்லார் அதிகம் வாழ்ந்ததால் இந்நிலம் யாழ்ப்பாணம் எனப்பட்டது என்பர். இன்னும் இச்சொல் வரக் காரணமாக, பல்வேறு ஐதீகக் கதைகளும் உண்டு.
சுற்றிலும் கடலால் சூழப்பட்டு.. ஒரு பக்கம் மட்டும்.. இலங்கையின் பிறபாகங்களோடு தொடுக்கப்பட்டிருக்கிற யாழ்ப்பாணத்தை யாழ். குடாநாடு என்று அழைப்பர்.

சுற்றிலும் கடல் சூழ்ந்திருந்தாலும் நல்ல செம்மண் பூமி நிறைவாக இருப்பதால் வயல் வளம் சிறந்திருக்கிறது. பல்வேறு பயிர்களும் செய்கை பண்ணப்படுகின்றன.

ஆறில்லாத... மலையில்லாத இப்பிராந்தியத்தில் இவை இல்லாத இடத்தும் இயற்கை அழகும், செழிப்பும், இயல்பான குளிர்ச்சியும் நிறைவாய் உள்ளமை ஆச்சர்யமானது:.

நகுலேஸ்வரம் போன்ற அநேக சிவாலயங்கள், அரசர்கள் ஸ்தாபித்த அநேக விநாயகர் ஆலயங்கள், நயினை நாகபூஷணியம்பாள் ஆலயம் போன்ற அநேக அம்பிகை ஆலயங்கள்,
இன்னும் வல்லிபுரம், பொன்னாலை போன்ற வைஷ்ணவாலயங்கள், இவற்றிற்கு எல்லாம்
அதிகமாக பார்க்கும் இடமெல்லாம் குறைவில்லாது வெற்றி வேல் பெருமானுக்குரிய ஆலயங்கள்..

நீண்ட காலமாக தொடர்ந்த இனப்பிரச்சினையால் உயிரை எப்போதும் கையில் பிடித்து வாழ்ந்திருக்கிறார்கள் யாழக மக்கள்... காலத்திற்குக் காலம் நாட்டுக்குள்ளும்.. பின் ஒவ்வொரு நாடுகளாகவும் இவர்கள் அலைந்திருக்கிறார்கள்..

அப்போதெல்லாம் அவர்கள் எழுப்பிய குரல் முருகநாமமே... அவர்களின் வாய் பாடியதெல்லாம் கந்தஷஷ்டி கவசமே... அந்த வேற்பெருமானே தங்கள் வழித்துணையாய்.. உயிர்த்துணையாய் நின்றான் என்று இவர்கள் நம்புகிறார்கள்..

'விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள் முன்பு செய்த

Koviloor Digital Library

பழிக்குத் துணை அவன் பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே..'

என்பதே இந்த யாழ்ப்பாண மக்களின் முழுமையான நம்பிக்கையாக இன்றும் இருக்கிறது. அதனால் தான் இம்மக்கள் தம் நாட்டை விட்டு புலம்பெயர்ந்து எங்கு சென்று வாழ்ந்தாலும் அங்கெல்லாம் நம் அழகுக் கடவுளுக்கு கோயில் சமைத்துக் கும்பிட்டு வருகிறார்கள்..

இன்றைக்கு நீங்கள் இலண்டனுக்கு போனாலும், அமெரிக்கா போனாலும், ஆஸ்தி ரேலியா போனாலும், மலேசியா போனாலும் ஜேர்மனி போனாலும் இன்னும் இன்னும் எந்த நாட்டுக்குப் போனாலும் அங்கெல்லாம் யாழ்ப்பாணத்து மக்கள் அமைத்திருக்கிற அழகு முருகன் கோயில்களை காணலாம்.

யாழ்ப்பாணத்துக் கலாச்சாரத்தை 'கந்தபுராண கலாச்சாரம்' என்று அழைப்பதும் வழக்கம்.. அவ்வளவுக்கு இவர்களின் வாழ்வு முருகனுடன் .. முருக வரலாறாகிய கந்தபுராணத்துடனும் இணைந்திருக்கிறது. இன்றைக்கும் யாழ்ப்பாணத்து ஊர்கள் தோறும் கந்தபுராணபடனம் நடப்பதைக் காணலாம்.

யாழ்ப்பாணத்தை பொ.பி 08ஆம் நூற்றாண்டிலிருந்து 16ஆம் நூற்றாண்டு வரையான காலத்தில் தமிழரசர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். இவர்கள் இடபக் கொடியினை தமது கொடியாகக் கொண்டவர்கள்.. சேது என்பதை தமது மங்கல முத்திரையாகக் கொண்டவர்கள்.. யாழ்ப்பாணத்து நல்லூரை தலைமையகமாக உடையவர்கள்.

நல்லூர்க் கந்தன்

இவர்களின் தலைமையகமான யாழ். நல்லூரின் பெயரை யார் கேட்டாலும் அங்கிருக்கிற முருகன் கோயிலைப் பற்றியே சொல்வார்கள்..

யாழ்ப்பாண மக்கள் நல்லூரை நல்லையம்பதி என்றும் செல்லப்பெயரால் அழைப்பர். நல்லைக் கந்தன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே புதிய உணர்வைப் பெறுவார்கள். அவர்கள் மனதில் நல்லூரில் கவின் கோயில் கொண்டு காட்சி தரும் தம் சொந்தப்பெருமானாம் கந்தப்பெருமானின் எண்ணம் குடி கொள்ள... கண்களில் கண்ணீர் பெருகும்... கைகள் தானே விரியும்...

முதல் முதலில் எப்போது.. நல்லையில் குமரவேள் கோயில் கொண்டார்..? என்கிற கேள்விக்கு சரியான பதில் காண்பது கடினம்.. என்றாலும் ஈழமண்டலச்சதகம் என்ற நூலில் சகஆண்டு 870ல் புவனேகபாகுவால் நல்லையில் முருகப்பெருமானுக்குக் கோயில் எழுப்பபட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இலக்கிய சகாப்தம் எண்ணூற்றெழுபதாம் ஆண்டின் எல்லை
அலர் பொழி மார்பனாம் புவனேகபாகு
நலமிகு யாழ்ப்பாணத்து நகரி கட்டுவித்து நல்லை
குலவிய கந்தவேட்குக் கோயிலும் இயற்றினானே

ஆக, பொ.பி 948ல் இங்கு கோயில் எழும்பியிருக்கிறது. அரசர் முதல் ஆண்டி வரை நல்லூர் ஆண்டவனை இங்கு வழிபட்டிருக்கிறார்கள். 1450ல் தென்னிலங்கை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய போது இக்கோயில்

Koviloor Digital Library

இடமாற்றம் பெற்று சிறிது தொலைவில் அமைந்தது.

இப்பெருங்கோயிலும் 1621ல் போர்த்துக்கேய மதவெறியர்களின் ஆளுமைக்குள் அகப்படவே கற்குவியலாயிற்று... யாழ்ப்பாணத்துச் சைவர் இதயமெல்லாம் கண்ணீரில் தோய்ந்தது. அந்த சம்பவத்தில் உயிர் விட்டவர்கள் ஏராளம்.. நாட்டை விட்டு ஓடியவர்கள் ஏராளம்.. இவற்றை போர்த்துக்கேயரின் டயறிகளே சொல்லி நிற்கின்றன.

இச்சம்பவத்தின் போது நல்லூர் கோயில் குளத்தில் கும்பிட்ட விக்கிரகங்களைப் புதைத்து விட்டு (போர்த்துக்கேயர் கண்ணில் படின் சிதைத்து விடுவர் என்று அஞ்சி புதைத்தனர்) கோயில் குருக்கள்மார் நீர்வேலிப்பகுதிக்கு ஓடியதாக வரலாறு பேசுகிறது..

கந்தன் கோயில் கொண்ட இடம் கத்தோலிக்க தேவாலயமானது.. சில ஆண்டு காலத்தில் போர்த்துக்கேயரை ஓட ஓட துரத்தி விட்டு ஒல்லாந்தர் இலங்கையை கைப்பற்றினர். கத்தோலிக்க தேவாலயம் புரொட்டஸ்தாந்து தேவாலயமாயிற்று..

இக்காலத்தில் ஒல்லாந்தரின் மதவெறி சற்று மாற்றுக் குறைந்திருந்தது.. இவ்வேளையில் நல்லூரில் குருக்கள் வளவு என்ற தனக்குரிய காணியில் 1734ல் கிருஷ்ண சுப்பையர் என்பவர் முருகனுக்குச் சிறிய கோயில் அமைத்தார்.

அந்தக் காலத்தில் ஒல்லாந்த அரசில் உயர்பதவி வகித்த பஞ்சாட்சரக் கிறிஸ்தவர்களின் உதவியுடன்.. அங்கே கோயில் சிறப்புறத் தொடங்கியது. (யாழ்ப்பாணத்துப் பாரம்பரியத்தில் ச-ம்-ப-ள-ம் என்ற ஐந்தெழுத்துக்காக கிறிஸ்துவத்திற்கு மாறியவர்களை பஞ்சாட்சரக் கிறிஸ்தவர்கள் என்பது வழக்கம்.. இவர்கள் வெளியில் கிறிஸ்தவராய் நடித்து அரசில் உயர் பதவி பெற்றாலும்.. அகத்தே சைவராய் வாழ்ந்தனர். உள்ளத்தில் சிவாயநம என்ற பஞ்சாட்சரத்தை உடையவர்களாய் இருந்தனர்)

ஒல்லாந்தரையும் கலைத்து விட்டு காலப்போக்கில் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றினர். ஒல்லாந்தரின் புரொட்டஸ்தாந்து தேவாலயமும் மெதடிஸ்த தேவாலயமாக மாறியது.. இன்றும் இதனை நாம் பார்த்து ஏங்கலாம்..!

நேரந்தவறாமையும் தூய்மையும் நல்லூர்க் கோயிலின் தனிச்சிறப்புக்கள்.. ஆண்கள் எவராயினும் மேலாடை இன்றியே உள் செல்லலாம் என்பதும் சிறப்பு விதி.. இதனை இன்று வரை இலங்கை ஜனாதிபதி முதல் யாவரும் நல்லூருக்குள் வரும் போது கடைப்பிடிப்பதைக் காணலாம்..

இந்தப் பெரிய திருக்கோயிலின் மூலஸ்தானத்தில் வேலாயுதமே இருக்கிறது.. ஆம்.. வேல் வடிவமாகவே இறைவன் முருகன் காட்சி தருகிறான்.. என்றாலும்.. உற்சவ வடிவங்களாக ஷண்முகர், தேவியருடனான முத்துக்குமாரப்பெருமான், தண்டாயுதபாணி ஆகிய முருக வடிவங்களைத் தரிசிக்கலாம்..

ஆவணி மாதத்து அமாவாசையை நிறைவு நாளாய் கொண்டு இருபத்தைந்து நாட்கள் மஹோற்சவம், ஐப்பசியில் கந்தஷஷ்டிவிழா என்பன இங்கு பெருஞ்சிறப்புடன் நடைபெறுகின்றன.

Koviloor Digital Library

பழமையான நமது ஆலயங்கள் போல முழுமையாகச் சிவாகம மரபைச் சாராமல்.. அதே
வேளை அதனை முற்றும் புறந்தள்ளாமல் தனக்கே உரிய பாணி அமைத்துச் சிறப்புடன் விளங்குகிறது நல்லைக் கந்தன் பெருங்கோயில்.. வட இலங்கைக்கு வருகிறவர்கள் யாவராயினும்.. அவர் எக்காரியத்திற்கு வருபவராயினும்.. தவறாமல் தரிசிக்கும் திருத்தலம் இதுவாகும்.

போகர் முதலிய சித்தர்கள் வாழ்ந்த பூமி.. இங்குள்ள வெற்றி வேற் பெருமானின் திருவருளே இவ்வளவுக்குப் பிறகும்.. இன்றைக்கும் யாழ்ப்பாணத்தில் உயிரோடு மக்கள் வாழ்வதற்கு காரணம் என்றால் மிகையல்ல.. பொய்யுமல்ல.. அதுவே மெய்யுமாகும்..

மா.. விட்ட... புரம்...

சோழமன்னன் ஒருவனின் மகளாய்ப் பிறந்தவள் மாருதப்புரவீகவல்லி.. தன் முன் வினைப்பயனாய் இளமையிலேயே குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டாள்..
அழகில் சிறந்தவளாய அந்த ராஜகுமாரியின் முகம் குதிரைமுகம் போல ஆயிற்று.. அரசனும்.. யாவரும் வருந்தினர். பரிகாரம் என்ன என்று தேடினர்.. பல்வேறு வைத்தியர்களும் தம்மால் குணப்படுத்த இயலாது என்று கைவிட்டு விட்டனர்.

ஆக, தல யாத்திரை செய்வதே சிறந்தது எனக் கருதி பல்வேறு ஸ்தலங்களுக்கும் இந்த அரசிளங்குமாரியும் அவளது பரிவாரங்களும் யாத்திரை செய்தனர்.. அவ்வாறே ஈழநாட்டுக்கும் வந்தனர்..
யாழ்ப்பாணத்திலுள்ள நகுலேஸ்வரப்பெருமானை தரிசித்து.. அங்குள்ள கண்டகி தீர்த்தத்தில் நீராடிப் போற்றினர். அங்கிருந்த கோயில்கடவை முருகனை பூஜித்தனர்.

அப்போது அற்புதம் நடந்தது.. மாருதப்புரவீகவல்லியின் குதிரை(மா) முகம் மறைந்தது.. அவள் அழகில் சிறந்தவளாய் மிளிர்ந்தாள்.. அவ்விடம்... துரகானன விமோசன புரியாக... "மாவிட்டபுரம்" ஆகச் சிறப்புற்றது.
இச்செய்தி மாருதப்புரவீகவல்லியின் தந்தையான சோழனுக்கு பறந்தது.. அந்த கோயிற்கடவையை சிறந்த ஒரு கந்தகோட்டமாக மாற்றும் எண்ணம் மாருதப்புரவீக வல்லியிடம் பிறந்தது.. அந்த எண்ணத்தை சோழப்பெருமன்னனும் ஏற்றுப் போற்றினான்..

விளைவு.. தமிழகத்திலிருந்து சிற்பாசாரிகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டனர்.. சிற்பங்கள், விக்கிரகங்கள் உருவாக்கப்பட்டன..
மூலவர் வடிவமான வல்லி தேவசேனா உடனாய காங்கேயப்பெருமானின் திருவடிவம் சிதம்பரத்தில் உருவாக்கப்பட்டு கடல் வழியே யாழ்ப்பாணக் கரையடைந்தது.. அந்தக் கரை இன்றளவும் காங்கேசன்துறை என்றே அழைக்கப்படுகிறது.

சிதம்பரத்திலிருந்து பெரியமனதுள்ளார் என்ற தீட்சிதரும் அவர் குடும்பத்தாரும் அரசனால் வரவழைக்கப்பட்டு இத்தலத்து அர்ச்சகர் மற்றும் அறங்காவலர் பொறுப்பும் அவர்களுக்கே வழங்கப்பட்டது. இன்று வரை இத்தீட்சிதர் பரம்பரையினரே இக்கோயிலை நிர்வகிப்பதுடன் அர்ச்சகப்பணியிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தின் முக்கிய முருகன் ஆலயங்களுள் ஒன்றான இந்த மாவிட்டபுரத்

Koviloor Digital Library

திருந்தலத்தில் ஆடி மாதத்து அமாவாசையை தீர்த்தமாகக் கொண்டு 25 நாட்கள் மஹோற்சவம் நடைபெறுவது வழக்கம்..

செல்வச் சந்நதியான்

இன்னொரு முக்கிய முருகன் ஆலயம் செல்வச்சந்நதி ஆகும். இத்திருத்தலத்தில் பூஜை செய்பவர்கள் மீனவ(பரதவ) மரபில் வந்தவர்களாவர்.

மௌனபூஜையாக வாய்கட்டி பூசிக்கும் வழக்கம் இங்கிருக்கிறது. என்றாலும்.. இங்கே நடைபெறும் அன்னதானத்தில் ஜாதி மத பேதம் எதுவுமின்றி யாவரும் ஒன்றாக அமர்ந்து உண்ணும் வழக்கம் பழைய காலம் தொட்டு இருந்து வருகிறது.

மிகவும் அற்புதமான இந்த ஸ்தலத்தில் கொடுக்கப்படுகிற ஆலமிலை அமுது நோய் தீர்க்கும் மருந்து என்று கொண்டாடப்படுகிறது. நல்லைக் கந்தனை அலங்காரக்கந்தன் என்றும் மாவிட்டபுரக் கந்தனை அபிஷேகக் கந்தன் என்றும் போற்றுகிற முருக பக்தர்கள் சந்நதிக் கந்தனை அன்னதானக் கந்தன் என்று புகழ்கிறார்கள்.. வணங்குகிறார்கள்.

நீர்வேலியில் கடம்ப மரநீழலில் ராஜகோபுரத்துடன் அமைந்துள்ள கந்தன் ஆலயம், சித்தர்கள் வாழ்ந்த செல்வக்கதிர்காம ஆலயம், இணுவிலில் உலகப் பெருமஞ்சம் அமைவு பெற்றிருக்கிற கந்தன் ஆலயம், காரைநகரில் திக்கரை என்ற பதியில் திரிபந்தாதி முதலிய பல்வேறு தமிழ் இலக்கியங்களை ஸ்தல நூல்களாகப் பெற்றிருக்கிற கந்தன் ஆலயம்.. இப்படி எங்கு நோக்கினும் சிறப்பு மிக்க பல்வேறு தலங்களைத் தரிசிக்கலாம்..

நம்மைப் போன்றவர்கள் பிறப்பதற்கு முன்னரே தொடங்கி சொல்லொணாத துன்பத்தைத்
தந்த போரின் அவல வாழ்வியலுக்குள்ளும்.. தாங்கொணாத இழப்புகளுக்குள்ளும் இன்னும் யாழகத்து தமிழ் இந்துக்கள் ஓரளவேனும் மனசாந்தியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்கிறார்கள் என்றால் அதற்கு வெற்றிவேற் பெருமான் வழிபாடும்.. அவனருளுமே காரணம் என்றால்.. அதுவே உண்மையாகும்.

Koviloor Digital Library

கிரகணகாலங்களில் ஆலயங்களில் நடை திறக்கலாமா?
உண்மையில் ஆகமங்களில் சொல்லப்படுள்ளது என்ன?
விளக்குகிறார்
"வேதோவாச ஆகம வித்துவான்" சங்கானை பிரம்மஸ்ரீ நித்யானந்த சுதானந்த சர்மா
கிரகண கால பூஜை தொடர்பான ஆகமோக்த சைவ சித்தாந்த புராண இதிகாச சங்க இலக்கிய ரீதியான ஆய்வும் முடிவுகளும்

கிரகணம் என்றால் என்ன என தெரிந்து கொள்வது அவசியம். 'கிரஹணம்' எனும் சமஸ்கிருத வார்த்தைக்கு ஒளி இழந்த தன்மை என பொருள். மனிதன் அறியாமையாலும், சோகத்தாலும் ஒளியிழந்து காணப்படுவதை கூட கிரஹணத்தின் அடைப்படையில் "கிரஹணி என வடமொழியில் கூறப்படுகிறது. கிரஹணம் நமது கலாச்சாரத்தில் மிக முக்கிய இடத்தை பெறும் ஒரு இயற்கை நிகழ்வு. பௌர்ணமி மற்றும் அமாவாசைகளில் நிலவின் மாற்றத்தை கண்டு உணர்ந்த மனிதன் தனது இயற்கை அறிவில் அதிக முன்னேற்றம் அடைந்தது. கிரகண கோட்பாடு மூலமாகத்தான் உலக மக்கள் கிரகணம் ஒரு பேரழிவு நிகழ்வு என பயந்து வந்த காலத்தில் நமது பாரத தேசத்தில் இருக்கும் அறிஞர்கள் கிரஹணங்களை ஆய்வு செய்து மனித மேம்பாட்டுக்கு பயன்படுத்தவும் துவங்கிவிட்டார்கள். கிரகணத்தை சிறப்பாக ஆய்வு செய்ததால் தான் நமது சாஸ்திரங்களில் பூமி சூரியனைச் சுற்றிவருகிறது என்ற விஞ்ஞான கோட்பாட்டை கூற முடிந்தது. சாஸ்திர அறிவியல் கோட்பாட்டை பின்பற்றி ஆரியபட்டர் மற்றும் பாஸ்கராச்சாரியர் அறிவியலில் இன்றுவரை யாரும் தொட முடியாத உயரத்தை அடைந்தனர்.

சூரிய மண்டலத்தில் சூரியன், சந்திரன் மற்றும் பூமி ஆகிய மூன்று வான் பொருட்கள் ஒரே நேர்கோட்டில் நிற்பதை கிரகணம் என்கிறோம். சூரிய சந்திரர்கள் எது ஒளியை பூமியிலிருந்து பார்க்க முடியாதோ அது கிரஹணம் அடைந்ததாக கூறப்படுகிறது. சூரியன் மறைக்கப்பட்டு சூரிய ஒளி தெரியவில்லை என்றால் சூரிய கிரகணம் என்றும், சந்திரன் ஒளி பெறாமல் இருளாக இருந்தால் சந்திர கிரகணம் என்றும் கூறுகிறோம். இந்த கிரகணம் மனிதனை எப்படி பாதிக்கும்? இதற்கு முதலில் மனித பிறப்பை பற்றிய விழிப்புணர்வு அவசியம். அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உண்டு, பிண்டத்தில் உள்ளதே அண்டத்தில் உண்டு என்பது சித்தாந்தம். அண்ட வெளியில் எத்தகைய நிகழ்வுகள் இருந்தாலும் அதே நிகழ்வுகள் நமக்குள்ளும் நடக்கும் என்பதை உணர வேண்டியது அவசியம். சைவ சித்தாந்தத்தில் பூமி மனித உடலையும், சந்திரன் மனதையும், சூரியன் ஆன்மாவையும் குறிக்கும். கிரஹங்கள் நேர்க்கோட்டில் வரும் நாளில் மனிதனின் மனம், உடல் மற்றும் ஆன்மாவும் இயற்கையாகவே ஒன்றிணைந்துவிடும். இயற்கையே இதற்கு ஒரு உந்துதலாக இருந்து நம்மை இணைக்கிறது. அன்று அனைத்து ஜீவராசிகளும் தங்களை உயர்நிலைக்கு அழைத்து செல்ல தகுந்த நாளாக மாறிவிடுகிறது.
இதனால் தான் கிரகஹண காலத்தில் கோவில்களில் செல்லாமல் (கிரஹண நேரத்தில் கோவில் திறக்கப்படுவதில்லை.!.) நமது இருப்பை மட்டும் உணர சில தருணங்களை ஏற்படுத்தி தந்தார்கள்.

தற்காலத்தில் நவநாகரீகம் என்ற பெயரில் கிரஹணத்தை மக்கள் மதிப்பதில்லை. பறவை மற்றும் விலங்கினங்கள் கூட கிரஹணத்தான்று தன் இருப்பிட்த்தை விட்டு வெளிவருவதில்லை. அப்படி இருக்க மனிதன் தனது விழிப்புணர்வால் அதை உணர வேண்டமா? மனிதன் இயற்கையிலிருந்து பிரிந்து செயற்கையாக வாழ்கிறான் என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு வேண்டுமா?. கிரஹண காலத்தில் சூரியனில் இருந்து வரும் கதிர்வீச்சு தற்காலிகமாக தடைசெய்யப்படுவதால், வான்வெளியிலிருந்து வரும் தீய கதிர்வீச்சுக்கள் நம்மை தாக்கும். அதனால் தான் கிரஹணம் அன்று நம்மை பாதுகாக்க சொன்னார்கள் நம் முன்னோர்கள். அறிவியல் அறிஞர்கள் முதலில் கதிர்வீச்சு வரும் எனும் விஷயத்தை மறுத்துவந்தார்கள் தற்சமயம் ஏற்றுக்கொண்டு அவர்களும் பாதுக்காப்பாக

Koviloor Digital Library

இருக்க பிரசாரம் செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தர்ப்பை, கம்பளி போன்ற பொருட்களுக்கு மின்கடத்தா சக்தி உண்டு. மேலும் கதிர்வீச்சை அதிகமாக கடத்தாது. அதனால் அப்பொருட்களை வைத்து நம்மை தற்காத்துக்கொள்ள சாஸ்திரங்கள் கூறுகிறது.

வருடத்திற்கு ஒரு முறை சூரிய கிரஹணம் ஏற்பட்டாலும் முழு சூரியகிரஹணம் சில வருடங்களுக்கு ஒருமுறைதான் நடைபெறும். அப்படி ஏற்படும் முழுசூரியகிரஹணமும் நாம் இருக்கும் தேசத்தில் தெரிவது போல அமைவது அதைவிட அரிது.

கிரஹண காலத்தை ஒருவித பயத்துடன் பார்க்க வேண்டியது அவசியம் இல்லை. இறைவன் எத்தகைய சூழலையும் நமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வழிகாட்டுகிறார். அதன் அடிப்படையில் கிரஹண காலத்தில் நமது உடல்-மனம்-ஆன்மா ஒன்றுபடுவதால் அன்று இறைவனை நாமத்தை ஜபம் செய்ய மிகசிறப்பான நாளாகும்.

மந்திர சாஸ்திரத்தில் ஜபம் செய்யும் காலத்தின் தன்மை எப்படி பலன் கொடுக்கிறது என்பதை கூறுகிறது. எல்லா நேரத்திலும் ஜபம் செய்தால் ஒருமடங்கு பலன், அதை சந்தியாகாலத்தில் செய்தால் பத்துமடங்கும். பிரம்ம முஹூர்த்தத்தில் செய்தால் நூறுமடங்கும், பௌர்ணமி அமாவாசை நாளில் செய்தால் ஆயிரம் மடங்கும், கிரஹண நாட்களில் செய்தால் லட்சம் மடங்கும் பலன் ஏற்படும் என கூறுகிறது.

எளிமையாக சொல்ல வேண்டும் என்றால் கிரஹணத்தன்று வெளியுலக விஷயங்களை செய்யக்கூடாது. உங்கள் ஆன்மீக விஷயங்களுக்கு மட்டும் பயன்படுத்தலாம்.

சூரிய கிரகணத்தில் ராகுகிரஸ்தம் எனப்படுகிற ஸ்பர்ச காலமும், சந்திரகிரகணத்தில் ராகு விமோசனம் எனப்படுகிற கிரகணம் விடும்காலமும் உபராக புண்ணிய காலம் எனப்படும். சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்படுகிற இருவகையான உபராக புண்ணிய காலத்திலும், இரவிலோ பகலிலோ கிரகணம் ஏற்படும்பொழுது, அந்த நேரத்தில் தெய்வங்களை நதி, குளம் முதலிய தீர்த்தக்கரையை உபசரிப்புடன் அடைவித்து, அங்கேயே சிறப்பான முறையில், மந்திரஜபத்துடன் கூடியதாக விசேஷமாகப் பூஜை மற்றும் தீர்த்தோற்சவத்தைச் செய்யவேண்டும். பின்பு ஆலயத்தில் சேர்த்து ஒடுக்கப் பூஜையைச் செய்யவேண்டும்.
கிரகண காலத்தில் சைவோற்சவமாக ஒருநாள் விழா செய்யப்படுவது பத்துமடங்கு உயர்வான பயனைத் தரவல்லது. இத்தருணம் (கிரகணம் உள்ளநேரம்) பாவ காலமில்லை. இது உபராகம் எனும் புண்ணிய காலமென்றே பெயர்பெறும். இதனை "" அதம் வகூயே விஷேசேன உபராகோத்சவம்" என்று உத்தர காரணாகமம் கூறத்துவங்கி உபராகத்தின் விளக்கம் கூறுவதுடன், இதன் சிறப்பையும் பயனையும் கூறுகிறது. "உபராகம் என்ற இந்த பெயர்ச்சொல் எப்படி வந்தது(உபராகம் மஹத் சப்தம் கதம் சம்போ மஹேஸ்வரஹ) என்று கேட்கப்பட்டதற்கு பதிலாக இறைவன் கூறியது. "பாவம் மிகுந்ததிலும், குரூர காலத்திலும், மக்களுக்கு வியாதியால் துன்பம் ஏற்படும்பொழுதிலும் உபகிரக உதயம் ஏற்படுகிறது. இதுவே உபராகம் என்று ஆகிறதுஎன்று சொல்லிவந்த ஈஸ்வரன் பூலோகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் "மகா ஸ்பரிசம்" என்னும் தோஷம் ஏற்படுகிறது என்றும் அது எதனால் எனில் " ஆச்சாரமான ஒருவரை அனாச்சாரமான ஒருவர் தீண்டுவதனாலே எத்தகைய தோஷம் ஏற்படுமோ அத்தகைய தோஷம் உப கிரகங்களான ராகுவும் கேதுவும் மகா கிரகங்களான சூர்ய சந்திரர்களை தீண்டுவதனால் ஏற்படுவதாயும் சைவ சித்தாந்த ரீதியில் சூர்யன் ஆன்மா என்றும் சந்திரன் மனது என்றும் கூறப்படுவதனால் நேரிடையாக அந்த தோஷம் மனிதர்களை பீடிக்கும் என்பதனை நாம் உணர வேண்டும். அடுத்து தோஷம் என்பது என்ன? அறியாமையினால் ஒருவன் செய்கின்ற தீய செயலுக்கு இயற்கையில் எதிர்வினையாக விளைவது எதுவோ அது தோஷம் எனப்படுகிறது என்பது சித்தாந்தம். எனவே தோஷம் பீடிக்கின்ற இந்த காலத்தில் புற உலக செயல்பாட்டிலிருந்து விலகி அக ஒளி ஆன்ம வீடு பேற்றுக்கான

Koviloor Digital Library

புண்ய செயல்களைச் செய்ய வேண்டும்.
அடுத்து பாவம் புண்யம் என்பவை தனி மனிதன் சார்ந்தவை என்பதனை நாம் உணர வேண்டும் எனவே தனி மனித எழுச்சிக்கான வழிகளாக "ஜபம் ஹோமம் தர்ப்பணம் ஸ்னானம்" முதலியவைகளும் சிவ பூஜை செய்வதுமாம் மேலும் ஸ்மிருதிகளிலே கிரகணத்தின் பொழுது அனைவர்க்கும் ஆசௌசம் எனும் தீட்டு ஏற்படும் என்று சொல்லி உள்ளது. எனவே இக்காலங்களில் ஆசௌசத்துடன் ஆலயங்களை திறந்து எவ்வாறு வழிபாடாற்ற முடியும்? என்பதனை நாம் சிந்திக்க வேண்டும் உற்ஸவ காலங்களில் ஆச்சார்யாருக்கு காப்பு கட்டி உள்ளதனாலே ஆசௌசம் இல்லை எனினும் பத்தர்களுக்கு அது பொருந்துமா? ஆலயங்களுக்கு பக்தர்கள் ஆசௌசத்துடன் வர முடியுமா? பிறகு எப்படி நடை திறந்து பூஜை செய்வது? இந்த காரணங்களை உத்தேசித்தே பெரியவர்கள் அக்காலங்களில் ஆலயங்களில் நடை சாத்தும் முறையினை கொண்டு வந்தார்கள் ஆனாலும் நித்ய உத்சவம் நடை பெறும் கோவில்களிலே கிரகண காலங்களிலே தீர்த்த வாரி நடை பெறுவதனையும் அதன் அவசியத்தினையும் சொல்லி அத போல் அநேக ஆலயங்களிலே பர்வங்கள் எனப்படும் அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களை தீர்த்தாந்தமாக வைத்து உத்சவங்கள் செய்வார்கள். அந்நாட்களில் விசேஷமாக அஸ்த்ர தேவர் சகிதம் ஸ்வாமியை தீர்த்த வாரிக்கு அழைத்து செல்வதையே ஆகமங்கள் சொல்லி உள்ளன தீர்த்த ஸ்னானம் கிரகண புண்ணிய காலத்திலே செய்வதனால் அடியார்கள் அந்நேரங்களில் ஆலயத்துக்கு வந்து தீர்த்த உத்சவத்திலே கலந்து கொள்ளலாம் மேலும் அவ்வாறு நித்ய உத்சவமோ மஹோத்சவமோ நடை பெறாத கோவில்களிலே அன்று சிறப்பு உத்சவம் எனில் சுவாமி வீதி வலம் வர வேண்டும் ஆகாயம் நிர்மலமாயும் சந்திரனுடன் கூடி இருக்கும் பொழுதுமே சுவாமி வீதி வலமும் பலி தானமும் செய்ய வேண்டும் என்பது காமிக ஆகமத்தின் மஹோத்சவ விதி படலத்தில் சொல்ல பட்டுள்ளது என்பதனை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். கிரகண காலத்தில் இது எவ்வாறு சாத்தியம்?இந்த விடயங்களை அறிந்து கொள்ளாமல் சிலர் ஆகமங்களில் கிரகண காலங்களில் ஆலய நடை திறந்து உத்சவம் செய்ய வேண்டும் என்று கூறி வருவது மேலோட்டமான அர்த்தமற்ற கருத்தாகும் மேலும் கிரகணம் என்பது துர்நிமித்தம் என்றும் அன்று பிரதிஷ்டை விவாகம் முதலிய செய்ய கூடாது என்று தீப்தம் வீரதந்திரம் முதலாய ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளதையும் கவனிக்க வேண்டும் மேலும் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே கிரகணம் தொடர்பான அநேக குறிப்புகள் உள. கலித்தொகையில் பல இடங்களில் சந்திரகிரகணம் (சந்திரனை ராகு பற்றுதல்) குறிப்பிடப்படுகிறது "ஐவாய் அரவின் இடைப்பட்டு நைவாரா மையின் மதியின் விளங்கு முகத்தானை (கலி 62;13-14) என்றும்
அடுத்து சூரிய கிரகணம் (சூரியனை கேது பற்றுதல்) பற்றி மலைபடுகடாம் இப்படிக் குறிப்பிடுகிறது-"பாஅய்ப் பகல்செய்வான் பாம்பின் வாய்ப் பட்டான் கொல் (வெண்பா 1) சொல்ல பட்டுள்ளது.மேலும் மகா பாரதத்திலே ஜெயத்ரதன் வதை பற்றி புற நானூற்று பாடல் ஒன்று உண்டு. அணங்குடை அவுணர் கணங்கொண்டி ஒளித்தெனச்
சேண் விலங்கு சிறப்பின் ஞாயிறு காணாது
இருள் கெடுத்த பருத்தி ஞாலத்து
இடும்பை கொள் பருவரல் தீர்க்க கடுந்திறல்
அஞ்சன உருவன் தடுத்து நிறுதாங்கு "
அதில் சூரியன் மறைந்து விட்டதாக நினைத்து ஜெயத்ரதன் வெளி வரும் போது அர்ச்சுனன் அவன் தலையை கொய்து ஜபம் செய்து கொண்டிருக்கும் அவன் தந்தையின் மடியில் விழ செய்கிறான். அவன் அதனை கீழே தள்ள தந்தையும் தனயனும் தலை சுக்கலாகி இறக்கிறார்கள் இதில் ஜெயத்ரதன் தந்தை ஜபம் செய்து கொண்டிருந்தான் என்றும் அது கிரகண காலம் என்றும் கூறபற்றி ப்படும் சிறப்பினை கவனிக்க வேண்டும் மேலும் ப்ரம்மசாரிகளுக்கும் சன்யாசிகளுக்கும் வனப்பிரஸ்தர்களுக்கும் ஜபம் என்றும் கிரகஸ்தர்களுக்கு தானம் ஹோமம் என்றும் எல்லோருக்கும் ஸ்னானம் என்றும் சொல்லப்பட்டிருப்பதை கவனிக்க வேண்டும் இவ்வாறு அவர்தம் ஆன்ம ஈடேற்றம் கருதி தத்தமக்குரிய கர்மாக்களை செய்யாமல் பரார்த்தமாக எங்கனம் வழிபாடாற்ற முடியும்? எனவே உண்மையினை உணர்ந்து நம்ம எல்லோரும் அதன் வழி நடந்து நற்கதி பெறுவோமாக

Koviloor Digital Library

காசி சேத்ரம்

முனைவர் தேவகி முத்தையா M.A. M.Phil . Ph.d.

மோக்ச புரிகள் என்று ஏழு தலங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகாபுரி, துவாரகாவதி சைவ ஸப்தைபதா மோசஸ்தாயிகா என்பது ஸ்லோகம். ராமஜன்ம பூமியான அயோத்யா, கிருஷ்ணபரமாத்மா பிறந்த பூமியான மதுரா, மாயா என்பது ஹரித்துவாரம் அதாவது கங்கை விண்ணிலிருந்து பூமிக்குப் பிரவேசம் செய்த தலம். காசி என்ற புண்ணிய சேத்ரம், நகரேஷு காஞ்சி எனப்பெறும் காஞ்சி மாநகர், உஜ்ஜயினி மற்றும் கிருஷ்ண பரமாத்மா ஆண்டருளிய துவாரகா ஆகிய ஏழும் மோட்சபுரிகள் என்று குறிப்பிடப் பெறுகின்றன. இத்தலங்கள் பிறப்பது, வாழ்வது, இறப்பது என்ற மனித வாழ்க்கையின் ஆதி, நடு, அந்தம் என்ற மூன்று நிலைகளுக்கும் தலையாய இடங்கள் என்று கூறுவது புராணம். சேத்ரம் என்பது நெல் விளையும் இடம் என்று பொருள். அங்கு எவ்வாறு ஒரு நெல் பத்து, நூறாகி, ஆயிரம் லட்சமாகி செழிக்கின்றதோ அவ்வாறு இத்தலங்களில் செய்யும் நற்காரியங்களும் ஒன்று, பத்தாகி, நூறு ஆயிரமாகி, லட்சம் கோடியாகிப் பெருகி நற்பயனை அளிக்கின்றன.

காசியைப் பற்றி பொதுவான செய்திகளை முதலில் கூறி விடுகின்றேன். காசி மாநகரம் வட இந்தியாவில் உத்திர பிரதேச மாநிலத்தில் அலகாபாத்திலிருந்து 78 மைல் தொலைவில் உள்ளது. காசி என்னும் சொல்லுக்கு ஒளிமயமானது என்று பொருள். வாரணாசி என்று மற்றொரு பெயர் உள்ளது. காசி நகருக்கு வடக்கே வாரணா என்ற நதியும் தெற்கே ஆசி எனும் நதியும் சங்கமிக்கும் இடத்தில் அமைந்த நகரமாதலால் வாரணாசி என்று பெயர். இதனைப் பூலோகக் கைலாயம் என்றும் அழைப்பர். கந்த புராணத்தில் காசி காண்டம் என்னும் பகுதியில் உள்ள
ஒரு பாடல்

"காசியைக் குறித்துச் செல்லும்
கால்களே கால்களாகும்
காசியை வாழ்த்தும் நாவே
நாவெனக் கூறலாகும்
காசியின் கதைகள் கேட்கும்
செவிகளே செவிகளாகும்
காசியை இன்று காணும்
கண்களே கண்களாம்" என்று கூறுகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று விசேஷங்களும் ஒருங்கே அமையப் பெற்றது காசி என்னும் புண்ணிய சேத்ரம். மூர்த்தி எனும் விசேடம் பற்றி முதலில் காண்போம். பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களுள் முதலாவதாகக் கூறுவது காசி விஸ்வேஸ்வரர் எனும் விஸ்வநாதர். ஆதி சங்கரர் நடைப் பயணமாக காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் பயணித்து பன்னிருஜோதிர்லிங்க சேத்திரங்களை நிறுவினார்.

இதில் தலையாயது காசி விஸ்வநாதம். காசி விஸ்வநாதரை யாராக இருந்தாலும் அருகில் சென்று கைகளால் ஸ்பரிசித்து வணங்கும் பேற்றினைப் பெறலாம். விஸ்வநாதர் எளிமையின் வடிவம். அவரது சௌலப்யம் சிறப்பு மிகு குணம். காசியில் உள்ள விஸ்வநாதரைத் தொடும் உரிமை அனைவருக்கும் உண்டு என்பதாலே என்னவோ

Koviloor Digital Library

காசியில் வாழும் மனிதர்களைத் தொட்டாலே பிறவித் துன்பம் கிடையாது என்று கூறுகிறது காசி காண்டம். ஜோதிர்லிங்கமான காசி விஸ்வநாதருக்கு மூன்று வேளையும் பூஜைப் பொருள்களை வழங்கி பூஜை செய்யும் அரிய பேற்றினைப் பெற்றவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர். விஸ்வேசருக்கு நாளும் பூஜை செய்யும் பேறு பெற்ற ஒப்பற்ற நிறுவனம் காசி நகரச் சத்திரம். இச்சத்திரம் விஸ்வேசர் கோவிலுக்கு அருகேயுள்ள குடோலியா சன்னதியை அடுத்து அமைந்த கட்டிடமாகும். கடந்த 200 ஆண்டுகளாகச் செயல்படும் இந்நிறுவனம் பசுமடமும், நந்தவனமும் உண்டாக்கி விஸ்வநாதருக்குப் பாலும், மலர்களும் அனுப்புகின்றது. உஷத் காலத்தில் பத்தாளை மிட்டாயும்,

உச்சிக் காலத்தில் பருப்புப் பொங்கலும் அர்த்த சாமத்தில் சர்க்கரைப் பொங்கலும், நகரச் சத்திரத்தில் இருந்து அனுப்பப்படும் பொருட்களைக் கொண்டு கோயில் மடப்பள்ளியில் செய்து நைவேத்யம் செய்யப்படுகின்றது. விஸ்வேஸ்வரருக்கு நாளும் மூன்று முறை பூஜை அபிஷேகம் அலங்காரப் பொருட்கள் நகரச் சத்திரத்திலிருந்து எடுத்துச் செல்லும் போது மேளம், தாளம் ஒலிக்க சம்போ, சம்போ சங்கர மகாதேவா என்று கோஷமிட்டுச் செல்வதைத் தெருக்களில் இருப்பவர்களும், கடைகளில் கட்டிடங்களில் உள்ளவர்களும் மரியாதையுடன் சென்று பார்த்து தலை வணங்குவர். ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த போதும் கூட சம்போ நேரப்படி தவறாமல் வரும் என்றும் பஞ்சாப் மெயில் தாமதமானாலும் கூட நகரத்தார் சம்போ நேரப்படி வந்துவிடும் என்பதும் காசியில் பழமொழி. குளிர் காலத்தில் ஐப்பசி மாதம் வசந்த பஞ்சமியிலிருந்து மாசி மாதம் சிவன் ராத்திரி வரை குளிர்காலச் சட்டை (மக்மல் பட்டு) காசி விஸ்வநாதருக்கு அணிவிக்க காசி நகரத்தார் கட்டளை உண்டு என்பதும் சிறப்பு.

காசி சேத்திரத்தில் கண்பார்வை படும் இடமெல்லாம் லிங்கஸ்வரூபம் இருக்கும். தரையில் பல இடங்களில் லிங்கஸ்வரூபம் இருப்பதால் இராமகிருஷ்ண பரமஹம்சர் மலஜலம் கூட காசி நகரத்தில் கழிக்காது நகருக்கு வெளியே செல்வார் என்றும் காஞ்சி மஹா பெரியவர் காசியில் வசிக்கும் காலங்களில் காலில் பாதுகையே அணியமாட்டார் என்றும் கூறுவர். காசியில் செயலேதும் புரியாமல் சும்மா படுத்திருந்தாலும் கூட உயர்ந்த யோகம் செய்வதற்கும் மேலாகும் என்பது பொதுவான கருத்து.

காசி விஸ்வநாதரின் தேவி விசாலாட்சி அம்மன் தேவிக்குத் தனிக் கோயில் 1893ம் ஆண்டு நகரத்தார்களால் அமைக்கப்பெற்று இங்கும் 3 வேளை பூஜைக்கும் நகரச் சத்திரத்தில இருந்து
சம்போ உடன் பொருட்கள் அனுப்பப்படுகின்றது. தீபாவளியின்போது மட்டும் இரண்டு நாட்களுக்கு நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தில் உள்ள ஸ்வர்ண உற்சவ விசாலாட்சிஅம்மன் தரிசனத்திற்கு மண்டபத்தில் எழுந்தருளுகின்றாள்.

காசி என்றவுடன் விஸ்வேஸ்வரருடன் நினைவில் வர வல்லவள் தேவி அன்னபூரணேஸ்வரி. தனிக் கோயில் கொண்டிருக்கும் அன்னைதான் புவனங்கள் பதினான்கினுக்கும் அன்னம் பாலிப்பவள். விஸ்வரூபம் கொண்ட லிங்கோத்பவரின் முடியைப் பார்த்துவிட்டதாக அன்னப் பறவை வடிவம் கொண்ட பிரம்மா பொய் கூற, கோபம் கொண்ட சிவன் பிரம்மனின் ஒரு தலையைக் கொய்துவிட்டதாகவும் அந்தத் தலையானது சிவனின் கைகளை விட்டு அகலவில்லை என்றும் அந்தத் திருவோடு கொண்டு வீதி வீதியாக அவர் அலைந்ததாகவும், திருவோடுதனில் காசியில் அன்னபூரனேஸ்வரி பிக்ஷை இட்டவுடன் அது சிவனின் கைகளிலிருந்து மறைந்தது என்றும் கூறுகிறது புராணம். இன்றும் நாள்தோறும் அதிகாலையில் அன்னபூரணி அம்மனின் கோயில் நடைக்கதவு முதலில் திறக்கப் பெற்றதும் அபிஷேக அலங்காரங்கள் நடைபெறுகின்றது. பின்னர்தான் விஸ்வேஸ்வரருக்கு அபிஷேக அலங்காரம் நடைபெறுகின்றது. அன்னையிடம் வந்து அவர் பிக்ஷை பெற்றுக் கொண்டு செல்வதே இன்றும் வழக்கமாக உள்ளது. அன்னபூரணிக்குத்

Koviloor Digital Library

தினமும் குபேரன் பூஜை செய்து வருவதாகவும் அதனால் பூட்டிய கர்ப்பகிரகத்தினுள் இருப்பதாகவும் கூறுவர். ஆண்டுதோறும் தீபாவளி சமயம் மட்டும் மூன்று நாட்களுக்குத் தங்க அன்னபூரணி பக்தர்கள் தரிசனத்திற்கு வெளிவருகின்றாள். தீபாவளியின் போது விஸ்வேஸ்வரர் கோயிலில் மிட்டாயத் தேரும் அன்னபூரணி கோயிலில் அன்னக்கூட்டும் விசேஷமான நிகழ்வுகள்.

கால பைரவர் திருக்கோயில் காசியில் பிரசித்தம். காசி நகரமே கால பைரவரின் காவல் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும், இங்கு வருபவர்கள் அவரது உத்திரவுக்குப் பிறகே நகரை விட்டு வெளியேறலாம் என்றும் கூறுவது உண்டு. கால பைரவர் சன்னதியில் வழங்கப் பெறும் கருப்புக் கயிறு மகிமை வாய்ந்தது. காசிப் பிரசாதம் என்றாலே விஸ்வேஸ்வர் கோயில் விபூதி, விசாலாட்சியின் செந்தூரக் குங்குமம் மற்றும் பைரவரின் கருப்புக் கயிறு ஆகும். காசி சேத்திரத்தில் பருந்து வட்டமிடாது. பல்லி திருவுளம் கூறாது என்று கூறுவர். இதற்குக் காரணமாக புராணக் கதை ஒன்றும் உண்டு.

இராமபிரான் இலங்கை வேந்தனைப் போர் புரிந்து வெற்றி கண்டு இராமேஸ்வரம் வந்தவுடன் தனக்கேற்பட்ட தோஷத்தைப் போக்கிக் கொள்ளவேண்டி சிவலிங்க பிரதிஷ்டை செய்து வணங்க எண்ணி அனுமனைச் சிவலிங்கத்தைக் கொண்டுவர காசிக்கு அனுப்புகின்றார் அனுமன் காசிக்குச் சென்று அங்கே கருடன் வட்டமிட்டுப் பறந்ததும், பல்லி திருவுளம் சொல்லியதுமான இடத்தில் இருந்த சுயம்பு லிங்கத்தை எடுத்துக் கொண்டு இராமேஸ்வரம் திரும்பினார் காசியும் அதன் சுற்றுப்புறமும் பைரவர் காவலுக்கு உரிய பிரதேசமானபடியால் பைரவர் இரவு இன்றி லிங்கத்தை எடுத்தபடியால் அனுமனுக்கும் பைரவருக்கும் போர் மூண்டது. அப்பொழுது அனுமன் கருடன் வட்டமிட்டதையும், பல்லி திருவுளம் சொல்லியதையும் கூறினார்.

அது கேட்ட பைரவர் அன்று முதல் கருடனும், பல்லியும் காசியில் முறையே பறக்கவும் திருவுளம் சொல்லவும் கூடாது என்று சாபமிட்டதாகவும் உள்ளது வரலாறு.

இப்புனித சேத்ரத்தில் அறிவு ஒளி பெற்ற ஆன்றோர் ஆதி சங்கர பகவத்பாதாள், புத்தர் போன்ற மஹான்கள், கபீர்தாஸ், பாரதியார் போன்ற கவிஞர்களும் இங்கு வாழ்ந்தனர். உஸ்தாத் பிஸ்மில்லா கான், பண்டிட் ரவிசங்கர் போன்ற உலகப் பிரசித்தி பெற்ற கலைஞர்களும் காசிவாசிகள். பண்டிட் மதன்மோகன் மாளவியா இங்கு நிறுவிய வாரணாசி ஹிந்திப பல்கலைக் கழகம் புகழ் வாய்ந்தது. காசிநகரில் அருகாமையில் அமைந்துள்ள சாரநாத்தில்தான் புத்தர் போதிமரத்தின் கீழ் ஞானஒளி பெற்றார். இந்திய நாட்டின் அடையாளச் சின்னமான அசோகர் தூணும் இங்குதான் உள்ளது. புத்தகயா, அலகாபாத், திரிவேணி சங்கமம் ஆகியவை காசிக்கு மிக அருகில் உள்ள விசேஷமான தலங்கள்.

மூர்த்தி தலம் மகிமை பார்த்தாகி விட்டது. அடுத்து தீர்த்தம். காசிக்கு நிகரான பதியுமில்லை, கங்கைக்கு நிகரான நதியுமில்லை என்பார்கள். பாரத நாட்டில் எத்தனையோ நதிகள் உற்பத்தியாகி புரண்டோடுகின்றன. அவற்றுள் ஸப்த புண்ணிய நதிகள் என்று நாம் கூறுவது கங்கா, யமுனா, சரஸ்வதி, காவேரி, துங்கபத்ரா, கிருஷ்ணா, கோதாவரி போன்றவை. இவற்றுள் தலையாயது கங்கா. கங்கையில் மூழ்கி எழுந்தாலும் நமது அத்தனை பாவங்களும் அகன்று விடும். மானிடர் அனைவரது பாவத்தையும் தான் வாங்கிக் கொண்டு தனது புனிதம் மட்டும் சிறிதும் மாறாமல் என்றும் ஜீவநதியாகத்தான் கங்கை பாரத பூமியில் புரண்டோடுகின்றாள். காசி மஹா சேத்திரத்திற்குச் சென்றால் அங்கு நிகழ்வன கண்டால் இது நமக்குப் புரியும். காசியில் தீர்த்தமாடும் கட்டங்கள் காட் என்பன 64. இதில் மணிகர்கணிகா கட்டத்துக்குச் சென்றால் அங்குத் துறையில் மரணம் அடைந்தவர்களின் பூத உடல்கள் அக்கினி மூட்டப்பட்டு முக்கால் வீதம் ஏன் அரை வீதம் மட்டும் எரிந்த நிலையிலேயே கங்கையினுள் தள்ளப்படுகின்றன. எத்தனையோ உடல்கள் தள்ளப்பெற்றும் கங்கையில் சிறிதும் துர்நாற்றம் வீசுவதில்லை. காசியில் பிணம் நாறாது, பூ மணக்காது என்பார்கள்.

Koviloor Digital Library

கங்கையின் நீரை கலசங்களில் அடைத்து பல ஆண்டுகள் வரை வைத்திருந்தாலும் அந்நீர் கெடுவதில்லை. விஞ்ஞானிகள் இதற்கு காரணம் கங்கையில் ஒருவித பாசி (Algae) விளைவதாகவும் இந்தப் பாசி நதியில் கலக்கும் அத்தனை கழிவுகளையும் அப்புறப்படுத்தி நீரைத் தூய்மையாக வைத்திருக்கும் சக்தி கொண்டது என்று கூறுகின்றார்கள். கோடான கோடி மக்களின் பாவங்களைச் சுமந்தாலும் தனது தூய்மை மட்டும் சிறிதும் மாறாத கங்கை " எந்தப் புனிதப் பெற்றோரின் மகள்? " எனும் கேள்வி என்னுள் எழுந்து என்னை விபரீதமில் ஆழ்த்தும்.

இமயமலையில் உதித்த கங்கை பெரும் இரைச்சலுடன் கரைபுரண்டோடிக் கொண்டிருக்கின்றாள். 100 அஸ்வமேத யாகங்களை நடத்தினால் இந்திரப் பதவி கிடைக்கும் என்பதால் பகீரதனின் முன்னோர்கள் அஸ்வமேத யாகங்களை நடத்துகின்றார்கள். அந்த யாகத்தை நிறைவு பெறாமல் கெடுப்பதற்காக அஸ்வத்தைக் குதிரையை கபில மகரிஷியிடம் கொண்டுசென்று பாதாளத்தில் கட்டி வைக்கின்றார்கள் (கபில மகரிஷியின் இருப்பிடமான பாதாளம் தான் தற்போதைய கலிபோர்னியா மாகாணம் என்பதனை இங்குக் குறிப்பிட விழைகின்றேன்).

சத புத்திரர்கள் எனப்படும் 100 பேரான பகீரதனின் முன்னோர்களை உயிர்பிக்க வேண்டும். அதற்குக் கங்கையை கொண்டு வரவேண்டும் என்று பகீரதன் சிவபெருமானை எண்ணி கடும் தவம் புரிகின்றான். கங்கையை ஆகாயத்திலிருந்து நேரடியாக பூமிக்கு வரவழைத்தால் அவளது வேகத்தைப் பூமி தாங்க முடியாது என்பதால் சிவபெருமான் அவளைத் தனது தலையில் வாங்கி வேகம் குறைத்து பூமியில் பாயவிடுகின்றார். அவள் பூமியில் பாய்ந்தோடும் போது ஜன்னு முனிவர் யாகம் வளர்த்துக் கொண்டிருக்க அவளது வேகம் தனது யாகத்தைக் கெடுத்து விடும் என்று அஞ்சி கங்கையை அவர் குடித்துவிடுகின்றார். பகீரதன் தான் இத்தனை பிரயத்தனம் செய்து கொண்டுவந்த கங்கையை மீண்டும் புவியோர்க்குத் தரவேண்டும் என்று பிரார்த்திக்க ஜன்னு முனிவர் கங்கையைத் தனது வலது காதிலிருந்து வெளியே பாயச் செய்கின்றார். இதனால் கங்கைக்கு ஜான்வி ஜன்னுவின் மகள் என்ற பெயரும் உண்டு. நம் வலது காதில் கங்கை இருப்பதாக நம்பிக்கை இன்றும் இருப்பதால்தான் பூஜை, ஹோமம் ஆகியன செய்யும் போது தும்மலோ, கொட்டாவியோ வந்துவிட்டால் அந்த அசுத்தம் நீங்க பூஜை செய்வோர் வலது காதைத் தொட்டுக்கொள்ளும் பழக்கம் உண்டு. அதில் இருக்கும் கங்கை நமக்குப் புனிதம் தந்துவிட்டதாகப் பொருள்/ஐதீகம்.

கங்காதேவி ஈன்றெடுத்த திருமகன்தான் பாண்டவர்களும் கௌரவர்களும் பிதாமகர் என்று பெரும் மரியாதையுடன் அழைத்த பீஷ்மாசாரியார் ஆவார். கங்கையின் மைந்தன் என்பதால் காங்கேயன் என்றும் இவருக்குப் பெயருண்டு. தன் தந்தைக்காகத் தான் கடும் பிரம்மச்சர்யம் பூண்ட உத்தமர். ஆன்மீக உலகிற்கு விஷ்ணு சஹஸ்ரநாமத்தை ஈன்ற மஹான். தனது மரண நேரத்தைத் தானே தேர்ந்தெடுக்கக் கூடிய வரம் பெற்றவர் என்று பல சிறப்பகளை உடைய பீஷ்மரைப் பெற்ற தாய் கங்காதேவி.

காசியில் தண்டம், முண்டம், பிண்டம் ஆகிய மூன்றும் விசேஷமாக செய்யப் பெற வேண்டியவை. கங்கை, யமுனை, சரஸ்வதி ஆகிய மூன்று புண்ணிய நதிகளும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் முண்டம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் காசியில் விஸ்வநாதருக்குத் தண்டமிட வேண்டும். இறுதியாக கயாவில் பித்ருக்களின் பொருட்டு பிண்டம் இட வேண்டும். கயாவில் உள்ள வடவால மரத்தின் அடியில் திருமாலின் பாதத்தில் போடப்படுகின்ற பிண்டத்தால் பித்ருக்கள் உய்தி பெறுகின்றார்கள். காசியில் இறந்த ஆன்மாக்களை அம்பிகை தன் மடியில் கிடத்தி இளைப்பாற்றி விஸ்வேஸ்வரர் பிரணவத்தை அவர்களது காதுகளில் உபதேசிப்பார் என்பது புராண வரலாறு. மணிகர்ணிகா துறையில்தான் இறந்தவர்களின் காதில் பிரணவ மந்திரம் உபதேசிக்கப் பெறுகின்றது. மணிப்ரவளம் என்பது மந்திரம், கர்ணிகை என்பது காது. இதன் காரணமாகவே இந்தத் துறைக்கு மணிகர்ணிகா என்று பெயர்.

Koviloor Digital Library

எத்தனையோ மாநவம் புரிந்தவர்கள் கங்கைக் கரையில் காசியில் வாழ்ந்திருக்கின்றார்கள். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். சேது பந்தனத்தில் அணிலின் பங்கு என்பது பெரியது. அந்த அணில் மீது படிந்த மணலில் ஒரு துளி என்பதுதான் எனக்குப் பொருந்தும். எனக்கு எப்பொழுதுமே மூன்று விஷயங்கள் ரொம்ப பிடிக்கும். அவை தாமரை, கிளி, கங்கை. முதன் முதலில் ரிஷிகேசத்தில் கங்கைக்குள் கால் பதிந்த வேளையை என்னால் மறக்க இயலாது. காசியில் என் கணவரது அன்புப் பெற்றோர்களின் அஸ்தியைக் கரைக்கச் சென்றதும், மீண்டும் சில ஆண்டுகளுக்குப் பின் தங்க அன்னபூரணியை தரிசிக்கச் சென்றதும் என் நினைவில் நீங்காத இடம் பெற்ற சம்பவங்கள். அந்த நினைவுகளை இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு (சுமார் 17 ஆண்டுகள்) மீண்டும் புத்துயிருடன் பிறக்கச் செய்திருக்கிறார் விஸ்வேஸ்வரர். அதற்குக் காரணம் லண்டன் ஸ்ரீ முருகனின் ஆசியும் குடமுழுக்கு விழாக் குழுவினரின் அன்பும் தான். இந்த அரிய வாய்ப்பினை நல்கிய காசி விஸ்வேஸ்வரருக்கும் அன்னபூரணிக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு Ragubhir Singh அவர்களது Ganga Sacred River of India எனும் நூலில் நான் கண்ட காளிதாஸரின் பாடல் ஒன்றையும் ஆதி சங்கர பகவத்பாதாளின் சௌந்தர்யலஹரியில் உள்ள பாடல் ஒன்றையும் கூறி முடித்துக் கொள்கின்றேன்.

When the waters of the Ganga and the Yamuna mingle it appears as though diamonds and sapphires were woven together in a string; as though a flock of white swans had suddenly run into another flock of black swans; as though a garland of white lotus buds were interspersed with blue lotuses; as though a streak of lightening had merged into a sheet of darkness; as though a clear blue sky spotted with woolly clouds of autumn.

Kalidas Raguvamsam
Canto XIII

சௌந்தர்யலஹரியின் 54வது ஸ்லோகம்

பவித்ரீ கர்த்தும்ந: பசுபதி பராதீன ஹ்ருதயே
தயாமித்ரைர்-நேத்ரைர் ரருண தவல ச்யாம்ருசிபி
நத: சோணோ கங்கா தபண தனயேதி த்ருவமமும்
த்ரயாணாம் தீர்த்தானா முபநயஸி ஸம்பேத மநகம்

பசுபதிக்கு நிகரான கருணை உள்ளம் கொண்டவளே. தலையக்கு இருப்பிடமாகத் திகழும் உன் கண்கள் சிவப்பு, வெளுப்பு, கருப்பு என்ற வர்ணங்களைக் கொண்டவையாக உள்ள. அது எதற்கு ஒப்பாக இருக்கிறதென்றால் மேற்கு நோக்கி செல்லும் சிவந்த நிறமை உடையை சோணபத்ரா ஆறு (சரஸ்வதி) வெளுப்பான கங்கை மற்றும் சூர்யபுத்திரியான கறுப்பு வண்ணம் கொண்ட யமுனையும் சங்கமிப்பது போல் இருப்பதால் உனது கண்களே எங்களது பாவங்கள் அனைத்தையும் போக்கி புனிதமாக்க வல்லவை என்று கூறுகின்றார்.

அன்னையின் நயன தீக்ஷையில் நம் பாவங்கள் அனைத்தும் நீங்கி நாம் உயர்வு பெறுவோமாக!

Koviloor Digital Library

வேலை வணங்குவதே வேலை

பேராசிரியர்.அரிமா.ந.பாலசுப்பிரமணியன்

த/பெ.பெரும்புலவர்.பேராசிரியர்.பா.நமசிவாயம்

இணைப்பேராசிரியர்,வணிகவியல் துறைத்தலைவர்(பணி ஓய்வு)

ஆறுமுகம் பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி

திருப்பத்தூர்

வேலை வணங்குவதே வேலை என்னும் தலைப்பில் இக்கட்டுரையை எழுதுவதில் பெறும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தலைப்பில் சிங்கப்பூரில் கலைப் பித்தர்கள் கழகத்தில் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவிலில்(யீசூன் ரோடு) இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு நவம்பர் மாதம் பதினெட்டாம் நாள் பேசியது

சிவஸ்ரீ.பிச்சைக் குருக்கள் அவர்களின் ஆசியுடன் இக்கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்

ந.பாலசுப்பிரமணியன்

Koviloor Digital Library

, வேலை வணங்குவதே வேலை

மெய்யன்பர்களே!

இன்று என் வேலை,வேலைப்பற்றி பேசுவது. வேலை வணங்குவது எமக்கு வேலை என்று கூறியவர் எல்லப்ப நாவலர், கந்தர் சுடர் கரத்திருக்கும் வெற்றி வாகையே சுமக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை

எனக்கு என்று தம்மைத் தனியாக மற்றவர்களிடமிருந்து பிரித்துக் கூறவில்லை. எமக்கு என்கின்றார். எமக்கு என்றால் பெருமை என்றும் பலர் என்றும் அர்த்தம். மற்ற பாணங்கள் ஒரு தடவை, இரண்டு அல்லது பல தடவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். ஆனால் வேலுக்குத் தோல்வி என்பதே கிடையாது. ஆகவே ஒரு முறை பயன்படுத்தினால் போதும் ஏனெனில் வெற்றிவாகையே சுமக்கும் வேல். வெல் என்பது தான் நீண்டு வேல் என ஆகியது. முதனிலை நீண்ட தொழிற்பெயர்.

"சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்" என்று பாரதி பாடினான். மற்றவையெல்லாம் உடம்பை மட்டும் அழிக்கும். ஆனால், வேல் உயிரோடு கலந்து அறியாமையையும் அழிக்கும்.

இராமனுடைய அம்பு அனைவரையும் அழித்தது. முருகனுடைய கைவேல் சூரபன்மனைப் பிளந்து அனைவரும் வணங்கும் மயிலாகவும் சேவலாகவும் ஆக்கியது.

போக்குதற்குரிய நிலையில் நம்பால் பல உண்டு. அதில் ஒன்று பகை அப்பகையை வெளிப்பகை, உட்பகை என இருவகைப்படுத்தலாம்.

வெளிப்பகையையும் இருவகையாகப் பிரிக்கலாம். பகைவர் என்றறிய நடந்து கொள்பவர் ஒரு சாரர். ஆனால் நண்பனைப் போல் நகைமுகங்காட்டி இன்சொற்கூறி நெஞ்சகத்தில் கொஞ்சமும் நல்லெண்ணமின்றிப் பகை எண்ணமே மிகுந்தவர் மற்றொரு வகையினர்.

முன்னவரைக் காட்டிலும் பின்னவர் கொடிய பகைவராவார். இவ்விரு வெளிப்பகைவரினும் நம் உள்ளத்தில் இருக்கும் பகையே மிகக் கொடியதாகும். இப்பகைவனே நாள் தோறும் எண்ணற்குரியவன்.

துன்பம் என்பது எவனுக்கில்லை? அத்துன்பத்திற்குத் தலைவன் நம்மிடமே உள்ளான் அவன் யார்? தமிழில் அறியாமை என்றும் வட மொழியில் அஞ்ஞானம்

Koviloor Digital Library

என்றும் சொல்லப்படுவான்.

நம்முள் எனும் பொழுது உடம்பைக் குறிக்கின்றேன். உடம்பானது நமக்கு நண்பன் போன்றது. ஆனால் நம்முடன் தொடர்புடையதன்று. இது ஓர் நண்பனைப் போன்றது. இவ்வுடம்பு நமக்கு பெருங் கெடுதிகளைச் செய்யாது. நூறு ஆண்டுகளுக்கு மேல் மக்கள் வாழ்தலில்லை. அதனால் உடம்பால் ஆகும் துன்பமும் அவ்வாண்டுக் கணக்கின் மேற்படாது. ஆண்டுக் கணக்கில் அகப்படாத மாபெரும் பகைவன் அறியாமை. இவன் நம்மை எப்போது வந்தடைந்தான். இவன் இடைக்காலத்தில் வந்து சேர்ந்தவன் அல்லன். நாம் என்றோ அன்றே அவனும் நம்முடன் பழகி நமக்கு எப்பொழுதும் துன்பத்தையே கொடுத்துத் தன்னையும் அறிவிக்காது மற்றொருவரால் நமக்குத் துன்பம் வருவதாக நம்மை நம்பவைத்துக் கொண்டிருக்கும் இயல்பினை உடைய இவன் உண்டான நாள் என்று ஒன்று கிடையாது.

நெல்லுக்குத் தவிடும், உமியும்

முளைக்கும் சக்தியும் எக்காலத்தில் உண்டாயின. நெல் உண்டான அன்றே.

செம்புக்குக் களிம்பு என்ன காலத்தில் உண்டாயிற்று யாருக்குத் தெரியும். அவ்வாறே உயிர் என்றோ அன்றே அஞ்ஞானமும் செம்புடன் ரசகுளிகையைச் சேர்த்தால் களிம்பு போகும்.

பலமுறை உரலில் இட்டு குத்தினால் தவிடு, உமி, முளைக்கும் சக்தி ஆகியவை விலகும். அவ்வாறே உயிருடன் கலந்து நிற்கும் அறியாமையை நீக்கமுடியும் அதற்கு என்ன ஆயுதத்திற்கு சக்தி எனில் வேல் ஒன்றுக்கே.

வெல்லும் ஆயுதம் எது?

தமிழில் பொதுவாக வெல்லு தலைச் செய்வதுவேல் என்பர். சிவனிடத்தில் எல்லா ஆயுதங்களும் உள்ளன. ஆனால், அவை பயன்படுத்தப்படவில்லை. இதைச் சிவப்பிரகாசர் மிக நன்றாகக் கூறுகின்றார். வசவர் வாயிற்படியில் உள்ள கதவுகள் என்றும் மூடப்படவில்லை. பெயரளவில் கதவுகளாக இருந்தன. அது எதைப் போல் எனின் சிவபெருமான் கையில் இருக்கின்றனவே படைகள் அவை எஞ்ஞான்றும் உபயோகப்படுத்துப்படவில்லை.

ஞானவேல்

அஞ்ஞானப் பகையை வெல்ல வேலினும் ஒன்றில்லை வேலும் ஞானமும் பெயரால் வேறுபடலாமேயொழிய பொருளால் ஒன்றே.

வடமொழியில் ஞானம் என்பதே தமிழில் வேல் என்பதாம். சக்தி என்று வட

Koviloor Digital Library

மொழியில் கூறினால் வெல்லுவதையே தன் இயல்பாக, உடடையானுக்கின்பம் செய்வதையே தன் இயல்பாக உடையதும் வேலை ஏற்று முருகனை வணங்காமல் வேலினை வணங்கலாமா?

வேல் வழிபாடு :

வேலின் பெருமை அறியாமையால் அல்லவோ இவ்வினா எழுதுகிறது, வேல் தெய்வமே வேல்.

வேல் வேறு முருகன் வேறு அல்ல.

ஞானம் வேண்டுமா என்றால் எவர் மறுப்பார் வேண்டியதில்லை என்று? ஆணுக்கும் பெண்ணுக்கும் மிகுதியும் வேண்டியதே.

பணம் இரும்புப் பெட்டியில் இருத்தலைக் காட்டிலும் கையிலிருப்பது நன்று என்று சாதாரண மனிதனும் கருதுவது போல் வேல் கோயிலில், வீட்டில், பூசை அறையில்இருத்தலின் உடம்பிலிருத்தல் உயர்ந்தது.

பணம் தானடைந்த இடத்திற்கேற்ப பகை, துன்பம் போன்றவற்றை உண்டாக்குகிறது. இன்பமே தந்து துன்பத்தை என்றும் தாராத ஞானச் செல்வமாகிய வேல் கையிலிருந்தால் பேரின்பம் விளையும்.

சூலபாணி என்பது சிவபெருமான் பெயர்களுள் ஒன்று. ஆனால் அவன் சூலமின்றியும் இருப்பான். வேலில்லா முருகனில்லை. இளமைக் காலமெனில் இல்லாதிருத்தலில் குற்றம் இல்லை.

சூரபன்மன் நடுக்கடலில் மாமர உருவில் நின்று உலகத்தைத் துன்புறுத்தினான். முருகன் வேலினை நோக்கி அசுரனைத் தாக்கி விடுமாறு ஏவினான். வேல் சென்றதும் மாமர உருவில் அரக்கனைத் தடிந்தது. அசுரனுடன் இயைந்தமையால் உண்டான குற்றம் நீங்கக் கங்கையில் நீராடி மீண்டும் முருகனை நோக்கி வந்தது.

வேலுக்கும் ஆறுமுகங்கள் உண்டு. காஞ்சிபுரத்தில் அவ்வாறு அமைந்த வேல் இன்றும் உள்ளது.

வேலைத் தொடர்ந்து சூரன் தனதுவடிவில் வந்தான். முருகனை நோக்கிய முகத்துடனிருந்த வேல் மற்றப் படைகளை போன்ற தாயின் பின் வரும் அவனை அறியமுடியுமோ?

ஞானத்தையே தன் உருவமாகப் பெற்றது வேல். ஆதலின் பின் வரும் அசுரனை அறிந்தது. முருகன் கையை அடையவில்லை. மீண்டும் அசுரனைத் தாக்குமாறு முருகன் கட்டளை இடவுமில்லை. அறிவு நிறைந்த அது திரும்பியது அசுரன் மார்பில்

Koviloor Digital Library

மோதியது எவ்வாறு அசுரன் இரு உயிர் ஓர் உடம்பு கொண்டவன். இரண்டுயிர்க்கும் எவ்விதக் கெடுதியும் இன்றிமோதி அவனை இரண்டாகப் பிளந்து உயிர்களுக்கு கெடுதியின்றி பிளந்த அவ்வுயர்வினை நோக்குக.

சிவன் முருகனை நோக்கிச் சூரனை அழிக்கும் படி சொல்கின்றார். சொல்லும் போது சூரனை அழித்தற்குக் காரணமும் உடன் கூறுகின்றார்.

உலகத்தைத் துன்பறுத்தலும், உயிர்களுக்குக் கேடு சூழ்தலும், நல்லார்க்குக் கெடுதலைச் செய்தலும், தீய காரியங்களைப்புரிதலும், ஆணவத்தின் செய்கைகளாம், அஞ்ஞானத்தால் நிகழ்வனவும் இவையே இவற்றைக்கூறி இவற்றைப் போக்குவதற்கு வேலினைக் கையில் ஈந்தனன் என்றால் அசுரனை அன்றி மாயா காரியங்களையும் அழிக்கும் வன்மையது அது என்பது தான் பொருள்.

முருகனுக்கு வேலை எவர் கொடுத்தனர் சிவபெருமானே கொடுத்தார். உலக வழக்கத்தில் அம்பிகை கையிலிருந்த வேலை வாங்குவது மரபாயிருக்கின்றது.

வேலினைச் சிவனே தந்தான் அம்பிகை அல்லள்.

செவ்வேள் செவ்வேல்

முருகன் நிறமும் செம்மை அவன் வேலின் நிறமும் செம்மை, ஆதலால் செவ்வேள் ஏந்தும் வேல் செவ்வேல் என்க.

வேலே கடவுள்

உடம்பிடி என்பது வேலுக்குத் தமிழ்ப் பெயர். அதனைத் தெய்வம் எனலாம். இதனைத்தெய்வம் என்று கண்ட, ஊருக்குள் வாழ்பவர்கள் ஊர் வெளியில் வேலினைத் தொட்டு வணங்கினர். திருச்சி வயலூர் முருகன் கோவிலுக்கு வெளியில் பல வேல்கள் நாட்டப்பட்டிருக்கின்றன.

வீரபாகு – (இலக்குவன்) – கந்தனின் சகோதரர்

பானுகோபன் – (இராவணன் மகன் இந்திரஜித்)

ஆணவத்தை அடக்கும் வேல்

வீரபாகு, பானுகோபனுடன் சண்டை செய்கின்றார் அவன் (பானுகோபன்) அவரையும் பிறரையும் மாயையாகிய அம்பினால் கட்டி ஏழ்கடலுக்கப்பாலுள்ள நன்னீர்க் கடலில் போடும் படி செய்தான். இந்நிகழ்ச்சியை அறிந்த நாரதர் முருகனிடம் சென்று கூறுகிறார். முருகன் வேலை ஏவுகின்றான், வேல் வந்தது இதன் வருகையைக் கண்ட மாயை அகன்றது. கட்டப்பட்டிருந்த வீரபாகு முதலியோர் உணர்ச்சி பெற்று எழுகின்றனர்.

வேல், தெய்வம், ஞானம் என்பன ஒரு பொருள் குறித்த சில சொற்கள்.

Koviloor Digital Library

வேலைக் கோயில் முதலிய இடங்களில் வைத்து பூசித்தலோடு உடலிலும் அணிந்து கொள்ள வேண்டும்.

செம்பினாலேனும், வெள்ளியினாலேனும், தங்கத்தினாலேனும், உயரிய மணிகளால் இழைத்தேனும் வேலை ஒவ்வொருவர் உடம்பில் அணிவதே வேலையாகும். நம்முடனிருக்கும் வேல் நாம் காண்போமானால் நம்முடனிருக்கும் பகைவனாகிய அஞ்ஞானத்தை அழிக்கும் அல்லவா?

ஆகவே

கலக்கத்தை ஒழிக்கும் வேல்

துன்பத்தை நீக்கும் வேல்

இன்பந்தரவல்லது வேல்

பசி நீக்கும் வேல்

வழித்துணையாகும் வேல்

எமபயம் அகற்றும் வேல்

ஒப்பற்ற துணையாகும்.

பெரும்புகழ் பெற்றது.

மண்வெட்டி, கத்தி, கடப்பாரை, எனப் பெயருடையோர் எவரையும் காண்கிறோமா? வேலினை ஒட்டிப் பல பெயரினை மக்கள் வைத்து கொண்டிருத்தலை

வேல்	தங்கவேல்	குழந்தைவேல்
வேலாயுதம்	மாணிக்கவேல்	கந்தவேல்
கதிர்வேல்	வயிர வேல்.	கனகவேல்
ஞானவேல்	வச்சிர வேல்	வேல் முருகன்
வடிவேல்	வெற்றி வேல்	சொர்ணவேல்
ரெத்தினவேல்	முத்து வேல்	குமாரவேல்
	கதிர்வேல்	மணிவேல்

கந்தரநுபூதியில்

ஆடும் பரி வேல் அணி சேவல் – என்கிறார் அருணகிரிநாதர்

முன்னும் பின்னும் நோக்கும்

சிங்கத்தை ஒத்து முன்னிருக்கும்

மயிலுடனும் பின்னிருந்த சேவலுடனும்

சம்பந்த முடையது வேலாகும்.

Koviloor Digital Library

இதுவே அரிமா நோக்கு.

வேள் எனின் பார்ப்போர் ஆசைப்படும் படியான அழகன் என்று பொருள் என்றும். குழந்தையாகும் அழகு இவனுக்குண்டு.

வேலின் அமைப்பு

ஆழ்ந்து அகன்று நுட்பம்

ஆழமான அறிவு

அகலமானதாகவும்

நுட்பம்: நுண்ணியதாகவும்

வேலுக்கும் ஆறுமுகம் உண்டு

- 4 திசைகளையும்
- வான்
- பூமி – என ஆறுதிக்கும்.

காக்கும் பண்படையது – வேல் ஒழிப்பது மட்டும் அல்ல. ஆக்கமும் செய்யும். ஆகையால் மற்ற ஆயுதங்கள் அனைத்தையும் வணங்கவில்லை. வேலை இறைவனாக வணங்குகின்றோம்.

இவ்வுலக இன்பங்களை வள்ளி, நாயகியைக் கொண்டு, மேல் உலக இன்பத்தை தெய்வ நாயகியைக் கொண்டும் முத்தி இன்பத்தை வேலைக் கொண்டும் அருளுகின்றான்.

ஞானமாகியஅறிவுக்கு மூன்று இலக்கணங்கள் உண்டு.

1. ஆழம், 2. அகலம், 3. கூர்மை

வேலின் அடிப்பகுதி ஆழமாக இருக்கிறது. நடுப்பகுதி அகலமாக இருக்கிறது. நுனிப்பகுதி கூர்மையாக இருக்கிறது.

தமிழ்க்கடவுள் முருகன்

தமிழ்மொழிக்கு என ஒரு கடவுளா? வியப்பாக இருக்கிறது. தமிழ் என்றும் இளமை மாறாதது. முருகனும் என்றும் இளமை மாறாத இளமைக்காரன்.

முருகனுக்கு தோள்– 12 தமிழ் உயிர் எழுத்து 12

கண்கள் 18, மெய் எழுத்துக்கள் – 18,

முகங்கள் 6, – இனம் 6 (வல்லினம் 6, மெல்லினம் 6, இடையினம் 6)

ஆயுதம் – வேல் – ஆயுத எழுத்து மூன்று புள்ளிகளை உடையது.

Koviloor Digital Library

குன்றக்குடி ஆறுமுகச் செவ்வேள்

சிவகங்கைச் சீமையை ஆண்ட மருது சகோதரர்களுக்குச் சண்முக நாதன் மேல் தீராக் காதல்.

பெரிய மருது பாண்டியருக்கு இராசபிளவை நோய் ஏற்பட்டு வருத்துகிறது. எவ்வளவு மருத்துவம் செய்தும் பிளவை நோய் தீர்ந்தபாடில்லை. முருகன் திருவருள் பெற்ற அடியவர் திருநீறு இடப் பிளவை நோய் தீரும் என்று கூறினார்கள்.

காடன் செட்டியார் என்ற முதியவரை இப்பிளவை நோய் தீர்க்க வல்லவர் என்று அழைத்து வந்தார்கள். காடன் செட்டியார் முருகப் பெருமானை நினைத்துத் திருநீறு இட்டார். வெகு நாட் களாகத் தூக்கம் இன்றி வருந்திய மருது பாண்டியர் அன்றிரவு அயர்ந்து தூங்கினார்.

அப்போது பால சந்நியாசி ஒருவர் கையில் மயில் தோகையுடன் வந்து, பிளவைப் பிதுக்கி ஆணி எடுத்து வாழை இலையில் வைத்துவிட்டுப் பிளவையின் வாயில் திருநீறு வைத்ததாகக் கனவு கண்டார். விழித்தெழுந்ததும் அச்செயல்கள் யாவும் நனவாக இருக்கக் கண்டு மகிழ்ந்தார். அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ என்று செட்டியாரைப் புகழ்ந்தார். அன்று முதல் செட்டியாரை உறவாகப் போற்றி மகிழ்ந்தார். அருமைச் செட்டியாரின் அன்பு வேண்டு கோளுக்கிணங்க ஆறுமுக நாதருக்கு அழகிய ஆலயம் திருப்பணிகள் செய்வித்தார்.

Koviloor Digital Library

பெரிய புராணமும் திருமந்திரமும்

(சைவசித்தாந்த ரத்தினம்
நாகேந்திரம் கருணாநிதி)

பெரிய புராணம் சைவசமய இலக்கியங்களின் மணிமுடியாக விளங்கும் ஒரு நூலாகும். இந்நூல் திருத்தொண்டர் புராணம் எனவும் அழைக்கப்படுகின்றது. இந்நூல் சுந்தரமூர்த்திசுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை துணைநூலாகவும் கொண்டு அறுபத்துமூன்று நாயன்மாரின் சரித்திரத்தை கூறும் நூலாகும். இந்நூல் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங்க சோழ அரசனின் (அனபாய சோழன்) வேண்டுகோளுக்கமைய அரசனின் அமைச்சராக இருந்த அருள்மொழித்தேவர் என்னும் இயற்பெயர் உடைய சேக்கிழார்சுவாமிகளால் பாடப்பட்டது. இந்த நூலை தொடங்குவதற்கு இறைவனே சேக்கிழார்சுவாமிகளுக்கு "உலகெலாம்" என அடி எடுத்துக் கொடுத்தார். இந்நூல் உலகெலாம் எனத் தொடங்கி உலகெலாம் என நிறைவு பெறுவதும் இந்நூலின் சிறப்பாகும். இந்நூல் பன்னிரண்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் வரும் நாயன்மார்களின் வரலாறுகள் ஆண், பெண் வேறுபாடின்றி, இனம், தொழில் என்பவற்றைக் கடந்து எழுதப்பட்ட ஒரு தேசிய நூலாகும். இந்நூல் சைவசமய அடியார்களின் வரலாறுகளைக் கூறும் நூலாக இருந்த போதும் சமயகுரவர்கள் நால்வரில் ஒருவரான ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாயனாருக்கு இந்நூலில் மூன்றில் ஒரு பகுதியை வழங்கி, அக்காலத்தில் அரசியல் செல்வாக்குப் பெற்ற புறச்சமயங்களான சைனம், பௌத்தம் ஆகியவற்றுடன் அகச்சமயமாகிய வைதிகத்தையும் எதிர்த்துப் போராடி தமிழ்நாட்டின் தொல் பெரும் சமயமான சைவத்தையும், தமிழையும் நிலைநாட்டிய ஒரு புரட்சி வீரரை அறிமுகப்படுத்திய நூலாகவும் பார்க்கலாம். இந்நூலின் மிகுதி மூன்றில் இரண்டு பகுதியிலும் பெரும்பகுதி தமிழையும் சைவத்தையும் வளர்த்தவர்களான சுந்தரமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், காரைக்கால் அம்மையார், சேரமான்பெருமாள் நாயனார், திருமூல நாயனார் ஆகியோரது வரலாறுகளாகும். எனவே இந்நூல் தமிழ் மக்களையும், தமிழகச் குழலையும் மையமாகக் கொண்டு பாடப்பட்ட தமிழ்க் காப்பியமாகும். இந்நூல் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக பதின்மூன்று சருக்கங்களையும் கொண்ட 4286 விருத்தப் பாடல்களைக் கொண்டதாகும்.

பெரியபுராணம் மனிதவாழ்க்கையை உணர்வதற்கு ஒரு உன்னத நூலாகும். சிவசிந்தனைக்கும் செந்தமிழ் திறத்திற்கும் இந்நூல் ஈடிணையற்றது. இதற்குச் சான்றாக நம்மிடையே வாழ்ந்த பகவான் ரமணர் அவரின் பதினேழாம் வயதில் ஞானியாவதற்கு முன்பு அவர் படித்த ஒரே ஒரு சமய நூல் பெரியபுராணம் என அவரே கூறியுள்ளார். அது மட்டுமல்லாமல் பெரியபுராணத்தில் வரும் நாயன்மார்கள் போல தானும் வரவேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ்ந்ததாகவும் கூறியுள்ளார். இந்நூலில் கூறப்பட்ட ஒவ்வொரு நாயன்மார்களும் கடைப்பிடித்த நெறிகள் தனித்தனியானவையாகும். அந்நெறிகளில் சில எளிதாக எம்மால் கடைப்பிடிக்கக் கூடியனவாகும். சாதாரண மனித வாழ்க்கையை வாழ்ந்துகொண்டே நாம் இந்நெறிகளைக் கடைப்பிடிக்கலாம். இந்நூலை சைவசமய நூலாகப்பார்க்காமல் மனிதகுலத்திற்கு பொதுவாக எல்லாச் சமயத்தவர்களும் பயன்பெறும் நூலாகப்பார்ப்பதற்கு இந்நூலில் வரும் பின்வரும் ஒரு பாடல் சான்றாகும்.

"இங்கு இதன் நாமம்கூறின் இவ்வுலகத்து முன்னாள்

தங்கிருள் இரண்டில் மாக்கள்சிந்தையுள் சார்ந்துந்துநின்ற

பொங்கிய இருளைஏனைப் புறஇருள் போக்குகின்ற

செங்கதிரவன் போல்நீக்கும் திருத்தொண்டர்புராணம் என்பாம்"

அதாவது புற இருளைச் சூரியன் போக்குவது போல் உலகின் மனிதராக உள்ள அனைவரினதும் அகஇருளை போக்குவது திருத்தொண்டர்புராணம் என இப்பாடல் கூறுகின்றது. இந்நூலில் வரும் கடைசிப் பாடல்

"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்

ஒன்றுகாதலித்து உள்ளமும் ஓங்கிட

மன்றுளார் அடியாரவர் வான்புகழ்

நின்றதெங்கும் நிலவி உலகெலாம்"

அதாவது ஆன்மா இறைவனை அன்பு செய்து இன்பம் பெற்று உயர்வடையும்படி இறை அடியார்களின் புகழ் உலகெங்கும் விளங்குகின்றது என இப்பாடல் கூறுகின்றது. முக்கியமாக எளியநிலையில் மனம் தளராமல் இறை சிந்தனையோடு தொண்டு

Koviloor Digital Library

புரிந்தால் இறையருள் பெறலாம் என்பதை இந்நூல் நாயன்மார்களின் வரலாறுகள் மூலம் எமக்கு உணர்த்துகின்றது. இந்நூலில் வரும் சில நாயன்மார்களின் வரலாறுகள் எமக்கு உணர்த்துபவற்றை திருமந்திரத்தில் திருமூலநாயனார் கூறியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமானால்

1. இளையான் குடிமாறநாயனார் - மகேசுர பூசை.

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்றாயில்

நடமாடக்கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா

நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றாயில்

படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே."

படம் போன்ற அமைப்பை உடைய கோபுரங்களையுடைய கோயிலின் உள்ளே இருக்கும் இறைவனுக்குப் படைத்தால் அது இறைவனுக்குத்தான் சேரும் அடியார்களுக்குச் சேராது. ஆனால் நடமாடும் கோயிலாக விளங்கும் சீவன்களுக்குத் தருகின்ற ஒன்று சீவன் உள்ளே சிவன் இருக்கும் காரணத்தால் அது சிவனுக்கும் போய்ச் சேரும்

இளையான் குடிமாறநாயனார் (சிவ அடியார்களுக்கு அமுதூட்டி) வரலாற்றின் மூலம் சீலமார் பூசை என சேக்கிழார் சுவாமிகளால் சிறப்பிக்கப்பட்ட மகேசுர பூசை சிவலோகம் சென்று இன்புற்றிருப்பதற்கான வழி என உணர்த்தப்பட்டுள்ளது.

2. பூசலார் நாயனார் - உள்ளம் பெரும் கோயில்

உள்ளத்துள்ளே உள்ளது பரம்பொருள் எனக் கூறும் பாடல் என் 2550

"காயக் குழப்பனைக் காய நன்னாடனைக்

காயத்தின் உள்ளே கமழ்கின்ற நந்தியைத்

தேயத்துஉள்ளே எங்கும் தேடித் திரிபவர்

காயத்துள் நின்ற கருத்து அறியாரே."

சீவர்கள் உடம்போடு பொருந்தி அவர்கள் உயிரில் நுண்ணுயிராய்க் கலந்து இருப்பவனை, ஆருயிர்களின் உடம்பையே தான் அருளாட்சி செய்யும் திருநாடாகக் கொண்டு திகழ்பவனை, உடம்புக்குள்ளே ஒளிவடிவாய்த் திகழ்பவனை, பாவம் இந்தப் பேதை மக்கள் எங்கெங்கோ தேடித் திரிகிறார்களே! இவர்கள் அப்பெருமான் இவர்கள் உடம்புக்குள்ளேயே இருக்கின்ற உண்மை அறியாதவர்கள்.

பூசலார் நாயனார் வரலாற்றின் மூலம் (மனத்திலேயே இறைவனுக்குக் கோயில் கட்டியவர்) இறைவன் எம்முடன் எமது உள்ளத்தில் இருக்கின்றான் என நம்பிக்கையுடன் செயல் பட்டால் இறைவன் எம்முடனேயே இருந்து எம்மை வழிநடத்துவான் என உணர்த்தப்பட்டுள்ளது.

3. அமர்நீதி நாயனார் – அறம் செய்

"தன்னை அறியாது தான்நல்லன் என்னாதுஇங்(கு)

இன்மை அறியா(து) இளையார்என்று ஓராது

வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னம்

தன்மையும் நல்ல தவஞ்செய்யும் நீரே"

உயிரை எடுக்க வரும் எமன் எம்மை எப்படிப்பட்டவர் என எண்ணிப் பார்க்கமாட்டான். எம்மை பாவம், நல்லவன், ஏழை, சிறுபிள்ளை என விட்டு விடவும்மாட்டான். எமன் வலிமையுடையவன். எனவே அவன், உயிரைக் கவர்ந்து செல்வதற்கு முன்பாக நல்லதான தானம், தவம் என்பனவற்றைச் செய்யுங்கள் மனிதர்களே.

அமர்நீதி நாயனார் (உணவு, உடை கொடுத்து) வரலாற்றின் மூலம் அறம் செய்வதன் மூலம் சிவலோக வாழ்வையும் பெறலாம் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

கண்ணப்பநாயனார் – அன்பே சிவம்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

அன்பு வேறு, இறைவன் வேறு இரண்டும் ஒன்றல்ல தனித்தனியானவை என்று சொல்பவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே இறைவன் என்பதைப் பலரும் அறியாது இருக்கிறார்கள். அன்புதான் இறைவன் என்பதை எல்லாரும் அறிந்துவிட்டால் பிறகு அவர்களே அன்புருவான இறைவனாய் ஆனந்த வெள்ளத்தில் அமர்ந்திருப்பார்கள் (வாழ்ந்திருப்பார்கள்).

கண்ணப்ப நாயனார் (காளத்தி நாதர் மேல் அன்பு வைத்து) வரலாற்றின் மூலம் இறைவன் மேல் மெய்யன்பு தலைப்படுமாயின் முத்தி கிடைக்கும் என்பதை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசு நாயனார் – சரியை வழிபாடு

"நேர்ந்திடு மூல சரியை நெறி இதென்று

ஆய்ந்திடும் காலங்கி கஞ்ச மலையமான்

ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து

ஓர்ந்திடும் சுத்த சைவத்து உயிரதே"

முத்தியாகிய பேரின்ப நிலை அடைவதற்கான மூல காரணமாகவும், முதன்மையான வழியாகவும் இருக்கின்ற சரியை நெறி இன்னதென்று ஆய்ந்தறிகின்ற, நுணுகி உணர்ந்திடும் கந்துரு ஆகிய என் அன்புச் சீடர்களே! கேட்டுக் கொள்ளுங்கள். பூவுலகில் உண்மை உணர்ந்திடும் சுத்த சைவர்ருக்கு உயிர் போன்றதே இந்தச் சரியை நெறிதான்.

திருநாவுக்கரசு நாயனார் (உளவாரத் தொண்டு) வரலாற்றின் மூலம் இறைவனை அடைவதற்கு இலகுவாகச் செய்யக்கூடிய சரியை வழிபாட்டின் மகிமை விளக்கப்பட்டுள்ளது.

திருநீலகண்ட நாயனார் – பிறர் மனை நாடாமை

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே

காத்த மனையாளைக் காமுறும் காளையர்

காச்ச பலாவின் கனி உண்ண மாட்டாமல்

ஈச்சம் பழத்திற்கு இடர்உற்ற வாரே"

அன்புடைய மனைவி வீட்டில் இருக்க மற்றொருவருக்கு உரிமையான பிறன் மனைவியை விரும்பும் இளைஞர் செயல் வீட்டில் காய்த்துத் தொங்கும் பலாப்பழத்தைத் தின்ன முடியாமல் எங்கோ பழுத்துக் கிடக்கின்ற ஈச்சம் பழத்திற்கு ஆசைப்பட்டு அவதிப்படுவது போலாகும்.

திருநீலகண்ட நாயனார் வரலாற்றின் மூலம் நல்ஒழுக்கத்துடன் இருந்தாலே சிவலோகப் பதவி கிடைக்கும் என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

வாழ்வின் பயணம் வளமாக அமையட்டும்

வாழ்வின் பயணம் நீண்ட கால பயணம் என்பதனை நாம் அறிந்ததே. வாழ்வின் வாழ்வு முறைகள் எல்லோருக்கும் ஒன்று போல் அமையும் என்று சொல்வதற்கில்லை. அவரவர்களுக்கு கிடைக்கும் வசதி வாய்ப்புகளை பயன்படுத்தி நல்ல முறையில் வாழ்வதற்கு நம்மை நாம் தயார் படுத்திக் கொள்தல் வேண்டும். நலமோடு வாழ வேண்டும். செல்வாக்குடன் பலரும் போற்ற வாழ வேண்டும் என்று எண்ணுவது நமது அனைவரது இயல்பு நிலை. அது போல் நடப்பதற்கு நமக்கு நாமே பயிற்சி அளித்துக் கொள்வது மிகவும் அவசியம்.

நமது வாழ்வில். வெற்றி என்னும் கனியை நாம் எளிதில் பெற்றிட வேண்டும். ஒளிமயமான வாழ்வுடன் நாமும் நமது வாழ்க்கைப் பாதையில் வாழ்ந்து காட்டுவோம். இதற்கு வழி இருக்கிறது என்றால். இருக்கிறது என்பது தான் சரியான விடை. அப்படி எனில் அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். அது பற்றிய சிந்தனையில் இப்போது நாம் செலுத்துவோம்.

ஒரு சில நமது நடைமுறை பழக்க வழக்க மாற்றங்களை மாற்றியமைப்பதின் மூலம். நாமும் நமது வாழ்க்கையில் வெற்றியினை நிச்சயமாக அடையலாம். எந்த ஒரு காரியத்தை செய்ய முற்படும் போது, சில தவிர்க்க முடியாத காரணத்தினால் வெற்றியடைய முடியாத சூழ் நிலைகள் ஏற்படுவதுண்டு. தோல்வி கண்டு துவள்தல் கூடாது. தோல்வி வந்தற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்தல் அவசியம். நமது வாழ்வின் வெற்றிக்கு நாம் என்ன செயய வேண்டும் என்று தமது அனுபவத்தில் கண்ட உண்மைகளை நமது பெரியோர்கள் நமக்கு பல வழிகளிலும் கூறியுள்ளார்கள். அவ்வாறு கூறப்பட்ட செய்திகளை இப்போது நான் பட்டியலிடுகிறேன். இவற்றை சீராக கடைபிடிப்பதன் மூலம் வாழ்வில் வளம் பெறலாம் என்பது திண்ணம்.

- அன்றாடச் செய்திகளை அவசியம் செய்திதாள் படித்து அறிதல் வேண்டும்
- மாதம் குறைந்தது இரண்டு புத்தகங்கள் படிப்பதற்கு நேரம் ஒதுக்க வேண்டும்.
- வாழ்விற்கு வருமானம் மிகவும் அவசியம். வளமோடு வாழ எண்ணுங்கள்
- கடன் பட்டு நோக வேண்டாம். கடன் கல்நெஞ்சக்காரனையும் கரைய வைக்கும்.
- திட்டமிட்டுச் செலவிட்டால்,வேண்டாத உதிரி செலவுகள் எவை என்று தெரிய வரும்.
- காலையில் துயில் எழுதல் நாள் முழுவதும் சுறுசுறுப்பினை தரும்
- உடற்பயிற்சி உடலுக்கு ஆரோக்கியம்.
- காலையில் நடைபயிற்சியினை உந்தன் அன்றாடக் கடமை போல் கொள்
- எந்த வயதிலும் சர்க்கரை,உப்பு குறைப்பது நலம். தவிர்ப்பது உடலுக்கு ஆரோக்கியம்
- காலை உணவு கண்டிப்பாக தேவை. அலுவலக அவசரத்திலும் அவ்வுணவு அவசியம்.
- பிறரிடம் பேசும் போது அவர்களது கண்களை உற்று நோக்கிப் பேசுங்கள்
- மற்றவர்கள் பேசுவதை அனுமதித்து நீங்கள் பேச முயற்சிக்கவும்.
- பேசும் போது உங்களை நன்கு புரிந்து கொள்ளும் விதத்தில் தெளிவாக பேசவும்
- பிறரை பார்க்கும் போது புன்னகை கொள்ளுங்கள்
- இதமான பேச்சு என்றும் உங்கள் நாவில் வாசம் செய்யட்டும்
- இடம் பொருள் ஏவல் அறிந்து பேசுக
- நேரம் பொன் போன்றது! அளவோடு பேசவும் அறிவாற்றாலுடன் பேசவும்
- இல்லாத ஒன்றை இருப்பது போல் பாவித்து பேசும் பேச்சினை அகற்று
- நமது திறமைகள் சொல்லித் தெரிவதை விட நிருபித்துக் காட்டுவது நன்மை பயக்கும்
- அடுத்தவர்களைப் பற்றி பேசும் போது அவர்களது சிறப்புகளை மட்டும் கூறவும்.
- அவர்கள் இல்லாத போது அவர்களை பற்றி தாழ்த்தி பேசுதல் கூடாது.
- விதண்டாவாத அரட்டைப் பேச்சு வம்பை அதிகரிக்கச் செய்யும்.
- தவறுகள் மனிதனின் இயல்பு. புரிய வையுங்கள்! தண்டிக்காதீர்கள். மன்னியுங்கள்
- உங்களது இரகசியங்கள் அவசியம் காக்கப்பட வேண்டும்.
- குடும்ப பொறுப்போடு சமுக சேவைகளிலும் கவனம் செலுத்தவும்
- மாறுபட்ட சூழல் மனதிற்கு இனிமை அளிக்கும் என்பதனை உணர்வீர்
- நமது குறைகளை நாமே அறிந்து கொள்ள அகத்தாய்வு அவசியம் தேவை
- வாரம் ஒருமுறை அமர்வோம் நமது குறைகள் யாவை என்பதை நாமே காண்போம்
- துளி நீரேயானாலும் விரயம் செய்யாதீர்.
- தேவையில்லாத நேரத்தில் மின இயக்கத்தை நிறுத்தவும்
- நீர்,மின்சாரத் சிக்கனம் தேசிய சீக்கனம் எனக் கொள்வோம்.
- உங்கள் தனிப்பட்ட உணர்வுகளை மற்றவர்களிடம் திணிக்க வேண்டாம்.
- போலியினைத் தவிர்போம். இயல்பு நிலையை என்றும் கடைபிடிப்போம்

ச. பொன்ராஜ்
7,497இ 'டி' பகுதி, 58வது தெரு,
சிட்கோ, வில்லிவாக்கம், சென்னை - 600 049

Koviloor Digital Library

திருக்கடையூர் அருள்மிகு ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் ஆலயம்

மற்றும் மார்கண்டேயர் சுவாமி தனி ஆலயம்

பெருமான் : **ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர்**

அம்பாள் : **ஸ்ரீ அபிராமி**

தரிசன நாள் : **06.09.2012**

இடம் : திருக்கடையூர்,நாகை மாவட்டம்

திருக்கடவூர் என்னும் இத்தலத்தின் பெயர் திருக்கடையூர் என்று அழைக்கப்படுகின்றது. ஞான உபதேசம் பெற பிரம்மன் இறைவனை வேண்ட, இறைவன் தன் சிவஞானத்தை வில்வ விதையாக்கி பிரம்மனிடம் கொடுக்க,அவர் அதனை இவ்வூரில் விதைக்க அங்கு வில்வ மரமாகியது. அதன் அடியில் சிவபெருமான் இலிங்கவடிவில் தோன்றி பிரம்மனுக்கு ஞான உபதேசம் வழங்கினார். எனவே இவ்வாலயம் 'வில்வாரண்யக் ஷேத்திரம்' என வழங்கப்படலாயிற்று. வில்வநாதரை முதலில் வணங்கிச் செல்ல வேண்டும். புலத்தியர் பூஜை செய்த புண்ணிய பூமி இது. புண்ணிய வர்த்தனர் சன்னிதி வெளி பிரகாரத்தில் உள்ளது.

சண்டிகேஸ்வரர்,தட்சிணாமூர்த்தி, தனித்தனி சன்னிதிகளில் இருந்து அருள்பாலிகின்றனர். துர்கை, இலிங்கோத்பவர், துர்கைவிநாயகர்,நால்வர்,சமயக்குரவர்கள் நால்வர் ஆகியவர்களுக்கு இத்தலத்தில் மூர்த்திகள் உள்ளன. அப்பர்,சுந்தரர்,திருஞானசம்பந்தர் ஆகிய மூவராலும் பாடல்பெற்ற திருத்தலமாகும். குங்குலிய கலிய நாயனார்,காரி நாயனார் அவதரித்து, தொண்டாற்றி முக்தி அடைந்த திருத்தலம். இது. மேலும் சப்த கன்னிகள்,நவதுர்கை, சிபி;பிரமன்,வாசுகி,சோம சர்மன் சிவசர்மன்,எமகிரிடன்,இரத்தின கயிடன்.சந்திரபூஷணன்,பிருமாதிராஜன்,இரத்தினாகரன்,பஞ்ச சூர்யர்கள்,மார்க்கண்டேயர் இன்னும் பலர் இத்திருத்தலத்து இறைவனை வழிபட்டு முக்தி பெற்றவர்கள். இத்தலத்தில் சுதைகளாக சித்தரிக்கபட்டுள்ள காட்சிகளை கண்டு எப்போதும் ரசிக்கலாம். இதோ அக்காட்சிகளின் பட்டியல்

- மார்கண்டேயர் குழந்தைகளுடன் விளையாடும் காட்சி
  மிருகண்டு முனிவர் தவம் இருக்கும் காட்சி
- மிருகண்டு முனிவர்,மருத்துவதி,மற்றும் குழந்தைகள் விளையாடும் காட்சி
- கடவூர் மயானத்திலிருந்து கங்கை தீர்த்தம், சுவாமி அம்பாள் அபிசேகத்திற்கு கொண்டு வரும் காட்சி
- மார்கண்டேயர் சுவாமிக்கு பூஜை செய்தல்
- குங்குலிய நாயனார்,குங்குலிய வியாபாரி
- காலசம்ஹார அனுக்கிரகம்,எமதர்ம இராஜா, எமகணங்கள்
- அப்பர் சுந்தரர் சுதைகள் வெளிபிரகாரத்தில் மண்டபத்தின் முன் முகப்பில் காணலாம்.

உய்ய வந்த தேவநாயனார் அவதரித்து திருக்களிற்றுபடியார் என்ற சிறப்பு நூலை இயற்றியவர். இவரது நூலை யாவரும் ஏற்க மறுத்தனர். தில்லை மூவாயிரத்தார் முன் பஞ்சாட்சர படியில் வைக்க, அதை யானை உருக்கொண்டு அந்நூலை இறைவன் தொட்டு வணங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

2. அமிர்த கடேஸ்வரரும் கள்ள வராணப்பிள்ளையாரும்

தேவர்களும் அரக்கர்களும் சேர்ந்து வாசுகி என்ற பாம்பைக் கயிராக்கிமந்திர மலையை மத்தாகக் கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்த போது அமிதம் வெளிப்பட்ட செய்தியை பொதுவாக நாம் அனைவரும் அறிந்ததே. அமிதம் கடைந்த போது கடைசியாக வெளி வந்த அமிதத்தை குடத்தில் அடைத்து வைத்து நீராடிய பின் பருகலாம் என்று நினைத்திருந்தனர். அவர்களுக்கும் சோதனை காத்திருந்தது என்பதனை அப்போது அவர்கள் உணரவில்லை. ஆம் நீராடி விட்டு அமிர்தத்தைப் பருகலாம் என்று

Koviloor Digital Library

நினைத்த போது அமிர்த கலசம் காணாதது கண்டு மிக்க வருந்தினர். இந்நிலையில் இறைவனை வேண்டினர். இறைவன் அசரீரிவாக்காக விநாயகப் பெருமானை அவர்கள் முதலில் வணங்கிடாமல் இருந்ததாகவும் அதன் காரணத்தினால்,விநாயகர் கலசத்தை எடுத்து மறைத்துள்ளதாகவும் கூறியுள்ளார். இதன் பின் விநாயகரைத் அவர்கள் துதித்தார்கள் என்று கூறவும் வேண்டுமோ? விநாயகப் பெருமானிடத்து வாங்கிய அமிர்த கலசத்தை வைத்து, கரண்டியால் எடுக்கும் போது, அக்குடம் லிங்கமாக தோன்றியுள்ளது. இவ்வாறு தோன்றப்பட்ட லிங்கமே இன்று அமிர்தகடேசப் பெருமான் என்று அழைக்கப்படுகின்றது. அமிர்தத்தை எடுத்து மறைத்தமையால் விநாயகருக்கு கள்ள வாரண பிள்ளையார் என்று அழைக்கப்படுகின்றது. இதனை தமிழில் திருட்டு கணபதி என்று இன்றும் அழைக்கப்படும் வழக்கம் இருந்து வருகின்றது.

3. அறிவோம் காலசம்ஹாரமூர்த்தி

மிருகண்டு முனிவர் பிள்ளை இல்லாத காரணத்தினால், இறைவனை வேண்டி பிள்ளை பேறு கிடைக்க வேண்டினார். இறைவனும் பிள்ளை உண்டாக வரம் அளித்தார். அதே நேரத்தில் அந்த பிள்ளை 16 ஆண்டுகள் மட்டுமே வாழ்வதற்கான வரத்தினை அளித்தார். இந்த வரத்தின் மூலம் பிறந்தவரே மார்கண்டேயர். பதினாறு வயது அடைந்த மார்கண்டேயர் திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரை வழிபடும் போது எமன் அவர் உயிரை பறிப்பதற்கு பாசக் கயிற்றை வீசினார். வீசிய பாசக்கயிறு இறைவனையும் சேர்த்து இழுக்க,லிங்கத் திருமேனி வெடித்தது. எம்பெருமான் எமனைக் காலால் உதைத்து சூலத்தினால் குத்தி,எமனைச் சம்ஹாரம் செய்தார். அதுமட்டுமல்லாமல் மார்கண்டேயருக்கு என்றும் பதினாறு என்ற வரத்தினை அளித்து,தன்னுடன் அமர்த்திக் கொண்டார். எமன் ஸம்ஹா செய்யப்பட்டதால் பூமி பாரம் தாங்காத நிலையினை அடைந்தது. விபரித நிலையினை உணர்ந்த பூமாதேவி, இறைவனை வேண்டினாள். பூமாதேவியின் வேண்டுதலுக்கு இணங்கி, இறைவனும் எமனை உயிர்பித்தார். காலனை வென்றவர். காலசம்ஹார மூர்த்தி. என்று அழைக்கப்படுகின்றார்.

ஆயுள் விருத்தி ஹோமம்,மிருத்யுஞ்சய ஹோமம்,உக்கிரரத சாந்தி ஹோமம் (59 வயது பூர்த்தி) சஷ்டி தேவதா ஹோமம் (60 ஆண்டு நிறைவு விழா),பீமரத சாந்தி ஹோமம் (70 வயதில் ஆரம்பம்), சதாபிசேகம் (80 வயது நிறைவு) போன்ற வைபவங்கள் கொண்டாட இவரை வழிபட வேண்டும். இங்கு ஆவாஹனம் செய்ய வேண்டும். திருக்கடையூரில் செய்வது புண்ணியமாகும். எளிதில் மனதில் பதியும் பொருட்டு கீழுள்ள அட்டவணை 1 ல் வைபவங்களை விளக்கமாகக் காண்போம்.

அட்டவணை-1

வைபவம்	நடத்தப்படும் ஆண்டு
உக்கிரரதசாந்தி	59 வயது ஆரம்ப நிலையில்
சஷ்டியப்த பூர்த்தி	60 வயது முடிந்தவுடன்
பீமரதசாந்தி	70 வயது ஆரம்பம்
சதாபிசேகம்	80 வயது முடிந்தவுடன்

Koviloor Digital Library

பூரண அபிசேகம்,	100 வயது முடிந்தவுடன்
கனக அபிசேகம்	120 வயது முடிந்தவுடன்

4. திருக்கடையூர் ஆலயத்தில் அம்பாள் அபிராமி

சிவபெருமானை சக்தியில்லாமல் வணங்குவது உசிதம் அல்ல என்று உணர்ந்த அசுரர்கள் இறைவனை வேண்டிட, மகாவிஷ்ணுவும் 'ஆபரணங்களை வைத்து,மனோன்மனி என்ற சக்தியை நினைக்கக்கூறினார். அச்சமயம் அம்பாள் அபிராமி தோன்றியருளினாள்.

திருக்கடவூரில் அம்மன் கிழக்கு நோக்கி அருள்பாலிப்பதைக் காணலாம். இங்கு அம்பாளுக்கு கிழக்கு திசையில் கடல் அமைந்துள்ளது கடலின் அலைகள் அம்மன் திருவடிகளை தொட்டுச் செல்ல எத்தனிக்கின்றதோ என்று நமக்கு தோன்றும் வண்ணம் உள்ளது என்று கூறலாம்.

முக்குத்தி நாயகி பகவதியம்மன் பாரதத்தின் பாதம் என்று கருதப்படுகின்றதும், முக்கடலும் சந்திக்கும் கன்னியாகுமரியில் கடலினைப் பார்த்து அருள்பாலிப்பது போன்று, திருக்கடையூரில் அபிராமி அம்மன் கடலைப் பார்த்த வண்ணம் உள்ளது என்பது அனைவரும் அறியக் கூடிய செய்தியாகும்.

திருகடவூரில் எம்பெருமானும் அபிராமி அம்மையாரும் ஒருவரை ஒருவர் நேரில் பாப்பது போன்று எதிர் எதிராக அமைந்துள்ளனர். இது திருக்கோவிலின் தனி சிறப்பு என்றும் கூறலாம். அம்மையார் கொலுவீற்றிருக்கும் அழகே ஒரு தனியழகு என்ற கூறலாம். அம்பாளின் வலது மேல் திருக்கரத்தில் ஜபமாலையையும் இடது மேல் திருக்கரத்தில் செந்தாமரை மலரும், வலது கீழ்கரத்தில் அபயமும், இடது கீழ் கரத்தில் வரதமாகவும் கொண்டுள்ள காட்சி ஒரு கண் கொள்ளக் காட்சியாகும்.

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பு அந்தனர் மரபில் அவதரித்த பட்டர், அம்பாள் அபிராமியின் திருவுருவத்தை தனது இருதயத்தில் இருத்தி, அம்மையின் நினைவாக இருந்த தருணத்தில்., தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர் அந்த கோலத்தில பட்டரை கான நேரிடுகிறார். தஞ்சை தரனியை ஆளும் மன்னர் பட்டரை யார்? என்று அங்குள்ளவர்களிடம் வினவ,அவர்களும்,'இவர் ஒரு பித்தர் என்றும் நல்லொழுக்கம் அற்றவர்' என்றும் கூறியுள்ளனர். பட்டரின் நிலையை அறிய எண்ணிய சரபோஜி மன்னன்.இன்று என்ன திதி? என்று கேட்கின்றார். அத்தருணத்தில் பட்டரின் மனதில் அம்பாள் பிரகாசிக்க .இன்று பௌர்ணமி திதி என்று கூறுகின்றார். இதனைக் கேட்ட மன்னர் இன்று நிலவு வராவிட்டால் பட்டருக்கு மரண தண்டனை என்று கூறிவிட்டுச் சென்று விடுகின்றார்.

தவநிலை கலைந்த பட்டரை, அங்கிருந்தவர்கள் இன்று தை அமாவாசையாக இருக்கும் போது எங்ஙனம் நிலவு வரும். என்று பட்டரைக் கேட்கபட்டரும் மனம் வருந்தி அம்பாள் மீது பக்தி கொண்டு அக்னியை மூட்டி,கயிற்று உறி கட்டி, அதில் அமர்ந்து அம்பாள் மீது பாடத் தொடங்கினார். முதல் பாடலாக **'உதிக்கின்ற செங்கதிர்'** என்ற பாடலை தொடங்கி **'விழிக்கே அருள் உண்டு'** என்ற பாடலை கேட்ட தேவி தனது திருவுள்ளம் இறங்கினார். தனது காதில் இருந்த ஸ்ரீசக்கரதாடங்கத்தை வானில் வீசி நிலவு ஒளியினை செயற்கையாக உண்டாக்கினாள்.

காவிரி பூம்பட்டினத்தில் பூம்புகார் என்று அழைக்கப்படும் இடத்தில் இருந்த சரபோஜி மன்னர் அமாவசை யன்று நிலவு வருவதனைக் கண்டு திடுகிட்டுள்ளார்.. அச்சமயம், அம்பாள் மீது அபரித பக்தியுள்ள

Koviloor Digital Library

பட்டரை தாம் நிந்தனை செய்து அவரை நோகடிக்க வைத்து விட்டோமே என்று மிகவும் வருந்தியுள்ளார். அதோடு மட்டுமல்லாமல் அத்தருணத்திலேயே திருக்கடையூர் சென்று, பட்டரை சந்தித்து, அவரது காலில் விழுந்து வணங்கி, அவருக்கு அபிராமி பட்டர் என்ற பட்டத்தை சூட்டியுள்ளார். தஞ்சைத் தரணியில் ஒரு காணி நிலம் இருந்தாலும் , ஒரு மரக்கால் நெல் அளக்க வேண்டும் என்று கட்டளை இட்டுச் சென்றுள்ளார்.

5. காண்போம் ஆலயத்தின் உற்சவங்கள்

- அமிர்தகடேஸ்வரர் பெருமானுக்கு கார்த்கை மாதம் பிரதி வாரம் திங்கட்கிழமை யன்று 1008 சங்கு வைத்து பூஜை செய்து, அபிசேகம் செய்யப்படுகின்றது. இவ்வாறு அபிசேகம் செய்த நீர்த்தத்தை உட்கொண்டால் சகல வியாதிகளும் குணமாகும். பிரஹதீச மஹாராஜனின் பாவப்பினி நீக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.
- காலசம்ஹாரத் திருவிழா ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் 18 ஆம் நாள் நடைபெறுகின்றது. சித்திரை மாதம் மகம் நட்சத்திரத்தில் கால சம்ஹாரம் நடைபெறும்.
- அபிராமி அம்மனுக்கு ஆடி மாதம் 10 ஆம் நாள் ஆடி பூரம் நடைபெறும்
- புரட்டாசி 9 ஆம் நாள் நவராத்திரி விசேஷத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது.
- தை அமாவாசை அன்று அபிராமி பட்டரின் வரலாற்று சிறப்புடைய அமாவாசையை பௌர்ணமியாக்கும் திருவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

6. திருத்தலத்தின் நிர்மாணப் பணி

திருக்டையூர் திருத்தலத்தின் நிர்மானப்பனியில் முதலாம். இராஜராஜன்,மூன்றாம் இராஜராஜன்,சுந்தரபாண்டியன்,வீரபாண்டியன்,குலசேகரபாண்டியன்,விஜயநகர வேந்தருள். கிருஷ்ண தேவராய முக்கண்ண உடையார்,திருபுவன சக்கரவர்த்தி,ராஜராஜன்,விக்ரம சோழன்,விஜய ராஜேந்திரன்,மூன்றாம்குலோத்துங்கன,ஜடாவர்மன்,வீரபாண்டியன்,விருப்பண்ண உடையார்,கொழும்பு அரசன் போன்றவர்கள் தொடர்பு உடையவர்கள் என்று 1906 ஆம் ஆண்டின் கல்வெட்டில் குறிப்பிட்டள்ளதாக இத்தலத்தின் தல வரலாறு குறிப்பிடுகின்றது. இங்குள்ள தீர்த்தம் விசேஷக் கால தீர்த்தம்,காலனால் பூஜிக்கப்பட்ட கால காளீஸ்வரர் தீர்த்தம்,அமிர்த புஷ்கரனி தீர்த்தம்,மார்க்கண்டேய தீர்த்தம் முதலியனவாகும்.

பங்குனி மாதம் சுக்ல பட்சம் அசுவனி நட்சத்திரத்தில் திருக்கடவூர் மயானம் என்னும் ஷேத்திரத்தின் கிணறறில் நீராடினால் காசிக்கு சென்று நீராடிய பலனை அடையலாம். இத்தீர்த்தத்தினால் தினந்தோறும் திருக்கடவூர் அமிர்தகடேஸ்வருக்கும்,அபிராமி அம்பாளுக்கும் அபிசேகம் செய்யப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. இவ்வாறு அபிசேகம் செய்யப்படும் தீர்த்தத்தோடு சேர்ந்து வந்த முல்லை செடியே பிஞ்சிலம். என்று கூறப்படுகின்ற ஜாதி முல்லை. இதுவே இத்தலத்தின் தலவிருட்சமாகும்.

7. சிவன் அளிக்கும் நவகிரக பலன்

பிரதோஷ காலத்தில் சிவபெருமானை வழிபடுவது கிரஹ தோஷங்கள் நிவர்த்தியாகும். மனதில் நினைத்த காரியம் நிறைவறும் இவ்வாலயத்தில் நவகிரஹங்கள் கிடையாது. நவகிரஹங்கள் ஒன்பதும் மனிதர்களை ஆட்டிப்படைக்கும் சக்தியுள்ளது எமனோ மனித உயிரைக் கொண்டு செல்லக் கூடிய சக்தி படைத்தவன் அத்தகைய சக்திபடைத்த எமனையே இவ்வாலயத்தில் சம்ஹாரம் செய்தமையால் நவகிரகத்திற்கு இங்கு சக்தி இல்லை. ஒன்பதும் ஒன்றாகி உருவான இறைவன் அமிர்தகடேஸ்வர பெருமானே ஆவார். இவ்வாறு சிறப்புக்கள் பல பெற்ற இத்தலம் தருமபுர ஆதினத்திற்கு உட்பட்ட தலம் ஆகும்.

Koviloor Digital Library

8. மார்க்கண்டேயர் சுவாமி தனி ஆலயம்

பெருமான் : ஸ்ரீ மார்க்கண்டேயர் சுவாமி

அம்பாள் : ஸ்ரீ மருத்துவதி அம்பாள்

இடம் : திருக்கடையூர்,திரு மணல்மேடு,நாகை மாவட்டம்

மார்க்கண்டேயருக்குரிய தனி ஆலயம் திருக்கடையூருக்கு தெவ்மேற்கு திசையில் சுமார் 1 கி.மீ. தூரத்தில் உள்ள திருமணல்மேடு என்ற கிராமத்தில் அமைந்துள்ளதுமார்க்கண்டேயரின் பெற்றோர் குழந்தைப்பேறு வேண்டி, பூஜை செய்த பெரிய ஆலயமாகும். மார்கண்டேயர் தனக்கு அற்ப ஆயுசை நீக்கி,தீர்காயுசு கொடு எள் சிவ பூஜை செய்த ஆலயம். இந்த ஆலயத்தில்மார்க்கண்டேயர் தனி சன்னதியில் மூலவராக சிவபூஜை செய்த பாவனையில் இருந்து கொண்டு, வரும் பக்தர்களுக்கு தீர்காயுசை கொடுத்துக் கொண்டிருக்கின்றார். திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் அபிராமியை தரிசிக்க வரும் பக்தர்கள் திரு மணல்மேடுமார்க்கண்டேஸ்வரரையும் மருத்துவதி அம்பாளையும் தரிசனம் செய்ய வேண்டும். சன்னிதியில் லிங்கத் திருமேனியுடன் காட்சியளிப்பவர் மிருகண்டேஸ்வரர்.

கண்டேயர்சுவாமி திருத்தலத்தில் ஆதி பைரவர்,சூரியபகவான்,சந்திரன்,விநாயகர்,நால்வர்,நடராஜர் ஆகிய அருள்மிகு தெய்வங்களையும் வெளி பிரகாரத்தில் தனித் தனி சன்னிதிகளில் அருள்பாலிக்கும் தட்சினாமூர்த்தி,லிங்கோத்பவர்,பிரம்மா, விஷ்ணுதுர்கை நவக்கிரகம்,வள்ளி தேவ சேனா சன்முக சுப்பிரமனியர்,கஜலெட்சுமி பால ஆஞ்சநேயர்,சண்டிகேஸ்வரர் ஸ்ரீ பைரவர், அருள்மிகு தெய்வங்களையும் கண்டு வணங்கிடலாம்.

9. அமிர்தகடேஸ்வரர் மார்க்கண்டேயர் காலகாலேஸ்வரரின் திருத்தலங்களின் பட்டியலில் ஒரு கண்ணோட்டம்.

அமிர்தகடேஸ்வரர் அபிராமி அம்பிகையை தரிசிப்பதற்கு உகந்த திருத்தலங்களின் பட்டியலை கீழ்கண்ட அட்டவணையில் காணலாம். திருக்கடையூர் செல்ல இயலாதவர்கள் இங்கு குறிப்பிடப்படும் இடங்களில் பெருமானையும் அம்பாளையும் தரிசிக்கலாம்.

அட்டவணை -2 .

எண்	திருத்தலத்தின் பெயர்	பெருமான்	அம்பாள்	இருப்பிடம்
1.	வடதிருக்கடையூர் அபிராமி சமேத அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில்	அமிர்தகடேஸ்வரர்	அபிராமி அம்பிகை	வில்லிவாக்கம் கொளத்தூர், ஐ.கே.எம்.காலனி அருகில் சென்னை-600 049
2.	அமிர்தகடேஸ்வரர் ஆலயம்	அமிர்தகடேஸ்வரர்	அபிராமி	திருக்கடையூர்,நாகை மாவட்டம்
3.	மார்க்கண்டேஸ்வரர் கோவில்	மார்க்கண்டேஸ்வரர்	மரகதவள்ளி அம்மன்	பாரதிதாசன் தெரு 2வது தெரு, முகப்பேர்,சென்னை

Koviloor Digital Library

4.	அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில்	அமிர்தகடேஸ்வரர்	அன்னை அபிராமி	ஈஸ்வரன் கோவில் தெரு,சேலையூர்,சென்னை-600073
5.	நர்கையம்மன் ஆலயம்	அமிர்தகடேஸ்வரர்	அபிராமி அம்பாள்	காந்திஜிநகர்,குரோம்பேட்டை, சென்னை-600 044
6.	மார்க்கண்டேயர் சுவாமி ஆலயம்	மார்க்கண்டேயர் சுவாமி	மருத்துவதி அம்பாள்	திருக்கடையூர்,திரு மணல்மேடு,நாகை மாவட்டம்
7.	சிங்கார வேலர் ஆலயம்	அமிர்தகடேஸ்வரர்	அபிராமி அம்பாள்	7வது டிரஸ்ட் கிராஸ் தெரு,மந்தைவெளி,சென்னை
8.	அமிர்தகடேஸ்வரர் திருக்கோவில்	அமிர்தகடேஸ்வரா	....	வேங்கடமங்கலம்,செல்வாநகர் எஸ்ற் இராஜ இராஜேஸ்வரி நகர்,சென்னை-600 073
9.	அருள்தந்த விநாயகர் ஆலயம்	அமிர்தகடேஸ்வரர்	அபிராமி வல்லி	தாம்பரம் மேற்கு, கிஷ்கிந்தா சாலை,சென்னை-600 045
10.	கால காலேஸ்வரர் திருக்கோவில்	காலகாலேஸ்வரர்	...	கோவில்பாளையம், சர்கார் சாமக்குளம்,கோவை 641107

வாழ்க வளமுடன்

ச.பொன்ராஜ் புனிதவதி
பவித்திரா செந்திற்குமார்
ponpuni2002@gmail.com
00 44 75536 27767

இலண்டன்

06.07.08.2018

Koviloor Digital Library

திருமதி. அருளாம்பிகை குணராஜா
சைவ சமய வித்தகி, இலண்டன்

— ①

பருவமதி அதிசூரராவலர்

பிரிந்தமிழுடன் சைவநூல் வைகுன்றி
நடைதிரு திருநீறு ஆடு வள நாடு கிராவணன்
இராமர் பல மனிதர்கள் வதியிடம் புராதன
சிவாலயங்கள் நிறைந்த சிவபூமி மிக நாடு.

அன்னியர் ~~ஆட்சி~~ 450 ஆண்டு
நுகத்தினால் அடிமைப்பட்டனர். வேளாளத்தலைவர்,
நல்லூரிற், ஆங்கிலேயர் என்பாகன். [illegible]
பாடசாலைகளை நிறுவி தமிழ் தமிழ்
இலக்கியம், ஆங்கிலேயர் சரித்திரம் விஞ்ஞானம் முதலான
நூல்களை கற்பிக்கப்பட்டன.

இத்தமிழில் யாழ்ப்பாணம் நல்லூரில்
சைவ அனுட்டானம், தமிழ்பற்றுள்ள பக்தர் நாவும்
பத்தில் சைவத் தமிழின் விடிவெள்ளியாக பிறந்த
அதிசூரராவலர் ஆதாரனார், வெங்கையார் தவநிதி
பிள்ளை வயர் ஆறுமுகம். தமிழ் இலக்கண இலக்கியங்
களை நல்லாசிரியரிடம் கற்றுத் தேர்ந்தார். ஆங்கில
மொழியை வெல்லியன் மெதடிஸ் மிஷனில் கற்றார். நாளும்
கற்றுக்கொண்டிலேயே தமிழ் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.
கல்லூரி அதிபருக்கு தமிழ் கற்பித்தார். இவரின்
தமிழ் ஆங்கிலப் புலமையைக் கண்டு. பைபிளை தமிழிற்
மொழிபெயர்த்தார். தமிழ் மொழியை
மொழிபெயர்த்தார். இந்தியாவிலும் தமிழில்
மொழி பெயர்த்தார்கள். இவரது மொழிபெயர்ப்பு
சிறப்புடையதாக கருதப்பட்டது.

சிவநெறி கிளைமொழியே தமிழ்
பற்றும் சைவப் பற்றும் நிறைந்திருந்தது. கிறிஸ்து
தான் சிறுவயதுமுதலே சைவத்துக்கு மாறாக வாய்
வில்லேயே எனச் சிந்தித்து சிந்தித்து
வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சியில் ஈடுபட்டார்.
சிறு பகுதிக் பெருங்கவலை கொண்டார். சைவத்துக்
தமிழ் சைவப் பண்பாடுகளோடு சிறிதளவும் தப்பாமலிருக்
கத்தக்கதாக விருப்பமாக ஏகாதிபத்திய கூட்டிக்கணக்கு.

Koviloor Digital Library

சைவ சமயத்தை அந்நாள் சமயம் என்றும் அதனைக் கடைப்பிடிப்பவர் அந்நாளிகள் என்றும் குறிப்பிட்டு கடைப்பிடிப்பவர்களுக்குப் பல்வேறு இன்னல்களும் துன்பங்களும் ஆட்சியாளர்களால் கொடுக்கப் பட்ட காலம். சைவ சமய சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம் அணிவோர் நாளுக்கு நாளாகக் கருதப்பட்ட காலம். பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்பட்டது. அப்பாடசாலையில் கல்வி கற்க விரும்புவோர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றிய தாகவேண்டும். தாங்கள் நாமம் பெற்று பெயர்மாற்றம் செய்து கொள்ள வேண்டும். அந்தஸ்தினைப் பொறுத்து சிலருக்கு விதிவிலக்கு கிடைத்தது. நாவலர் சமயம் மாறவில்லை. மதம் மாறியவர்களுக்கு அரசு உத்தியோகம், கம்பனி உயர்வு, வரிச் சலுகை, வெளிநாட்டு பயணம் பரிசு கிடைத்த பல சலுகை வழங்கப் பட்டன.

கிறிஸ்தவப் பாதிரிமார்கள் பாடசாலைகள் தேவாலயம், போதனை, பிரசங்கம் நிலமானியம் துண்டுப்பிரசுரங்கள், நூல்கள் நிலமானியம் அரசின் முக்கிய ஆதரவோடு கிறிஸ்தவ சமயத்தை யாழ்ப்பாணத்தில் முதன்மையாகப் பரப்ப முற்பட்டனர் என்றுக் கொள்ள காலம். யாழ்ப்பாணத்தில் பெருட்டன் நாடுமிகுந்தவர் கடைபிடித்த சைவ சமய கொள்கை விளக்கமாக கொள்ள விரதம், பழிதீர்த்தம், சைவக்கடவுளர்களைக் கேலிப்படுத்தியும், தூஷித்தும் பாதிரிமார்களுடன் ஆட்சியாளர்களும் கருவியாக நடத்திய காலம்.

சைவ சமய கிரிய வழிபாடும் அறுபடாணங்களும் இன்றியமையாய், சடையப்பன்பாடி சிதைவுற்று, தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு

Koviloor Digital Library

(3)

மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் காலச்சார்பு தமிழ் பாரம்பரிய விழுமியங்களைக் கைவிட வேண்டிய நிர்க்கட்டான காலம்.

இக்காலகட்டத்தில் நாவலர் தாம் ஆசிரியப் பணி புரிந்த காலத்திலேயே சைவ சமயம் மிளிர்கை நேர் திருட்டுத் தின்னணைப் பள்ளியை ஆரம்பித்தார். நாவலர் 1849ல் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். ஆசிரியர் ஓராண்டைத் தாண்டினார். பணவசதி இல்லை. பிரபு அரிசி திட்டம் ஆரம்பித்து சாதனை செய்வந்த பணத்தில் ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுத்தார். சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்தில் பாடம் திருட்டு சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவினார். 1847ல் ஆண்டு வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் ஒவ்வொரு வெள்ளியும் பிரசங்கம் செய்தார். பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், சமய அனுட்டானங்கள் என்று பல விடயங்களை பிரசங்கம் செய்து மக்களிடம் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

உரைநடையே அக்கால மக்களின் தமிழ் அறிவுக்குப் பொருத்தமானது என உணர்ந்து பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் வசனநடையில் வெளியிட்டார். இதனைப் படித்த ~~[illegible]~~ நாடு, திருத்திய பண்புரைகள் வசனநடை கைவந்த வல்லாளன் நாமம் கொண்டனர். சூத்திரம், சொன்னூல் வெண்பா, நன்னெறி, சிதறை, திருக்குறள் (பரிமேலழகர் உரை) நைஷதம், சூத்திர விருத்தி பாலபாடம் 1-2, திருவாசகம், திருக்கோவையார், பெரிய புராணம், கந்தபுராணம், கந்தரனுபூதி, தனிகைப்புராணம் போன்ற பல நூல்களை வெளியிட்டார்.

Koviloor Digital Library

நாவலர் பதிப்பில் பிழை இருக்காது என்பது எல்லோர் நினைவு. நாவலரின் பதிப்பென்றால் பிழை இல்லாத புடம் செய்தன்ன பதிப்பு என்பது காலம் அளித்த தீர்ப்பு. தால் பதிப்பில் அவர் தொண்டு நிகரற்றது. விளக்கு வெளிச்சம் வசதியாக இல்லாத வசதிகள் குறைந்த காலத்தில் மிக சிரமப்பட்டு பல பழைய நூல்களை வெளியிட்டார்.

புராண படனம் கோயில், மடங்களில் பயன் சொல்லி படனத்தும் வழக்கத்தை ஏற்படுத்தினார். இதனால் கந்தபுராணக் கலாசாரம் வளர்ந்தது. இராமலிங்கர் பாடல்கள், பிற பாடல் கோயில்களில் பாடுவதைத் தடுத்து கந்தபுராணம் பாடும் வழக்கத்தை ஏற்படுத்தினார். எல்லாக் கோயில்களிலும் பாடும் மரபு வந்தது. நாவலர் திருமுறைகளில் திருவாசகத்தில் ஈடுபாடுண்டு பற்று பக்தி உடையவர். அவர் வெளியிட்ட தைவ நிலையங்கள், பாலபாடம் இவற்றில் ஓதுவிக்கப்பட்டு இருக்கிறது.

அன்னியராட்சியில் அழிக்கப்பட்ட திருஞான சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரத்தை மீளுருவாக்கி கிருக்கிறது. அதைப் புனருத்தாரணம் செய்ய வழிகாட்டினார். பல அரசு, முனிவர்களோடு தொடர்புடை நகுலேஸ்வரத்தையும் புனரமைக்க வழி காட்டினார்.

வயதில் இளைஞர் ஆன P. இராமநாதனை தனது பேச்சாற்றலால் சபையில் வெற்றிவேற்று பாராளுமன்றம் செல்ல தூண்டியவர் இவர்தான்.

கோயில் பூசை வேதாகம முறையில் நடக்கவேண்டும் அந்தணர் ஒழுக்கசீலராக இருக்கவேண்டும். கோயில் சொத்து கொயிலுக்கே

Koviloor Digital Library

உ

சிவமயம் – பொதிகாசலம்

ஸ்ரீ கருணை விநாயகர் ஸஹாயம்

மங்கை பாகனை நோக்கி, முன்
மொழிந்தன வருடம்
தங்கு மாதவம் புரிதலும்,
தழல் நிறக் கடவுள்
அங்கு வந்து, நின் கருத்தினை
முடித்தும் என்று அகன்றான்
கங்கை யைத்தொழ, காலம்ஐ
யாயிரம் கழித்தான். – கம்பராமாயணம்.

முன்னுரை

அன்புடையீர் வணக்கம் !

பிள்ளையார்பட்டி 'கற்பகத் திருவுரு' 'கருணைக் கடல்' 'சைவ சமயக் காவலர்' 'உலகப் பொக்கிஷம்' குருநாதர் ஸ்ரீ அண்ணா அவர்களின் ஆசியினாலும், பொதிகாசலபதியாகிய ஸ்ரீ அகத்தீசரின் பரம கருணையினாலும் 'பொக்கிஷம்' எனும் ஸமய ஆன்மீகச் செய்திகள் என்ற நூல் விளைந்திருக்கின்றது.

இந்நூலுக்கு, ஆசியுரை நல்கிய ஸ்ரீகுருநாதர் அவர்கள், பெருங்குளம் ஸ்ரீமஹா சன்னிதானம் அவர்களின் திருக்கைச் சீட்டும் (அருளாசியுரை) மற்றுமுளமாரத்தந்த ஆதிசைவர்கள் பலர் இன்னும் நாமுகமறியாப் பெரியோர்கள் அனைவருக்கும், நமது உடலுயிர் தலைவராகிய ஸ்ரீ அகத்தீசர் வழித்தோன்றலாய (அகஸ்திய கோத்ரம்) காஞ்சி வாழ் மாமா சிவஸ்ரீ ராஜப்பா சிவாச்சார்யர் (இவர்களது அன்பு ஸ்ரீ அகத்தீசர் காட்டும் கருணை போன்றே தென்றலென வீசும் !) அன்னாரின் ஆசியுரையும், அருகில் இருந்து பலநாள் பழகிக் கழித்தது போல அன்பினராய் வழங்கியருளிய மாயவரம் ஸ்ரீ அண்ணா அவர்களது வாழ்த்துரை திருப்பரங்குன்றம் ஸ்ரீ அண்ணா அவர்களது ஆசியுரையும், உடன் தோன்றாத் துணைவர் (சென்னை, வேத ஆகம கலா சாலை – நிறுவனர்) ஸ்ரீ அண்ணா அவர்களது வாழ்த்தும் கட்டுரையும், பெற்றயாம் பிறவிப்பயன் பெற்றோம். அத்துணை கோடி உள்ளங்களுக்கும் நமது நமஸ்காரங்கள், வந்தனங்கள், நன்றிகள்.

இந்நூல் குறித்த செய்திகளை வேதஆகமாதி சாஸ்திரங்களிலும், "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்" ஸ்ரீ ஞான சம்பந்த சுவாமி முதலான அடியார் பெருமக்களும் மற்றும் பல வித்வான்களும் தமது திருவாக்குகளால் அருளிச் செய்துள்ளனர் ; புதிதாக நாம் ஒன்றும் செய்வதற்கில்லை ; ஆராய்வதற்கில்லை ; அவர்கள் கொடுத்த செய்திகளைத் தேடித் தேடி, தாங்களது திருமுன்னர் வைக்க முனைந்தோம் ! அது மட்டுமே நமது வேலை ! அருள் பரப்பும் அகத்தீசர் திருவருள் வேலை !!

நமது பொக்கிஷப் பணியை "முன் தோன்றிய மூதுரையார்" முன்னமே தந்திருந்தார். அவர் காஞ்சி வாழ் 'சிவாகம ஞான ஸாகரம்' சிவஸ்ரீ ராஜப்பா சிவாசாரியார் ஆவார் அவர்களது கட்டுரை ஒன்றே போதும் அரிய 'பொக்கிஷ'மாம். பிறிதொன்றும் செய்யத் தேவையில்லை. அவர் வழிவழியாய்த் தொடர்ச்செய்தியினைத்தர முயல்வோம் ! இனி நூல் குறித்தாம் !!

'பொக்கிஷம்' எனும் பெயர் ஸ்ரீ குருநாதர் குறித்தே தோன்றியது. ஸமய –(வேளை, சைவம்) ஆன்மீக – (ஆன்மாலயப்பட) என்றதால், பொக்கிஷம் எனும் ஸமய ஆன்மீகச் செய்திகள் என்று பெயர் கிடைத்தது. வாழிய திருவருள் !

Koviloor Digital Library

இந்நூலில் காணப்படுகிற செய்திக் கருத்துச் சுருக்கம்:

விபூதி, ருத்ராக்ஷம், வில்வம், சிவபூசை, பஞ்சாக்ஷரம் என்பது பற்றிய பாடல் கருத்தே உள்ளது; மற்றவை உள்ளே கண்டு கொள்க!

ஆசாரியருக்குப் பணிவிடை செய்யும் பலன் ;

"ஆதரேணது சுச்ருஷா மோக்ஷாய பவதித்ருவம் !"

– அசிந்திய விசுவசாதாக்யாகமம்

(சுச்ருஷர் – நோய் நீக்கும் வைத்திய முனிவர், அக்ஞான நோய் நீக்கும் குருவிற்கும் இந்தச் சொல்லை ஏற்றிச் சொன்னதைக் காண்க)

பாசமகற்றும் தேசிகற்குப் பரிவால் என்றும் பணியதனை
தேசமுறவே புரிந்தோர்க்கு நிகழும் பரம சிவயோகம்
ஆசை பெருக்கும் போகவிதம் அடையக்கருதின் அவர்குரவன்
வாசமலர்ச் சேவடியிணைகள் மகிழ்ந்து பாங்கால் வணங்குகவே.

– சிவபுண்ணியத் தெளிவு.

அவ்வுபதேச முன்னத் தமைவுற வுணர்ந்தோனாகிச்
செவ்விய குரவன் வாக்கைச் சிந்தித்தேயிறும்பூ தெய்தி
வவ்விமும்முறை சூழ்ந்தேத்தி வணங்கினன் மனைவியோடு
முய்விகை தெரிந்த வன்பனொரு மொழி நுவல லுற்றான்.

– திருக்காளத்திப் புராணம்.

தக்கினை வேள்வி தவம் கல்வி இந்நான்கும்
முப்பால் ஒழுக்கினால் காத்து உய்க்க । உய்யாக்கால்
எப்பாலும் ஆகா கெடும். – ஆசாரக் கோவை, 3.

குருவிற்கு தட்சிணை கொடுத்தலும், யாகம் செய்தலும், தவஞ் செய்தலும், கல்வியும் என்ற இந்நான்கினையும் மூன்று வகைப்பட விதியாலே பாதுகாத்து நடாத்துக. நடாத்தாக்கால் எவ்வுலகத்தின் கண்ணும் பயனாகாவாய் இந்நான்கும் கெடும்.

கற்றோர் சிறப்பு

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் – மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு. – ஔவை, மூதுரை

"வித்வத்வஞ்ச ந்ருபத்வஞ்ச
நைவதுல்யம் கதாசன ।
ஸ்வதேசே பூஜ்யதே ராஜா
வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே ॥" – நீதிச்சுலோகம்

Koviloor Digital Library

தேவதா ரூபதாரித்வாது சிஷ்யாநுக்ரஹகாரணாது ।

கருணாமய மூர்த்தித்வாது தேசிக : கதித : ப்ரியே ॥

பிரகாசமே (சிவம்) வடிவமாயுடைய தாலும்,சிஷ்யர்களின் அனுக்கிரஹத்திற்கு (அருள் செய்தல்) காரணமானதாலும், கருணையே தேஹமானதாலும் குருவானவர் 'தேசிகர்' என அழைக்கப்படுகின்றனர். – குரு தத்வ விமர்சம். இவ்வாறு ஸ்ரீ குருவின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. விபூதி தரும் பசுவைத் தானம் செய்வது பற்றியும் திருநீற்றின் மேன்மையும் காணலாம்:

விபூதியளிக்கும் அப்பசுக்களைத் தானம் செய்வது விசேஷம் என திருப்பரங்குன்றம் ஸ்தல புராணம் கூறுகின்றது.

ப்ரஸாத மகரோத்யத்ர பரமாத்மா சிவஸ்ஸ்வயம் ।

தத்ர ஸ்தலே மஹாபுண்யே சிவப்ரீத்யை பஹுச்ருதாநு ॥

ப்ரம்மணாநு ஸ்தாப யாசுத்வம் ஸம்பத் பிரபிசோபிதை : ।

க்ருஹைஸ்ஸஸ்ய ஸம்ருத்தைச்ச கேதாரை : கோதநாதிபி : ॥

எந்த ஸ்தலத்தில் (உமக்கு) சிவபிரான் அருள் செய்கின்றாரோ ஆங்கே அழகான வீடுகளைக் கட்டி, பயிர் நிறைந்த வயல்கள், பசுக்கள், தனங்கள் முதலிய செல்வங்களுடன் சேர்த்து சிவத்திற்கு அர்ப்பித்துப் பிறகு அந்தணர்களுக்கு தானம் செய்க என்றது. – ஸத்யகிரி மாஹாத்மியம்.

பஸ்மஸ்நானம் ஜலஸ்நாநாத் கோடி புண்ய குணம் பவேத் ।

யதிருத்தூளனேநைவஸ் நாயாந்நித்ய முதங்முக : ॥ – காமிகாகமம்.

விபூதிக்குளியல் ஜலஸ்நானத்தை விட கோடி மடங்குப் புண்ணியந் தரும்; சன்னியாசி வடக்கு நோக்கி உத்தூளன ஸ்நானம் செய்யக்கடவர் என்றது.

"ஆசகல் கற்பாதி திருநீற்றினைச் சங்கிதையால்

அல்லா நீற்றினையைங் கலையாடு சங்கிதையாற்" – சிவபூசை அந்தாதி.

த்ரிபுண்ட்ரம் தாரயேந்நித்யம் புக்தி முக்தி பலப்ரதம் । – சூதஸம்ஹிதை

மூன்று கோடுகளாய் தினமும் விபூதி அணிவோர் இகபர நலங்களை அடைந்து கொள்ளுவர்.

லாசாரத்தினோ டைந்திடஞ்சிரமுத

லீசானாதி கொண்டிட்டு நீறடைவினி

லத்தகு மற்றையங்க மெங்கணுஞ்

சத்தியோ சாதந் தன்னினீற ணிந்தபின். – அனுட்டான அகவல்.

ருத்திராக்ஷம் அணிவது, சிவபூஜை செய்வது மற்றும் வில்வத்தின் சிறப்பு ஆகியவற்றை காணலாம் :

விநாயகர் விபூதி ருத்ராக்ஷம் அணிந்து சிவபூஜை செய்தது :

இறைவளர் வனமுகம் இறைஞ்சி – ஆகம

முறைசிவ கங்கையின் மூழ்கி வெண்பொடி

நிறைதரு கண்டிகை புனைந்து நின்மலன்

அறைமலர்க் கோயிலை வணங்கி நண்ணினான். – திருப்புனவாயில் புராணம்.

Koviloor Digital Library

"பூதி ருத்ராக்ஷோ ருத்ரஜபோ பில்வார்ச்சன

நைவேத்ய போஜனம்" - சிவரஹஸ்யம்

சிவ தர்மங்கள் மொத்தம் ஐந்து ஆகும் ;

1. விபூதி அணிதல், 2. ருத்ராக்ஷம் அணிதல், 3. ருத்ரஜபம் செய்தல்,

4. வில்வார்ச்சனை புரிதல், 5. சிவ நிவேதனப் பொருளை உண்ணுதல் என்பனவாகும்.

ருத்திராக்கம் தரிக்கலாகா வேளை பற்றி :

பவமரண வகந்தனிலுந் சலமோசிக்கப்

படும்போதும் மகளிர் பயோதரம் புனர்வேளையிலும்

அவமருவு மற்றையவா சௌசமுறும் போதும்

அக்கவடந் தொட்டுட லினணிதல் விதியன்றாம்

உவமையிலா வக்கவடம க்காலதணிந்தா

லோக்கிங் மாயுக்குறையும் மந்திரத்தாற் செவியிற்

சிவனை யருச்சனை புரியுங் கரங்கள் தமிலணிந்த

சீர்மணிக்குத் தோடமில்லைச் செறி வடங்களாகா : 95 - ஆசௌச தீபிகை.

பிறப்புத் தீட்டு, இறப்புத் தீட்டு, மலசலநீக்கம், பெண்போகம், வேறு வகையால் தீட்டுங்காலங்களிலும் ருத்திராக்க மாலை தரிக்கக் கூடாது. மீறில் ஆயுளுக்கு இடையூறு என்றும் ; உபவீதம், காதில் உள்ளது, சிவனைப் பூசிக்கும் கரங்களில் அணிகின்ற ருத்ராக்கத்திற்கு தோஷமில்லை என்றார்.

"தருபலசுகந்த சந்தன மறுகு

வில்ல மலரொடு வியன் கொளாபரணம்

நல்ல போற்றுகின்மன நயப்பொடு சார்த்தி" - சிவபூசை அகவல்

(வில்ல - வில்வம்)

வில்வ பத்திர பலன்

வில்வமே புனிதனாகும்;

விளம்பு வில்வத்தின் மிக்காம்

வில்வமுள் சக்தி யாகும்;

வில்வத்தின் கோடு வேதம்:

வில்வவேர் பதினோர் கோடி

வியனுருத்திரரேயாகும்;

வில்வ மேத்து நர்க்கேதேவர்

மெய் வடிவாகு மன்றே. 74 - புட்பபலன்

Koviloor Digital Library

ஒப்பறும் பஞ்சினீடுயர் மலைத் தீயெனச்
செப்புமச் செயலினோர் செனன கோடியினுறும்
எப்பெரும் பாவமும் ஈறுகண்டிடுதல் செய்
யப்பெருந்தன்மைய தஞ்செழுத்தாகுமே.

– பஞ்சாக்கரச் சருக்கம், திருநல்லூர்ப் புராணம்

புண்ணியத்தலங்கள் தூய
நதிநதம் புகலி லிங்கம்
நண்ணரும் வாவி யாவும்
நன்றறி புலவரானோ
ரண்ணலந் தீர்த்த மென்ப
ராங்கவை தம்மிலீசன்
றண்ணறு ந்துளவோன் வைகுந்
தாருகாவன நன்றாமால்.

– அதிவீரராம பாண்டியர் இயற்றிய கூர்ம புராணம்.

ஞானி இலக்கணம்

அமலவானருளிய வேதாகமங்கள் புராண
மங்கம் வேதாங்க முதலான வெல்லாமுணர்ந்து
சம(ல) சமையம் பொருணூல் கீழ்ப்பட மேற்படுமோர்
தலைவனுயிர் பாசவிதங் கண்டருள் சற்குருவால்
விமலவருள் பெற்றதுவாய் விளைந்த சிவானந்த
மேவு நிசானந்தமுமே மிகப்பருகிப் பருகிக்
கமல மலரடி யிணைக்கீழ் கலந்திரண்டற் றோங்குங்
கதிரவனை ஞானியெனக் கழறிடு மாகமமே !

– சமாதிலிங்கப்ரதிட்டை விளக்கம்.

விபூதியானது குருபஸ்மா, லகுபஸ்மா என இருவகைப்படும். இவற்றுள் குருபஸ்மா சிவபெருமானே ஆகும். லகுபஸ்மா அவரது அருட்திரு மேனியிற் பூத்த திருநீறே ஆகுமாம். திருப்போரூர் சிதம்பர சுவாமிகளும் "ஆதிபகவன் ஞானவடிவழறில் பூத்து நித்தியமாய்" என்று அருளிச் செய்தார். தமிழ் வேதமும் "நீறு பூத்தமேனியனே" எனப்பகரும் ; இத்தகு உயர்ந்த திருநீற்றை தமது மேனியில் இருந்து எடுத்து மஹாவிஷ்ணுவின் நெற்றியில் பூசினார். (யாருக்குக் கிடைக்கும் இத்தகைய பாக்கியம்) இச்செய்தியை,

Koviloor Digital Library

"முன்னமொரு பிரளயத்து நான்முகனா
தீயரொடுங்க முராரி யான்மேற்
றன்னகந்தை மிகுந்திருப்ப வவநுதலிற்
சங்கரன் வெண்ணீறு சாத்த" – கடம்பவன புராணம்.

நல்லது செய்யாவிட்டாலும் தீயது செய்யாது வாழ வேண்டும் என்பதை ;

கணிச்சிக் கூர்ம் படைக்கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங்காலை இரங்குவீர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் லோம்புமின் ! – நரிவெரூத்தலையார்.

கூரிய சூலாயுதத்தை உடைய கொடியவர் கட்டி இழுத்துச் செல்லும்போது கலங்குவீர்களே ! (அவ்விடர் வரவேண்டாம்) ஆகவே, நல்லது செய்யாவிட்டாலும் தீமைகள் செய்யாதீர்கள் என்று கூறி நன்னெறிப்படுத்துகின்றார். ஆகவே, உரியதை உரியவாறு செய்க.

இத்தகு தொகுப்பு நூலை சுமார் 10 வருடங்களுக்கு முன்பே வெளியிட எண்ணியிருந்தோம் ; காலம் இப்பொழுதே கைகூடிற்று. இதனைச் செய்யத் தூண்டிய சிவஸ்ரீ K. கணேஷ் குருக்கள் லண்டன்) அவர்களை உலகம் பாராட்டும் ! அவர் தந்தையார் நமக்கு ஒரு வகையில் பெரிய மாமனார் ; அவர் பெயரும் நமக்கு மிக ஈர்ப்பு ; எமது தந்தைக்கும் அப்பெயர் ; நம்மைப் பேணி வளர்த்துச் சொல்லுலகிலும், எழுத்துலகிலும் அருளிவரும் பேராசானாகியவர் இவரும் ஒருவர் ; அவர் எமது தாய் மாமா சிவஸ்ரீ S. கைலாச பட்டர் அவர்கள். வானில் இருந்து இவர் வழங்கும் அருள்மழை எப்போதும் எமைக் காக்கட்டும்!!

மிக மிகக் குறுகிய காலத்தில் (ஒரு வாரத்தில்) இப்படியொரு நூல் விளைவது குருவருளும் திருவருளும் இன்றிச் சாத்தியமில்லை ; தவிர, கடும் உழைப்பு, அன்பு, நேர்மை, உண்மை, ஒத்தாசை, இன்சொல், முடிக்கும் திறன் எனப் பன்முகம் கொண்ட திரு. K. ஜனார்த்தனன் (கோமதி பிரிண்டர்ஸ் உரிமையாளர், அம்பை) அவர்களும் பெருங்காரணமாகும் ; நம்மோடு உதவி நல்கிய நல் இதயங்கள் திண்டுக்கல் – N. சரவண குருக்கள், அம்பை – R. ஸ்ரீராம் சிவம் ஆகியோருக்குமாக நன்றிகள் பல சொல்லி, அவசர காலத்தில் அன்பொன்றே காரணமாய்க் கொண்டு நூல் செய்தலினால் குற்றம் சில (Proof முதலானவைகள்) நேருவதற்கு வாய்ப்பு உண்டு ; எப்போதும் நமது நூலில் குற்றங்களைந்து குணங்கொள்ளும் பெரியோர்கள் மறக்காது இம்முறையும் பொறுப்பார்களென வேண்டி 'உலகப் பொக்கிஷ'மான ஸ்ரீ குருநாதர் திருவடித் தாமரையிலே இந்நூலைச் சேர்ப்பித்து எண்ணிலடங்கா நமஸ்காரங்களையும் சேர்ப்பிக்கின்றோம்.

Koviloor Digital Library

ஆறெஞ் சுவையி லாத்தி
லமர்ந்திருந் தாலும் ரூபம்
கூறரி தான மின்னாள்
அகத்திடை யிருக்கத் தானும்
மாறிலாச் செல்வத் தாலும்
வழங்கவு மிவைகள் மூன்றும்
பேறு(தா) னனுப விக்க
உத்தம(ம்) பேச வேண்டில் !

– தரும நீதி நெறிகள்.

என்றது, அறுசுவைகளுடனே கூடின பதார்த்தமும் தன் கிருகத்திலே அஷ்டயிசுவரியமும் இருந்தாலும் அதைத்தான் பொசிக்கிறதும், அதிர்ஷ்டம் வருகிறதும், ஐசுவரியமுண்டாகிறதும், தானங் கொடுக்கிறதும், பூருவ சென்மாந்தரத்திலே, அவரவர் செய்த பூசாபலமல்லாமல், மத்தப்படி அனுபவிக்க வாரா தென்றவாறு.

இங்ஙனம்,
'சிவாகமரத்னம்' 'சிவாகமச் செல்வர்'
'சிவாசாரியார் செஞ்சுடர்' 'அகஸ்த்யம்'
சிவஸ்ரீ **K. செல்லமணி பட்டர்**
ஸ்ரீ அகஸ்திய குடீரம்
48/44, வடக்கு மாட வீதி, **விக்கிரமசிங்கபுரம்** – 627 425.
Cell : 86084 52931, 99521 57265

Koviloor Digital Library

துணை புரிந்த நூல்கள்

1. விநாயகர் இலக்கியங்கள்
2. காசியில் கோயில்கள்
3. புஷ்பாஞ்சலி
4. தில்லை நடராஜப் பெருமானின் ஆறுகால அபிடேக விளக்கம்
5. பேரூப்புராணம்
6. காஞ்சி புராணம்
7. திருநல்லூர்ப் புராணம்
8. கடம்பவன புராணம்
9. திருக்காளத்திப் புராணம்
10. மாயூரப் புராணம்
11. சைவ பூஷண சந்திரிகை
12. சைவ சமய விளக்கம்
13. சிவாகமத்தில் திருவிழாக்கள்
14. சிவ புண்ணியங்கள்
15. மூன்று உபதேசங்கள்
16. சிவாகம செய்தி விளக்கம்
17. சிவ புண்ணியத் தெளிவு
18. சிவாலய ஸேவாக்ரமம்
19. ஸத்யகிரி மாஹாத்ம்யம்
20. சிவதருமோத்தரம்
21. கூர்ம புராணம்
22. ஸ்ரீ சிவசைல மாஹாத்ம்யம்
23. ஸ்ரீ தாம்ர பர்ணீ மாஹாத்ம்யம்
24. பூதி மாஹாத்ம்யம்
25. சைவ சமய சரபம்
26. குருதத்வ விமர்சம்
27. திருப்புகழ் விரிவுரை
28. சிவபூசை யந்தாதி
29. சிவபூசை அகவல், அனுட்டான அகவல்
30. ஆசௌச தீபிகை
31. உருத்திராக்க மகிமை
32. விபூதி, ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம்
33. தரணி போற்றும் தாமிரபரணி
34. செப்பறைத் தல வரலாறு
35. ஹிந்து தர்மம்

35-A. சிவ பூஜாஸ்தவம்

Koviloor Digital Library

36. ஹிந்து சமயச் சின்னங்கள்
37. புட்ப பலன்
38. பெருந்திரட்டு
39. சைவ சமய நோன்பு விளக்கம்
40. ஆசாரக் கோவை
41. திருவள்ளுவ மாலை
42. ப்ரதோஷ வரலாறும், வழிபாடும்
43. நேபாள் ருத்ராக்ஷா
44. ருத்ராக்ஷம்
45. திருநீற்றின் தெய்வநலம்
46. திருநீறும் சிவமணியும்
47. சிவனின் கண்கள் ருத்ராக்ஷம்
48. சமாதி லிங்க ப்ரதிட்டை விளக்கம்
49. கொடிக்கவி
50. தருமநீதி நெறிகள்
51. கம்பனும் சிவனும்
52. பாபநாச தலபுராணம்

இன்னும் பலப்பலவாகும்.

Koviloor Digital Library

பொருளடக்கம்

வரிசை எண்	பொருள்	பக்க எண்
1	கணபதி காய கல்ப மூலிகை	1
2	விநாயகரின் அறுபடை வீடு	1
3	காசியில் உள்ள விநாயகர் வழிபாட்டுத் தலங்கள்	2
4	காசியில் உள்ள ஆதித்யர் வழிபாட்டுத் தலங்கள்	2
5	கோள்களால் ப்ரதிட்டை செய்யப்பட்ட சிவன் கோயில்கள்	2
6	ரிஷிகளால் ப்ரதிட்டை செய்யப்பட்ட சிவலிங்கங்கள்	2
7	காசி காண்டத்தில் (94வது அத்யாயம்) குறிப்பிட்ட சிவன் கோயில்கள்	3
8	100வது அத்யாயத்தில் குறிப்பிட்ட சிவன் கோயில்கள்	3
9	காசியில் உள்ள பிறசிவன் கோயில்கள்	4
10	காசியில் உள்ள நவதுர்க்கா கோயில்கள்	4
11	காசியில் உள்ள நவகௌரி கோயில்கள்	4
12	காசியில் உள்ள விஷ்ணு கோயில்கள்	4
13	காசியில் உள்ள பைரவர் கோயில்கள்	5
14	காசியில் உள்ள பல்வேறு பீடங்கள்	5
15	காசியில் ஜ்யோதிர்லிங்கங்களாக வழிபடப் பெறும் கோயில்கள்	5
16	காசியில் உள்ள சிறப்புப் பயன்களைத் தரும் தலங்கள்	6
17	நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்ட சிவத்தலங்கள் பஞ்ச ஆசனத் தலங்கள்	6
18	வாலி வழிபட்ட தலங்கள்	6
19	சிவகைலாயங்கள்	6
20	நவலிங்க புரங்கள்	7
21	தசவீரட்டத் தலங்கள்	7
22	பஞ்ச பீடத்தலங்கள்	7
23	பஞ்ச குரோசத் தலங்கள்	7
24	பஞ்ச பூதத் தலங்கள்	8
25	நவ சமுத்திரத் தலங்கள்	8
26	நவக்ரஹங்கள் வழிபாடு செய்த நவகைலாயத் தலங்கள்	8
27	தாம்ரபர்ணியின் தோழமை நதிகள்	8
28	பொருநையின் புண்ணிய தீர்த்தங்கள்	8

Koviloor Digital Library

வரிசை எண்	பொருள்	பக்க எண்
29	விபூதி வரலாறு	12
30	விபூதியின் சிறப்பு	12
31	பாற்கடலில் தோன்றிய அரிய வகைப் பசுக்கள்	13
32	பசு உடம்பில் வசிக்கும் வானவர்கள்	13
33	ஐ வகைப் பசுக்களின் நிறங்களாவன	14
34	சாணம் ஏற்கும் முறையாவது	14
35	விபூதி வகைகளும், சாணம் தரும் பசு விபரமும்	15
36	சாணம் பெறும்முன் பசுவை வணங்க வேண்டுமென்பது	16
	சாணங் கொள்ளக் கால நியதி	17
37	விபூதியை எதில் வைத்துக் கொள்ளுதல் நன்மை	17
38	விபூதியில் நறுமணப் பொருட்கள் சேர்க்க வேண்டுமென்பது	
39	பஞ்சாங்க பூஷணத்துட் சிறந்தன சிவ சின்னங்களே	
40	தீக்ஷாங்கம் சிவ சின்னகங்ளே	
41	விபூதியின் பெயர் விசேடம்	35
42	விபூதி ஸம்ஸ்கார விதி	35
43	விபூதியின் சிறப்புப் பொருள்	36
44	திரிபுண்டர அதி தேவதைகள்	36
45	திரிபுண்டர அளவு	37
46	திருநீற்றின் அளவு	37
47	விபூதி வாங்கும் விதி	37
48	தரிக்க கூடாத விபூதிகள்	38
49	விபூதி, யாருக்கு எதைக் கொள்வது நலம்	38
50	இறைவன் திருநீறு அணிந்து மகிழ்ந்தாடுதல்	38
51	இறைவன் திருநீறு அணிவதன் காரணம்	38
52	திருநீற்றுப் பதிகம்	39
53	சடையின் பெருமை	41
54	தில்லை நடராசப் பெருமானது திருஉருவத் தத்துவம்	41
55	நடராஜப் பெருமானின் ஆறு கால அபிஷேகம் பற்றி பாடல்	42
56	சோம சூத்ர ப்ரதக்ஷிண விதி	43

Koviloor Digital Library

வரிசை எண்	பொருள்	பக்க எண்
57	உத்திராக்க விசிட்டம்	45
58	உருத்திராக்க வரலாறு	45
59	உருத்திராக்க உபநிடதங்கள்	46
60	உருத்திராக்க சாபால உபநிடதம்	46
61	அக்ஷமாலிகா உபநிடதம்	46
62	உருத்திராக்க மகிமை	47
63	கண்டிகைமணி விழுங்குதல்	47
64	உருத்திராக்கம் தோன்றிய காலம்	48
65	உருத்திராக்க தானம்	48
66	உருத்திராக்க சோதனை	49
67	உருத்ராக்கத்தின் பெயர்களும் காரணமும்	49
68	உருத்திராக்க வருணம்	50
69	நான்கு வர்ணத்தார்க்கும் உரிய மணி	50
70	உருத்திராக்க பதிகம்	51
71	ஸ்ரீ உருத்திராக்க கவசம்	51
72	உருத்திராக்க வகை	51
73	உருத்திராக்க அளவு	51
74	உருத்திராக்க சொரூப இலக்கணம்	52
75	பார்த்திவ உருத்திராக்க மணி	52
76	ஆக்னேய மணி அல்லது பொற்கண்டிகை	52
77	தரிக்கும் உறுப்புக்களும் முக எண்களும்	53
78	சந்தி தாரணம்	53
79	உருத்திராக்க உபவீதம்	53
80	ஆயிரமணிந்தவர் அரனெனப்படுவர்	54
81	தரியாமையால் வரும் குற்றம்	54
82	தரிக்கும் காலங்கள்	54
83	தரிக்கலாகாத காலங்கள்	55
84	உருத்திராக்க தாரண முறை	55

Koviloor Digital Library

வரிசை எண்	பொருள்	பக்க எண்
85	தரிக்குந் தானங்கள்	55
86	உருத்திராக்க பூசை	55
87	தரிக்கும் நியமமும் மந்திரமும்	56
88	உருத்திராக்க தாரண ப்ரீதி	56
89	உருத்திராக்க அதி தேவதைகள்	57
90	அவற்றின் பலன்	57
91	செப மணி அளவு	60
92	செப நாடி	60
93	திக்கின் பலன்	60
94	செப ஆசனங்களும் பலமும்	61
95	செப மாலை பிரதிட்டை	61
96	செப மாலை வகையும் பலமும்	62
97	உருத்திராக்க மாலையின் பயன்	62
98	செபிக்கும் வகையால் வரும் பலம்	63
99	செபிக்கும் இடங்கள்	63
100	செபிக்கக் கூடாத இடங்கள்	64
101	உருத்திராக்கங்களுள் பூசைக்குச் சிறந்தன	64
102	உருத்திராக்க ஸம்ஸ்காரம்	64
103	அதனைக் குருவிடம் பெறும் விதி	
104	உருத்திராக்க மாலா தாரணம்	
105	நாயகமணி இலக்கனம்	
106	உருத்திராக்க தாரண உண்மை	
107	பெண்களும் அணியலாம்	65
108	ருத்ராட்ச வைத்தியம்	
109	சிவாலய தரிசன விதி	67
110	வில்வஞ் சாற்றுவதன் பயன்	71
111	வில்வ தளிர்	72
112	வில்வத்தின் மருத்துவப் பயன்	72
113	சிவ புண்ணியங்கள்	74

Koviloor Digital Library

வரிசை எண்	பொருள்	பக்க எண்
114	சிவாலயங்களில் அலகிடுதலும் மெழுக்கிடுதலும்	75
115	திரு நந்தனவனம் அமைத்து புஷ்ப பணி செய்தல்	75
116	சிவாலயங்களில் திருவிளக்கிடும் தூபமிடுதல்	77
117	சிவ பூஜை செய்தலும் செய்வோர்க்கு உதவுதலும்	79
118	சிவாலயங்களில் கீதம் இசைத்தல்	80
119	சிவாலயம் எடுத்தல், பழைய ஆலயம் புதுக்குதல்	83
120	குருபூஜை கொண்டாடுதல்	85
121	குரு வழிபாடு செய்தல்	87
122	சிவ விரதங்கள் மேற்கொள்ளல்	88
123	சிவ தீக்ஷை ஏற்றுக் கொள்ளல் தக்கவரை ஏற்றுக் கொள்ளச் செய்தல்	91
124	நாற்பாதங்களில் நின்று ஒழுகல்	92
125	வேத சிவாகம திருமுறைகள் சாஸ்த்திரங்களைப் படிப்பித்தல்	94
126	அபிஷேகத் திரவியங்களும் அதன் பயன்களும்	97

Koviloor Digital Library

பீமரதசாந்தி விழா நாயகருடைய சகோதரர்,
அம்பாசமுத்திரம் சிவஸ்ரீ ராஜாமணி பட்டர் அவர்களது மணிவிழா

பீமரத சாந்தி நாயகரின் திருமகன் உபநயன விழாவும், திருமணமும்
திருவண்ணாமலை, குன்றக்குடி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அடிகளார் அவர்களது விஜயமும்

Koviloor Digital Library

ருத்திராக்ஷ முகங்களும் வகைகளும்





Koviloor Digital Library

உ

சிவமயம் - பொதிகாசலம்

ஸ்ரீ கருணை விநாயகர் ஸஹாயம்

கணபதி காய கற்ப மூலிகை

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. - மூதுரை ஔவையார்

இப்பாடலில் காயகல்ப மூலிகைகள் குறிப்பாகச் சொல்லப்பட்டதாகக் கூறுவர். பூ - தாமரைப்பூ, மேனி - குப்பை மேனி, தும்பி - தும்பைக் கீரை, கையான் - கரிசலாங்கண்ணி, பாதம் - செருப்படை இலை.

தாமரைப் பூவில் தாமிரச் சத்தும், கரிசலாங்கண்ணியில் அயச்சத்தும், செருப்படையில் ஈயச்சத்தும் உண்டு.

தாமரை இதழ்கள்	-	840 கிராம்
குப்பை மேனி	-	700 கிராம்
தும்பைக் கீரை	-	560 கிராம்
கரிசலாங்கண்ணி	-	300 கிராம்
செருப்படை	-	280 கிராம்

இவற்றை நிழலில் உலர்த்தித் தனித்தனியாக இடித்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 5 கிராம் வீதம் தேன் கலந்து சாப்பிட்டு, காய்ச்சிய பால் 175 மில்லி சாப்பிட வேண்டும். தொடர்ந்து காலை, மாலை 1 மண்டலம் சாப்பிட்டால் மேனி நுடங்காது. கிழத்தன்மை அடையார். கபரோகங்கள் வராது. நல்ல பயன்களைப் பெறலாம். பாற்சாதம் மட்டுமே சாப்பிடவும். பத்தியம் காப்பது மிக முக்கியம்.

விநாயகரின் அறுபடை வீடு

முருகனைப் போலவே விநாயகருக்கும் அறுபடை வீடு உண்டு.

1. திருவண்ணாமலைக் கோயில் நுழைவு வாயில் வடக்குப் பார்த்த - வினை தீர்க்கும் விநாயகர்.
2. திருமுதுகுன்றம் - கோயில் நுழைவுவாயில் ஆழத்துப் பிள்ளையார்.
3. திருக்கடவூர் - கள்ள வாரணர்.
4. மதுரை மீனாட்சி அம்மன் சந்நிதி நுழைவு மண்டபத்தில் - சித்தி விநாயகர்
5. காசி துண்டி விநாயகர்
6. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார்.

இதைச் சொல்லும் வெண்பா :

கூறு திருவருணை கூம்பா முதுகுன்றம்
வீறு திருக்கடவூர் விண்முட்டும்
ஏறு தமிழ் மாமதுரை காசி மருவு
திரு நாரையூர் வேழமுகற்கு அறுபடைவீடு.

Koviloor Digital Library

காசியில் உள்ள ஸ்ரீ விநாயகர் வழிபாட்டுத் தலங்கள்

1. அபய விநாயகர், 2. அர்க் விநாயகர், 3. ஆஷா விநாயகர், 4. அவிமுக்த விநாயகர், 5. பீம் சண்டி விநாயகர், 6. சதுர்தண்ட விநாயகர், 7 சிந்தாமணி விநாயகர், 8. சித்ரகண்ட விநாயகர், 9. தண்ட்ஹஸ்த் விநாயகர், 10. தேஹ்லி விநாயகர், 11. துண்டி விநாயகர், 12. துர்க விநாயகர், 13. துர்முக விநாயகர், 14. த்வார விநாயகர், 15. த்விமுக விநாயகர், 16. ஏகதந்த விநாயகர், 17. கஜகர்ண விநாயகர், 18. கஜவிநாயகர், 19. கணநாத விநாயகர், 20. ஞானவிநாயகர், 21. ஹேரம்ப விநாயகர், 22. ஜ்யேஷ்ட விநாயகர், 23. கால விநாயகர், 24. காலிப்ரிய விநாயகர், 25. கர்வ விநாயகர், 26. கூனிடக்ஷ் விநாயகர், 27. கூஷ்மாண்ட விநாயகர், 28. கூட்தண்ட் விநாயகர், 29. கூஷிப்ர ப்ரஸாத விநாயகர், 30. லம்போதர விநாயகர், 31. மங்கள விநாயகர், 32. மணிகர்ணிக விநாயகர், 33. மித்ர விநாயகர், 34. மோத விநாயகர், 35. மோதக ப்ரிய விநாயகர், 36. முண்ட விநாயகர், 37. நாகேச விநாயகர், 38. பாஸ்பாணி விநாயகர், 39. பஞ்சாஸ்ய விநாயகர், 40. பிச்சாண்டில் விநாயகர், 41. ப்ரமோத விநாயகர், 42. ப்ரணவ விநாயகர், 43. ராஜபுத்ர விநாயகர், 44. சூல்கண்ட் விநாயகர், 45. ஸ்ருஷ்டி விநாயகர், 46. ஸித்தி விநாயகர், 47. ஸிங்துண்ட் விநாயகர், 48. ஸ்தூல் தண்ட் விநாயகர், 49. சுமுக விநாயகர், 50. த்ரிமுக விநாயகர், 51. உத்தண்ட் முண்ட் விநாயகர், 52. உத்தண்ட விநாயகர், 53. வக்ர துண்ட விநாயகர், 54. வரத விநாயகர், 55. விக்ன ராஜ விநாயகர், 56. விகடத்வஜ விநாயகர், 57. யக்ஷவிநாயகர்.

காசியில் உள்ள ஸ்ரீ ஆதித்யர் (சூரியன்) வழிபாட்டுத் தலங்கள்

1. அருண ஆதித்யர், 2. த்ரௌபத ஆதித்யர், 3. கங்கா ஆதித்யர், 4. கேசவ ஆதித்யர், 5. காகோல்க் ஆதித்யர், 6. லோலார்க் ஆதித்யர், 7. மயூக் ஆதித்யர், 8. ஸாம்ப ஆதித்யர், 9. உத்தராக் ஆதித்யர், 10. விமல ஆதித்யர், 11. வ்ருத்த ஆதித்யர், 12. யம ஆதித்யர்.

காசியில் உள்ள முக்கியமான சிவன் கோயில்கள்

1. ஆத்ம வீரேச்வரர், 2. தர்மேச்வரர், 3. கேதாரேச்வரர், 4. க்ருத்திவாஸேச்வரர், 5. ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ், 6. ஓங்காரேச்வரர், 7. விச்வேச்வரர் (விச்வநாதர்), 8. வ்ருத்த காலேச்வரர்.

கோள்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

1. கபஸ்தீஸ்வரர், 2. சந்த்ரேச்வரர், 3. மங்கலேச்வரர், 4. புதேச்வரர், 5. ப்ருஹஸ்பதீச்வரர், 6. சுக்ரேச்வரர், 7. சனீச்வரர், 8. நக்ஷத்ரேச்வரர்

ரிஷிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவன் கோயில்கள்

1. அகஸ்த்யேச்வரர், 2. அங்கீரயேச்வரர், 3. புலஹேச்வரர், 4. புலஸ்தீச்வரர், 5. லைங்கீச்வரர், 6. பஞ்சாக்ஷேச்வரர், 7. பிங்கலேச்வரர், 8. திலபர்ணேச்வரர்.

Koviloor Digital Library

காசி காண்டம் அத்யாயம் 59ல் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

1. அமரேச்வரர், 2. பீமேச்வரர், 3. பூர்ப்புவஸ்ஸுவ லிங்கம், 4. ஈசானேச்வரர், 5. ஹரேச்வரர், 6. ஜடீச்வரர் (பாடலேச்வரர்), 7. கோடீச்வரர் (கோடி லிங்கம்), 8. நீலகண்டேச்வரர், 9. ருத்ரேச்வரர், 10. ஸஹஸ்ராக்ஷேச்வரர், 11. சூல்டங்கேச்வரர், 12. சூக்ஷ்மேச்வரர், 13. த்ரயம்பகேச்வரர், 14. த்ரிபுராந்தகேச்வரர், 15. த்ரிபுரேச்வரர், 16. விமலேச்வரர், 17. வ்ருஷேச்வரர்

காசி காண்டத்தின் 94வது அத்யாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில்கள்

1. அமிர்தேச்வரர், 2. ஜ்யோதிரூபேச்வரர், 3. கருணேச்வரர், 4. மோக்ஷத்வாரேச்வரர், 5. ஸ்வர்கத்வாரேச்வரர்.

காசி கண்டத்தின் 97வது அத்யாயத்தில் குறிப்பிட்டுள்ள சிவன் கோயில்கள்

1. ஆபஸ்தம்பேச்வரர், 2. ஆஷாதேச்வரர், 3. அவதூதேச்வரர், 4. பத்ரேச்வரர், 5. பூதேச்வரர், 6. சக்ரேச்வரர், 7. சதுர்முகேச்வரர், 8. தக்ஷேச்வரர், 9. தந்வந்த ரேச்வரர், 10. த்வாரேச்வரர், 11. கணேச்வரர் (ராமேச்வரர்), 12. கௌதமேச்வரர், 13. கோப்ரக்ஷேச்வரர், 14. ஹஸ்திபாலேச்வரர், 15. ஜம்புகேச்வரர், 16. ஜனகேச்வரர், 17. ஜராஸந்தேச்வரர், 18. ஜ்வரஹரேச்வரர், 19. கச்சேஸ்வரர், 20. கஹோலேச்வரர், 21. காலேச்வரர், 22. கர்தமேச்வரர், 23. கரவீரேச்வரர், 24. கூஷ்மாண்டேச்வரர், 25. க்ருஷ்ணேச்வரர், 26. மதாலேச்வரர், 27. மஹாகாலேச்வரர், 28. மஹாலக்ஷ்மீச்வரர், 29. மஹாஸித்தேச்வரர், 30. மால்தீச்வரர், 31. ம்ருத்யுஞ்ஜயேச்வரர், 32. முசுகுந்தேச்வரர், 33. நலகூபேச்வரர், 34. நிகும்பேச்வரர், 35. பஞ்சகங்கேச்வரர், 36. பவனேச்வரர், 37. பித்ரேச்வரர், 38. ப்ரஹ்லாதேச்வரர், 39. ஸமுத்ரேச்வரர், 40. ஸித்தேச்வரர், 41. ஷட்காலேச்வரர், 42. உபசாந்தேச்வரர், 43. வருண ஸங்கமேச்வரர், 44. வேதேச்வரர், 45. விபண்டேச்வரர், 46. வித்யேச்வரர், 47. விசாலாக்ஷேச்வரர், 48. யாக்ஞவல்கீச்வரர்.

காசி கண்டத்தின் 100வது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள சிவன் கோயில்கள்

1. ஆதிவராஹேச்வரர், 2. அக்னித்ருவேச்வரர், . ஹரிகேசேச்வரர், 4. ஹட்கேச்வரர், 5. ஹிரண்ய கர்பேச்வரர், 6. கச்யபேச்வரர், 7. மத்யமேச்வரர், 8. நாகேச்வரர், 9. பார்வதேச்வரர், 10. ஸோமேச்வரர், 11. ஸ்ரவீனேச்வரர்.

Koviloor Digital Library

காசியில் உள்ள பிற சிவன் கோயில்கள்

1. ஆதிமஹாதேவர், 2. அக்னீச்வரர், 3. அச்வினி குமாரேச்வரர், 4. அவிமுக்தேச்வரர், 5. பால்மீகேச்வர், 6. பாகீரதேச்வரர், 7. ப்ரஹ்மேச்வரர், 8. சண்டீச்வரர், 9. சித்ரங்கதேச்வரர், 10. தண்டபாணி, 11. தசாச்வமேதேச்வரர், 12. த்ருவேச்வரர், 13. திவோதாஸேச்வரர், 14. கங்கேச்வரர், 15. கருடேச்வரர், 16. ஞானேச்வரர், 17. ஹரிசந்த்ரேச்வரர், 18. ஜய்கீஷேச்வரர், 19. ஜ்யேஷ்டேச்வரர், 20. காமேச்வரர், 21. கந்துகேச்வரர், 22. கபர்தீச்வரர், 23. கார்கோடக நாகேச்வரர், 24. குபேரேச்வரர், 25. மார்க்கண்டேச்வரர், 26. நர்மதேச்வரர், 27. பஞ்சக்ரோஷா கோயில், 28. பார்வதீச்வரர், 29. பசுபதீச்வரர், 30. பிதாமஹேச்வரர், 31. ப்ரயாகேச்வரர், 32. ரத்னேச்வரர், 33. ஸதீச்வரர், 34. சைலேச்வரர், 35. ச்ருதீஸ்வரர், 36. ஸித்தி அஷ்டகேச்வரர், 37. த்ரிலோசனேச்வரர், 38. த்ரிஸந்த்யேச்வரர், 39. வருணேச்வரர், 40. வாசுகீச்வரர், 41. விச்வகர்மேச்வரர், 42. வ்யாக்ரேச்வரர்.

காசியில் உள்ள தேவி கோயில்கள் நவதுர்கா கோயில்கள்

1. சைலபுத்ரீ, 2. ப்ரஹ்மசாரிணீ, 3. சித்ரகண்டா, 4. துர்காதேவி, 5. ஸ்கந்தமாதா, 6. காத்யாயணி, 7. காலராத்ரீ, 8. அன்னபூர்ணாதேவி, 9. ஸித்தேச்வரீ

காசியில் உள்ள நவகௌரி கோயில்கள்

1. முக நிர்மாலிகா கௌரி, 2. ஜ்யேஷ்ட கௌரி, 3. ஸௌபாக்ய கௌரி, 4. ச்ருங்கார கௌரி, 5. விசாலாக்ஷீ கௌரி, 6. லலிதா கௌரி, 7. பவானி கௌரி, 8. மங்கள கௌரி, 9. மஹாலக்ஷ்மி கௌரி

காசியில் உள்ள பிறதேவி கோயில்கள்

1. பண்டிதேவி, 2. சாமுண்டி, 3. சண்டீதேவி, 4. சர்மமுண்டா, 5. ஹயகண்டி, 6. காமாக்யா, 7. மணிகர்ணிகாதேவி, 8. ஸங்கடதேவி, 9. ஸித்தலக்ஷ்மீ, 10. த்ரைலோக்ய சுந்தரீ, 11. த்ரிபுரா பைரவி, 12. வாராஹி, 13. விந்த்யா, 14. விச்வபுஜகௌரி

காசியில் உள்ள விஷ்ணு கோயில்கள்

1. பிந்துமாதவர், 2. ஆதிகேசவர், 3. ஆதித்யகேசவர், 4. அதியுக்ர நரஸிம்ஹர், 5. பீஷ்மகேசவர், 6. ப்ருகுகேசவர், 7. கங்காகேசவர், 8. கோபிகோவிந்தர், 9. ஞானகேசவர், 10. ஞானமாதவர், 11. ஹயக்ரீவகேசவர், 12. கோலாஹல நரசிம்மர், 13. லக்ஷ்மீ நரஸிம்ஹர், 14. மஹாபல நரஸிம்ஹர், 15. நரநாராயணர், 16. நாரதகேசவர், 17. ப்ரசண்ட நரஸிம்மர், 18. ப்ரஹ்லாத கேசவர், 19. ப்ரயாக மாதவர், 20. ச்வேத மாதவர், 21. தாம்ர மாதவர், 22. த்ரிபுவனகேசவர், 23. த்ரிவிக்ரமர், 24. வைகுண்ட மாதவர், 25. வாமன கேசவர், 26. வீர மாதவர், 27. விதர நரஸிம்ஹர், 28. வீடங்க நரஸிம்மர், 29. யக்ஞ வராஹர்.

Koviloor Digital Library

காசியில் உள்ள பைரவர் கோயில்கள்

1. அஸிடங்க் பைரவர், 2. பீஷண் (பூத) பைரவர், 3. சண்ட பைரவர், 4. கால பைரவர், 5. கபால பைரவர், 6. க்ரோதன பைரவர், 7. ருரு பைரவர், 8. சம்ஹார பைரவர், 9. உன்மத்த பைரவர்.

காசியில் உள்ள பல்வேறு பீடங்கள்

காசி காண்டத்தின் 79-ம் அத்யாயம் காசியில் உள்ள பல்வேறு பீடங்களையும், சக்தி பீடங்களையும் பற்றிக் கூறுகின்றது. காசியில் உள்ள ஆற்றல் வாய்ந்த சக்தி பீடங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. விரஜ பீடம் - த்ரிலோசன், 2. மஹா பீடம் - ஆதிமஹாதேவர்,
3. ஆதிகேசவ பீடம் - ஆதிகேசவர்,
4. மங்கள பீடம் - மங்கள கௌரீ கோயில் பகுதி & பிந்து மாதவர் கோயில் பகுதி
5. பஞ்சமுத்ரா மஹா பீடம் - ஆத்ம வீரேச்வரர், காத்யாயனி தேவீ, ஸங்கடேதேவீ
6. ஸித்தேச்வரீ பீடம் - ஸித்தேச்வரீ தேவீ, சந்த்ரேச்வரர்
7. மஹாலக்ஷ்மீ பீடம் - மஹாலக்ஷ்மீ குண்டம், லக்ஷ்மீ குண்டம் பகுதி
8. தர்மபீடம் - தர்மேச்வரர், விச்வபுஜ கௌரீ, விசாலாக்ஷி கௌரி மற்றுமுள்ள கோயில்கள்.

இவை தவிர காசியில் உள்ள பண்டிதர்கள் சில இடங்களைப் பீடங்களாகக் குறிப்பிடுகின்றனர் அவைகள் :

1. பீஷ்மசண்டி பீடம் - சண்டீதேவீ, சதர்பஜார்
2. துர்காபீடம் - துர்காதேவீ & அங்குள்ள பிறதெய்வங்களும்
3. காளீ பீடம் - காலராத்ரீ கோயில்
4. காமாக்யா பீடம் - காமாக்யா (காமாக்ஷி) கோயில்
5. க்ருத்திவாஸ பீடம் - க்ருத்தி வாஸேச்வரர்

காசியில் ஜ்யோதிர் லிங்கங்களாக வழிபடப்படும் கோயில்கள்

1. ஸோம்நாத் (ஸௌராஷ்ட்ரா) ஸோமேச்வரர், மன்மந்திர் காட்
2. மல்லிகார்ஜுனா (ஸ்ரீசைலம்) த்ரபுராந்தகேச்வரர், ஸிக்ரா
3. மஹாகாலேச்வரர் (உஜ்ஜயினி) மஹாகாலேச்வரர், தாராநகர்
4. ஓங்காரேச்வரர் (இந்தூர் அருகில்) ஓங்காரேச்வரர், மச்சோதரீ பின்புறம்
5. பைஜ்நாத் பார்லி - (மஹாராஷ்ட்ரா, பீஹார்) பைஜ்நாதேச்வரர், காமாச்சா
6. பீமா சங்கரர் - (நாஸிக், பூர்ணா சாலை) பீஷ்மேச்வரர், காசி விச்வநாதர் கோயில்
7. ராமேச்வரர் - (மஹாராஷ்ட்ரா, த்வாரகா) கணேச்வரர் (ராமேச்வரர்) மன்மந்திர்காட்
8. நாகேச்வரர் - (மஹாராஷ்ட்ரா போன்ஸ்லா காட் / த்வாரகா) நாகேச்வரர்
9. விச்வேச்வரர் (வாராணஸி) விச்வேச்வரர், வாராணஸி
10. த்ரயம்பகேச்வரர் (நாஸிக்) த்ரயம்பகேச்வரர், கோடவ்லியா
11. கேதாரேச்வரர் (உத்தர்கண்ட்) கோதாரேச்வரர், கேதார்காட்
12. க்ருஷ்ணேச்வரர் - (எல்லோரா மஹாராஷ்ட்ரா) க்ருஷ்ணேச்வரர், காமாக்யாதேவி கோயில்

Koviloor Digital Library

இவையனைத்தும் எண்ணற்ற தேவ, முனிவர் முதலானோர் பூஜித்த தலங்கள் ஆகும். இதுபற்றி அனேக சிறப்புப் பயன்களும் சொல்லப்பட்டுள்ளது. மேற்படி தலங்கள் விபரம் காசி காண்டத்தில் உள்ளவையாம்.

சிறப்புப் பயன்களைத் தரும் தலங்கள் (காசியில் உள்ளவை)

1. தொழுநோய், தோல் தொடர்பான நோய்கள் நீங்க - ஸாம்ப ஆதித்யர், லோலார்க்.
2. திருமணத் தடை அகல - மங்கல கௌரீ, முகநிர் மாலிகா
3. செல்வமும், வளமும் பெற - மஹா லக்ஷ்மீ கௌரீ
4. மனோ பலம் பெற - த்ரிபுரா பைரவீ, சந்த்தேச்வரர்
5. கல்வியில் சிறக்க - மஹாஸித்தேச்வரர், வித்யேச்வரர்
6. ஜ்வரம் அகல - ஜ்வர ஹரேச்வரர், ஜராஸந்தேச்வரர்
7. போட்டிகளில் வெற்றிபெற - வாராஹீ
8. கால ஸர்ப்பதோஷம் அகல - நாகேச்வரர், வாசுகீச்வரர், கார்கோடகர்
9. அகால மரண பயம் நீங்க - ம்ருத்யுஞ்ஜய், அம்ருதேச்வரர்
10. முன் கோபங்கள் அகல - கபர்தீச்வரர்

நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்ட சிவத்தலங்கள்

பஞ்ச ஆசனத் தலங்கள்

1. ஏர்வாடி - திருவழுதீசர் கோயில்
2. களக்காடு - சத்யவாகீசர் கோயில்
3. நான்குனேரி - திருநாகேச்வரர் கோயில்
4. விஜய நாராயணம் - மனோன்மனீசர் கோயில்
5. செண்பகராமநல்லூர் - ராமலிங்கர் கோயில்

வாலி வழிபட்ட தலங்கள்

திருவாலீச்வரம் - திருவாலீச்வரர் கோயில்
கீழப்பாவூர் - திருவாலீச்வரர் கோயில்
தென்காசி - வாலியன்பத்தை - திருவாலீச்வரர் கோயில்

சிவகைலாயங்கள் (ஆதிகைலாயம்)

1. பிரமதேசம் - கைலாசநாதர் கோயில்
2. அரியநாயகிபுரம் - கைலாசநாதர் கோயில்
3. திருநெல்வேலி - தென்கயிலாயநாதர் (நெல்லையப்பர் கோயில்)
4. கீழநத்தம் (மேலூர்) - கைலாசநாதர் கோயில்
5. முறப்பநாடு - கைலாசநாதர் கோயில்
6. ஸ்ரீவைகுண்டம் - கைலாசநாதர் கோயில்
7. தென்திருப்பேரை - கைலாசநாதர் கோயில்
8. சேந்தபூமங்கலம் - கைலாசநாதர் கோயில்
9. கங்கை கொண்டான் - கைலாசநாதர் கோயில்

Koviloor Digital Library

நவலிங்க புரங்கள்

வல்லநாடு – திருமூலநாதர் கோயில்
காந்தீச்வரம் – ஏகாந்தலிங்கர் கோயில்
புறையூர் – அயனாதீச்வரர் கோயில்
தெற்குகாரசேரி – குலசேகரமுடையார் கோயில்
கொங்கராயங்குறிச்சி – வீரமார்த்தாண்டேச்வரர் கோயில்
புதுக்குடி – வடநக்க நாயனார் கோயில்
வெள்ளூர் – நடுநக்க நாயனார் கோயில்
மனவளராயநத்தம் – தென்நக்க நாயனார் கோயில் (நக்கல் – சிரித்தல்)

தசவீரட்டத் தலங்கள் (மேற்கு பார்த்த சிவாலயம்)

1. சிவசைலம் – சிவசைலப்பர் கோயில் – பக்ததலம்
2. வழுதூர் – அக்னீச்வரர் கோயில் – மகேசதலம்
3. கோடகநல்லூர் – அவிமுக்தீச்வரர் கோயில் – பிராணலிங்க தலம்
4. சிங்கிகுளம் – கைலாசநாதர் கோயில் – ஞானலிங்க தலம்
5. மேலநத்தம் – அக்னீச்வரர் கோயில் – சரண தலம்
6. ராஜவல்லிபுரம் – அக்னீச்வரர் கோயில் – சகாயதலம்
7. தென்மலை – திருப்பாத்தீச்வரமுடையார் கோயில் – பிரசாதிதலம்
8. அங்கமங்கலம் – நரசிங்க ஈச்வர முடையார் கோயில் – கிரியாலிங்கதலம்
9. காயல்பட்டிணம் – மெய்கண்டேச்வரர் கோயில் – சம்பத்தலம்
10. திற்பரப்பு – மஹாதேவர் கோயில் – பஞ்சாக்கரத் தலம்

பஞ்ச பீடத்தலங்கள்

1. கூர்ம பீடம் – பிரமதேசம்
2. பத்ம பீடம் – தென்காசி
3. குமரி பீடம் – கன்னியாக்குமரி
4. சக்ர பீடம் – குற்றாலம்
5. காந்தி பீடம் – திருநெல்வேலி

பஞ்ச குரோச தலங்கள்

சிவசைலம் – சிவசைலப்பர் கோயில்
ஆழ்வார்குறிச்சி – வன்னீச்வரர் கோயில்
கடையம் – வில்வநாதர் கோயில்
திருப்புடைமருதூர் – நாறும்பூநாதர் கோயில்
பாபநாசம் – பாபநாசர் கோயில்

Koviloor Digital Library

பஞ்ச பூதத் தலங்கள்

1. நிலம் - சங்கரன்கோயில் (சங்கரலிங்கேச்வர சுவாமி)
2. அப்பு - தாருகாபுரம், பிணக்கறுத்த மஹாதேவர் கோயில்
3. நெருப்பு - கரிவலம்வந்தநல்லூர், பால்வண்ணநாதர் கோயில்
4. வாயு - தென்மலை, திருப்பாத்தீச்வரமுடையார் கோயில்
5. ஆகாயம் - தேவதானம் - நச்சாடைதவிர்த்து அருளிய சுவாமி

நவசமுத்திரத் தலங்கள் (சமுத்திரம் என்ற பெயர் பெற்ற ஊர்கள்)

1. அம்பாசமுத்திரம், 2. ரவணசமுத்திரம், 3. வீராசமுத்திரம், 4. அரங்கசமுத்திரம்,
5. தளபதிசமுத்திரம், 6. வாலசமுத்திரம், 7. கோபாலசமுத்திரம்,
8. வடமலைசமுத்திரம் (பத்மனேரி), 9. ரத்னகாராசமுத்திரம் (திருச்செந்தூர் அருகே)

நவக்ரஹங்கள் வழிபாடு செய்த நவகைலாயத் தலங்கள் (வேறு)

1. பாபநாசம் - சூரியன், 2. சேரன்மகாதேவி - சந்திரன், கோடகநல்லூர் - செவ்வாய்,
4. குன்னத்தூர் - இராகு, 5. முறப்பநாடு - குரு, 6. ஸ்ரீவைகுண்டம் - சனி,
7. தென்திருப்பேரை - புதன், 8. ராஜபதி - கேது, 9. சேர்ந்தபூமங்கலம் - சுக்கிரன்,
(5, 6, 7, 8, 9 ஆகிய தலங்கள் தூத்துக்குடி மாவட்டமாகும் மற்றது நெல்லை மாவட்டம்)

தாமிரபரணி தோழமை நதிகள்

மஹாமேருவின் புத்திரிகளும் தாம்ரபரணீ தேவியின் தோழிகளுமான பத்துகன்னியர்களும் பொதிகை மலையில் இன்றும் தீர்த்தரூபமாக உள்ளனர்.

1. மணிமுத்தா - மணிமுத்தாறு, 2. கோதை - கோதை ஆறு,
3. சித்ரா நதி - குற்றாலம் (மெயின்) அருவி, 4.சியாமா நதி - பச்சை ஆறு (ஆருத்ரா)
5. ரமாநதி - ராமநதி, 6. பாலா - பாலாறு (ஆரியங்காவு அருகில்),
7. அருணை - அடவி நயினார் அணை, 8. கடனை - சிவசைலம் மலையில் உற்பத்தி,
9. கடகை - சிவசைலம் மேல்மலையில் உற்பத்தி, 10. பூர்ணா பூர்ணை - காரையாறு

- (தாம்பபர்ணீ மஹாத்மியம்)

பொருநையின் புண்ணிய தீர்த்தங்கள்

தாமிரபரணி நதி, மலையில் தோன்றி, தரையில் ஓடிக் கடலில் கலக்கின்றவரை, அதன் இரு கரைகளிலும், கிளை நதிகளின் கரைகளிலும், மலைமேலும் உள்ள புண்ணிய தீர்த்தங்கள்.

முதலில் மலைமேல் உள்ளவை

1.	சீதர தீர்த்தம்	:	திருமால் திருமகளுடன் நீராடிச் சிவனை வழிபட்டார்
2.	அகத்திய தீர்த்தம்	:	அகத்தியர் நீராடிச் சிவபெருமானை வழிபட்டார்
3.	வாமன தீர்த்தம்	:	வைகுந்தன் வாமன அவதாரம் எடுத்த காலத்தில் நீராடிச் சிவனைத் துதித்தார்
4.	சக்கர தீர்த்தம்	:	

Koviloor Digital Library

5. பாவன தீர்த்தம் :
6. விக்னேஸ்வர தீர்த்தம் : விக்னேஸ்வரர் நீராடி விமலனை வணங்கினார்
7. நரசிங்க தீர்த்தம் : நாராயணன் நரசிம்ம அவதாரம் எடுத்த காலத்தில் நீராடி நம்பனை வணங்கினார்
8. ஆனந்த தீர்த்தம் : நாகலோகத்து அனந்தன் நீராடியது
9. வாண தீர்த்தம் : வாணன் வந்து நீராடி வாண லிங்கேஸ்வரரை வணங்கினான்
10. பாஞ்சால தீர்த்தம் :
11. சுதர்சன தீர்த்தம் :
12. வராக தீர்த்தம் : திருமால் வராக அவதாரம் எடுத்த காலத்தில் நீராடிச் சிவனை வணங்கினார்
13. தாமிரபரணித் தீர்த்தம் : தாமிரபரணியே ஏற்படுத்திய தீர்த்தம், இங்கு இறைவன் பெயர் தாமிரபரணீசர்.

மேலும் முனி தீர்த்தம், கன்னியா தீர்த்தம், வருண தீர்த்தம், துர்கா தீர்த்தம், பாவநாசத் தீர்த்தம் என்று ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. இவை ஐந்தும் "பஞ்ச தீர்த்தங்கள்"

ஆக இவை பதினெட்டும் மலைமேல் உள்ள தீர்த்தங்கள்

இனித் தரையில் உள்ள தீர்த்தங்களைப் பார்ப்போம்.

1. முக்கூடல் தீர்த்தம் - பாவநாசம்
2. இந்திர கீல தீர்த்தம் - பாவநாசம்
3. தேவி தீர்த்தம் - பாவநாசம்
4. தீப தீர்த்தம் - பாவநாசம்
5. காசிப தீர்த்தம் - அம்பை
6. சாலா தீர்த்தம் - அம்பை
7. வலஞ்சுழி தீர்த்தம் - ஊர்க்காடு
8. முனி தீர்த்தம் - ஊர்க்காடு
9. பிரம தீர்த்தம் - பிரமதேசம்
10. சர்வ தீர்த்தம் - வழுதூர்
11. தட்சண தீர்த்தம் - இடைகால்
12. கண்ணுவ தீர்த்தம் - கல்லிடைக்குறிச்சி
13. பிருகு தீர்த்தம் - கல்லிடைக்குறிச்சி
14. விஸ்வ தீர்த்தம் - திருவாலீஸ்வரம்
15. சக்கர தீர்த்தம் - வெள்ளங்குழி
16. மாண்டவிய தீர்த்தம் - அத்தாளநல்லூர் (கரிகாத்த புரி)
17. சித்த தீர்த்தம் - அத்தாளநல்லூர் (கரிகாத்த புரி)
18. கஜேந்திர மோட்ச தீர்த்தம் - அத்தாளநல்லூர் (கரிகாத்த புரி)
19. பிரமதண்ட தீர்த்தம் - திருப்புடைமருதூர்
20. மகர தீர்த்தம் - திருப்புடைமருதூர்
21. தர்மாதரன் தீர்த்தம் - திருப்புடைமருதூர்
22. கஜேந்திர தீர்த்தம் - வீரவநல்லூர்

Koviloor Digital Library

23. பிரமலிங்க தீர்த்தம் - வீரவநல்லூர்
24. அகத்தியர் தீர்த்தம் - வீரவநல்லூர்
25. மாதவ தீர்த்தம் - வீரவநல்லூர்
26. விசுமுக தீர்த்தம் - வீரவநல்லூர்
27. வருண தீர்த்தம் - வீரவநல்லூர்
28. கோதம தீர்த்தம் - வீரவநல்லூர்
29. கோல தீர்த்தம் - வீரவநல்லூர்
30. வேத தீர்த்தம் - வீரவநல்லூர்
31. திருவளர் தீர்த்தம் - வீரவநல்லூர்
32. வேதனும் மாலும் விதித்த தீர்த்தம் - வீரவநல்லூர்
33. விஷ்ணு தீர்த்தம் - கூனியூர்
34. சோம தீர்த்தம் - கூனியூர்
35. துர்க்கா தீர்த்தம் - காருகுறிச்சி
36. இருடி தீர்த்தம் - காருகுறிச்சி
37. வியாச தீர்த்தம் - சேரன்மகாதேவி
38. மார்க்கண்டேய தீர்த்தம் - சேரன்மகாதேவி
39. உரோமச தீர்த்தம் - சேரன்மகாதேவி
40. கோ தீர்த்தம் - பத்தமடை
41. பக்த தீர்த்தம் - பத்தமடை
42. பிருகு தீர்த்தம் - கரிசூழ்ந்தமங்கலம்
43. துர்வாச தீர்த்தம் - கரிசூழ்ந்தமங்கலம்
44. அக்கினி தீர்த்தம் - கரிசூழ்ந்தமங்கலம்
45. தர்ம தரிசன தீர்த்தம் - கோடகநல்லூர்
46. வைந தேய தீர்த்தம் - செவல்
47. சாயா தீர்த்தம் - செவல்
48. கந்தருவ தீர்த்தம் (கல்கி அவதார ஸ்தலம்) - செவல்
49. ருத்திர தீர்த்தம் - சிங்கிகுளம்
50. தேவ தீர்த்தம் - திடியூர்
51. மந்திரேசுர தீர்த்தம் - ஓமநல்லூர்
52. பிதுர் தீர்த்தம் - காட்டு அழகர் கோவில்
53. கோதண்ட தீர்த்தம் - காட்டு அழகர் கோவில்
54. வியாக்கிர பாத தீர்த்தம் - காட்டு அழகர் கோவில்
55. தயா தீர்த்தம் - தருவை
56. சுசி தீர்த்தம் - தருவை
57. கேது தீர்த்தம் - முன்னீர்ப்பள்ளம்
58. சங்கம தீர்த்தம் - முன்னீர்ப்பள்ளம்
59. உஷா தீர்த்தம் - முன்னீர்ப்பள்ளம்
60. விஷ்ணு தீர்த்தம் - மேலத் திருவேங்கடநாதபுரம்
61. காருண்ய தீர்த்தம் - மேலநந்தம்

Koviloor Digital Library

62. அக்கினி தீர்த்தம் - மேலநந்தம்
63. புஷ்ப தீர்த்தம் - மேலநந்தம்
64. ருத்ரபாதத் தீர்த்தம் - திருநெல்வேலி
65. யக்ஞ தீர்த்தம் - திருநெல்வேலி
66. அகத்தியர் தீர்த்தம் - திருநெல்வேலி
67. தேவபாண்டித் தீர்த்தம் - திருநெல்வேலி
68. சனற்குமார தீர்த்தம் - திருநெல்வேலி
69. துர்க்கா தீர்த்தம் - திருநெல்வேலி
70. கௌதம தீர்த்தம் - திருநெல்வேலி
71. குறுக்குத்துறை தீர்த்தம் - திருநெல்வேலி
72. சிந்துபூந்துறை தீர்த்தம் - திருநெல்வேலி
73. ஞானபாத தீர்த்தம் - திருநெல்வேலி
74. குட்டத் துறைத் தீர்த்தம் - திருநெல்வேலி
75. சப்த ரிஷி தீர்த்தம் - திருநெல்வேலி
76. ஐடாயு தீர்த்தம் - அருவங்குளம்
77. பாப விமோசன தீர்த்தம் - அருவங்குளம்
78. ஹாச தீர்த்தம் - அருவங்குளம்
79. பூஜாதன தீர்த்தம் - அருவங்குளம்
80. துரிதாபக தீர்த்தம் - செப்பரை
81. மகா லோகித தீர்த்தம் - பாலாமடை
82. மங்கள தீர்த்தம் - பாலாமடை
83. கோ தீர்த்தம் - சீவலப்பேரி
84. விஷ்ணு தீர்த்தம் - சீவலப்பேரி
85. திரிசங்கம் தீர்த்தம் - சீவலப்பேரி
86. குசஸ்தய மிருத்யுஞ்சய தீர்த்தம் - சீவலப்பேரி
87. சத்திய தீர்த்தம் - சீவலப்பேரி
88. கோதண்ட தீர்த்தம் - சீவலப்பேரி
89. வியாக்கிர பாத தீர்த்தம் - சீவலப்பேரி
90. தசாவதாரத் தீர்த்தம் - அகரம்
91. சப்தரிஷி தீர்த்தம் - அகரம்
92. போகி தீர்த்தம் - அகரம்
93. கலச தீர்த்தம் - திருவைகுண்டம்
94. வைகுந்த தீர்த்தம் - திருவைகுண்டம் அடுத்து
95. காந்தீசர் தீர்த்தம் -
96. சங்க தீர்த்தம் -
97. நவலிங்க தீர்த்தம் - நவலிங்கபுரம் (ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கே)

Koviloor Digital Library

இவற்றைத் தொடர்ந்து, பிரம தீர்த்தம், இலட்சுமி தீர்த்தம், வேத தீர்த்தம், அலரித் தீர்த்தம், வாயு தீர்த்தம், வன்னி தீர்த்தம் ஆகிய புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன. நிறைவாக அமைந்துள்ள தீர்த்தம் சங்கமத் துறைத் தீர்த்தமாகும்.

விபூதி வரலாறு

திருவருள் உருவாகிய உமாதேவியார் தமக்குப் பத்தினியாகத் தோன்ற, ஆணவமலத்தை நீக்கியருளும் வேதியராகிய சிவபெருமான் பிரளய வெள்ளமே நீராகவும், அளவில்லாத அண்டங்களே மண்டபங்களாகவும், சமுத்திரத்தால் சூழப்பட்ட பூவுலகமே வேதிகையாகவும், அரி, பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் அவியாகவும், ஏனைய உயிர்களே பசுக்களாகவுங் கொண்டருளித் தமது நெற்றியாகிய குண்டக்கணுள்ள அக்கினிக் கண்ணினின்றும் அக்கினியை மூட்டி யாகஞ் செய்தருளினர். அந்த யாகத்தினின்றுந் தோன்றிய வெண்திருநீற்றை அகங்கார மமகாரமாகிய அகப்புறப் பற்றுக்கள் அழியுமாறு விக்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களுக்கும் சரீரத்தில் தரிக்கும்படி அமைத்தனர் என்று நூல்கள் கூறும்.

தணிகைப் புராணம்

பூதியா முறைமையும் புகலக் கேட்டியாற்
கோதிலா மனுமுறைக்கொற்ற வேந்தனே
பாதியாள் சத்தி பத்தினியின் வைகுற
வேதிலான வந்த புமிணையில் வேதியன்.
ஊழியே பாணி களுலப்பி லண்டமே
கேழிலா மண்டபங்கேழ்த்த வேதிகை
யாழிசூழ் புவியவி பரிமெய் யாதியா
வாழிமா மெய்ம்மைவண் பசுக்களாவியா.
நெற்றியங் குண்டத்து நெடிதடங்கிய
பொற்ற நீள் விழியெரி புணர்த்து வேள்விசெய்
தற்றமில் வேள்வியிலவிர்வெண் பூதியைப்
பற்றற வுயிர்க்கெலாம் படிவத் தாக்கினான்.

விபூதியின் சிறப்பு

அரந்தை தீர்தவ முனிவிர் காளறை குவங்கேண்மின்
கரந்தைவார் சடைக் கண்ணுதற் கற்புதப் பத்திற்
பரந்த பூதிமுன் பகருதும் பல்லுயிர்க் கெல்லாம்
புரந்து காப்பதும் பரகதியளிப்பதும் பூதி (156)

- கடம்பவன புராணம் இலீலா சங்கிரக அத்தியாயம்.

Koviloor Digital Library

பல உயிர்களைப் பாதுகாப்பதும், பரகதியளிப்பதும் விபூதியே. இறைவனும் இறைவியும் ஏகாந்தமாக இருக்கும்போது இறைவி தேவரீர் செய்யும் ஐந்தொழிற்கும் பாதுகாப்பான அடையாளம் ஒன்றை அருளுக என வேண்டினள். சிவபிரான் அம்மையை நோக்கி உனது கலைகளிற் சிலவற்றை பசுக்களாக தோற்றுவாயாக ! என ஆணையிட அம்மையும் அது போலாகவே தமது கலைகளில் சிலவற்றை பசுக்களாக பாற்கடலில் இருந்து தோன்றும்படிச் செய்கின்றாள். அங்கு அரிமுதலானோர் பாற்கடலைக் கடைந்தபோது பசுக்கள் வெளிப்பட்டன.

"என்னாமுன்னந் தனைத்தானே
யீன்று தருமப் பெயர் சாத்தி
நின்னார் கலையினுயர் தருநல்
லறமே நிகழ்த்துஞ்சில கலைமுன்
பன்னாள் தவஞ்செய் பாற்கடலிற்
பசுவாயுதித்தி யெனப் பணித்தான்
அந்நாளது சென்றடைந்து திப்ப
அமிர்தங் கடைந்தாரரி முதலோர் (158)

பாற்கடலில் தோன்றிய ஐவகைப் பசுக்கள்

நந்தை சுரபி சுமனை யெழில்
நலஞ்சேர் சுசீலை பத்திரையெழில்
றைந்து பசுவாய்ப் பாற்கடலுள்
அரனா ரருளா லவதரித்து
முந்து சிவலோகத் தடைந்து
முயங்கு மிடபத் தொடுமிருந்த
தந்த வுலகங் கோலோகம்
அதுவும் படிகத்தால் விளங்கும் (159)

அம்பிகையின் அம்சமாகப் பாற்கடலிற் தோன்றிய ஐவகைப் பசுக்களாவன : நந்தை, சுரபி, சுமனை, சுசீலை, பத்திரை என்பவைகளாம். இவைகள் வளர்ந்து சிவலோகத்திற்கு வந்து சிவாம்சமான இடபதேவருடன் மகிழ்ந்திருந்து வாழ்ந்து வந்தனர். அந்த இடம் கோலோகம் எனப்பட்டது.

பசு உடம்பில் வசிக்கும் வானவர்கள்

ஆவின் பெருமை யெவருரைப்பார்
அவற்றின் சிருங்க மத்தியினின்
மேவுஞ் சிவனங் கிருபாலும்
வேதன் நெடுமால் உறைந்திடுவர்
தாவினுனி தங்குஞ்சர்வ
தீர்த்த முயர்தா பரசங்கந்
தூவண் ணெற்றி தனிலமருஞ்
சுடர்வேன் முருகன் கணபதியும் (163)

Koviloor Digital Library

இது தவிர இன்னும் நான்கு பாடல்கள் இது பற்றி இயம்புகின்றன ; அதன் விளக்கத்தைக் காணலாம்:

கொம்பின் நடுவே பிரம்மன், உடம்பினில் தேவர்கள். சிவம் திருமால் மற்றும் அடியார்களும் உறைகிறார்கள். வாலில் எல்லாத் தீர்த்தங்களும், நெற்றியில் முருகனும் கணபதியும், நாசிப் பகுதிகளில் மூத்த தேவியாரும், காதுகளில் அசுவினி தேவர்களும், கண்களில் சூரிய சந்திரர்களும், பற்களில் வாயுதேவனும், நாவில் வருணனும், மூச்சுக் காற்றில் சரஸ்வதி தேவி, தலைப்பகுதியில் இயக்கரும், யமனும், உதடுகளில் இந்திரனும், ஓசையில் அசுவதரர், கம்பளர் எனும் கந்தருவர்களும், வாலின் நுனியில் பாம்பும் மற்றும் குளம்பினில் கணங்களும், தசநாடிகளும் (தசநாடிகள் - சுழுமுணை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிருவை, அலம்புடை, புருஷன், ருரு, சங்கினி என்பன.) காம்புகளில் பிதிருக்களும், நுனியில் கடல்களும், உள்ளத்தில் உமையவளும், வயிற்றில் பூமிதேவியும், கால் நகங்களின் மேல் எட்டுக் குல மலைகளும், பசுவின் பின்பகுதியில் (நீர்விடும் பகுதி - திருமகளும், சாணத்தில் பிரமனும், பசு நீரில் திருமாலும், தயிரில் உருத்திரனும், பாலில் மகேசனும், நெய்யில் சதாசிவனும் மொத்தத்தில் வேத வடிவமாகவும் கூறப்பட்டது.

ஐவகைப் பசுக்களின் நிறங்களாவன

தாவில் கபில நிறநந்தை
தவளஞ் சுரபி மறையோர்க்காம்
மேவு சுமனை நிறஞ்சிவப்பு
விறல் சேரரசர் தமக்குரித்தாம்
ஏவ மகலுந் சுசீலை நிறம்
இசை தூம்பிரஞ் சொல் வசியருக்காம்
பூவிலுயர் பத்திரை கருமை
பொங்கு நிறஞ்சூத் திரர்க்காகும் (168)

நந்தை கபிலநிறம், சுரபி வெண்மை நிறம், இவை இரண்டும் அந்தணர்க்குரிய பசுக்கள். சுமனை சிவப்பு இது அரசர்க்குரிய பசு. சுசிலை புகை நிறமாகும். இது வைசியருக்குரியதாம் ; பத்திரை கருமை இது மற்றவருக்காம்.

சாணம் ஏற்கும் முறையாவது

சாந்திகம் பவுட்டிகந்தனிக் காமதமென
மேய்ந்த மூவித மியம்புங்கோமய மெடுத்திவற்றின்
ஆய்ந்த சாந்திகம் பிரமமோரைந் தினாலாலின்
போந்த யோனியிற் படாது பூமியின் விழாதேற்றே (169)

ஏற்ற கோமயம் இயம்பு மந்திரத்தினால் விளைத்தல்
சாற்றும் யோனியிற் றாக்கி நன்னிலத்தின் வீழ்மயத்தை
மாற்றி மேலொடு கீழ்நடுமயஞ் சடங்கத்தால்
ஊற்றமே பெற விளைத்திடல் பவுட்டிகமுரைக்கும் (170)

Koviloor Digital Library

புவியின் வீழ்மயம் பிராசாத மந்திரம் புகன்று
விவிதமாமுழுவது மெடுத்துரைத்தமுன் மனுவால்
நவையுறதவை விளைத்திடல் காமதம் நாதன்
கவுரி கேட்ப முன்னுரைத்தது கழறுவம் விரித்து (171)

கோமயமாகிய சாணி சாந்திகம், பவுஷ்டிகம், காமதம் என மூவகைப்படும். இவற்றுள் சாந்திகமாவது கோமயத்தைப் பசுவின் யோனியில் படாமலும், நிலத்தில் வீழ்வதற்கு முன்னும் பஞ்சப் பிரம மந்திரங்களைச் சொல்லி ஏற்றதாம்.

பவுட்டிகமாவது யோனியிற்பட்டு பூமியில் வீழ்ந்த சாணியை ஷடங்க மந்திரங்களைச் சொல்லி, சாணியில் மேலும் கீழும் விலக்கி நடுப்பகுதியை மட்டும் கொள்ளுதலாம்.

காமதமாவது பூமியில் வீழ்ந்த கோமயத்தை பிரசாத மந்திரத்தைச் சொல்லி, பலவகையாக முழுதும் எடுத்து முன் சொன்ன மந்திரங்களால் குற்றப்படாமல் விளைவிப்பதாம்.

விபூதி வகைகளும், சாணம் தரும் பசு விபரமும்

ஒன்று கற்பமோடநுகற்ப முபகற்ப மகற்பம்
என்று சிற்பர நீறு நால்வகைப்படும் இவற்றுள்
தொன்று கற்பத்தி னீற்றினுக்குரிய தூய்ப் பசுக்கண்
மன்ற வத்திறம் புகலுவம் கேண்மின் மாதவத்தீர் (172)

ஈன் பெறாக்கன்னி கொடுவை மூப்பிலக்கணமின்மை
வான் சினைப்பசு வால்செவி கொம்பறை வந்தி
யான் மலங்களைப் புசிக்குமா நோய்ப்பசுவீன்று
பான்மை சேர் பதினைந்து நாளுட்படும் பசுக்கள் (173)

இறந்த கன்றுடைத்தாய் முடங்குருடிருஞ் செவிடு
மறைந்த தீங்கெனத் தகைவீ ரெண்குறை யகற்றி
நிறைந்த நற்குணம் அழகு முன்னிகழ்த்திய நிறத்தான்
சிறந்த பங்குனிச் சாலித்தாண் மேய்ந்தவை சிறப்பாம் (174)

திருநீறு கற்பம், அனுகற்பம், உபகற்பம், அகற்பம் என நால்வகைப்படும். சிற்பர நீறு என்பது - பரஞான வடிவான திருநீறு ஆகும்.

கன்றுவைப் பரிகொடுத்த பசு, ஈனாப்பசு, ஈன்ற சூதகம் கழியாத பசு, துஷ்டத்தனம், வால் அறுந்தது, கொம்பு அறுந்தது, செவியறுந்தது, மலட்டுப்பசு, மலந்தின்னும் பசு போன்ற குற்றமுடைய பசுவின் சாணம் கூடாது.

தூய பசுக்கள் மற்றும் அழகுடைய, எவ்விதமான குற்றமும் இலாதவை மற்றும் பங்குனி மாதத்தில் அறுத்த நெற்பயிரின் தாளை மேய்ந்த பசுக்கள் சிறப்புடையதாகும்.

Koviloor Digital Library

சாணம் பெறும்முன் பசுவை வணங்க வேண்டுமென்பது

விடியு முன்னெழுந்தனுட்டானம் விதிப்படி முடித்துப்
படி புகழ்ந்திடும் பசுவுறை கோட்டத்திற்சென்று
வடிவமைந்த கோ சாவித்திரி மென்னு மந்திரத்தாற்
கடிகொள் சந்தமுங் கமழ் நறுமலர்களுஞ் சாத்தி (175)

இலங்கு தூப தீபங் கொடுத்தினிய தூயன்னம்
நலங்கொள் பாகிலை நிவேதனம் நல்கி நற்பசுவைப்
பலங்கொளன் பினாற் பணிந்தருச்சனை புரிந்த தற்பின்
வலங் கொண் மந்திரஞ் சதஞ் செபித் தேற்பர் கோமயத்தை (176)

விடியுமுன்னர் (சூரிய உதயத்திற்கு முன்) எழுந்து முறைப்படி அனுட்டானத்தைச் செய்து, பூமியில் உறையும் அந்தப் பசுவினுடைய இடத்திற்குச் சென்று முறையறிந்து அபிஷேகித்து (குளிப்பித்தல்) கோ சாவித்திரி மந்திரஞ் சொல்லி அர்ச்சனையை நறுமண மலர் கொண்டு செய்து, தூப தீபம் காட்டி சுத்தான்னம் கொடுத்து வெற்றிலை பாக்கினையும் நிவேதனஞ் செய்து உபசரித்து மந்திரத்துடன் நூறுமுறை வலம்வந்த பின்னர் சாணத்தை ஏற்க வேண்டும் என்பதாம்.

சாணம் கொள்ளக் கால நியதி

சாலுமீருவா வட்டமி சதுர்த்தசி கிரகண
கால மின்னதில் விட்ட கோமயத்தை யக்கணத்தில்
ஆலும் பூமியில் விழாது முன்னம்புய விலையால்
ஏலும் வாழைமெல்லிலை நறும்பலா சிலையிவற்றால் (177)

ஓதும் யோனியிற் படாதுமேலாக வொண் சத்யோ
சாத மந்திரத் தேற்றுமேல் வழும்பினைத் தள்ளி
யாதி வாமத்திற் கவ்வியம் பெய்த கோரத்தாற்
போத நன்குறப் பிசைந்து தற்புருடத்தினுருட்டி (178)

பன்னும் வெய்ய வோமத்தினிற் பதடியோடமைத்து
முன்னுரைத்திடு மகோரத்தால் விளைவித்து மொழிந்த
விந்நிலந்தொழும் பாகங்கண்டீசானத் தெடுத்து
மன்னலந்தரும் புதிய தூயாடையின் வடித்து (179)

அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, சதுர்த்தசி, கிரகண காலங்கள் ஆகிய இத்தினங்களில் இட்ட சாணத்தை அக்கணமே எடுக்க வேண்டும். ஆல இலை, தாமரை இலை, வாழை இலை, பலா இலை என்றதில் ஏதாவது ஒரு இலையினால் நீர்வரும் பாதையில் படாது சத்யோஜாத மந்திரத்தால் ஏற்று, வழும்பு நீக்கி வாமதேவ மந்திரத்தால் பஞ்சகவ்வியம் விட்டு அகோர மந்திரத்தால் பிசைந்து, தத்புருஷ மந்திரத்தால் உருட்டி ஓமத்தில் சேர்த்து அகோர மந்திரத்தால் எரியூட்டி நன்கு சாம்பலாகச் (விபூதி) செய்து ஈசான மந்திரத்தால் எடுத்துக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

விபூதி எதில் வைத்துக் கொள்ளுதல் நன்மை

சங்கு பொன் வெள்ளி தாமிர பாத்திர மடைவில்
துங்க வுத்தம மத்திம மதமமுஞ் சொல்லும்
இங்கிதன்றியு மண்சுரை பித்தளை யிவையும்
பங்கமில்லதாம் விளங்குமப் பாத்திரத்தமைத்து (180)

வண்ண வெண் பொடி யிறையுரு வெனமனத் தெண்ணி
நன்னரும் பஞ்சப் பிரம நற்சடங்கமு நயந்தே
யெண்ணுதற்கரும் வியோம வியாபியென் றிசைக்கும்
அண்ணல் மந்திர மிவற்றினாகம விதி செபித்து (181)

விபூதியை வைத்துக் கொள்ளுவதற்கு பாத்திரமானது தங்கத்தாலானது உத்தமம், வெள்ளி நடுநிலை, தாமிரம் கடைநிலை ஆகும். இவை தவிர மண்பாத்திரம், சுரைக்குடுவை, பித்தளையும் கொள்ளலாம். ஆயினும், அதில் குறைவு ஏதும் இலாது. நல்ல பாத்திரத்தை கொள்ள வேணுமாம். நல்ல வெண்மையான விபூதி சிவனது உருவம் ஆகும். அதிலே பஞ்சபிரம்ம, ஷடங்க, மூல மந்திரமும் கூறி, 'வியோமவ்யாபி' பத மந்திரங்களினாலும் ஆகம முறை வழுவாது செபித்துக் கொள்ள வேண்டும்.

விபூதியில் நறுமணப் பொருட்கள் சேர்க்க வேண்டுமென்பது

நறிய சண்பகங் கேதகை பலாசம் புன்னாகஞ்
சிறிய சண்பகந்தாமரை துனவு பாதிரிப்பூ
வெறிகருப்புரம் வெட்டிவேர் மருவிலா மிச்சுக்
குறிகொண் மல்லிகை தக்கோலங் கொழுந்து நாயுருவி (182)

தருப்பையின்னுனி யாகமஞ்சாற்று மற்றெவையுந்
தெரிப்பருஞ் சத்யோ சாதமீ சானமுஞ் செபித்து
மருப்பயின்ற வெண்பூதியுண் மணங்கொளச் செறித்து
விருப்பமுற்று வெண்ணீற்றின் காயத்திரி விளம்பி (183)

செண்பகம், தாழை, புரசம்பூ, புன்னைப்பூ, சிறு செண்பகப்பூ, தாமரை, பாதிரி, பச்சைக் கருப்பூரம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், மல்லிகைப்பூ, தக்கோலம், மருக்கொழுந்து, நாயுருவி (இலை), தருப்பைநுனி மற்றும் ஆகமம் சொல்லும் வாசனைப் பொருட்களையும் சேர்த்து, சத்யோ ஜாத முதல் ஈசானம் வரையிலான மந்திரங்களைச் சொல்லி விபூதியோடு கலந்து விபூதி காயத்திரி மந்திரமும் சொல்லி வைத்துக் கொள்ளுதல் சிறப்பாகும்.

விபூதியின் நிறமும் பயனும்

"அளவாப் பிணியைத் தருநீல மாயு ணீக்குந் தாமிரஞ்சீர்
பிளவா விசையைத்தபுஞ் செம்மை பீதமளிக்கு நல்குரவே" (26)

வெண்மையளவில் புண்ணியத்தை விளைக்கு மதனாலது தரிக்கும்
வண்மையுடையது தன்னை மான்றோல் புலித்தோல் வத்திரத்தால்
ஒண்மைவிரல் பன்னிரண்டளவினுயர மிருநான் களவகலந்
திண்மை கொளும் வாய்வட்டமுறைச் செயு மாலயத்துச் செறித்தணிவார் (27)

– பேரூர்ப்புராணம், உபதேசப் படலம்.

Koviloor Digital Library

கருநிற விபூதி நோயை உண்டாக்கும். செந்நிற விபூதி புகழைப் போக்கும். புகை நிற விபூதி ஆயுளைக் குறைக்கும். பொன்னிற விபூதி சம்பத்தைக் கெடுக்கும். வெண்மை நிற விபூதி அளவிலாத புண்ணியத்தை விளைவிக்கும். ஆதலால் அந்த வெண்ணிறமான விபூதி அணிவதற்கு ஏற்றது. அதனை மான்தோல், புலித்தோல், ஆடை (பட்டு) முதலியவற்றால் பன்னிரண்டு விரல் உயரமும், எட்டுவிரல் அகலமும் உடையதாக வாய் வட்டமாகவும் செய்த விபூதிப்பையில் வைத்து அணிந்து கொள்ளுதல் சிறப்பாகும். (தற்கால வன சட்டப்படி மான் தோல், புலித்தோல் கூடாது).

விபூதியின் பெயரும் காரணமும்

விபூதி, நீறு, பசுமம் (பற்பம்), பசிதம், சாரம், இரக்ஷை எனப் பெயர் பெறும். வி – மேலான, பூதி – ஐசுவரியம் எனவே, தன்னைத் தரித்தவர்களுக்கு அழிவில்லாத மேலான ஐசுவரியத்தைக் கொடுத்தலால் விபூதியெனப் பெயர் பெற்றது. ஈண்டு ஐசுவரியம் என்பது முத்திப் பேற்றினை யேயாம். அதுவே மேலான ஐசுவரியம் எனப்படும். பாவங்களை எல்லாம் நீறாக்கலால் நீறு எனவும், பசுமம் எனவும் சொல்லப்படும். அறியாமை அழியும்படி சிவஞானமாகிய சிவத்துவத்தை விளக்கலால் பசிதம் எனப்படும். உயிர்களது மலத்தைக் கழுவுவதால் சாரம் எனப்படும். ஆன்மாக்களை துன்பத்தினின்றும் நீக்கி இரக்ஷித்தலால் இரக்ஷை (இரக்கை) எனப்படும் (இரக்ஷை – காப்பு).

சிந்தாந்த சிகாமணி

பூதியெனப்படுஞ் செல்வவேது வினாச்சிவமாகும் பொருடிகழ்த்து
மேதுவினிற்பசித மிருபாவங்கடம்மையச் சத்திசைத்தலாலே
யோதறும் பற்பமென விடரிடை நின்ற கற்று தலாலொன்றுஞ்சாரத்
தீதகலவனை வரையு மளிப்பதனாலிரக்கை யெனச் செப்பு நூலே.

பேரூர்ப் புராணம்

நீடலுறுந்தீவினை யனைத்து நீற்றிவிடலா நீரென்றும்
வீடில் வெறுக்கை தருதலினால் விபூதியென்று முயிர்தோறுங்
கூடுமலமாசினைக் கழுவுங்குணத்தாற் சாரமென்று மட
மோடவளர் சோதியைத் தரலாற் பசிதமென்று முரைப்பாரால்.

விபூதி உட்கொள்ளும் மருந்தாகும்

விபூதி மேனியின்மேல் அணியப்பட்டு வருகிற ஒரு பொருளாக இருப்பதுவன்றி மருந்தாகவும் உட்கொள்ளப்படுவதாகும். அதனை உட்கொண்டால் தேக அசுத்தங்களைப் போக்கி, 72 ஆயிரம் நாடிகளுக்கும் வலிமையை உண்டாக்கும். வாதத்தால் உண்டாகும் 81 வியாதிகளையும், பித்தத்தால் உண்டாகும் 64 வியாதிகளையும், கபத்தால் உண்டாகும் 215 வியாதிகளையும் நீக்குமென்பது அனுபவத்தில் உள்ளதேயாகும்.

இது பற்றியே, உபவேதத்தில் ஒன்றாய் எல்லாவற்றையும் அநுட்டித்தற்குச் சாதனமாகிய உடம்பை நிலைபெறச் செய்தற்கு வேண்டப்படுமவைகளைக் கூறுகின்ற ஆயுர்வேதமும் திருநீற்றைப் பூசு மருந்தாகவும், புசிக்கும் மருந்தாகவும் வியந்து கூறிற்று.

Koviloor Digital Library

"ததாபஸ்மார குஷ்டாத்யா நச்யந்தி
வ்யாதய : க்ஷணாது"

என்றதனாலே திருநீற்றினால் அபஸ்மாரம், குஷ்டம் முதலிய நோய்கள் யாவும் ஒரு கண காலத்துள் நீங்கும் என்று கந்தபுராணம் உரைக்கின்றது. "பஜநாத் ஸர்வ பாபக்னம் ஸ்மரணாச்ச சிவசங்கரம்" என்ற சங்கர சங்கிதைச் சுலோகத்தாலே அறியலாம். இதனாலன்றோ திராவிட வேதமும் வருத்தந்தணிப்பது நீறு, ஏலவுடம் பிடர் தீர்க்கு மின்பந்தருவது நீறு, கவினைத் தருவது நீறு, மதியைத் தருவது நீறு என முழங்கி நிற்கும்.

மேலும், ஆயுர்வேதமும், தன்வந்திரி நூலும், சித்தர் நூல்களும் வியாதிகளுக்குப் பரிஹாரமாக "மணி மந்திர ஔஷதம்" என மூன்று கூறின. இம்மூன்றனையும் எவ்வித நோயாளியாவது கொள்வானாயின், அவனுக்கு அந்நோய் நீங்கும் என்பது சத்தியம் என்று ஆணை கூறினர் பெரியோர். அவை யென்னவென்று ஆராயுங் காலத்து, மணி என்பது பொருள் எனவும், இரசமணி எனவும், மந்திரம் என்பது சுளுக்கு மந்திரம், விட நிவாரணம் செய்யும் கருட மந்திரம் முதலியன எனவும், ஔடதம் என்பது கலிகம், கியாழம், குளிகை, பற்பம், சிந்துரம், சூரணம், இலேகியம், தைலம் முதலாயின எனவுங் கூறி நிற்பர். இம்மூன்றும் ஒருவாறு பரிகாரமாகச் சொல்லப்படினும், அவையெல்லாம் துன்பத்திற்குக் காரணமாய் தீவினைக்கு மூலமான ஆணவம் அறாவிடத்துப் பயன்படாவாகலின் அதனையும், பிறவிப் பிணியையும், தேகப் பிணியையும், ஒருங்கேயறுப்பன மூன்றேயதனுற் கூறப்பட்ட பொருளாம்.

எங்ஙன எனில், மணி என்பது உருத்திராக்க மணியாம். மந்திரமென்பது திருவைத் தெழுத்தாம். ஔடதம் என்பது விபூதியேயாம். இவைகளே பிணிகளை வேரோடு களைவனவாம். மருந்து ஆவன பல பிணிகட்கும் ஏற்றனவாயும், சுவை வீரியம் விளைறவாற்றல்களான் மேம்பட்டனவாயும், எளிதினெய்தப் படுவனவாயும், பகுதியோடு பொருந்துதல் உடையனவாயும் விளங்கும் நால்வகைத் திறத்தன. இவ்விலக்கணம் நிரம்பப் பெற்ற மருந்து, முற்சொல்லப்பட்ட கலிக முதலாயின வாகா. அவ்விலக்கணமுடைய மருந்து எதுவெனத் தீர்மானிக்கின், சொல்லப்பட்ட தன்மைகளை உடைய விபூதியேயாம். இவ்விபூதியை மெய்யன்புடன் உட்கொண்டக்கால் சர்வ பிணிகளும் நீங்குமென்பதற்கு ஐயமின்று. மேற்கூறிய மூன்றுங்கொண்டே நாயன்மார்கள் பிறவிப்பணி முதலிய எல்லாவற்றையும் நீக்கிச் சிவசாயுச்சியத்தை அடைந்தனர்.

காஞ்சிப் புராணம்

பேயன்ன புறச்சமயப் பிணக்கு நூல்வழியனைத்தும்
பிழையே யன்றி
வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த வழிதேறி
யதீத வாழ்விற்
போயண்மியஞ்செழுத்துந் திருநீறுங்கண்டிகையும்
பொருளாக் கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெருவாழ்வு
நான் பெற்றேனால்

இதனாலும் விபூதி முதலிய மூன்றுமே பொருளாகக் கொண்டாரென்பது தெற்றென விளங்குகின்றது. இன்னன நியாயங்களான் விபூதி தரிக்கத்தக்க மருந்தாவதன்றி உட்கொள்வதற்கு முரிய பெரிய அருமருந்தென்பது சித்தாந்தமாயிற்று.

Koviloor Digital Library

விபூதி வகை

விபூதிபற்பம், மகாபற்பம் என இரு வகைப்படும். அவற்றுள் மகாபற்பமென்பது அத்துவித ஞானத்தைக் கொடுத்துச் சிவசாயுச்சிய முத்தியைக் கொடுத்தலால் அஃது சிவ பெருமானேயாம். அந்த மகாபற்பம் விளங்கப் பெற்றவருஞ் சிவபெருமானேயாவர். அதன் வரலாற்றைச் சிவாக்கினி விபூதி என்றதிற் காண்க. மற்றைய பற்பம் என்பது திருநீறாகும். அது சிரௌதம், ஸ்மார்த்தம், இலௌகியம் என மூன்று பகுப்பினை உடைத்து. இவற்றுள் முன்னையவிரண்டும் பிராமணர்க்கும். பின்னையது மற்றையோர்க்கும் ஆகும் என நூல்கள் கூறும். சிரௌதமாவது – வைதிகமாயுள்ளது. ஸ்மார்த்தம் ஆவது மிருதி சம்பந்தமாயுள்ளது. இலௌகியம் ஆவது – உலக சம்பந்தமாயுள்ளது.

சூதசங்கிதை - எக்கியவைபவ காண்டம்

"முழுஞானமினிதளித்து மகாபாவமுருக்குதலான்
மழுமானங்கைப்பரனே மகா பற்பமெனப்பாடுவான்".
துரிசறுநன்மகாபற்ப சொரூபம் விளங்குறப் பெற்றோ
னரிய சிவனெனயாரு மறைவர் மறைமுதலான
பெரியநூலோதுபயன் பிறங்குறுமகாபற்ப
முரிய திருஞானமடை குதலாகுமுணர்வுடையீர்.
சீர் மருவுபற்பந்தான் சிரௌதமேச மார்த்தமே
யேர் மருவிலவுகிகமே யெனமூன்று வகைவற்றுட்
பார்மருவு முன்னிரண்டும் பார்ப்பாக்கும் பின்னொன்று
பேர் மருவு மற்றையர்க்கு மாகுமெனப் பேசுவரால்.

இவையன் வைதிக விபூதி, சைவ விபூதி எனத் திருநீறு இருவகைப்படும். அவற்றுள் வைதிக விபூதியாவது வேத விதிப்படி செய்யப்பட்ட யாகங்களிற் பொடிபட்ட நீறாகும். அது புராதனி, சத்தியோசாதை என இருவகைப்படும். அவற்றுள் புராதனியாவது பிரமதேவரது ஓமகுண்டத்தில் விளைந்தது. சத்தியோசாதையாவது வேதியர்கள் வளர்க்கும் யாகங்களிலுண்டாயதாம். இவை புத்தியை மாத்திரம் அளிக்கும் மற்றைய சைவ விபூதியாவது இருவினையொப்பு மலபரிபாகமுற்ற சிவசத்தி நிபாதர்க்கு உரியதாய்ச் சிவாகம விதிப்படி சிவதீஷை செய்யப்பட்ட அக்கினியிற் பொடிப்பட்ட நீறாம். இது புத்தியை யல்லாமல் முத்தியையுங் கொடுக்கும். இவ்விபூதி கற்பம், அநுகற்பம், உபகற்பம், அகற்பம் என நான்கு வகைப்படும். அவற்றை மேற்கூறுதும்.

தணிகைப் புராணம்

உலகருக்குரிய மறை வழிவேட்கு மோங்கிய விரசையிற்பொடித்த
விலகு வெண்ணீறுவைதிகபூதி யின்னது புத்தியேயளிக்கு
மலமறுசத்திய பதிந்தவர்க்குரித்தாய் வயங்குமாக வழித்தீக்கை
நிலவு செங்கனலிற் பொடித்த வெண்பூதி நிகரிலாச் சைவ வெண்ணீறு
முத்தியேயன்றிப் புத்தியும் வெஃகின் முகிழ்க்குமாற் சைவ வான்பூதி
யத்தகுசைவ மூன்றதான் கற்ப மநுகற்பமுபகற்ப மென்ன.

Koviloor Digital Library

கோமய விசேடம்

பசுவின் சாணமே விபூதியுண்டாக்குவதற்காக விதிக்கப்பட்டது. அதன் குறிப்புப் பொருளை முன்னர் ஒருவாறு காட்டினோம். இன்னுங் கோமயத்தின் விசேடத்தைக் கூறுவாம். பசுவின் சாணத்தைப் போலப் பயிரை விளைக்கும் வஸ்து வேறொன்றில்லை. அதனாற் பயிர்களுக்கு நேரிடும் உரோகங்கள் மாறுகின்றன. இந்தியா இலங்கை முதலிய தேசக்கணுள்ள உழவர்கள் இதனையே தேடியிட்டுப் பயிர் செய்வார்கள். எவ்வித துர்க்கந்தங்களும் இச்சாணத்தால் நீங்கும். எவ்வித அசுசிகளும் இதனால் நீங்குகின்றன. உண்ட எச்சிலும் இதனால் மாற்றப்படுகின்றது. இராமாநுசரது மனைவியும் ஒரு வைணர்க்கு அன்னமிட்டுச் சாணத்தால் உச்சிட்டமகற்றிய சரிதமும் வைணவர் எழுதி வைத்த குருபரம்பரையிற் காணலாம். இற்றைத்தினத்தும் சைவர், ஸ்மார்த்தர் முதலினோரன்றி வைணவர்களும் பிற சமயிகளும், இச்சாணத்தைக் கொண்டு மெழுகியும், உச்சிட்ட மகற்றியும், இன்னும் அவை போன்றன செய்தும் சுத்தமுடைப் பொருளாகவும், பிறவற்றைச் சுத்தமாக்கும் பொருளாகவும் மதித்து வருகின்றனர். ஆயுள் வேதக்காரரும் பற்பல மருந்துகளை இச்சாண வரட்டி கொண்டு புடமிடுகின்றனர். சந்தான முதலிய சிவாகமங்கள் இதனிடத்தில் யமுனை நதியிருக்கிறதென்று கோஷிக்கின்றன. புண்ணிய சாந்தம் என்றார் சமண மதத்தார் ஆகிய வீரமண்டல வரும். இதனாற் பிள்ளையார் முதலிய தேவர்களைச் செய்து க்ஷணிகமாகப் பூசிப்பதுமுண்டு. இதனாற் செய்யப்பட்ட வரட்டி கொண்டு சமைத்த உணவு மகாபுனிதமாயும், நோய் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கும் என்பர் பதார்த்தகுண நூலார். அநேக தத்துவ சாத்திரிகள் இதனிடத்துப் பெரிய சக்தியொன்று உண்டென்று கூறுகின்றனர். இன்னன விசேட மமைந்த சாணம் மந்திர பலத்தால் யாகாக்கினியிற்பட்டு நீறாகிச் சுத்த நீருடன் தரிக்கப்படுமேல் எத்துணைக் குணங்களைத் தானியற்றாது. இஃதறிந்தே இறைவன் சாணங் கொண்டு விபூதி செய்ய விதித்தனன். இவற்றையெல்லாம் உணராது மாட்டுச் சாணியின் சாம்பல் என்று நிந்தித்தல் அறியாமையும் பாவமுமே.

கோமயங் கொள்ளுங் காலமும் மந்திரமும்

பங்குனி மாதத்திலே பசான மென்னும் நெல்லினது தாளை மேய்ந்த பசுக்களிடத்தினிலே அட்டமி, பௌர்ணமி, சதுர்த்தசி என்னும் திதிகளிலே கோமயங் கொள்ள வேண்டும். கொள்ளுதற்கு முன்னர்

ஓம் கபிலே நந்தே நம: ஓம் கபிலேபத்திரே நம:
ஓம் கபிலேசு சீலே நம: ஓம் கபிலே சுரபே நம:
ஓம் கபிலே சுமநெ நம:

என்னும் மந்திரத்துள் ஏற்ற மந்திரத்தைக் கூறி வணங்கி, "பாற்கடற் கண்தோன்றி, ஆன்மாக்களின் துக்கத்தைப் போக்கும் பயோதரத்தையுடைய மாதாவே ! இதனை ஏற்க" என்று ஒரு பிடி பில்லுக் கொடுத்து, கோசாவித்திரி தோத்திரமுஞ் செய்து கொள்ளக்கடவர். தாம் ஏற்கச் சென்ற பசு கருமை சேர்ந்த பொன்னிற முடைத்தாயின் முதலாம் மந்திரத்தையும், கருநிறமுடைத்தாயின் இரண்டாம் மந்திரத்தையும், புகைநிறமுடைத்தாயின் மூன்றாவதையும் வெள்ளைநிறம் உடையதாயின் நான்காம் மந்திரத்தையும் தாமிர நிறத்ததானால் இறுதிக்கணுள்ள மந்திரத்தையுஞ் சொல்லக்கடவர்.

Koviloor Digital Library

கற்ப விபூதி

முன்னர்க் கூறிய மூவகை விபூதிகளுள் கற்பவிபூதியைக் கூறுவாம். (பங்குனி மாதத்தில் நெல்தாளை மேய்ந்த) சொல்லப்பட்டபடி பசுக்களுள் ஒன்றிடத்துப் பூமியில் விழுமுன் ஓம் சத்தியோசாதாயநம : என்னும் மந்திரத்தை உச்சரித்துத் தாமரை இலையிலேற்ற கோமயத்திலே பால் ஐந்து பலமும், கோசலம் ஒரு பலமுஞ் சேர்த்த கவ்வியத்தை ஓம் வாமதேவாய நம : என்று வார்த்து, ஓம் அகோராய நம : என்று உச்சரித்து, மெல்லப் பிசைந்து உருண்டை பண்ணி, சம்பா நெற்பதரை விரித்து, அதன்மேல் ஓம் தத்புருஷாய நம : என்று உச்சரித்து வைத்து, ஓமாக்கினியினாலேனும் நித்தியாக்கினியினாலேனுந் தகனஞ் செய்ய வேண்டும். அன்றைக்கேயெடுத்து, அன்றைக்கே உருண்டை செய்து, அற்றைத் தினத்திற்றானே தகனஞ் செய்தல் உத்தமோத்தமமாகும். அவ்வாறன்றி யுலர்த்திச் செய்தலுமாகும். அவ்விபூதி நன்றாய் விளைந்ததை அறிந்து கருகல் முதலியவற்றைத் தள்ளி, நல்லனவற்றைப் பார்த்து, ஓம் ஈசானாய நம : என்று உச்சரித்து எடுக்கக் கடவர். கருநிற விபூதி வியாதியை உண்டாக்குமாகலானும், செந்நிற விபூதி கீர்த்தியைப் போக்குமாகலானும், புகைநிற விபூதி ஆயுளைக் குறைக்குமாகலானும், பொன்னிற விபூதி சம்பத்தைக் கெடுக்குமாகலானும் அவற்றையெல்லாம் நீக்கி வெண்ணிற விபூதியே எடுக்கக் கடவர். இதுதான் கற்ப விபூதியாகும். (விபூதி காயத்ரி – தன்மஹேசாயவித்மஹே – மஹாபஸ்மா யதீமஹி தன்ன : பஸ்ம : ப்ரசோதயாது)

அநுகற்ப விபூதி

அஃதாவது சித்திரை மாதத்திலே பசுக்கள் நிற்கும் மந்தையிற் சென்று உலர்ந்து கிடந்த கோமயங்களை எடுத்து, ஓரிடத்திலே குவித்து, உரலிலிட்டு இடித்துத் தூளாக்கி, அதிலே கோசலத்தை ஓம் வாமதேவாய நம : என்று உச்சரித்து வார்த்துக் கையினாலே கலந்து, ஓம் அகோராய நம : என்று நன்றாகப் பிசைந்து உருண்டை செய்து, பதரை விரித்து ஓம் தற்புருடாய நம : என்று அதன் மேல் வைத்து ஓமாக்கினியினால் தகனம் பண்ணி, ஓம் ஈசானாய நம : என்று எடுத்த திருநீறாம்.

உபகற்ப விபூதி

உபகற்ப விபூதியாவது கோமயங் கிடைக்காவிடத்துக் காட்டின்கண் மரத்தோடு மரம் இணைந்து தானே உண்டாக்கிய அக்கினியினாலே வெந்து விளைந்த சாம்பரையாதல் அல்லது செயற்கையாய் உள்ள செங்கற்சூளை முதலியவற்றில் விளைந்த சாம்பரையாதல் எடுத்து, பஞ்சகவ்வியத்தை வாமதேவ மந்திரத்தினாலே வார்த்துப் பாகமறிந்து கலந்து, அகோர மந்திரத்தினாலே அள்ளிப் பிசைந்து உருண்டை செய்து பதரைப் பரப்பி, அதன் மேலே தற்புருட மந்திரத்தினாலே வைத்து சிவாக்கினியினாலே தகனம் பண்ணி ஈசான மந்திரத்தினாலே எடுப்பதாகும்.

தணிகைப் புராணம்

மந்திரங்கேட்டியரசனேசா தமயத்தினையே ற்றல் வாமத்தா
னைந்தினை வாக் கலகோரத்தாற்பிசை தலழலிடையுருட்டி – வைத்திடன்
சிந்து தற்புருடத்தாற் புகைபீ தஞ்சிவப்பறு கருமையுந்தீர (மால்)
விந்து நேர்பூதியெடுத் தலீசம் பெய் திருத்தல் காயத்திரி மனுவால்.

Koviloor Digital Library

அகற்ப விபூதி

மேற்சொல்லிய விபூதிகள் கிடைக்காதவிடத்து, இடிவிழுந்த இடத்தில் உண்டாகிய திருநீறும், மலையினுச்சியிலும் பூமியிலும் யாதொரு காரணத்தினால் விளைந்த திருநீறுந்தரிக்கலாம். அது அகற்ப மெனப்படும் அவைகளை எடுத்து,

"ஓம் நிவிர்த்தி கலாயை நம:, ஓம் பிரதிஷ்டாகலாயை
நம:, ஓம் வித்தியா கலாயை நம:, ஓம் சாந்தி
கலாயை நம:, ஓம் சாந்தியாதீத கலாயை நம:

என்றும் கலாமந்திரங்களானும், ஓம் சிவாய நம : என்னும் சிவ மூல மந்திரத்தானுஞ் சுத்தி செய்தே தரிக்க வேண்டும்.

திருநீற்றைப் பற்றிக் கூறும் நூல்கள்

இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற வேதங்கள். இவற்றின் பாகங்களாகிய இராம ரகசியோபநிடதம், சாண்டில்யோபநிடதம், ஜாபால உபநிடதம், ப்ருஹத் ஜாபால உபநிடதம், தைத்தரீயோபநிடதம், சுவேதாச்வர உபநிடதம், ஜாபாலி உபநிடதம், வாசுதேவ உபநிடதம், காமிகம் முதல் வாதுளம் ஈறாக உள்ள சிவாகமங்கள் 28, இவற்றின் பிரிவுகளாகிய சாலோத்தரம், சாலபேதம், சசி மண்டலம், மகாவித்தயம், துலா விருத்தம், காலதகனம், குமாரதந்த்ரம், மகுடோத்தரம், இருத்தகாசம், நீலபத்திரம், கலாபேதம், சமூகம், சிவசாசனம், விலேகன தந்திரம், நந்திகேசுரம், மகாந்த சங்கிதை, மகாகாளம், பிரபுத்தாகமம், வீணாசிகோத்தரம், தாரதந்திரம், பரோற்பூதம், பதுமசங்கிதை, பாவநாசகம், வீமதந்திரம், சிபோதம், பாவனம், பார்வதி தந்திரம், ப்ரக்ரணாகமம், காசியபம், வாமமதந்திரம், காருடம், நைருதம், சிவதருமோத்தரம், மதங்கம், விசுவான்மகம் என்ற உபாகமங்கள், சாங்க்யாயண க்ருஹ்யம், மாத்யந்தின க்ருஹயம், போதாயண க்ருஹ்யம் என்ற வேத சாரங்கள், பரத்துவாச, சாதாதப பராசர, கௌதம, மனுவாதி ஸ்மிருதிகள். இலிங்க, சைவ, ஸ்காந்த, காருட, மச்ச, ஆதித்ய, பிரமாண்ட, பத்ம, கூர்மம் முதலிய மஹா புராணங்கள், இராமாயணம், பாரதம் எனும் இதிஹாஸங்கள், சிவரஹஸியம் எனும் பரம இதிஹாஸம் ஆகிய இத்தனை நூல்களிலும் விபூதியின் மஹத்துவம் பேசப் பட்டுள்ளது. மேலும் திருமுறைகள் மற்றும் வை சித்தாந்த நூல்களிலும், சார்பு நூல்களிலும், இன்னும் தமிழிலே அருளிச் செய்யப்பட்ட தலபுராணாதி நூல்களிலும் திருநீற்றின் சிறப்புகளைக் கண்டு கொள்ளலாம்.

திரிபுண்டரத்தின் உட்பொருள்

(திரிபுண்டரம் – மூன்று கோடுகள்)

விபூதியை மூன்று கோடாகத் தரித்த மஹா புண்ணியரைக் கண்ட பூத, பிசாசம் முதலியன அஞ்சி நடுங்கி அலறி ஓடும் என்பதில் ஐயமில்லை.

1. திரிபுண்டரம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளைக் குறிக்கும்.
2. திரிபுண்டரம் அகரம், உகரம், மகரம் என்ற வியட்டிப் பிரணவங்கள்
3. திரிபுண்டரம் பதி, பரை, ஆன்மா
4. திரிபுண்டரம் சிவம், சதாசிவம், மகேசம்
5. திரிபுண்டரம் சிவம், சக்தி, ஸ்கந்தர்

Koviloor Digital Library

6. திரிபுண்டரம் சத்து, சித்து, ஆனந்தம்
7. திரிபுண்டரம் சாங்கம், உபாங்கம், ப்ரத்யங்கம்
8. திரிபுண்டரம் அத்வாமூர்த்தம், மந்திர மூர்த்தம், பஞ்சப் பிரம மூர்த்தம்
9. திரிபுண்டரம் விந்து, மான், மோகினி
10. திரிபுண்டரம் லயம், போகம், அதிகாரம்
11. திரிபுண்டரம் சத்தன், உத்திபுத்தன், ப்ரவிருத்தன்
12. திரிபுண்டரம் சிருஷ்டி, திதி, சங்காரம்
13. திரிபுண்டரம் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி
14. திரிபுண்டரம் தந்திரக்கலை, மந்திரக்கலை, உபதேசக் கலை
15. திரிபுண்டரம் பிரத்யட்சம், அநுமானம், ஆகமம் (அளவைகள்)
16. திரிபுண்டரம் அருவம், அருவுருவம், உருவம்
17. திரிபுண்டரம் குரு, லிங்கம், சங்கமம்
18. திரிபுண்டரம் சூரியன், சந்திரன், அக்கினி
19. திரிபுண்டரம் விக்ஞான கலர், பிரளயா கலர், சகலர்
20. திரிபுண்டரம் அவன், அவள், அது
21. திரிபுண்டரம் மணி, மந்திரம், ஔடதம்
22. திரிபுண்டரம் போகம், போக்யம், ப்ரேரகம்
23. திரிபுண்டரம் மந்திரம், பாவனை, கிரியை
24. திரிபுண்டரம் காருஹபத்தியம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி
25. திரிபுண்டரம் அயன், அரி, அரன்
26. திரிபுண்டரம் சுவர்க்க, மத்திய, பாதாளம்
27. திரிபுண்டரம் மலைமகள், திருமகள், கலைமகள்

என்ற இத்தனைத் தத்துவங்களையும் த்ரிபுண்டரம் குறிக்கும்.

த்ரிபுண்டரத்தால் நீங்கப் பெறுபவை

1. ஆணவம், கன்மம், மாயை
2. காமம், வெகுளி, மயக்கம்
3. சாத்துவிகம், இராஜதம், தாமதம்
4. தனேடனை, தாரேடனை, புத்ரேடனை
5. பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம்
6. தூலதமம், தூலதரம், தூலம்
7. ஆன்ம தத்வம், வித்யா தத்வம், சிவதத்வம்
8. ஞாதுரு, ஞானம், ஞேயம்
9. ஆதிதைவிகம், ஆதிபௌதிகம், ஆதியான்மிகம்
10. பேதம், பேதாபேதம், அபேதம்
11. சந்தேஹம், விபரீதம், மயக்கம்
12. தூலம், சூக்ஷ்மம், காரணம்
13. இறப்பு, நிகழ்வு, எதிர்வு
14. தன்மை, முன்னிலை, படர்க்கை

Koviloor Digital Library

15. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி
16. காலம், தேசம், வஸ்து
17. வாதம், பித்தம், சிலேத்துமம்
18. மனம், வாக்கு, காயம்
19. அம்மை, இம்மை, உம்மை

முதலியன த்ரிபுண்டரத்தால் நீங்கப் பெறும்.

த்ரிபுண்ட்ர த்ரிசுராத்மகம் த்ரிவேதவஹ்நி
த்ரிகுணத் த்ரிவர்ண : த்ரிஜகந்மயம் – காளி காண்டம்.

எல்லோரும் விபூதி அணிபவர்களேயாவர்

திருமால், பிரம்மன், இராமர், கிருஷ்ணர், இந்திரன், ஏனைய தேவர்கள், முனிவர், கின்னரர், கிம்புருடர், வித்யாதரர், கருடர், பூதர், இயக்கர், அசுரர், உரகர், சாரணர், சித்தர், கந்தருவர், பைசாசர், இராக்கதர், யோகபூமியர், ஆகாய வாசிகள், அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புரூரவன், புருகுச்சன், கார்த்த வீரியன் என்று ஆறு சக்ரவர்த்திகள், கயன், அம்பரீடன், சசிபிந்து, சிபி, பிருது, மருத்துவான், பரதன், சுகோத்திரன், திலீபன், ரகு, அந்திதேவன், யயாதி, மாந்தாதா, பகீரதன், அனங்கன் என்ற பதினைந்து மஹா மன்னர்கள். ஏனைய சூரியகுல, சந்திரகுல அரசர்கள் அனைவரும் விபூதி, உருத்திராக்கதாரணர்களே என்று வேதாகம உபநிடத ஸ்மிருதி புராணேதிகாசம் முதலியவற்றால் குன்றின் மேலிட்ட விளக்கு போல் விளங்குகின்றது.

திருநீறு விளையும் திருத்தலங்கள்

திருநீறு தானாக விளையும் திருத்தலங்களும் இருக்கின்றன. கதிர்காமம், கோவை மாவட்டம் மருதமலை, திருக்குறுக்கை, திருநீற்று மலை, கங்கைக் கரை, திருவருணை, வில்வகானனம், சுண்டூர் முதலிய திருத்தலங்களில் சுயமாய் விபூதி விளைகின்றது. இத்திருநீறு ஞானம், நோய் நீக்கம், பூத, பிசாச நீக்கம் முதலிய நலன்களை நல்குகின்றன.

கங்கைக்கரை வில்வகானன மருதைப்பதி கதிர்கா
மங்கைத்திரு நீற்றாமலை யண்ணாமலை மதில்சூழ்
சங்கைக்குறுங்குடி யாமிவை தனிலே விளை நீற்றைச்
சங்கைக் கர மாலுந்தரித்தார் மண்ணென லாமோ.

விபூதி அபிஷேகம்

விநாயகர், சிவபெருமான், உமா தேவியார், வீர பத்திரக் கடவுள், வைரவர், முருகன் முதலிய சிவமூர்த்திகளுக்கு விபூதி அபிஷேகஞ் செய்தல் விதி ஆகும். தொடக்கத்தில் பஞ்ச கவ்யமும், முடிவில் திருநீறும் அபிஷேகஞ் செய்ய வேண்டும். ஹ்ருதய மந்திரத்தால் பாத்ய ஆசமன அர்க்கியங் கொடுத்து, பெருவிரல் மோதிர விரல்களால் திருநீற்றை எடுத்து மந்திர நீருடன் சேர்த்து தத்புருட மந்திரத்தால் அபிஷேகம் செய்தவர், செய்வித்தவர் அதனைத் தரிசித்தவர் யாவரும் திருவருள் உருவினராய் சிவானந்தப் பெருவாழ்வு பெறுவார்கள்.

Koviloor Digital Library

இருதயம் புருடங்கூறி இறுதியில் இயற்றும் நீற்றுப்
பெருமுமுக்கியற்று வித்தோர் இயற்றினோர் காட்சி பெற்றோர்
கருவறை நீற்று நீற்றுக் கருணையார் பவனமேனி
மருவரை யவரை யார்ந்து மருவும் இத்தரையில் வாரார் – அபிஷேக மாலை.

திருநீற்றைப் பற்றி வேதத்திலும் பிற நூல்களிலும் வருபவை

"பூத்யைநப்ரமதி தவ்யம்" – தைத்ரீய உபநிஷத்
விபூதியை அலட்சியம் செய்யக்கூடாது.

காத்யாயந முனிவர் சொன்னதாவது :

ச்ராத்தே யக்ஞே ஜபேஹோமே வைச்வ தேவே
சுரார்ச்சநே । த்ருத த்ரிபுண்டர பூதாத்மா
ம்ருத்யுஞ் ஜயதி மாநவ : ॥

ச்ராத்தம் செய்யும் போதும், யாகம் செய்யும் போதும், ஜபம் செய்யும் போதும், ஹோமம் செய்யும் போதும், வைச்வதேவம் செய்யும், தேவ பூஜை செய்யும் போதும், விபூதியைத் தரித்துக் கொண்டு பரிசுத்தனாகி யமனை ஜயித்து விடுகிறான்.

லோகாக்ஷி என்ற முனிவர் கூறியதாவது :

த்ரிபுண்டரமாக விபூதியைத் தரித்துக் கொள்ளும் போது ஸ்ரீ பரமேச்வரனை மனதினால் தியானம் செய்து கொண்டு தரிப்பவனான மஹாத்மாவால் மூன்று உலகங்களும் தரிக்கப்பட்டதாக ஆகின்றன.

த்ரிபுண்ட்ரம் தாரயேத்யஸ்து சிவப்ரவண மானஸ ।
பூர்புவஸ்ஸ்த்ரயோ லோகா : த்ருதாஸதேந மஹாத்மநா ॥

சாதாதப முனிவர் அருளியது :

ஸத்யம் சௌசம் தபோஹோம தீர்த்தம் தேவாதி பூஜனம் ।
தஸ்ய வ்யர்த்தமிதம் ஸர்வமயஸ் த்ரிபுண்ட்ரம் நதாரயேத் ॥

சத்யம் பேசுவது, ஆசாரமாய் இருப்பது, தவம் செய்வது, ஔபாஸனை, அக்னி ஹோமங்கள், புண்ணிய தீர்த்த ஸ்நானங்கள் ,தேவ பூஜை முதலியவைகளை விபூதி தரிக்காமல் செய்தால் அவையாவும் வீணாகிவிடும்.

ஸ்மிருதி பாஸ்கரத்தில் :

பாஸநாத் பஸிதம் ப்ரோக்தம் பஸ்ம கல்மஷ பக்ஷணாத் ।
பூதிர் பூதிகரீ பும்ஸாம் ரக்ஷா ரக்ஷாகரீபராம் ॥

மனிதனை ப்பிரகாசிக்கச் செய்வதால் பஸிதம் என்றும், பாவங்களைச் சாம்பலாக ஆக்கி விடுவதால் பஸ்மம் என்றும், மனிதர்களுக்கு ஐசுவரியத்தைக் கொடுப்பதால் பூதியென்றும், சரீரத்தை ரக்ஷிப்பதால் ரக்ஷை என்றும் சொல்லப்படுகிறது.

வேதோக்தமான மந்திரத்தால் செய்யப்பட்ட விபூதியை எப்பொழுதும், மந்திரத்தைச் சொல்லித் தரித்துக் கொள்வதால் சிவஸாயுஜ்யத்தை அடைவான்;

Koviloor Digital Library

த்ரிபுண்ட்ரகம் ஸதாகுர்யாத் மந்த்ர பூதேந் பஸ்மநா ।
வேதோக்தேந விதாநேந சிவ ஸாயுஜ்ய மாப்நுயாத் ॥

க்ரியாஸாரத்தில் :

நேத்ர யுக்ம ப்ரமாணம்வா பாலே தீப்தம் த்ரிபுண்ட்ரகம் ।
கதாசித் பஸ்மநா குர்யாத் ஸருத்ரோ நாத்ர ஸம்சய : ॥

கண்கள் வரையிலும் நெற்றியிலும் மூன்று பட்டையாக, விபூதியை எப்பொழுதாவது தரித்துக் கொண்டால்கூட அவன் ருத்ரனுக் கொப்பாவான். இதில் சந்தேஹமில்லை.

கூர்ம புராணத்தில் :

ஸ்ராஷ்டா ஸ்ருஷ்டிச்சலேநாஹ த்ரிபுண்ட்ரஸ்ய ப்ரசஸ்ததாம் ।
ஸஸர்ஜ ஸலாடம் ஹி த்ர்யக் ஊர்த்வம்ந வர்த்துலம் ॥

பிரம்மதேவன் மூன்று கோடுகளாக விபூதியை த்தரித்துக் கொள்வதைத் தனது படைத்தலின் வியாஜ்யமாய் அதன் பெருமையைக் கூறியுள்ளார். அதாவது நெற்றியை உருண்டையாகப் படைக்காமல் குறுக்கு நீளத்தில் படைத்தது விபூதி மூன்று புண்ட்ரமாய்த் தரிப்பதற்கேயாகும்.

சங்கர ஸம்ஹிதையில் :

யத்ர புஞ்ஜீத பஸ்மாங்கீ மூர்க்கோவா பண்டி தோபிவா ।
ததா புங்க்தே மஹாதேவ : ஸபத்நீகோ வ்ருஷத்வஜ : ॥

படித்தவனோ, படிக்காதவனோ விபூதியைத் தரித்துக் கொண்டு உணவை உட்கொண்டால் அந்த ஆகாரத்தை ஸ்ரீ பார்வதி தேவியுடன் ஸ்ரீ பரமேச்வரன் உட்கொள்ளுகிறார் என்று கூறியுள்ளது.

விபூதியைக் கண்ட பொழுதே பூதாதியர்கள் பயந்து ஓடுவது :

த்ரிபுண்ட்ர தாரிணம் த்ருஷ்ட்வா பூதப்ரேத புரஸ்ஸரா : ।
பீதா ப்ரகம் பிதாச் சீக்ரம் கச்சந்த் யேவ நசம் சய : ॥ – மாநவ புராணம்

விபூதி அணிந்தவரைக் கண்ட பூதம், ப்ரேதம், அசுரர், முதலானோர்கள் பயந்தும், நடுங்கியவாறும் உடனே அந்த இடத்தை விட்டு அகலுவார்கள். பக்தியுடன் விபூதியைத் தரித்துக் கொண்டோர் செல்வமும், பிற நலன்களும் பெற்று நெடுநாள் வாழ்ந்து வருவார்கள். பின்னர் ஒளி நிறைந்த விமானத்தில் அவர்களை ஏற்றித் தேவர்கள் எதிர்கொண்டு அழைத்துச் சென்று இந்திரலோகத்தில் இருத்துவார்கள். அங்கு நலமெலாம் துய்த்த பின் சிவ ஸாயுஜ்யம் பெறுவார்கள். இதை,

பக்தியால் வெண்ணீறந்தோர்
பாரைப் பொது நீங்கிடப் புரந்து
துய்த்த போகத் திறுதியினில்
சோதி விமானத் திலேறி
மைத்த குழலாரொடு மருவி
மகவான் பதத்தில் வாழ்ந்து பின்னர்
சத்தா சயத்தை யொருவு சிவ
சாயுச்சியமே சார்வரால். – பிரமேதத்தர காண்டம்.

Koviloor Digital Library

திருநீறு தரிக்காதவர் செய்யும் தவம் முதலியன, உவர் நிலத்தில் இட்ட விதையானது விணாவது போல பயன்தரமாட்டா. தவம் செய்யும் ஆற்றல் இல்லாதவர் திருநீற்றை உள்ளன்புடன் பூசிக் கொண்டால், தவம், தானம், தருமம், விரதம் முதலிய யாவும் செய்த பயனைப் பெறுவார்கள். பிதிர்தினத்தில் திருநீறு அணிந்தார்க்குச் செய்யும் தான தருமம் மிகுந்த பயனைத் தரும் என்று சொல்லப்பட்டுள்ளது.

நீறுதரியார் தவமாதி நிரம்பச் செயினும் உவர் நிலத்தில்
கூறு பயனின்றாம் பூதிகொண்டோர் வாளாங் கிருந்திடினும்
வீறுதவமாதிகள் நிரம்ப விளைத்தோராவர் தென்புலத்தோர்க்
கேறு தினத்தில் நீறிடுவார்க் இயற்றில் பூசைப் பயனனந்தம். - பேரூர்ப் புராணம்

ஏழு கோடி மந்திரங்களும், எண்ணில்லாத தவமும், கங்கை, யமுனை முதலான புண்ணிய நதி தீர்த்தங்களும், அசுவமேதம் முதலிய வேள்விகளும், திருநீறு தரும் நலத்தை நல்க மாட்டா. தன்னை அணிந்தார்க்கு எல்லையற்ற நலன்களைத் தரும்.

ஏழுகோடி மந்திரமும் எண்ணில்தவமும் இருநிலத்தில்
ஆழமுடைய கங்கைமுதல் அநந்த நதியும் அமரேசன்
வீழுந்துரகம் ஈருமவ்வேள்வி யனைத்தும் விளம்புங்கால்
தாழுஞ் சடையோன் திருநீறு தரும் பேறொன்றும் தாராவே. - பேரூர்ப் புராணம்.

மார்க்கண்டேய மாமுனிவர் நீற்றினை நிறையப்பூசி நித்தலும் நியமத்துடன் சிவபூசை செய்தார். அதனால் பிறவியை வென்றார் என்று அப்பர் சுவாமிகள் கூறுகின்றார்.

நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமஞ்செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டும் அந்தணன் உயிரைக் கொல்வான்
சாற்றுநாள் அற்றதென்று தருமராசற் காய்வந்த
கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கை வீரட்டனாரே.

திருநீறு பூசுவதற்காக, இறைவன் நம் நெற்றியை விசாலமாகவும், நீளமாகவும் படைத்தான். திருநீற்றைக் கையிலெடுத்து, அண்ணாந்து சிவ மந்திரத்தைக் கூறிப் பூசிக் கொள்ள வேண்டும். கீழே சிந்த விடக் கூடாது. செவிகள் மீதும், தோள்கள் மீதும் சிந்தப் பூசிக் கொள்ள வேண்டும்.

பக்தியொடு சிவசிவா என்று திருநீற்றைப்
பரிந்து கையாலெடுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து செவியொடு
பருத்த புய மீது ஒழுக
நித்தமும் மூவிரல்களால் நெற்றியில் அழுத்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை அணுகாது தேக பரிசுத்தமாம்
நீங்காமல் நிமலன் அங்கே
சத்தியொடு நித்தம் விளையாடுவன் முகத்திலே
தாண்டவம் செய்யும் திரு
சஞ்சலம் வாராது பரகதியுதவும் இவரையே
சத்தியும் சிவம் எனலாம்

Koviloor Digital Library

மத்தினிய மேரு என வைத்து அமுதினைக்கடையும்
மால்மருகன் ஆன முருகா
மயிலேறி விளையாடு குகனே புல்வயல் நீடு
மலைமேவு குமரேசனே. – குமரேச சதகம்.

கோள் நீக்கமும், பகைவர்களை வெல்வதும் ஒரு தெய்வ நம்பிக்கையுடைய சைவர்க்குத் திருநீற்றுப் பேற்றால் 'ஆம்' என்று திருஞான சம்பந்த சுவாமிகள் கூறுவார்.

"புத்தரோடமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
மடியாரவர்க்கு மிகவே" – கோளறு பதிகம்.

விபூதி இடாதவர்களைக் கண்டு பயப்படுவதாக அப்பர் சுவாமிகள் அருளிச் செய்கிறார் :

"பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோடு
இறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியினான்தன் தொழும் பரோடு
அழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங்காணா சேவடி
பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சும் ஆறே"

"நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக்கு அழகுபாழ் – மாறில்
உடன் பிறப்பு இல்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி இல்லாமனை." – ஔவையார், நல்வழி – 24

அருச்சுனன் வேதவிதிப்படியும், சிவாகம நெறிப்படியும், ஐந்தெழுத்தை ஓதி திருவெண்ணீறு பூசிக் கொண்டதைப் பற்றி மகாபாரதம் செப்பும்.

ஆசினான் மறைப்படியும் எண்ணில் கோடி
ஆகமத்தின்படியும் எழுத்து ஐந்தும் கூறிப்
பூசினான் வடிவமெல்லாம் விபூதியால் அப்
பூதியினைப் புரிந்த சடைப் புறத்தே சேர்த்தான்
தேசினால் அப்பொருப்பின் சிகரமேவும்
சிவன் இவனே போலும் எனத்தேவரெல்லாம்
பேசினார் பெருஞ்சிலைக்கை விசையன் பூண்ட
பெருந்தவத்தின் நிலை சிலர்க்குப் பேசாலாமோ?

Koviloor Digital Library

"திருவெண்ணீறு அணியாத திருவிலூரும்
....
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே"
"அருநோய்கள் கெட வெண்ணீறு அணியாராகில்" - அப்பர் சுவாமிகள்

"திருவாய் பொலிய 'சிவாய நம' என்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலி யூரரனே" - அப்பர் சுவாமிகள்

திருநீற்றின் மூலம் (தொடக்கம்) தூய பசுவின் சாணம் என்பதைப் பெரிய புராணம் பேசி மகிழும் :

"சீலமுடைய கோக்குலங்கள் சிறக்கும் தகைமைத் தேவருடன்
காலமுமுதும் உலகனைத்தும் காக்கும் முதற்காரணாகும்
நீலகண்டர் செய்ய சடை நிருத்தர் சாத்தும் நீறுதறும்
மூலம் அவதாரஞ் செய்யும் மூர்த்தம் என்றால் முடிவென்னோ"
- 12, சண்டேசுவர - 21.

(நீறுதரும் மூலம் - சாணம்)

திருநீற்றுக்கென உயிர்சேர்த்த நாயனார்

திருவெண்ணீற்றை மெய்ப்பொருள் எனக்கொண்டு உயிர்கொடுத்தும் நாட்டியவர் மெய்ப்பொருள் நாயனார். அம்மட்டோ ஆண்டவன் திருவடி சேருங்கால் வேண்டும் எண்ணமும் செயலும் அதுவே என்பதைக் காட்டி அருளியவரும் அவரே ஆவர். அது வருமாறு:

அரசியல் ஆயத்தார்க்கும் அழிவுறும் காதலார்க்கும்
விரவிய செய்கை எல்லாம் விளம்புவார் விதியினாலே
பரவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர் என்று
புரவலர் மன்றுள் ஆடும் பூங்கழல் சிந்தை செய்தார் - 12, மெய்ப் - 22.

மரத்திலே விளையும் திருநீறு

அரசு, ஆல், அத்தி ஆகிய மூன்று மரங்களில் எடுக்கும் திருநீறு பற்றி சொன்ன திருமுறை :

"அரசுடன் ஆல் அத்தி ஆகும் அக்காரம்
விரவு கனில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தான்பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குலம் ஆகுமே" - திருமந்திரம் 1667
(காரம் - திருநீறு).

Koviloor Digital Library

விபூதி அவசியம் தரிக்கும் காலங்கள்

காலை, உச்சி, மாலையென்று சந்தியா காலம் மூன்றிலும், சூரிய உதய அஸ்தமனத்திலும், நீராடிய உடனும், பூசைக்கு முன்னும் பின்னும், தீட்சை இல்லாதார் தீண்டிய போதும், நித்திரைக்கு முன்னும் பின்னும், பூனை, கொக்கு, எலி, நாய், காகம், பன்றி முதலியன தீண்டிய போதும் பித்ருக்ரியையிலும், யாகத்திலும், ஜெபத்திலும், ஹோமத்திலும், வைசுவதேவம் என்னும் நித்ய கருமத்திலும், சிவபூஜையிலும் அவசியம் தரிக்க வேண்டும். விபூதி தரியாமல் நற்கருமங்கள் பயன்தர மாட்டா. விபூதி தரியாதவருடைய அறிவு, ஆசாரம், சத்தியம், தவம், முதலியனவும் குன்றும்.

"மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண்ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்து
ஏல அஞ்செழுத்தோதி எழுந்தனர்" - 12, திருஞா 208

சிவதீட்சை இல்லாத ஆடவர்களும், பெண்களும், வைதீக வழியொழுகும் சன்னியாசிகளும், பிரம்மசாரியும், வானப்ரஸ்தரும், கன்னிகையும் உச்சிக் காலத்துக்குப்பின் தண்ணீர் கூட்டாமல் உத்தூளனமாகப் பூசிக் கொள்ள வேண்டும். தீட்சை பெற்றவர்கள் காலை, உச்சி, மாலை என்னும் மூன்று காலங்களில் மட்டும் நீருடன் கூட்டி; தரிக்கக் கடவர். மற்றைய காலங்களில் உத்தூளனமாகவே தரிக்க வேண்டும். விலக்கிய காலங்களில் நீறு சேர்த்துத் தரிப்பவராயின் அந்த நீர் மதுவை ஒக்கும் என்று சிவாகமங்கள் செப்புகின்றன.

வடக்கு நோக்கித் திருநீறு தரிப்பது உத்தமம். பெருவிரல், நடுவிரல், மோதிரவிரல் என்ற மூன்று விரல்களைக் கூட்டித் திருநீற்றை எடுக்கவும், தரிக்கவும், கொடுக்கவும் வேண்டும். சமய தீட்சை மட்டும் பெற்றுக் கொண்டவர்கள் காலையில் மட்டும் திரிபுண்டரந் தரிக்க வேண்டும். விசேட தீட்சை பெற்றவர்கள் காலை, மாலையில் மட்டும் த்ரிபுண்டரந் தரிக்க வேண்டும். நிர்வாண தீட்சை பெற்றவர்கள் காலை, உச்சி, மாலைகளில் த்ரிபுண்டரந் தரிக்க வேண்டும். ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்கள் திரிகால சந்தியா நேரத்துடன், அர்த்த ராத்திரியிலும் த்ரிபுண்டரம் தரிக்க வேண்டும்.

ஈர உடையுடனும், ஒரு துணியுடுத்தும், கௌபீனம் உடுக்காமலும், ஆடையில்லாமலும், திருநீறு தரிக்கக் கூடாது. பெருவிரல் அகாரம், நடுவிரல் உகாரம், மோதிர விரல் மகாரம் என்று பாவனை செய்து மூன்று விரல்களால் மும்மூர்த்தி, மூன்று குணம், மூவகை ஆன்மா, மூன்று வேதம், மூவகைத் தீ என்று அநுசந்தானம் செய்து தரிப்பது விசேடமாம்.

விபூதி தரிக்கும் போது நிலத்தில் சிந்தா வண்ணம் பாதுகாக்க வேண்டும். விபூதி எத்துணை அணுக்கள் சிந்துமோ அத்துணை ஆண்டுகள் நரகில் வருந்துவர். வாயைத் திறந்து கொண்டும், தலையை அசைத்துக் கொண்டும், பிறருடன் பேசிக் கொண்டும், பராமுகஞ் செய்து கொண்டும், சிரித்துக் கொண்டும், தலையை அவிழ்த்துக் கொண்டும், நடந்து கொண்டும், கண்ணாடி பார்த்துக் கொண்டும் விபூதி தரிக்கக் கூடாது. திருநீறு சிந்துமாயின், அதனை எடுத்துவிட்டு அந்த இடத்தை நீரால் மெழுகவேண்டும்.

Koviloor Digital Library

சாணத்தின் பெருமை

சாணத்தின் பெயர் கோமயம் என்பதாகும். பசுவின் சாணம் புனிதமானது. சாணம் நச்சுக் கிருமிகளைக் கொல்லும். நாற்றத்தை மாற்றும். அது நாறாது. நாம் உண்ட இடத்தில் சாணம் இட்டுச் சுத்தம் செய்வது, குழந்தைகள் மலசலம் கழித்த இடத்திலும் அவ்வாறு செய்வது நச்சுக் கிருமிகளை மாற்றும் பொருட்டேயாகும். தெருவிலே சாணத்தைத் தெளிப்பார்கள். இது நச்சுக் கிருமிகளை உள்ளே வரவொட்டாமல் தடுப்பதற்காகவே. வீட்டையும் வழிபாட்டு அறையையும் பசுவின் சாணத்தால் மெழுகுவார்கள். சுகாதாரத்துக்கு இன்றியமையாதது ஆகும்.

சாணத்துக்கு நச்சுக் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் உண்டு என்பதை உணர்க. நேர்வாளம் என்ற நச்சுக் கொட்டையை மருத்துவர்கள் சாணத்தில் மூன்று நாள் ஊற வைத்து எடுத்து மருந்துக்குச் சேர்க்கின்றார்கள்.

நமது தாய்மார்கள், ஈயம் பூசிய ஏனத்தில் நவாச்சாரம் பூசப்பட்டதால் அதன் நச்சுத்தன்மையை மாற்ற, அந்த ஏனத்தில் சாணத்தைக் கரைத்து வைத்து சுத்தப்படுத்துகின்றார்கள்.

வீட்டில் உள்ள நச்சுக் கிருமிகளை அழிக்கும் பொருட்டு சாணம் இடுகின்றார்களே? அது போல் நம் உடம்பிலுள்ள நச்சுக் கிருமிகளை அகற்ற வாரத்துக்கு ஒருமுறை சாணத்தைத் தேய்த்துக் குளிக்கலாமா? என்ற வினா எழும். இதற்கு விடை கூறுவதும். வீட்டிலே உள்ள நச்சுக் கிருமிகளைக் காட்டிலும், நம் உடம்பில் நச்சுக் கிருமிகள் அதிகம். ஆதலால் சாணத்தின் ஆற்றலை அதிகப்படுத்த வேண்டும்.

நச்சுகளும், தீய துன்பங்களையும் போக்கும் விபூதி வங்கத்தைப் பார்க்கினும், வங்க பஸ்மத்துக்குப் பெருமை அதிகம். தாம்பரத்தைவிட தாம்பர பஸ்மத்துக்கு ஆற்றல் அதிகம். அதுபோல் சாணத்திலும் சாணத்தின் பஸ்மத்துக்கு ஆற்றல் அதிகம் எனவே, திருநீற்றைப் பூசிக் கொள்ளுவதனால் உடம்பில் உள்ள நச்சுக் கிருமிகள் விலகும்.

திருநீற்றால் பாம்பின் நஞ்சகற்றும் பெருவழக்கு நாலடியாரின் கண்ணும் காண்க :

"கல்லெறிந்தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர் - ஒல்லை
இடுநீற்றால்" பை அவிழ்ந்த நாகம் போல் தத்தம்
குடிமையான் வாதிக்கப்பட்டு. - நாலடி, சினமின்மை - 6.

(இக்காலத்திலும், மந்திரம் வல்லார் அனைவரும் எந்நெறியினராயினும் திருவெண்ணீற்றையே கைக் கொள்கின்றனர். நெறியினர் - சமயத்தினர்.)

பச்சிளங் குழவி முதல் எல்லாருக்கும் நோயாலும் பேய் முதலிய தீய ஆவியாலும், கொடு விலங்கு, நச்சுயிர் முதலியவற்றாலும் துன்பம் அணுகாவண்ணம் செந்நெறிச் செல்வர்களால் அணிவதும் அன்புடன் அணிவிப்பதும் திருவெண்ணீறே. இவ்வுண்மை திருஞான சம்பந்தப் பெருமான் திருத்தோற்றத்து அவர் தமக்குத் திருக்காப்பாகத் திருநீறு அணிவித்தனர் என்பார் சேக்கிழார் சுவாமிகள்:

Koviloor Digital Library

"ஆறுலவு செய்ய சடை ஐயரருளாலே
பேறுலகினுக்கென வரும் பெரியவர்க்கு
வேறு பல காப்புமிகை என்றவை விரும்பார்
திருநீறு நெற்றியின் நிறுத்தி நிறைவித்தார்" – பெரிய புராணம், திருஞான – 12

ஆளுடைய பிள்ளையார் பாண்டியன் சுர நோயினைத் திருநீற்றுப் பூச்சினால் அகற்றியருளி நலமுறத் திருவருள் புரிந்தனர் :

"திருமுகம் கருணை காட்டத் திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கும் ஆற்றல் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமறை தடவ அங்கண் ஒழிந்து வெப்பகன்று பாகம்
மருவுதீப்பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான்" – 12, திருஞான – 770

ஆவிகளின் வினையகல ஆண்டவன் நீறணிதல் :

தினைவளம் காத்துச் சிலம்பெதிர் கூ உய்ச்சிற்றில் முற்றிழைத்துச்
"சுனை வளம் பாய்ந்து துணை மலர் கொய்து
தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி அம்பல
வன்றன் வெற்பிற்
புனைவளர் கொத்பரன்னாயன்ன காண்டும்
புனமயிலே" – 8, திருக்கோ 118

திருநீற்றை கவசமாக அணிவதன் பயனும், அரசர்கள் அணிந்து கொள்வதும்

போர் வீரனை, மாற்றார்விடும் ஆயுதங்கள் உடம்பைத் துளைக்காமல் காக்கும் வஜ்ர கவசம் போல், ஆன்மாக்களை தீவினைகள் தாக்கா வண்ணம் காக்கும் வஜ்ர கவசம் திருநீறு ஆகும்.

"ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்" – திருவாசகம்

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே. – திருமந்திரம்

பழந்தமிழ் வேந்தர்கள் திருமுடியின் கண்முக்கட் செல்வர் திருவடியாம் திருவெண்ணீற்றை அன்புடன் அணிந்து அகமகிழ்வர். அவ்வுண்மை வருமாறு:

நிலவுக்கதிர் முடித்த நீளிரும் சென்னி
உலகு பொதி உருவத்து உயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு – சிலம்பு, காட்கோட்காதை

(சேவடி – திருநீறு : திருவருளுருவம்)

Koviloor Digital Library

ஆதிபகவன் ஞானவடி வழலிற்பூத்து நித்தியமாய்
அணிந்தோர் தமக்கு வசிகரமாய் அருந்தினோர்கட் காரமுதாய்
நீதி அறியும்பசு மலத்தை நீக்கும் ஒரு நற்குறிகாட்டி
நிகழ்பேரின்பக் கடலடி நின்ற புகழ் வெண் திருநீறே

– திருப்போரூர், சிதம்பர சுவாமிகள்

போர்முனைக் கண்ணும் திருநீறு அணிபவர் உய்வர் :

"சடையினர் உடையினர் சாம்பற் பூச்சினர்" – சிலம்பு, காட் கோட் காதை.

ஏனாதி நாத நாயனார் புராணத்து அதிசூரன் வென்றது திருநீற்றால் என்க.

"கண்ட பொழுதே கெட்டேன் முன்பிவர் மேற் காணாத
வெண்திருநீற்றின் பொலிவு மேற் கண்டேன் வேறினி என்
அண்டர்பிரான் சீரடியர் ஆயினார் என்று மனம்
கொண்டிவர்தம் கொள்கைக் குறிவழி நிற் பேனென்று"

– திருமுறை 12 ஏனாதி – 28

திருநீற்றுக் கோல நினைப் பூட்டைக் கண்டு நிலமுறப் பணிந்தனர் சேரர் காவலர் :

"சேரர் பெருமான் தொழக்கண்டு சிந்தை கலங்கி முன்வணங்கி
யாரென்றடினைக் கொண்ட தடியேன் அடி வண்ணானென்னச்
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேன் என்று திருநீற்றின்
வார வேடம் நினைப்பித்தீர் வருந்தா தேகும் என மொழிந்தார்"

– 12, சேரமான் – 19.

பஞ்சாங்க பூஷணத்துட் சிறந்தன சிவ சின்னங்களே

சைவ சித்தாந்தத்தினர் அனைவரும் பஞ்சாங்க பூஷணம் தரித்தல் வேண்டும். அவையாவன உஷ்ணீஷம் (குலைப்பாகை), உத்தரீயம், உபவீதம், விபூதி, உருத்திராக்கம் என்பன. எல்லா ஆபரணங்களுள்ளும் இவ்வைந்தும் சிறந்தன. இவற்றுள்ளும் விபூதி, ருத்திராக்கங்களே சிறந்தன. மற்றைய ஆபரணங்களை விட்டாலும் இவ்விரண்டினையும் விடுதல் கேட்டை விளைவிக்கும். இதனை

"ஏதல்லக்ஷண ஸம்யுக்தோ யுக்த பஞ்சாங்க பூஷணை : |
த்ருதோஷ்ணீஷோத்தரீ யஞ்ச பஸ்மருத்ராக்ஷதாரக : ||"

என்று அம்சுமான் ஆகமம் செப்பும்.

தீக்ஷாங்கம் சிவ சின்னங்களே

பிரதிட்டை, உற்சவம், ஸ்நபனம், சம்பு ரோட்சணம், பிராயச்சித்தம், அபிஷேகம் முதலிய பரார்த்த ஆன்மார்த்தக் கிரியைகளுக்கும், விவாஹம், பும்சவனம், உபநயனம், முதலிய கிரியைகளுக்கும் அங்கமான வன்றி, ஞானாவதி, கிரியாவதி, வியதை, பரிசம், வாசகம், சட்சு, மானசிகம் என்னும் சிவதீக்ஷைகளுக்கும் முக்கிய அங்கங்களாக அணிவன விபூதி ருத்ராக்ஷங்களே.

Koviloor Digital Library

விபூதியின் பெயர் விசேடம்

முன்னர் கூறப்பட்ட காரணங்களன்றி, விபூதிக்கு வேறு காரணத்தாலும் பெயர் பாகுபாடுண்டு. சிவபெருமானின் ஐந்து முகங்களில் இருந்து தோன்றிய ஐவகைப் பசுக்களுள், சத்தியோ ஜாத முகத்தில் தோன்றிய கபில வருணமுடைய நந்தையினிடத்து உண்டானதற்கு விபூதி என்றும், வாமதேவ முகத்தினின்று உதித்த வெண்ணிறமுடைய பத்திரை என்னும் பசுவிடத்தில் உண்டானது பசிதம் என்றும், அகோர முகத்தில் தோன்றிய கருநிறச் சுரபி என்ற பசுவிடத்து பஸ்மம் என்றும், தத்புருடத்தில் தோன்றிய புகை நிறச் சுசீலையின் இடத்தில் உண்டானது க்ஷாரம் எனவும், ஈசான முகத்தில் தோன்றிய சுமனை இடத்தில் உண்டானதற்கு இரக்ஷை என்றும் சொல்லப்பட்டன. அது பற்றி வீராகமும் –

"சத்யோஜாதாத் விபூதிச்ச வாமாம் பசிதமேவச ।
அகோராத் பஸ்ம ஸஞ்ஜாதாத் புருஷாத் க்ஷாரநாமச ॥"

விபூதி ஸம்ஸ்காரவிதி

ஆன்மாக்களாகிய பசுக்கள் ஆணவம், கன்மம், மாயை, வைந்தவம், திரோதம் என்னும் ஐவகை மலங்களாலும் கட்டப்பட்டு இருத்தலால் அவற்றை ஒழித்தற்கு ஐவகைச் சம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டன. அவை தூலம், சூக்குமம், அதிசூக்குமம், காரணம், மகாகாரணம் என்பனவாம்.

தூலஸம்ஸ்காரம்	–	விபூதி தாரணம்
சூக்குமம்	–	உருத்திராக்கதாரணம்
அதிசூக்குமம்	–	யக்ஞோபவீதம்
காரணம்	–	சிவதீக்கையும்
மகாகாரணம்	–	சிவபூசையுமாகும்

இவற்றுள் தூலசம்ஸ்காரம் என்னும் விபூதி சம்ஸ்காரமாவது விபூதி சிவவடிவாகலால் அதனைத் தரிப்பாரும் தனது தேஹத்தை சிவரூபமாகக் கற்பனை செய்து கொள்க.

ஞான வடிவாகவும், ஈசான முதலிய ஐந்து முகமும், ஒன்பது சரீரமும், பத்துத் திருக்கரங்களும், நிவிர்த்தி முதலிய ஐந்து சிரமும், அத்திர முதலிய உறுப்புக்களும் ஆகச் சிவபெருமானங்கம் 38 ஆதலால், தமது தேகத்தும், சிகை, தலை, நெற்றி, கபோலங்கள், காதுகள், அவற்றின் துவாரங்கள், புருவங்கள், கண்கள், மூக்கு, அதன் இரு துவாரங்கள், அவற்றின் பக்கங்கள், நெஞ்சு, உதடுகள், தோள்களின் மூலம், மோவாய், தோள்களிரண்டு, மணிக்கட்டுகள், குய்யம், முழங்கைகள், முழங்கைக் கணுக்கள், கழுத்து, அதன் பக்கங்கள் பின்புறம், விலாப்புறங்கள் என்னும் 38 இடங்களிலும் விதிப்படி தரிப்பதாம். அதனை,

"சிவக்ஞானி சரீரந்து சிவதேஹத்வ கல்பநே
.... ஸ்தான மஷ்டௌ தத :
த்ரிம்சத் பூதி தாரண யோக்யகம்" ॥

என முக பிம்பாகமம் கூறிற்று.

Koviloor Digital Library

விபூதியின் சிறப்புப் பொருள்

விபூதி என்னும் சொல்லிற்கு, வி - மேலான, பூதி - ஐசுவரியம் என்று பொருள் கொள்வது அன்றி, விநாயகன் என்றாற் போலத் தனக்கு மேலான ஐசுவரிய மில்லாதது எனவும் விரிப்பர். இவையன்றி, வீ - சிவபெருமான் ; பூ - பாவனை, தி - அடைதல் என கொண்டு சிவத்துவ பாவனையை விளக்கும் இயல்புடையது என்று சிறப்புப் பொருள் கூறின ஆகமங்கள் அவ்வுண்மையை,

"வேர்பாவநம்ய தோக்யோஷா திக்நோதீதி விபூதி : |
தஸ்மாத் சிவாத்மகத்வம்ச விபூதே : கீர்த்யுதேசதா ||

என வாதுளாகமம் கூறியது.

திரிபுண்டர அதிதேவதைகள்

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களையும் உணர்கின்ற ஞானி யென்பதனையும் விளக்குகிற முக்குறிகளின் அதிதேவதைகளையும் சொல்வாம்.

விபூதி முக்குறிகள்

நடுக்குறி	பக்கக்குறிகள்
1. சிகை - அநாகதசிவம்	வாகீசுவரி, மனோன்மணி
2. சிரம் - ஈசானர்	இந்திரா, தீபிகை
3. நெற்றி - தத்புருடர்	ரோசிகை, மோசிகா
4. மார்பு - அகோரர்	வியாபிணி, ஊர்த்வ காமிணி
5. உக்தி - வாமதேவர்	அநந்தை, வியோம ரூபா
6. 7. முழந்தாள்கள் - சத்யோஜாதர்	அநாதை, அநாச்ரிதை
8. 9. தோள்மூலம் - ஆதிசக்தி	வாமை. ஜ்யேஷ்டை
10. 11. தோள்கள் - இச்சாசக்தி	இரௌத்ரி, காளி
12. 13. மணிக்கட்டுகுள் - கிரியா சக்தி	கலவிகரணி, பலவிகரணி
14. 15. முழகங்கைகள் - ஞானசக்தி	பலப்ரமதனி, சர்வ பூததமணி
16. 17. புருவங்கள் - வலம் - அங்குட்ட புவனேசர்	இடம் - புவனேசர்
18. 19. கண்கள் - ஈசர்	இரகபிங்கேட்சணர்
20. 21. மூக்கு - உத்பவர்	பவர்
22. 23. மூக்கின் துவாரம் - மகாதேவர்	மகாதேசனி
24. 25. உதடுகள் - மேல் - சிகேதனர்	கீழ் - ஏகவீரர்
26. 27. காதுகள் - பஞ்சாந்தகர்	சூரர்
28. 29. ஷி துவாரங்கள் - சம்வர்த்தகர்	சோதி
30. 31. கபோலங்கள் - சண்டர்	கிராதேசர்
32. மோவாய் - ஏகசீவர்	
33. 34. கழுத்து - அநந்தர்	அஜர், உமாபதி
35. 36. பிருட்டம் - ப்ரசண்டர்	உக்ரர், உருத்திரர்
37. 38. விலாப்புறங்கள் - ஸ்ரீ கண்ட ருத்திரர்	பார்வதி

Koviloor Digital Library

வலப்பக்கம் முதலாகத் தரிக்க வேண்டும். நாசி, செவிகளின் துளைகள், உதடுகள் என்னும் ஆறு நீக்கி முப்பத்திரண்டு இடங்களில் மஹா சைவர் விபூதி தரிக்க. அது 32 கலைகளின் பாவனைக்காகும். அனுசைவர்க்கு 25. அந்திய சைவருக்கு 16. அவாந்தர, பிரவர சைவர் என்பவர்களுக்கு 6, ஏனைய சைவருக்கு ஒன்றுமாகத் தானங்கள் (விபூதி இடும் இடங்கள்) கூறப்பட்டன.

த்ரிபுண்டர அளவு

பிராமணர் எல்லா இடங்களிலும் 6 அங்குலப் பிரமாணமும், அரசர் 4 அங்குலப் பிரமாணமும், வைசியர் 2 அங்குல அளவும், வேளாளர் ஓர் அங்குல அளவாகவும் த்ரிபுண்டரம் தரிக்க வேண்டுமாம். வேறு விதமான விதியும் உண்டு. அது வருமாறு : நெற்றி, மார்பு, இருதோள்கள் இந்த இடங்களில் 6 அங்குல நீளமும், மற்ற இடங்களில் ஓரங்குல நீளமுமாக இடுக. அளவு கூடினும், குறையினும் குற்றம். திருநீறு தரிக்கும் போது த்ரிபுண்டரம் இடையில் துண்டித்தல், அதிகம் நீங்குதல் பிரிவு இல்லாதிருத்தல் கூடாது.

அறவொன் றுடனொன்றணுகல் நனி
அகறல் வளைதல் இடையறுதல்
பிறவு மொழிய அணிநீற்றில்
பேணுமளவு நுதல் உரம்தோட்கு
உறுமங்குலமு விரண்டாகும்
ஒழிந்த உறுப்புக் கொன்றேயாம்
இறு மெல்விடையால் திரிசூலத்
தெழிலார் பூதியிடலுமாம் - பேரூர்ப் புராணம்

திருநீற்றின் அளவு

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் விபூதி தரிக்குமிடத்து, பிராமணர் ஒரு கழஞ்சு விபூதியும், க்ஷத்ரியர் ஒன்றரைக் கழஞ்சும், வைசியர் இரண்டு கழஞ்சும், வேளாளர் இரண்டரைக் கழஞ்சும் கொள்ள வேண்டும். அவ்வப் பெண்களும் இவ்வளவே கொள்ளக் கடவர். ஒரு கழஞ்சு என்பது பன்னிரண்டு பணவெடை உள்ளது. (அதாவது 5 கிராம் 300 மில்லி அளவாகும்).

விபூதி வாங்கும் விதி

ஆசாரியர் ஆயினும், சிவனடியார் ஆயினும் விபூதி கொடுப்பின் அவர்களை மூன்று தரமாயினும், அல்லது ஐந்து தரமாயினும் விழுந்து வணங்கி, எழுந்து கைகூப்பி, இரண்டு கைகளாலும் வாங்கி, முகத்தை மாறியிட்டுத் தரித்தல் வேண்டும். அதன் பிறகு முன்போலவே மீண்டும் வணங்க வேண்டும். குதிரை, சிவிகை, ஆசனம், அம்பலம், திண்ணை என்பவற்றிலிருந்து வாங்குதல் ஆகாது. விபூதி கொடுப்போர் கீழ்நிற்க தான் மேலிருந்து வாங்குவது ஆகா. சிவபக்தி இல்லார் ஈவதும், பொருட்குக் கொடுப்பதும், மதுமாமிச பக்ஷண முதலிய ஆசாரம் இல்லாதவர் செய்தலும் ஆகிய விபூதிகள் வாங்குதல் கூடாது.

Koviloor Digital Library

தரிக்கக்கூடாத விபூதிகள்

ஒரு கையால் வாங்கிய விபூதியும், விலைக்கு வாங்கிய விபூதியும், சிவதீட்சை இல்லாதவர் கொடுத்த விபூதியும், கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், பொன்னிற விபூதியும் தரிக்கலாகாது. சிவதீக்ஷை இல்லாதார் கொண்டு வந்த விபூதிப்பிரசாதத்தை ஒரு பாத்திரத்தில் வைப்பித்து, அதனைப் பத்திர புட்பங்களால் அருச்சித்து நமஸ்காரஞ் செய்து எடுத்துத் தரித்தல் வேண்டும். தீக்ஷை முதலியவற்றால் தம்மினின்றும் உயர்ந்தவராக இருப்பின் அவரை நமஸ்கரித்து வாங்கித் தரித்தல் வேண்டும். ஆசாரியராயின் மூன்று அல்லது ஐந்துதரம் நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு வாங்கி தரித்து பின்னரும் நமஸ்கரிக்க வேண்டும்.

விபூதி, யாருக்கு எதைக் கொள்வது நலம்

சிவபெருமான், உமை, விநாயகர், கந்தர் வைரவர், வீரபத்திரர் என்னுங் கடவுளரது யாகசாலையிலே, உற்சவ முதலிய காலங்களில் வெந்து விளங்கிய திருநீறு அந்தணர் முதலிய மூவர்க்குரியதாம். திருக்கோயிலின் கண்ணும், திருமடங்களிலுமுள்ள திருமடப்பள்ளியிற் பாகஞ் செய்ததனால் உண்டாகிய திருநீறு உழவர்க்காம். காட்டுத் தீயிலே இயல்பாக விளைந்த திருநீறு மற்றோருக்கு உரியதாகுமாம்.

(குறிப்பு : மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் உடனுறை சொக்கநாதர் ஆலயத்தில் மடப்பள்ளி சாம்பற் விபூதி வழங்கப்படுதல் கேள்விப்பட்ட ஒன்று.)

இறைவன் திருநீறு அணிந்து மகிழ்ந்தாடுதல்

இடையிடையே எவரானும், அடக்க முடியாத இன்னா செய்யும் கொடியோரை நல்வழிப்படுத்த இறைவன் அருள் தோற்றமுற்று முறை செய்யுங்கால் ஏற்படும் படுகளத்து அவரெல்லாம் மாள்வர். அச்சாம்பலை அணிந்து ஆடுவன் ஆண்டான். அது பற்றி:

மண்டமர் பலகடந்து மதுகையால் நீறணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணை எழில் அணை மென்தோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ.

– கலித்தொகை, கடவுள் வாழ்த்து.

"நீறு தாங்கிய திருநுதலானை" – சுந்தரமூர்த்தி சுவாமிகள்
(நுதல் – நெற்றி)

இறைவன் திருநீறு அணிவதன் காரணம்

நோய்வாய்ப்பட்ட குழந்தைக்காக, தாய் மருந்து உண்பது போல, நமது வினை தீர நம்தாயும் தந்தையுமான இறைவன் திருநீறு பூசிக் கொள்ளுகின்றார் என்பதாகும்.

"நினைவொடு பணிபவர் வினை துகள்பட எதிர்
நினைந்து திருநீறணிந்த தொருபால்" – கொலுவகுப்பு

Koviloor Digital Library

திருநீற்றுப் பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீற
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே

பூச வினியது நீறு புண்ணி மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
நேசம் புகழ்வது நீறு திருவால வாயான திருநீறே

அருத்தம் தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப்படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் திருவால வாயான திருநீறே

Koviloor Digital Library

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங் குந்திரு மேனியால் வாயான் றிருநீறே

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து வாயான் றிருநீறே

ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

Koviloor Digital Library

சடையின் பெருமை

முத்து மாலையணிந்த மார்பினளே ! நமது அழகிய உறுப்புக்களில் உயர்ந்தது, நெருப்பை யொத்து ஒளிவீசும் சடை. மூன்று உலகத்தவரும் வியப்படையுமாறு அச்சடை திருமுடியிலே விளங்கும் தோற்றமுடையது. அரசர்க்குரிய அடையாளத்தை அணிந்தவரையும் அரசர் என்றே வேகமாக மதித்து எவரும் உபசாரங்களைச் செய்வார்கள் அதுபோல எமது சடைதரித்த புனிதர்களையும் தேவர்களும் மனம்வாக்குக் காயங்களால் வழிபாடு செய்வார்கள். அவரிடத்து செய்யும் வழிபாடு எமக்கு உவப்பாகும்.

நீண்ட சடையோடு கூடியவன் சடை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இலிங்கமாகும். அவ்வாறு சடையால் கூடிய தலையினனுக்கு முன் ஆயிரம் தலைமுறையினரும் பின் ஆயிரந் தலைமுறையினரும் பாவம் நீங்கி சிவலோகம் அடைவர்.

சடை தரித்த ஒருவனைக் கண்டு வணங்காதவன் செய்தவம் எல்லாம் சிதையும். சடை தரித்தவனைக் கண்டு வணங்கினால், வணங்கியவன் பாவியே ஆனாலும் முதிர்ந்த தவமுடையவனாய் உயர்ந்த செல்வங்களும் பொன்னும் பெற்று மேம்படுவான்.

மரகதவல்லியே ! ஒளிமிக்க சடையில் படிந்த நீர் ஒரு துளி ஒருவன் மேல் தெறித்தாலே அவனைப் பற்றிய பேய், பூதம், துஷ்ட தேவதைகளால் வரும் பிணி பாதகங்கள் துன்பங்கள் முதலிய யாவும் சிதைந்து ஓடும். ஆகையால் சடையோடு கூடியவன் எம்மில் வேறு அல்லன்.

புரிந்த சடைமுடி தரித்தோர் புனிதர். அவர் குலத்தில் பிறந்தோர் பிரமகற்பம் நூறு வரை சிவலோகத்து வாழ்வார்கள். உமையே, வேணி அணிந்தார் பெருமை விளம்ப அரியது. தேவர்களாலும் அவர் பெருமை அளக்க முடியாதது. – (பேரூர்ப் புராணம்)

தில்லை நடராசப் பெருமானது திருஉருவத் தத்துவம்

தில்லையில் கனகசபையின் கண்ணே பெருமான் உரு, அரு, அருஉரு என்னும் மூவகை வடிவங்களில் விளங்குகிறார்.

1. நடராசப் பெருமான் – உருவம்
2. இவர் அருகில் உள்ள சிதம்பர ரகசியம் – அருவம்
3. இங்கு நித்தம் ஆறுகால பூசையில் முதலில் அபிஷேகம் செய்விக்கப்படும் ஸ்படிக லிங்க மூர்த்தியாகிய அழகிய திருச்சிற்றம்பல உடையவர் – அருஉருவம்

காணமுத்தி தரும் இத்தில்லையின் கண்ணே சிற்பரவியோமமாகிய பரவெளியில் ஆனந்தக் கூத்து இயற்றும் ஆடல்வல்லானின் (சபா நாயகரின்) திருவடிவம் திருஐந்தெழுத்தால் (ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தால்) ஆனதாகும்.

சிதம்பரம் அல்லாத மற்ற திருத்தலங்களில் உள்ள ஆடல்வல்லானது திருவடிவங்கள் மகேஸ்வர வடிவங்களில் ஒன்றாகுமே தவிர ஞானாகாய சிதம்பர சபாநாயகரல்லர். இவ்வடிவங்கள் பஞ்சப்பிரமம், ஷடாங்க மந்திர வடிவாய் அமைந்தவை. ஆனால் தில்லை நடராசப் பெருமானோ (சபாநாயகரோ) தத்துவாதீத மூர்த்தியாய் திருஐந்தெழுத்தே வடிவானவர்.

இவ்வடிவ விளக்கம்

நகரம் – திருவடி	மகரம் – உந்தி
சிகரம் – தோள்	வகரம் – திருமுகம்
யகரம் – திருமுடி	

– தூல பஞ்சாக்கரம்

Koviloor Digital Library

ஆடும்படிகேள் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியில் நகரம் கூடும்
மகரம் உதரம் ; வளர்தோள் சிகரம் ;
பகரும் முகம் வா ; முடியப்பார். (உண்மை விளக்கம் - பா. 32)

மற்றும் ஓங்காரமே (பிரணவமே) திருவாசி 51 அக்ஷரங்கள். திருவாசியின் சுடர்கள்.

ஓங்காரமே நல்திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் - ஆங்காரம்
அற்றார் அறிவர் ; அணி அம்பலத்தான் ஆடலிது
பெற்றார் பிறப்பற்றார்பின். (உண்மை விளக்கம் - பா. 34)

மற்றும் முத்திபஞ்சாக்கர (சிவயநம) வடிவில்

சிகரம் - உடுக்கை
வகரம் - வீசியகை
யகரம் - அபயகரம்
நகரம் - அனல் ஏந்தியகை
மகரம் - ஊன்றிய திருவடி

சேர்க்கும் துடி சிகரம், சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் ; பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம், அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான். (உண்மை விளக்கம் - பா. 33)

இன்னும் இத்திரு ஐந்து எழுத்து வடிவாய தில்லைக் கூத்தன் ஆடும் திருக்கூத்து ஐந்து தொழிலை (பஞ்ச கிருத்தியங்களை) ஆற்றுகிறது.

துடி (உடுக்கை ஒலி) - படைத்தல்
அபயகரம் - காத்தல்
அனல் (தீ) - அழித்தல் (இளைப்பு)
ஊன்றிய திருவடி - மறைத்தல்
தூக்கிய திருவடி - அருளல்

தோற்றம் துடியதனில் ; தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம், முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு. (உண்மை விளக்கம் - பா. 35)

நடராஜப் பெருமானின் ஆறுகால அபிஷேகம் பற்றிய பாடல் :

சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்திரமாம்
சத்ததனு ஆதிரையும் சார்வாகும் - பத்திவளர்
மாசி அரி கன்னி மருவு சதுர்த்தசி மன்று
ஈசர் அபிடேகத் தினமாம்.

1. முதற்காலம் மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரம்
2. இரண்டாம் காலம் மாசி மாத சதுர்த்தசியாகும்
3. உச்சிக்காலம் சித்திரை மாத திருவோணம்

Koviloor Digital Library

4. சாயங்காலம் ஆனி மாத உத்திரம்
5. உபசந்திகாலம் ஆவணி மாத சதுர்த்தசி
6. அர்த்த யாமம் புரட்டாசி மாத சதுர்த்தசி

சோம சூத்ர ப்ரதக்ஷிண விதி

பிரதோஷ வழிபாட்டில் சோம சூத்ரப் பிரதக்ஷணம் என்னும் தனிப்பட்ட பிரதக்ஷணம் அடங்கியுள்ளது. பிரதக்ஷணம் என்பது சிவ வியாபகம் ஆன்மாவில் பதியும் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடாகும்.

முதலில் இடப தேவரைத் தரிசிக்க வேண்டும். அங்கிருந்து சண்டேசுரரைத் தரிசித்துச் சென்ற வழியே திரும்பி வந்து மீண்டும் இடப தேவரைத் தரிசிக்கும் பிரதக்ஷண முறையைக் கொண்டுள்ளது சோம சூத்ரப் பிரதக்ஷணம்.

இதன் விபரங்களைக் கீழே குறிப்பிட்டுள்ள சுலோகத்தாலும், அருணகிரி புராண வலம்புரிச் சருக்கத்தாலும் கடம்பவன புராண இலீலாசங்கிரகத்தாலும் அறிந்து கொள்ளலாம். இவ்வழிபாடு அந்தக் கோவிலின் அமைப்பை அனுசரித்துச் செய்து கொள்வது வசதியாக இருக்கும்.

சுலோகம் :

வ்ருஷம் சண்டம் வ்ருஷம் சைவ
ஸோ மஸ்த்ரம் புனர் வ்ருஷம்
சண்டஞ்ச சோம ஸ்த்ரஞ்ச
புனர் சண்டம் புனர் வ்ருஷம்

நந்தியிடத்துப் புறப்பட்டுச் சண்டேசுவரர் வரையில் சென்று மீண்டும் நந்தி வரையில் வந்து மீண்டும் நந்தியிடமிருந்து சண்டேசுவரர் வரையில் செல்லுதல் சோம சூத்ரப் பிரக்ஷணம் எனப்படும்.

அருணகிரி புராணம் வலம்புரிச் சுருக்கம்

"தெரிசித்துத் திடவிடையைச் சென்றிடஞ் சண்டேசன்
திருவடியைத் தெரிசித்து மீண்டு திடவிடையைத்
தெரிசித்துச் சென்று வலஞ்சோம திசைசேர்ந்து
மீண்டிடபந் தெரிசித்துத் திகழ்சண்ட னடியைத்
தெரிசித்துப் பராசத்தியெனும் சோமஞ் சேர்ந்து
மீண்டுதிறற் சண்டனடி தரிசித்து விடையைத்
தெரிசித்துச் சிவலிங்கந் தெரிசித்துப் பணிக
வீதுசோம சூத்திரமொன் றனந்த பலஞ்செயுமே"

Koviloor Digital Library

கடம்பவன புராணம் : இலீலாசங்கிரக அத்தியாயம்

"விடை சண்டன் விடைசோம சூத்திரப்பென்
விடைதொழுது விளங்கும் சண்டன்
புடை கொண்ட சோமசூத் திரமீண்டுஞ்
சண்டன் பழ விடையைப் போற்றி
நடை கொண்ட பேரன்பின் வணங்கினொரு
வலமிவ் விதிநன்காச் செய்யின்
அடைகொண்ட பிரதோடத்தடிக் கொரய
மேதம் வினையனைத்தும் போமால்."

பிரதோஷ வழிபாடு செய்தவர்கள், பிரதோஷ வழிபாட்டின் பயன்

"இயக்கர் கின்னரர் யமனோடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலிவானரம் நாகம்
வசுக்கன் வானவ தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை
யர்ச்சித் தாற்பெறு மாரருள்கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி யடைந்தேன்
செழும் பொழிற் றிருப்புன் கூருளானே." – சுந்தரர் மூர்த்தி சுவாமிகள்.

Koviloor Digital Library

உருத்திராக்க விசிட்டம்

முத்துமணி, பவளமணி, பொன்மணி, மாணிக்கமணி, நீலமணி, தாமரைமணி, பளிங்குமணி, புத்திர தீபமணி சங்குமணி முதலாய பலவகை மணிகளினும், சிவபெருமானது கண்மணியாகிய உருத்திராக்க மணியே சிறந்தது. புத்திர தீபமென்பது ஓர்வகை இலந்தைக்காய். இதனைப் பத்திராட்சம் என்று வழங்குதலு முண்டு.

சைவ சமய நெறி

உண்டு மணிகள் பலவு மவற்றுள்ளுங்
கண்டி விசிட்ட மெனக் காண்.

உருத்திராக்க வரலாறு

முற்காலத்திலே தாரகன் என்னும் அசுரன் எந்தையாகிய கந்தவேளாற் கொல்லப்பட்டபின்பு, அவன் புத்திரர்களாகிய தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன் மாலியென்னு மூன்றசுரர்களும் வரபலத்தினால் முறையே பொன்மதில, வெள்ளிமதில், இருப்புமதில் என்னும் மூன்று நகரங்களைப் பெற்றுச் சிவபத்தியுடையராய்ச் சிவபூசை யாதின செய்தும், தேவர்கள் யாவருந் தமது தந்தையைக் கொல்லு வித்தாராகலின் பழிக்குப் பழிவாங்க நினைந்து வருத்துவாராயினர். அத்துன்பங்களை யொல்லாஞ் சகிக்காத விஷ்ணு, பிரமன் முதலிய தேவர்கள் யாவருஞ் சென்று, சிவபெருமானது திருச்சந்நிதானத்தை அடைந்து முறையிட்டுப் புலம்பினர். அதனைத் திருச்செவியாற் கேட்ட அளவிலே, பரமநாதனாகிய சீகண்டபரமசிவன், அடைக்கலம் புகுந்த தேவர்களை நீக்காதுகாத்தலும், தம்மீது அன்புடையராய்ப் பூசையாதியன செய்தொழுகும் அசுரரை யொறுக்காது காத்தலும் முறையாமதலின் மௌனங் கொண்டவராய், தேவர்களின் பெருந்துன்பைத் தமது திருவுளத் தடைத்து இரக்கமுற்று, அவர் துன்பம் நீங்கு மெல்லையை நோக்கி, ஆயிரந் தேவவருடமளவுந் தமது மூன்று திருக்கண்களையும் மலர்த்திக் கொண்டிருப்ப, அவைகளினின்றும் நீர் பொழிந்தன. சூரிய வடிவாகிய வலக்கண் பொழிந்த நீரிலே பன்னிரண்டு உருத்திராக்க மரமும், சந்திர ரூபமாகிய இடக்கண் பொழிந்த நீரிலே பதினாறு உருத்திராக்க மரமும், அக்கினி யுருவாகிய நெற்றிக்கண் பொழிந்த நீரிலே பத்து உருத்திராக்கமும் உதித்தன. இடக்கண்ணில் வெண்ணிற வுருத்திராக்ஷந் தோன்றிற்று. வலக்கண்ணினின்று கபில நிற உருத்திராக்கமும், அதினின்று செந்நிற உருத்திராக்கமும், அதினின்று பொன்னிற வுருத்திராக்கமுந் தோன்றின. நெற்றிக் கண்ணிற் பொழிந்த நீரினின்றும் கருநிற வுருத்திராக்கந் தோன்றிற்று. அவைகளுள் ஒவ்வொன்றையுஞ் சத்தி, விஷ்ணு, பிரமன், சத்தமாதர்கள், அட்டவித்தியேசுரர், திக்குப்பாலகர், ஏகாதசருத்திரர், வாசுதேவர் முதலிய பன்னிருவர், சதருத்திரர், அட்டவசுக்கள், அசுவினி தேவர்கள், துவாதசாதித்தர்கள், ஆதிசேடன், முனிவர் முதலிய கணங்கள் யாவரும் பிரீதியாகக் கேட்டுச் சிவபெருமான் ஆஞ்ஞைப்படி தரித்துக் கொண்டனர்.

Koviloor Digital Library

உருத்திராக்க உபநிடதங்கள்

கண்டியின் பெருமை நூற்றெட்டு உபநிடதங்களுள் திரிபுரதாபினி யுபநிடதம், திரிபுரோபநிடதம், சாபால உபநிடதம் முதலியவற்றில் ஆங்காங்குச் சிறப்பித்துச் சொல்லப்படினும், சிறப்பாக உரைக்கும் இரு உபநிடதங்கள் உள்ளன. அவை உருத்திராக்க சாபால உபநிடதம், அக்ஷமாலிகா உபநிடதம் என்பன. இவ்விரண்டும் உருத்திராக்கத்தையும் மாலையும் பற்றியே உரைப்பன வன்றி வேறொன்றனையும்ட எடுத்து உரைக்காவாம். இத்துணை மகிமையுடைய உருத்திராக்கமே முத்திசாதனம் என்பது பெறப்படும்.

உருத்திராக்க சாபால உபநிடதம்

முன்னர்க் கூறப்பட்ட இரு உபநிடதங்களுள் ஒன்றாய உருத்திராக்க சாபால உபநிடதம் எண்பத் தெட்டாவது உபநிடதமாயுள்ளது. சாமவேத பாகமாய் விளங்குவது. புசுண்ட மகாமுனிவர்க்குக் காலாக்கினி ருத்திர பகவானாலே கூறியருளப்பட்டது.

(ஓம் !! அதஹைநம் காலாக்நி ருத்திரம் புசுண்டப் பப்பிரச்சகதம் ருத்திராக்ஷோத் பத்திஸ்தத்தாரணாத் கிம்பல மிதிதங்கோவாச பகவான் காலாக்நி ருத்திர : !! திரிபுர வதார்த்தமகம் நிமீலி தாக்ஷோபவம்) என்று தொடங்கிச் சிறப்பிக்கின்றது. இது அரிய உருத்திராக்கத்தின் தோற்றம், வகை நிறம், தரிசன பலம், உச்சாரணபலம், பரிச பலம், தாரணபலம், முகவகை, அவற்றினுயர்வு, பாவ நிவாரணம் முதலாயினவற்றை எடுத்துரைப்பது. விபூதி யுபநிடதமாகிய பஸ்மசாபால உபநிடதத்தை எண்பத்தேழாவதாகவும், இவ்வுருத்திராக்ஷ சாபால உபநிடதத்தை எண்பத்தெட்டாவதாகவும் வைத்து, முக்திகோபநிடதம் சிறப்பித்துப் பிரதி பாதித்தமையால், இவ்விரண்டுமே முத்திக்கு இன்றியமையாச் சாதனமென்பது பெறப்பட்டது.

அக்ஷமாலிகா உபநிடதம்

இது அறுபத்தேழாவது உபநிடதம் இருக்குவேத பாகமாயுள்ளது. பரமகம்ச பரிவிராச கோப நிடதத்திற்கு முந்த சந்நியாசிகளானும் இதுவொன்றே தள்ளத்தகாத முத்திரையென்பது போதரும். இது, புதுச் சந்நிதியென்னுந் திருக்கோயிலில் எஞ்ஞான்றும் நீங்கா தெழுந்தருளும் குகக் கடவுளைப் பணிந்து கேட்ட பிரமற்கு, அவரால் உபதேசிக்கப்பட்டது உருத்திராக்க மாலையின் வகைகளையும், மாலையையணிந்தார் பலன்களையும், மாலை செய்யும் விதிகளையும் பிரதிட்டை விதிகளையும், அதற்குரிய மந்திரங்களையும், வேகர மிறுதியாகவுள்ள எழுத்துக்கள் முதலில்வரும் மந்திரங்களோடு உருத்திராக்ஷ பூசையையுங் கூறுகின்றது.

'ஓம் !! அதப்பிரசாப திர்க்குகம் பப்பிரச்ச
போப்பிரஹ்மந் நக்ஷமாலா பேதவிதிம்ப் ப்ரூஹீதி
சாகிம் லக்ஷணாகதி பேதா அஸ்யாம் காநி சூத்ராணி

என்று தொடங்கிச் சிறப்பித்துப் பேசுகின்றது. இங்ஙனம் நான்கு வேதங்களாலும் வேதாந்தங்களாலும், சிவாகம சித்தாந்தங்களானும் விசேடித்ததென வெடுத்துப் பேசப்பட்ட உருத்திராக்கத்தை மெய்யன்புடன் தரிப்பவர் யாவரேயாயினும் அவர் சிவனே யாவர்.

Koviloor Digital Library

உத்திராக்க மகிமை

உருத்திராக்கந் தரிப்போர் எக்குலத்தவர் ஆயினுஞ் சீவன் முத்தரே யாவர். இழந்த நாய் தரிக்கப் பெறினும் அது மேலாங்கதியைப் பெறும். கங்கை, யமுனை, நருமதை, சிந்து, சோணநதி, துங்கபத்திரை, காவிரி, தாமிரபரணி முதலிய தெய்வநதிகளினும் புண்ணிய நதிகளினும் மூழ்குதல், பரிமேதம், சோடசீயம், வாசபேயம், அக்கினிட்டோமம் முதலிய யாகங்கள் செய்தல், பஞ்சாக்கினி மத்தியினின்று அருந்தவம் புரிதல், தலயாத்திரை செய்தல், மூர்த்தி தரிசன சேவை செய்தல், முப்பாணிரண்டு அறமியற்றல், துலாபுருட முதலிய தானங்களியற்றல் என்னு மிவை முதலியவற்றால் வரும் பயன்களை யெளிதினீவது இவ்வுருத்திராக்கமேயாம். இதனைத் தரிக்காமற் செய்யப்படும் ஓதல், ஈதல், வேட்டல், சிவபூசை, நீராடல், சந்தியாவந்தனம், பிதிரர் கிரியை, தருப்பணம், விவாகம், கிருகப்பிரவேசம், கருப்பாதானம் முதலிய கோடசக் கிரியைகள் எயும் பிரயோசனத்தைக் கொடுக்காவாம். இதனை யணிகின்றவரிடத்துச் சிவபெருமான் என்றுஞ் சாந்நித்தியரா யிருப்பர். அவர் தங்கிடமும் முத்தித் தலமாகும். அவரைத் தரிசித்த வருந் தேவர் ஆவார் என்று சிவாகமங்கள் செப்புகின்றன. வேதங்களை யெல்லாம் நன்கறிந்த பிராமணன் ஆயினும், விபூதியுடன் இவ்வுருத்திராக்கத்தையுந் தரியாது விடுவனேல், அவன் நாய்க்கடுவான் எனப்படுவான். அவன் எவ்விதயாகங்களைச் செய்யினும் அவற்றாற் பலன் அடையான் என்று உபநிடதமாகிய வேதாந்தங் கோஷிக்கின்றது.

கண்டிகை மணி விழுங்குதல்

உருத்திராக்கம் தன்பெயரை உச்சரிப்பினும், தன்னைத் தரிசிக்கினும், பரிசிக்கினும், தரிக்கினும் பெரிய பயன்களையளிப்பதன்றி, உண்ணினும் பேரின்பளிக்கும் என்று வேதாகமங்கள் கூறும். இறக்குங் காலத்தில் ஒருவன் ஒருருத் திராக்கத்தை விழுங்கி யிறப்பனேல், அவன் பிறவினடோறு மீட்டிய பெரும்பவங்கள் தொலையப் பெற்றுப்பரிசுத்தனாய், உருத்திர லோகத்தை யடைந்து ஆங்குள்ள இன்பங்களை யநுபவித்து, பின்னர்ச் சிவசாயுச்சியத்தை யடைவன். அது,

காய மொருவும்போ தோர்கண் டியை விழுங்கி
மாயுநர்தா மாய மனத்தின்றி – யேய்வ
ருருத்திரலோ கத்தி னுதிப்பினுமீங் கேயா
சரித்தமலன் றாளையடை வார்.

என்ற செய்யுளாற் றெரிகின்றது. மணியை விழுங்குதல் கூடாதாயின், இறக்குங் காலத்தில் கண்டியைக் கழுத்திற்றரித்து இறக்கினும் அந்தப் பெரும்பேறு கிடைக்கு மென்பது திண்ணம். நூற்றெட்டு மணிமாலையை மார்பிற் றரித்து நிருமலராகிய சிவபெருமானது திருவடிகளைச் சிந்தித்து நடப்பவர், ஒவ்வோர் அடிக்கும் ஒவ்வோர் அசுவமேத யாகபலத்தை யடைவர்.

Koviloor Digital Library

உருத்திராக்கம் தோன்றிய காலம்

உருத்திராக்கம் அநாதியே யுள்ளதாயினும், வெளிப்பட்ட தன்மையால் அதன் றோற்றக் காலத்தை யாராயின் திரிபுரசங்காரம் நடந்த காலமேயாம். அது,

(திரிபுர வதார்த்த மகம் நிமீலிதாக்ஷோபவம் ஸ்தேப்யோ ஜலபிந்தவோ பூமௌ பதிதாஸ்தே ருத்ராக்ஷா ஜாதாஸ் ஸர்வாநுக்ர ஹார்த்தாய தோஷாம்) என்ற உருத்திராக்ஷ சாபால உபநிடதத்தாற் தெரிகின்றது.

திரிபுர சங்கார காலம் இராவணன், இரணியன், சூரபன்மன், வாணன், அந்தகாசுரன், சலந்தராசுர வதத்திற்கு முற்பட்ட கால மென்பதனால் துளசி மணித்தோற்றத்திற்கும் எத்தனையோ கற்பகாலம் முன்னராகத் தோன்றிற்றென்று தெரிகின்றது. வேதம் அநாதியாயிருப்ப தொன்றானால் அதிற் சொல்லப்பட்ட கண்மணியும் அநாதியே. துளசிமணி வேத உபநிடதங்களிற் கூறப்படாமையால், இடையில் வந்ததென்பது உண்மையாம். திரிபுர சங்கார காலத்திலே தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன் மாலி என்னு மூவரும் எரியிற்பட்டழியாது உய்ந்து, திருக்கயிலையில்வாயிற் காவலராய் நின்றதன் பின்பு, எண்ணில்லாத இந்திரர்களும், எத்தனையோ பிரமர்களும், பலகோடி விட்டுணுக்களும் இறந்தனர் என்று வேதம் பிரதிபாதிக்கின்றமையால் அக்காலத்தை யளவிட லெவர்க்கு மரியதே.

திருவாசகம் – திருத்தோணோக்கம்

எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுத லெந்தை கடைத்தலைமு னின்றதற்பி
னெண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்.

உருத்திராக்க தானம்

சிவனடியரா யுள்ளார்க்கு உருத்திராக்க மாலையையாவது, மணியையாவது தானஞ் செய்தல் சொல்ல வொண்ணாப் பரம புண்ணியம் ஆகும். சுத்த வித்தைகளிலே சொல்லப்பட்ட துலாபுருட தானம், இரணிய கருப்பதானம், பிரமாண்ட தானம், இரணிய கற்பகதானம், அட்டோத்தர சகத்திர கோதானம், இரணிய விடபதானம், இரணிய வசுவதானம், இரணிய கன்னிகாதானம், இரணியதுவார பாலகத்தானம், சொர்ணரத தானம், பஞ்சலாங்கல தானம், சுவர்ணபூமி தானம், கற்பகலதா தானம், இரணியசத்தாசாகரதானம், இரத்தினதேனு தானம், பொற்கும்ப தானம், சுவர்ண கணபதி தானம், விட்டுணுவிம்ப தானம், திலபதும தானம், திலபருவத தானம், திலதேனு தானம், இலக்குமி தானம், அன்னதானம், சுவர்ண தானம், வித்தியாதானம், சிவிகா தானம், கவிகா தானம், பாதரக்ஷாதி முதலிய தானங்கள் எவற்றினும் இது மிக விசேட முடையது. இத்தானத்திற்கு ஒப்பாகவாவது உயர்வாகவாவது வேறோர் தான முளதென நினைத்தலும் மகாபாவம். தானஞ் செய்வார் அன்புடனே செய்க. மதுமாமிச பக்ஷணமுடையார், சிவதீக்ஷையில்லார், தூர்த்தர் முதலிய அசற் பாத்திரர்க்குத் தானஞ் செய்தலாகா. சற்பாத்திர முடையார்க்குத் தானஞ் செய்தவர் இருவினையினின்றும் நீங்கிச் சிவசாலோக்கிய முத்தியையடைந்து, அங்கிருந்தவாறே பிரதமமகாப்பிரளய காலம் வந்துழிச் சிவபெருமானோடு இரண்டறக் கலத்தலாகிய சிவசாயுச்சிய முத்தியையடைவர்.

Koviloor Digital Library

○ உருத்திராக்க சோதனை.

உருத்திராக்கங்களை வாங்குமிடத்து அவைமுகங்கள், வரைகள் தேய்தலில்லாதன வாகவும், முகமுதலியன விளக்க முள்ளன வாகவும், செய்கை யுருத்திராக்க மல்லாதன வாகவும், இளமை, பிஞ்சு முதலிய பருவங்களில்லாதனவாகவும், கல்லிலக்கண முள்ளன வாகவும் ஆராய்ந்து கொள்ளல்வேண்டும். (உயர்வுடைய பக்கமே முகமும், அது இல்லாத பக்கமே அடியுமாம். முகங்களையிரேகையால் அறிக. சிலர் முகங்களை யுண்டாக்கியும் குறைத்துஞ் செய்துவைத்திருப்பது முண்டு. உருத்திராக்கங்க ளெல்லாவற்றினுஞ் சிறந்தது ஒரு முகமணி. அது கிடைப்பது அருமையினு மருமையே. ஒருவர்க்கு அது கிடைக்குமாயின் அவர் வணங்கா முடியராய் அரசாண்டு சிவகதியை யடைவர். அவருக்கு நோய், வறுமை, பயம், துன்பமுதலியன வில்லை. அங்ஙனமாய ஒரு முக உருத்திராக்க மணியென்று சிலர் முகத்தையழித்தும், செய்கையிற்செய்தும்காட்டுவதுவழக்கம். அவற்றையறியாமையால் ஓர் முகமணி யென்று பலர் நம்பிவாங்கிப் பரிபவப்படுவதுமுண்டு. ஆதலால் தகுந்த உருத்திராக்கத்தை உரைத்துப்பார்க்கின் மேலானபொன் மாற்று இருக்கும். ஒரு முகமணி சோதனை பார்க்கின், ஒரிலக்கம், பதினாயிரம், ஆயிரம், நூறு என்னும் எண்ணவாய உருத்திராக்கங்களுள் ஓர் தொகைமணிகளை, ஒருமுகமணியைக் கீழே வைத்து மேலே குவிக்கின், அது அவற்றையெல்லாந் துருவிச் சென்று மேலே நிற்கும். இங்ஙனஞ் சோதித்துக்கொள்க.

○ உருத்திராக்கத்தின் பெயர்களுங் காரணமும்.

உருத்திராக்கத்தை அக்கம், கண்டி, கண்டிகை, கண்மணியெனச்சொல்வர். மந்திரவாதியின் கண்கள் விடத்தை நீக்குதல் போலவும், மீன்கள் முட்டையிட்டுத் திரும்பித்

Koviloor Digital Library

தங்கண்களாற் பார்த்த மாத்திரத்தில்முட்டைகள் எல்லாம் மீனுருவமடைதல் போலவும், சிவபெருமான் தமது திருக் கண்களின் நோக்குதலாகிய சட்சு தீக்ஷையினால் ஆன்மாக் களின் மலங்களை நீக்கித் திருவருளுருவாக்கித் தம்முடன் இரண்டற்று நிற்கும் அத்துவித முத்திப் பேற்றைக் கொ டுத்தருளுவர். அதுபோலத் தன்னை யணிந்த அன்பரின் மும்மலங்களையும் நீக்கித் திருவருட் பேற்றைக் கொடுத் தச் சிவபெருமானது கண்போல விளங்கலின் அக்கம் என ப்பெயர் பெற்றது. குற்றங்களையுந் துன்பங்களையும் கண் டிப்பதனால் கண்டி, கண்டிகையெனப்பெயர் பெற்றது. சிவ பெருமானது திருக் கண்களினின்றும் பொழிந்த முத்துப் போன்ற நீர்வடிவாய் நிற்றலின் கண்மணி யெனப் பெயர் வாய்த்தது. கண்ணுகிய மணியென இருபெய ரொட்டுப் பண்புத் தொகையாகக் கொள்வதுமுண்டு. எண்சாணுடம் பிற்குஞ் சிரசே பிரதானம். அதனினும் "சர்வாங்கம் [illegible] னம் பிரதானம்" என்றபடி கண்ணே சிறந்தது. அதனினு ங்கண்ணுள் இருக்கும் மணியே சிறந்தது. ஆதலால் உவ மவாகுபெயராய்க் கண்மணியைப்போன்றது என்றலுமாம்.

தேவிகாலோத்தரம்

பரமசிவன் கண்மலர்போலப் பரித்தவரைப்பவமாற்றி
யருளுருவிற்செயலானக் கமுண்மாசொடாரரந்தை
யொருவுறக்கண்டித்தலினாற் கண்டிகண்டிகையெவற்றும்
பெருமைமிகலான்மணியென் றொருவேதம் பேசிற்றால்

உருத்திராக்க விசிட்டம்

உருத்திரன்கண் ணீரி லுதித்தலினா கும்பே
ருருத்திராக் கம்மென் றுணர்.

உருத்திராக்க வருணம்.

வெண்மைநிற உருத்திராக்கம் அந்தணர் எனவும், பொன்னிற மணியும் செந்நிற மணியும்க்ஷத்திரியர் எனவும், வெண்மையுஞ் செந்நிறமுங் கலந்துள்ள மணி வைகியர் யெனவும், கருநிறமணி மற்றதாகவும் யெனவுங்காண்க.

பேநர்ப்புராணம்.

வெண்மையுந்திகழ்பொன்மையும் பொன்மைவெண்மையுஞ்
வண்மையுங்கருமையுமென வகுத்தநானிறத்து [சேர்
முண்மையக்கமா மணிகளவ்வுரைத்தனமுறையே
தண்மையந்தணர் முதலியநால்வர்க்குஞ்சாரும்.

○ நான்கு வருணத்தாருக்கு முரியமணி.

வெண்ணிற மணி பிராமணருக்கும், கருமை சேர்ந்த பொன்னிற மணியாகிய கபிலநிறமணியும், செந்நிறமணியும் க்ஷத்திரியருக்கும், பொன்னிறமணி வைசியருக்கும், கரு நிறமணி மற்றவருக்கும் தரித்தற் குரியனவாம். வெண்ணி றமணி கிடையாவிடின் பிராமணர் செந்நிறமணி தரிக்கக் கடவர். அதுவுங் கிடையாதேல் பொன்னிற மணியும், அதுவு மரிதேற் கருநிறமணியுந் தரிக்கலாம்.

Koviloor Digital Library

○ உருத்திராக்கப் பதிகம்.

திருவருணெறித் தமிழ்முறையாகிய திராவிடவேதத்திலே, விபூதி, பஞ்சாக்கரம் உருத்திராக்கம் என்னும் சிவசாதனங்கள் மூன்றனுள், பூசுவதும், பேசுவதும் ஆகிய விபூதியையுந் திருவைந் தெழுத்தையும் புகழ்ந்து, முறையே திருநீற்றுப்பதிகம் எனவும், நமச்சிவாயப் பதிகம் எனவும் திருவாய் மலர்ந்தருளிய பெருந்தகையாளர், பூண்பதாகிய உருத்திராக்கத்தைப் புகழ்ந்து உருத்திராக்கப் பதிகம் என்று அருளாது விடுவர்ரா? விடார் விபூதியையும் பஞ்சாக்ஷரத்தையும் பஸ்மசாபால உபநிடதமும் மந்திரோபநிடதமும் கூறுவதுபோல, உருத்திராக்கத்தையும் உருத்திராக்க சாபால உபநிடதமும், அக்ஷமாலிகா உபநிடதமும் சிறப்பித்துப் பேசுவதனால்விடமாட்டார் என்க. திருவருள் வழிநின்ற மூவர் முதலிகளும் ஓதியருளிய தேவாரத் திருப்பதிகங்கள் ஓரிலக்கத்து மூவாயிரம்பதிகங்களெனவும், அவற்றுள், எகூஉ திருப்பதிகங்கள் மாத்திர மிருக்க, மற்றையவையெல்லாம் இறந்துபட்டனவெனவும் திருமுறை கண்ட புராணத்தாற் றெரியவரலால், இவ்வுருத்திராக்கப்பதிகமும் அவற்றுட்பட்டு ஒளித்தது என்க. ஆதலால் உருத்திராக்க கவசமொன்று தருகின்றும்.

ஸ்ரீருத்திராக்க கவசம்.

பரமணியுரோமங்காக்க பரத்துவஞ்சிரத்தைக்காக்க
திரமணிநுதலைக்காக்க சிவமணிபுருவங்காக்க
வரமணிசெவிகள்காக்க வருமக்ஷமக்கங்காக்க
புரமணிநாசிகாக்க புருடார்த்தங்கபோலங்காக்க. (க)

○ உருத்திராக்க வகை.

வெண்ணிறமணி, கபிலநிறமணி, செந்நிறமணி, பொன்னிறமணி, கருநிற மணியென உருத்திராக்கம் ஐந்து வகைப்படும். அவை யொவ்வொன்றும் ஒருமுகமணிமுதற் பதினாறு முகமணியெனப் பதினாறு விதப்படலால் எண்பது வகைப்படும்.

○ உருத்திராக்க அளவு.

வெவ்வேறு தானங்களிற் றரிக்கப்படும் உருத்திராக்க மாலைகளுக்கு எண்ணளவு, எல்லையளவு என இருவகையளவுண்டு. அவற்றுள், எண்ணளவாவது—இன்னதானங்களுக்கு இத்தனையெண்ணுள்ள மணிகள் தரிக்கவேண்டு மென்பதாம். அது வருமாறு:—குடுமியிலே ஒருமணியும், தலையிலே முப்பத்தாறுமணியும், காதுகளிலே ஒவ்வொருமணி அல்லது அவ்வாறு மணியும், கழுத்திலே முப்பத்திரண்டு மணியும், புயங்களில் தனித்தனிபதினாறுமணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நூற்றெட்டு மணியுங்கொண்ட மாலை தரித்தலாம். எல்லையளவா

Koviloor Digital Library

○ உருத்திராக்க சொரூபலக்கணம்.

உருத்திராக்கத்தின்மூலம் பிரமதேவரும், நாளம் விட்டுணு மூர்த்தியும், முகம் உருத்திரமூர்த்தியும், கேசரங்கள் சகலதேவதைகளும், உருமுழுவதும்திருவருட்சத்திரூபமுமாம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. உருத்திராக்கமாலையின் சூத்திரம் பிரமரூபம் எனவும், அதன்வலப்பக்கம்ஸ்ரீகண்டப்பெருமா னுருவென்றும், இடப்பக்கம் விட்டுணு வடிவென்றும், முகம் சரசுவதி யுருவென்றும், புச்சம் காயத்திரி ரூபமெனவும், கேசரம் சாவித்திரி வடிவென்றும், கிரந்தி (முடிச்சு) பிரகிருதியுருவென்றும் அதர்வணவேத பாகமாகிய அசுஷமாலிகா உபநிஷத்திற் சொல்லப்பட்டது.

○ பார்த்திவ ருத்திராக்கமணி.

பிருதிவி சம்பந்தமான மண், மரம், கல் முதலியவற்றான் ஆக்கப்பட்ட உருத்திராக்கம் பார்த்திவ உருத்திராக்கம் எனப்படும். வெண்ணிற முதலியன வாய்ந்த உருத்திராக்கமணிகள் கிடையாவேல், மண்ணாலாயினும் மரத்தால் ஆயினும், தகுந்தகற்களால்ஆயினும், உருத்திராக்கம்போல முகமும் வரைகளும் அடிகளுங் குறையாமற்செய்து தரிப்ப

○ ஆக்கினேயமணி அல்லது பொற் கண்டிகை.

அக்கினி சம்பந்தமுள்ளது ஆக்கினேயம். அங்கியின் கூறாய பொன்னால் உருத்திராக்க மணிபோற் செய்தணிவதே ஆக்கினேயக் கண்டிகையாம். சிவபெருமான் அக்கினி வடிவரும், அக்கினிக்கதிபரும், அக்கினிக் கண்ணரும், அக்கினிதாரணரும், அக்கினிமேனின் றுடுவோரும், அக்கினி பூதேசரும் ஆகலால், அக்கினியின்கூறாய பொன்னாற்செய்த கண்டிகையும் அவரடியார்க்குத் தக்கதாம். அநேகர் பொன்னினாலே கண்டிகை செய்து தரிப்பது இக்காலத்துமுண்டு. பொன் பிருதிவியின் கூறாகாது தேயுவின் கூறாதல் வாதராசியம், நியாயசாரேயம், நீலகண்டீயப் பிரகாசிகை முதலிய தருக்கநூல்களானறிக. மாதவப்பெருந்தகைச் சிவஞான யோகிகள்கருத்து மிதுவே.

Koviloor Digital Library

○ தரிக்கும் உறுப்புக்களும் முக எண்களும்.

உருத்திராக்கமணி அணிவோர் இந்நியமத்தின்படி தரிப்பராயின் பெரும்பயனைப் பெறுவர். சிகைக்கு ஒருமுகமணி ஒன்றும், தலைக்கு இருமுகமணிபதின்மூன்றும், சிரோ ஊர்த்துவத்திற்குப் பதினொருமுகமணி முப்பத்தாறும், செவிகளுக்கு ஐந்து, ஏழு, பத்து முகமணிகளில் யாதாவது ஒவ்வொன்றும், கழுத்திற்கு எட்டுமுகமணி முப்பத்திரண்டும், வயிற்றிற்கு நான்கு முகமணி ஐம்பதும், ஒவ்வோர்புயங்களுக்கும் பதின்மூன்று முகமணி பதினாறும், இருமணிக்கட்டுகளுள் ஒவ்வொன்றற்கும் ஒன்பது முகமணி பன்னிரண்டும், எக்கிய உபவீதத்திற்குப் பதினான்கு முகமணி நூற்றெட்டும், மார்பினுக்கு எந்த முகமணிகளாயினும் ஐம்பத்துநான்கும், அந்தந்தமந்திரபூர்வமாகத் தரிக்கக்கடவர்.

அக்க தீபிகை.

குடுமி யொன்றொன் றணிசிரத்திற்
குலவு மிரண்டிற் பன்மூன்று
தொடுமே லதனிற் பன்னொன்றிற்
சொலுமா றாறு செவிகடமக்
கடுமைந் தேழ்பத் * தவையொன்றெண்
ணதிலெண் ணான்கே களமுதரக்
கிடு ‡ வீ ரீரைம் பதுவாகிற்
கீரா றொன்பான் மணிமணியே.

○ சந்தி தாரணம்.

உருத்திராக்க மாலையை எக்காலத்துந் தரிக்க வியலாதவர் காலை, உச்சி, மாலை என்னுஞ் சந்தியா காலங்களிலாவது தரிக்கவேண்டும். பட்டுவத்திரத்தினால் மணிமாலையைச் சுற்றிப் பெட்டகத்துள்ளே வைத்திருந்து, சுத்தவுடம்பினராய்ச் சந்தியா காலங்களில் தரிப்பராயின், சிவபெருமான் பிரசன்னராய் வேண்டிய இம்மை மறுமைப் பயன்களையெல்லா மீந்து, இறுதியிற் றந்திருவடிப் பேரின்பத்தையும் அளிப்பர்.

○ உருத்திராக்க உபவீதம்.

துவிசத்துவத்திற்காக உபவீதந் தரித்தல் விதியே. அவ்வுபவீதம் பருத்தி நூலாற் பெரும்பாலார்செய்து தரிக்கின்றனர். சிலர் வெள்ளி, பொன் இவற்றிற் செய்து தரிப்பது முண்டு. இவையெல்லாம் பிரமஞானத்தை (சிவஞான

Koviloor Digital Library

த்தை) எளிதிற்கொடுக்க மாட்டாவரம். அதுபற்றியேதெய்வத் திருவருள் கைவந்து கிடைத்த திருமூல நாயனாரும் "நூலுஞ் சிகையு நுவலிற் பிரமமோ-நூலது காற்பாச நுண்சிகை கோசமாம்" என்று திருமந்திரத்திற் கூறி மறுத்தனர். எளிதில் அத்துவித ஞானமாகிய திருவருண் ஞானத்தை யளிப்ப தெதுவெனில், உருத்திராக்க உபவீதமாம். அது நூற்றெட்டு மணிகள் கோவைசெய்து, பிராசாதமந்திரங்கூறித் தரிக்கப்படுமென்று வேதாகமங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது.

○ ஆயிரமணிந்தவர் அரனெனப்படுவர்.

உச்சி, கழுத்து எனச் சொல்லப்பட்ட தானங்களெல்லாவற்றினுஞ் சேர்த்து ஆயிரம் என்னுங் கணக்காக உருத்திராக்கமணி அணிந்தவர் யாவராயினும் அவரைச் சிவந்த சடைமுடியையுடைய பரமசிவன் என்று, விஷ்ணு பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும், மற்றையகணத்தவர்களும் வணங்குவர் என்று வேதாகமங்கள் முழங்குமே யாயின் அவரை மனிதரென்று கூறல் பாவமே யாம்.

பிரமோத்தரகாண்டம்.

ஆய மாமணி யாயிரம் புனைந்திடி லவரை
மாய னான்முகன் புரந்தரன் வானவர் முதலோர்
பாயு மால்விடைப் பரனெனப் பணிகுவ ரென்றாற்
றூய மாமணி மிலைந்தவர் மனிதரோ சொல்வீர்.

○ தரியாமையால் வருங்குற்றம்.

உருத்திராக்கத்தைத் தரிப்பதற்குக் கூசுகின்றவர் மக்களைட் பதரெனப்படுவர். அக்கீழ்மக்களைச் சுத்த சாட்குண்ய பதியாகிய சிவபெருமான் வெறுத்துப் பார்த்தற்குக் கூசுவர். அவர் செய்யும் சிவபூசை, சிவமந்திரசெபம், சிவாலயசேவை முதலியபுண்ணியங்களெல்லாம் நிஷ்பலமாகும்.

சைவ சமயநெறி.

பூணாதே கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்
காணாதே காணு மரன்.

○ தரிக்குங் காலங்கள்.

சிவமந்திரசெபம், சந்தியாவந்தனம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலய தரிசனம், சிவபுராண படனம், தேவாரதிருவாசக பாராயணம், அவைகேட்டல், தீர்த்தமாடல், விரதமநுட்டித்தல், சிராத்தஞ்செய்தல்முதலிய இவைசெய்யுங் காலங்களில் ஆவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்.

Koviloor Digital Library

○ தரிக்கலாகாத காலங்கள்.

சயனிக்குங் காலத்தும், மலசலமோசனத்தும், புணர்ச்சியினும், நோயினும், சனனசௌசம், மரணசௌசம் என்னு மிக்காலங்களிலும் உருத்திராக்க தாரணஞ்செய்தல் ஆகாவாம். ஆயினும் சிகையினும், காதுகளினும், உபவீதத்தினும் எப்போதுந் தரித்துக்கொள்ளலாம். உருத்திராக்கந் தரித்துக்கொண்டு மாமிசபோசனம், மதுபானம், வியபிசாரமுதலிய பாவங்களைச்செய்தவர்களும், ஆசாரமில்லாது நடப்பவர்களுந்தப்பாது நரகத்தில்விழுந்து வருந்துவர்.

○ உருத்திராக்க தாரணமுறை.

எவ்வெத் தானங்களுக்கு எவ்வெவ்வளவு சொல்லப்பட்டதோ அவ்வவ்வளவு தரிக்க: முகம் முகத்தைப் பொருந்தவும், அடி அடியைப்பொருந்தவும் இடையிடையே பொன்னுயினும், வெள்ளியாயினும், தாமிரமாயினும், முத்தானுலும், பவளமாயினும், பளிங்காயினும் இட்டு, வெண்பட்டிலேனும்பருத்தியிலேனும் இருபத்தேழு இழையினுலாக்கிய கயிற்றிற் கோத்து, நுனியிரண்டையும் ஒன்ருகக் கூட்டியதிலே நாயகமணியை ஏறிட்டுக்கோத்து முடிசெய்து தரிக்க. பொன் வெள்ளி தாமிரமுதலிய இவற்றையிடாது நாகபாசம், பிரமக்கிரந்தி, சாவித்திரி என்பவைகளுள் இயன்ற முடிச்சை யிடுதலுமாம்.

○ தரிக்குந் தானங்கள்.

குடுமி, தலை, காதுகள், கழுத்து, மார்பு, புயங்கள், கைகள் என்னும் எட்டுமாம். ஸ்நானஞ் செய்யுங் காலத்தில் உருத்திராக்கந் தரித்தல் வேண்டும். ஏனெனில் உருத்திராக்க மணியிற் பட்டு வடியுஞ் சலம், கங்கா சலத்துக்குச் சமமாகும் என்று சிவாகமங்கள் முழங்கு மாகலால்.

○ உருத்திராக்க பூசை.

உருத்திராக்கத்தைச் சிவலிங்கப் பெருமானுக நினைத்து அபிடேகங்கள் செய்து, புட்ப மாலைகள் சாத்திப் பூசை புரியக்கடவர். உருத்திராக்கத்தைப் பட்டு வஸ்திரத்திலிட்டு உரிய மந்திரத்தால் அபிமந்திரித்து,

"ருத்திராக்ஷ விருக்ஷ பீசாயாம் பூதசம்பூதயேதவே!
நேத்ரத்திரயாய ருத்திராய நமோலோக ஹிதார்மநே!!

Koviloor Digital Library

என்னும் மந்திரத்தால்வந்தித்து, அபிடேகமுதலியன செய்து பின்னர் எடுத்துத் தரிக்க வேண்டும்.

○ தரிக்கும் நியமமும் மந்திரமும்.

உருத்திராக்க மணியைக் குடுமியிலுந் தலையிலும் ஈசானமா மந்திரஞ்சொல்லியும், காதுக ளிரண்டினும் தற்புருட மந்திரத்தினாலும், கழுத்தில் அகோர மந்திரத்தினாலும், மார்பில் வியோமவியாபினி மந்திரத்தினாலும், புயங்களிலும் கைகளிலும் பிராசாத மந்திரத்தினாலுந் தரிக்கவேண்டும். உருத்திராக்கமாலையை யன்புடன்றரிசிப்பவர்க்கு இலக்ஷமடங்கு பலமுண்டாம். பரிசித்தவருக்குக் கோடிமடங்கு பலமுண்டாம். சரீரத்தில் தரிப்பவருக்கு ஆயிரகோடி மடங்கு பலமுண்டாம். கையிற்கொண்டு செபித்தவருக்கு அநந்த மடங்கு பலமுண்டாகும். ஆறுமுகமணி வலப்புயத்தினும், ஒன்பது முகமணி இடப்புயத்தினும், பதினொரு முகமணி சிகையினும், பன்னிரண்டு முகமணி காதுகளினும், பதினான்கு முகமணி சிரத்தினுந் தரிப்பது உத்தமம்.

○ உருத்திராக்க தாரணபிரீதி.

ஒருமுக மணி தரிக்கிற் சிவனுக்கும், இருமுக மணி தரிக்கிற் சிவசத்திக்கும், மூன்றுமுக மணி தரிக்கின் மும்மூர்த்திகளுக்கும், நான்குமுக மணிதரிக்கிற் பிரமனுக்கும், ஐந்துமுக மணி தரிக்கிற் சதாசிவ மூர்த்திக்கும், ஆறுமுக மணி தரிக்கின் அசுரரைத்தடிந்த ஆறுமுகப் பெருமானுக்கும், ஏழுமுகமணி யணியின் சத்த மாதர்களுக்கும், எட்டுமுகமணி தரிக்கின் அட்டவித்தியேசுரர்க்கும், ஒன்பது முக மணி தரிக்கிற் கங்கைமுதலிய நவ தீர்த்தங்களுக்கும், பத்துமுக மணி தரிக்கின் பத்துத் திக்குப் பாலகர்களுக்கும், பதினொருமுக மணி தரிக்கின் பதினொருருத்திரர்களுக்கும், பன்னிரண்டுமுக மணி தரிக்கின் விட்டுணு மூர்த்தியாகிய வாசுதேவர்முதலிய பன்னிருவர்களுக்கும், பதின்மூன்றுமுக மணிதரிக்கின் சதருத்திரர்களுக்கும், பதினான்குமுக மணி யணியின் அசுவினிதேவதைகளுக்கும், அட்டவசுக்களுக்கும், பதினைந்துமுகமணிதரிக்கிற் சந்திரன் வருணன் முதலிய தேவர்களுக்கும், பதினாறுமுக மணி தரிக்கின் முப்பத்து முக்கோடிதேவர்கள், பிரமா, விஷ்ணு, சிவபெருமான் யாவர்க்கும் பிரீதியாம் என்றறிக.

Koviloor Digital Library

○ உருத்திராக்க அதிதேவதைகள்.

ஒருமுக மணிக்கு அதிதேவதை தற்பரசிவன்; இரு முகமணிக்கு அதிதேவதை ஸ்ரீகண்டபரமசிவன்; மூன்று முகமணிக்கு அக்கினிதேவன் நான்குமுக மணிக்குப் பிரமதேவன்; ஐந்துமுகமணிக்கு அதிதேவதை காலாக்கினி ருத்திரர்; ஆறுமுக மணிக்கு அதிதேவதை எம்பெருமானாராய சுப்பிரமணியக்கடவுளாம். ஏழுமுக மணிக்கு ஆதிசேடன்; எட்டுமுகமணிக்கு அதிதேவதை முன்னவராய விநாயகக் கடவுளாம். ஒன்பதுமுக மணிக்கு வைரவ மூர்த்தியாகும். பத்துமுக மணிக்கு விட்டுணுவும், பதினொருமுக மணிக்குப் பதினொருருத்திரரும், பன்னிரண்டு முகமணிக்குப் பன்னிரண்டாதித்தரும், பதின்மூன்று முகமணிக்குக் குமாரக் கடவுளும், பதினான்கு முகமணிக்குச் சிவமும் சத்தியும், பதினைந்து முகமணிக்குச் சதாசிவ நாயனாரும், பதினாறு முகமணிக்கு அனந்தேசுரருந் தேவதைகளாம்.

○ அவற்றின் பலன்.

ஒருமுகமணி தரிக்கிற் பிரம கத்தியைப் போக்கும். இருமுகமணி தரிக்கிற் கோகத்தியை நீக்கும். மூன்றுமுக மணி யணிந்தவர் ஸ்திரீகத்தி நீங்கப் பெறுவர். நான்கு முகமணி யணிந்தவர் நரகத்தி தொலையப் பெறுவர். ஐந்துமுகமணி யணிந்தாற் புணரத்தகாதவர்களைப் புணர்ந்ததனால்வரும் பாவமும், புசிக்கற் பாலன வல்லாதவற்றைப் புசித்ததனால் வரும்பாவமும் போம். ஆறுமுகமணி தரிக்கின் அது பிரமகத்திமுதலிய மகாபாதகங்களை யெல்லாம் நாசமாக்கும். ஏழுமுகமணி தரிக்கின் கோகத்தியையும் பொற்களவையும் போக்கும். எட்டுமுக மணி யணிந்தாற் குருபன்னியைப் புணர்ந்த பாவமும், பொற்களவும், துலாபுருடதானம், இரணிய கருப்பதானம், திலபதும தானம், சொன்ன பூமிதானம், சொன்னதேனு தானம், இலக்குமி தானம், திலதேனுதானம், சகத்திர கோதானம், இரணிய வசுவதானம், இரணிய கன்னிகாதானம், சொன்ன கசமுதலிய தானங்களை வாங்கிய பாவமும், பிறர் அன்னத்தைக் கவர்ந்துண்ட பாவமும் நீங்கும். ஒன்பது முகமணி தரிக்கின் ஆயிரம் பிராணகத்தியும், நூறுபிரமகத்தியும், பூதம், பிசாசம், சர்ப்ப முதலியவற்றாலாகும் விக்கினங்களும் நீங்

Koviloor Digital Library

கும். அணிமாமுதலிய சித்திகளும் முத்தியு முண்டாம். பத்துமுக மணி தரிக்கின், அது நாள் கோள் பேய் பூதம் பிரமராக்கதம் முதலியவற்ரு லுண்டாகுந் தீங்குக ளெல்லாவற்றையும் போக்கும். பதினொரு முகமணி தரித்தால் அது ஆயிரம் அசுவமேத பலத்தையும், நூறு வாசபேய பலத்தையும், இலக்ஷங் கோமேதபலத்தையுங் கொடுக்கும். பன்னிரண்டு முகமணி தரிக்கின் அது கோமேத பலத்தையும், அசுவமேத பலத்தையும், சுவர்ணதான பலத்தையுங் கொடுக்கும். பதின்மூன்று முகமணி தரிக்கின் அது சர்வாபீட்டத்தையுஞ் சர்வ சித்தியையுங் கொடுக்கும்; பிதாவையும், மாதாவையும், சகோதரரையும், புத்திரரையும், கருவையுங்கொன்ற பாவத்தையும்போக்கும். பதினான்கு முகமணி தரித்தால் தேவர் முனிவர் முதலாயினோ ரெல்லாரையும் வசப்படுத்திச் சிவ பதத்தைக் கொடுக்கும். பதினைந்து முக மணி தரிக்கின் சகல பாவங்களையும் நீரூக்கும். இந்திரன், பிரமன், விஷ்ணுமுதலினோரது பதவிகளினுள்ள போகவின்பங்களையும் வசமாக்கும். பதினாறு முகமணி தரிக்கின் சிவசாயுச்சிய வாழ்வையளிக்கும். இவற்றுள் பதினாலு, பதினைந்து, பதினாறு முக மணிகள் கிடைப்பதருமை யருமை.

சித்தாந்த சிகாமணி.

வேதியர்க்கனையத்தனுக்கொண்மகவினுக்குத்
தீதிழைத்தவன்கள்ளுண்ணிசெய்ந்நன்றிசெற்றோன்
போதநற்குருதற்பரன்பொன்கொளியென்னும்
பாதகத்தினினீங்குவன்பரன்மணிதரிப்பின்.

ருத்ராக்ஷ மணியும், தெய்வமும் பயனும்

ஒருமுகஞ் சிவன்றன் வடிவுநான் மறையோர்ச்
செகுத்ததீங் கொழிந்திடு மிரண்டா
வருமுகஞ் சத்தி சிவம்பசு வதைத்த
வன்பழி மாற்றமும்முகந்தீப்
பெருகுபெண் கொலைநீத் தருளுநான் முகனான்
முகன்பிழை நரகத்தி போக்கும்
அருமையைம் முகங்கா லாங்கிருத் திரனூல்
உரித்தலர்ப் புணர்ச்சிபொய் யகற்றும் (218)

Koviloor Digital Library

அறுமுகன் வேலன் வலக்கையி லணிவ
தகன்றிடும் பிரமகத் தியுமேழ்
உறுமுக மனந்தன் கோக்கொலை யொடுபொற்
களவினால் வருபவ மொழியும்
மறுவிலெண் முகம்வா ரணமுகன் குருபன்
னியைத்தொடல் வருதுலை முதலாப்
பெறுபல தானம் பிறன்கையி லன்னம்
ஏற்றிடும் பீழைநீங் கிடுமால். (219)

இயம்பிய வொன்பான் முகம்வயி ரவனாம்
இடக்கையிற் றரிப்பது வன்பார்
வயம்பெறு தக்க கன்முத லரவம்
வதைத்தல்போம் முத்தியு மெ தும்
நயம்பெறு மொருபான் மகத்திரு நெடுமா
னாளொடு கோள்பெரும் பூத
முயங்குபேய் பிரம ராக்கதன் மற்றும்
உடற்றிடும் பெரும்பய மொழியும் (220)

பதினொரு முகம்பன் னோருருத் திரராம்
பகர்பரி மேதமா யிரம்பன்
னிதியொடு கோதா னம்மொரு நூறா
யிரந்தரு பயன்களை நிறைக்கும்
கதிகொள்பன் ளிருமா முகங்கதி ரொருபான்
இரண்டதாங் காஞ்சன மேரு
விதிதரு தானம் புரவியச் சுரபி
மேதநல் கியபயன் றருமால். (221)

செறிதரு பதின்மூன் றாமுகங் கந்தன்
சிந்தையில் வேட்கைபொன் னிரத
நெறிதரு சயமு மளிக்குநற் றுணைதாய்
தந்தையர்த் தெறுங்கொலை நீக்குங்
குறிதரு பதினான் முகஞ்சிவஞ் சத்தி
கூறும்விண் ணவர்தவ ரிறைஞ்ச
அறிதரு வசியம் நல்கியூ ழியினும்
அழிதார வுலகிலுய்த் திடுமால். (222)

கிளத்திய பதினாள் முகம்பெற லரிது
கிட்டுமேற் கண்டத்தில் தரிப்ப
துளத்தினி னீங்காச் சிவன்சத்தி மந்தி
ராதியு மேய்ப்பதொண் முத்தி
விளைத்திடும் பதினைம் முகம்பரநாதம்
விளம்புமெப் பாவமும் வீட்டும்
திளைத்தெழுங் கருணைச் சோதியோ பொன்றித்
தீர்விலா முத்தியிற் சேர்க்கும். (223)

Koviloor Digital Library

௦ செபமணி யளவு.

நெல்லிப் பழம்போன்ற மணி உத்தமம். இலந்தைக் கனிபோன்ற அளவினையுடைய மணி மத்திமம். கடலைப் பிரமாணமுள்ள மணி கனிட்டமாகும். அதிபெரியவும், அதிசிறியவும், பின்னமுள்ளவும், இலகுவாயிருப்பவும், விரணம், கண்டம், ஜீரணம் முதலிய குற்றங்களில்லாதனவும், திடம், வட்டம், பொன்மய முதலிய நன்மை வாயநதவுமான மணிகளையே கொள்ளல் வேண்டும்.

உருத்திராக்க விசிட்டம்.

உத்தமமே யாமலகத் தின்கனிக்கொப் பானகண்டி
மத்திமமா கும்மிலந்தை வண்கடரிக்கொப்-பித்தலத்து
ணீசஞ் சணவித் திணையென்ன வேநினைக
பாசவிதம் பாற்றநினைப் பார்.

௦ செப நாடி.

உருத்திராக்க மணிமாலை கொண்டு செபிப்போர் முத்தியை விரும்பிச் செய்யுங்கால், பிங்கலைநாடி நிகழுங் காலத்திற் செபிக்கக்கடவர். புத்தியை விரும்பினோர் இடைநாடியாகிய சந்திரநாடி நிகழுங் காலத்திற் செபிப்பாராக. புத்தி முத்தி என்னும் இரண்டனையும் விரும்பினர்பிங்கலை, இடை என்னும் இருநாடிகளும் ஒத்து நிற்குஞ் சுழுமுனை யாகிய பிரமநாடி நடக்குங் காலத்திற்செய்க. பிங்கலை நாடியாவது பிராணவாயு வலமூக்கிற் சஞ்சரிக்குங் காலம். இடை நாடியாவது அவ்வாயு இடமூக்கில் நிகழ்ந்து நிற்குங் காலமாம். சுழுமுனையாவது அவ்விரண்டிற்கும் நடுவே நிற்குங் காலம்.

௦ திக்கின் பலன்.

உருத்திராக்க மணி கொண்டு செபிக்குங் காலத்து, கிழக்குத் திக்கு நோக்கிச் செபிக்கின் உலகவசிய முண்டாம் தென்கிழக்கு ஆயின் வியாதி யுண்டாம். தெற்கெனில்

அபிசாரவிருத்தி. தென்மேற்கு ஆனால் துவேஷ முண்டாகும். மேற்கு நோக்கிச் செய்தால் தனலாபம் உண்டு. வடமேற்கு ஆனால் ஆகருடணம் மேன்மேல் வளரும். வடக்கு முகமாயிருப்பின் சாந்தி விளையும். வடகிழக்கு முகமாக விருந்து செபிக்கின் சிவசாயுச்சிய முத்திசித்தியாம்.

Koviloor Digital Library

○ செப ஆசனங்களும் பலமும்.

யோகாசனங்கள் ஆகிய சித்தாசனம் முதல் அர்த்தாசனம் இறுதியாகவுள்ள எண்பத்து நான்கினுட் சிறந்தபத்திராசனம், முத்தாசனம், மயூரஆசனம், சித்தாசனம்,பதுமாசனம், சுவத்திகாசனம், வீராசனம், கோமுக ஆசனம் சுகாசனம் என்பன, செபஞ்செய்தற்காவது, விபூதி உருத்திராக்க தாரணஞ் செய்தற்காவது உத்தமோத்தமமாகும் அவற்றால் எண்ணிய காரிய மெளிதினெய்தும். இவையன்றிக் கிருஷ்ணாசனம் ஞான விருத்தியையும், புலித்தோல் ஆசனம் முத்தி இலக்குமீகரம் என்பவற்றையும், வஸ்திர ஆசனம் வியாதிநிவிர்த்தியையும், கம்பள ஆசனம் சௌக்கியத்தையும், சித்திரக் கம்பள ஆசனம் அறம்பொருளாதியவற்றையும் தரும். வேணு ஆசனம் தரித்திரத்தையும், பாடாணை ஆசனம் (கல் ஆசனம்) வியாதியையும், பூமியாசனம் துக்கத்தையும் மந்திர நிர்ப்பலத்தையும், தாருகாசனம் கேட்டினையும் வியாதிகளையும், திரணாசனம் புகழ் நசிவையும், பல்லவ ஆசனம் சித்தவிப்பிரமத்தையும், கறுப்பு வத்திர ஆசனம் அபிசாரக் கிரியைகளையும் உண்டாக்குமென்று மதங்க ஆகமமும் உரைக்கின்றது.

○ செபமாலைப் பிரதிட்டை.

முற்சொல்லிய இலக்கணப்படி கோவை செய்த செபமாலையை, பரமசிவனைப் பூசை பண்ணுவதுபோற் பூசை செய்து கொள்ளக் கடவர். பிரதிட்டை செய்த மாலைகொண்டு செபிக்கினன்றிப் பெரும்பயனெய்தாரெனச் சிவாகமங்கள் செப்பாநிற்கும். அப்பிரதிட்டையைக் கூறுவாம்.

உருத்திராக்க மாலையைச் சுத்தமுள்ள மண்டபத்திலே பீடமொன்றனில் எழுந்தருளச்செய்து, ஓம்சத்தியோசாதாயநம என்று எண்ணெய்க் காப்பு முதலியவற்றால் அபிடேகஞ் செய்து, ஓம்வாமதேவாயநம என்று குச்சுப்புல்லுச்சாத்தி ஓம்இருதயாயநம என்று கந்தபுட்பங்கள் சாத்தி, ஓம்அகோராயநம என்று தூப தீபங் கொடுத்து, ஓம் தற்புருஷாயநம என்று திருவொற்றாடை சாத்துக. அதன்பின் ஒவ்வோர் மணியையுந் தொட்டு ஓம்ஈசானாயநம என்று, நூறு நூறுருவிற் குறையாமல் அபிமந்திரித்து, நாயகமணியைத் தொட்டு ஈசானாதி பஞ்சப்பிரம மந்திரங்களினாலே நூறு உருக் குறையாமற் செபித்துப் பூசைசெய்து கொள்ளக்கடவர்.

Koviloor Digital Library

○ செபமாலை வகையும் பலமும்.

இங்ஙனங் கொள்ளப்பட்ட செபமாலை யில்லாவிடின் புத்திரதீபமாலை, சங்குமணிமாலை, பவளமணிமாலை, முத்து மணிமாலை, படிக மணிமாலை, தாமரை மணிமாலை, பொன் மணிமாலை, தருப்பை முடிச்சு மாலை யென்னு மிவைகளி னொன்று கொண்டு செபிக்கக் கடவர். இவைகளுங் கிடை யாதவிடத்து விரலினாலேனும், விரல் இரேகையினாலேனுஞ் செபிக்க. விரலாற்செபித்தலினும் இரேகையாற் செபித் தலின் வரும் பலம் எட்டு மடங்கு அதிகம்; அதனினும் புத்திரதீப மாலையாற் செபிக்கின் பத்து மடங்கும், சங்கும ணிமாலையால்வரும் பலம் நூறு மடங்கு அதிகமும், பவள மாலையால் வரும் பலம் ஆயிரமடங்கு அதிகமும், படிக மாலையால் வரும்பலம் பதினாயிரமடங்கு அதிகமும், முத்து மாலையால்வரும் பலம் இலக்கம் பங்கு அதிகமும், தாமரை மணி மாலையால்வரும் பலம் அதனினும் பத்திலக்கம் பங்கு அதிகமும், பொன் மணி மாலையால் வரும் பலம் கோடிமட ங்கு அதிகமும், தருப்பை முடிச்சால் வரும் பலம் கோடா கோடி மடங்கு அதிகமுமாம். உருத்திராக்க மாலைகொ ண்டு செபித்தலால் வரும் பலத்திற்கோ ஓரளவின்று. அது அநந்த மடங்கு அதிகமென்க. இவ்வாறு சைவ புராண த்திற் சொல்லப்பட்டது.

○ உருத்திராக்க மாலையின் பயன்.

உருத்திராக்கத்தைச் செபமாலையாகக் கொண்ட விட த்து நூற்றெட்டு அல்லது, முப்பது கொண்ட மாலையாற் செபிக்கின் குற்ற மற்ற ஐசுவரியமும், இருபத்தேழு உள் ளவற்றாற் செபிக்கின் அழியாத பதவிச் செல்வமும், இரு பத்தைந்து கொண்டவற்றாற் செபிக்கின் சிவசாயுச்சியமுத் தியும், ஐந்து மணி கொண்டதனாற் செபிக்கின் போகமும், ஆறுமணி சாந்தியும், இருபத்தாறிற் செபிக்கின் செல்வ விருத்தியும், இருபத்தெட்டுள்ளதனாற் செபிக்கின் புஷ்டி யும், முப்பத்திரண் டுடையதனால்வெற்றியும், ஐம்பதினாற் காமிய கருமப் பிராத்தியும், நூற்றைந்துமணி கொண்டத னாற் போக மோட்சங்களுஞ் சித்திக்கும். பதினைந்துகொ ண்ட மாலையாற் செபிக்கின் அபிசார முண்டாம்.

Koviloor Digital Library

০ செபிக்கும் வகையால் வருப்பலம்.

உருத்திராக்க மாலைகொண்டு செபிப்போர், மேருமணி யென்னும் நாயக மணியை யெண்ணிற் சேர்க்காமற் செபிக்கக்கடவர். செபிக்கும் போது துறவறத்தாற் செபமாலையை மேலாகவும், இல்லறத்தார் கீழாகவுந் தள்ளக்கடவர். தள்ளுமிடத்துப் பெருவிரலாற் றள்ளின் அடைதற் கரிய முத்திப்பேறுண்டாம். சுட்டு விரலாற் றள்ளின் சத்துரு வெற்றி யுண்டாம். நடுவிரலாற் றள்ளின் திரவிய விருத்தி யுண்டாம். அணிவிரலாற் றள்ளினால் வியாதி நீக்கமும், சிறுவிரலாயிற் சகல நன்மையுமுண்டாம். மானத செபத்திற்கு மாலையை மேலேற்றியும், உபாஞ்சு வாசகம் என்பவற்றிற்கு மாலையைக் கீழிறக்கியுந் தள்ளுக. முன்னைய மானத செபத்திற்குப் பெருவிரல் அணி விரல்களாலேனும், உபாஞ்சினுக்குப் பெருவிரல் நடுவிரல்களாலேனும், வாசக செபத்திற்குப் பெருவிரலாலேனும், சுட்டு விரலாலேனுந் தள்ளக்கடவர்.

০ செபிக்குந் தானங்கள்.

உருத்திராக்க மாலையைக் கையிலேந்திக்கொண்டு வீட்டினிருந்து செபிக்கின் ஒருமடங்கு பலமும், பசுக் கோட்டத்தி லிருந்து செபிக்கின் நூறு மடங்கு பலமும், நந்தன வனம், ஆரணியம் என்னு மிவைகளில் இருந்து செபிக்கின் ஆயிரமடங்கு பலமும், மலையிலிருந்து செபிக்கிற் பதினாயிர மடங்கு பலமும், கடற்கரை நதிக்கரைகளி னிருந்து செபிக்கின் இலக்க மடங்கு பலமும், விநாயகர் ஆலயம், சிவாலயம், தேவி குகாலயங்களிலே இருந்து செபிக்கிற் கோடி மடங்கு பலமும், அந்தக் கடவுளரின் றிருமுன்னர் இருந்து செபிக்கின் அனந்த மடங்கு பலமுமுண்டாம். சூரியன், சந்திரன், அக்கினி, குரு, தீபம், நதி, பிராமணர், பசுக்கூட்டம் என்பவற்றிற்கு முன்னர் எதிர்முகமாக இருந்துசெபிக்கக்கடவர். கிழக்குநோக்கிச் செபிக்கின்விரும்பியபொருள்கள்யாவுந் தமது அருகில்வரப்பெறுவர். தெற்கு நோக்கிச் செபிக்கின் அபிசார முடையராவர். மேற்கு நோக்கிச் செபித்தோர் இட்டசித்தி யடைவர். வடக்கு நோக்கிச் செபிப்போர் வியாதிகள் நீங்கப்பெறுவர்.

Koviloor Digital Library

○ செபிக்கக்கூடாத தானங்கள்.

நாற்றெருக் கூடுமிடத்தினும், படுக்கையிலும், நடந்து கொண்டும், நின்று கொண்டும், இருளினும், அசுத்த பூமியினும், வாகனத்தின் மேலும் இருந்து கொண்டு செபிக்கக் கூடாது. செபிக்கு மிடத்து அங்கிதரித்திருத்தல், தலையில் வஸ்திர மணிந்திருத்தல், குடுமியை விரித்து விடல், கௌபீனம், பவித்திரம் என்னு மிவை யணியாமை, வார்த்தை யாடல், கழுத்திற் புடைவை சுற்றியிருத்தல், ஆசாரமில்லாமை, கோபம், பெருநகை புரிதல், தும்மல், சோம்பல், காறியுமிழ்தல், சண்டாளரைப் பார்த்தல் என்னு மிவைகள் ஆகாவாம். இவைகளுள் ஒன்று நேர்ந்தால் மும்முறை யாசமனம்புரிந்து, அங்க நியாசஞ்செய்து செபிக்கக்கடவர்.

○ உருத்திராக்கங்களுட் பூசைக்குச் சிறந்தன.

உருத்திராக்கத்தைச் சிவலிங்கப் பெருமானாக நினைத்துப் பூசிக்க. அவற்றுள்ளும் பூசைக்குச் சிறந்தனவாகக் கூறப்பட்டனவுமுள. அவை வருமாறு:--

ஒருமுக முள்ளமணி, ஐந்துமுகமணி, பதினொருதிருமுகமணி, அருள்பொருந்திய பதினான்கு முகமணி என்னு மிம்மணிகளே பூசித்தற்கு மிகச் சிறந்தவைகளாம். இவைகளுள் ஒன்றை நாடோறும் அருச்சித்து வழிபடுவோர் மேலான செல்வ மென்னும் பெரும்பேற்றை யடைவார்கள் என்று வேத சிவாகமங்கள் விளம்புகின்றன.

○ உருத்திராக்க முண்டாகுந் தானங்கள்.

ஒருமுகமணி முதற் பதினாறு முகமணி வரையுமுள்ள பெருமணிகள், இந்தியாவில் நேபாளம் என்னுந் தேசத்தில் விளைகின்றன. கௌரிசங்கம், சாலக்கிராமம் முதலியனவும் அங்கேயேதோன்றுகின்றன. இமயமலைக்கு அணித்தாய், கங்கை முதலிய புண்ணியநதிகள் பொருந்தியதாய், சரவணவாவி, பதுமை, மானசரசு என்னுந் திவ்விய தீர்த்தங்களையுஞ் சார்ந்துள்ளது அத்தலமே. ஆதலால்சாலவனம் என்னும் புண்ணியக்ஷேத்திரம் அதுவேயென்ப. ஆங்குள்ள பாரம்பரிய அரசர் ஆங்கில அரசிற்குட்படாது சுவதந்திரமாயாளும் வன்மையுடையர். அது இவ்வுருத்திராக்கப் பலன் என்பது நன்கு விளங்குகின்றது. ஒருமுகமணி முதற் பதினாறு முகமணி வரையுமுள்ள வெண்ணிற மணி முதலாய எண்பது வகை யுருத்திராக்கங்கள் யாவும் அவ்வரசர் பூசாமண்டபத்தில் இருக்கின்றன அவற்றை நாடோறும் பூசித்தே தாம் உணவையுண்பர். உருத்திராக்கதானம் அடியார்களுக்கு அவ்வரசரால் முறையே செய்யப்படுகின்றது. செபமணிகள் சிங்கப்பூர் என்ற தலத்தில் விளைகின்றன. இவ்விருவகை மணிகளும் காசி க்ஷேத்திரத்திலே கொண்டுவரப்பட்டுத் துளை முதலிய இட்டுச் சுத்தப்படுத்தப் படுகின்றன.

Koviloor Digital Library

உருத்திராக்க மணியாவது, மாலை யாவது கையினின்றுந் தவறிக் கீழே விழுமாயின், எடுத்துக்கண்களிலே யொற்றிக் கொண்டு, சுத்தோதகத்தால் அபிடேகஞ் செய்து, மலர்கொண்டு அருச்சித்து, காயத்திரி மந்திரம் நூற்றெட்டுச் செபிக்கின் அக்குற்றம் நீங்கும். செபமாலைக் கயிறு அறுமாயின் அவ்வாறே யருச்சித்துக் கோவை செய்து, அகோர மந்திரத்தை நூறுதரஞ் செபிக்க. அவற்றைத் தாழ்ந்த சாதியார், பொய்யர், வியபிசாரஞ் செய்வோர், மதுமாமிச பக்ஷண முடையோர், சிவ தீக்கை பெறுதார் என்னு மிவர் தீண்டுவாராயின் பஞ்சகௌவியத்தால் விதிப்படி யபிடேகஞ் செய்து தரிக்க. வீட்டுக்கு விலக்காயிருக்கும்பெண்களும், அந்தியருந் தீண்டுவாராயின் மனநொந்து, அவற்றை விடுத்து வேறுகொண்டு தரிக்க.

அக்க தீபிகை.

அக்கமதுவிழின் விழியினொற்றிநீராட்டிமலரருச்சித்தேத்தி
நக்கனவன்காயத்ரிநூற்றெட்டுநவின்றணிகபாச்நாசத்
தக்கணத்தேயவ்வாற்றினகோரநூறுரைத்தணிகவற்பர்தீய [ள்க.
ரொக்கிடினேயைந்தாட்டபூத்தவளந் தியர்தொடின்வேறொன்றேகொ

பெண்களும் அணியலாம்

பெண்கள் ருத்ராட்ச மணியை அணியலாமா? என்று சிலருக்கு ஐயம் எழுந்ததுண்டு. பெண்கள் அம்பிகையின் அம்சமானவர்கள் அம்பிகையே ருத்ராட்சம் அணிகின்றபோது, பெண்களும் ருத்ராட்சத்தை அணிந்துகொள்ளலாம் என்பதில் ஐயத்திற்கே இடமில்லை.

அம்பிகை ருத்ராட்ச மணி அணிந்த செய்தியை அருணாசலப் புராணப் பாடல் ஒன்று கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றது.

கொந்தளகம் சடைபிடித்து, விரித்து, பொன்தோள்
குழை கழுத்தில் கண்டிகையின் குப்பு பூட்டி
உந்தும் அரவு உரிநிகர்பட்டாடை நீக்கி
உரித்தமர உரிசாத்தி உத்தூளத்தால்
விந்தை திருநீறு அணிந்து கனற்குள் காய்ந்து
விளங்கும் ஊசியின் ஒருகால் விரலை ஊன்றி
அந்தி பகல் இறைபதத்தின் மனத்தை ஊன்றி
அரிய பெரும் தவம் புரிந்தாள் அகிலம் ஈன்றாள்

சிவபுராணத்தில் ருத்ராட்சத்தின் மகிமையை சிவபெருமான் பார்வதி தேவிக்கு உரைக்கிறார். அப்போது "ஸர்வாஸ்ரமரணாம் ஸர்ணானாம் ஸ்த்ரீ" என்று உரைப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் : "ருத்ராட்சத்தை அனைத்து வர்ணத்தினரும் அணிந்து கொள்ளலாம். பிரம்மச்சரியம், கிருஹஸ்தாஸ்ரமம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய எல்லா ஆசிரம வாழ்க்கை நிலையிலும் ருத்ராட்சங்களை அணிந்து கொள்ளலாம் ; ருத்ராட்ச மணிகளைப் பெண்களும் அணியலாம். அவ்வாறு ருத்ராட்சத்தை அணிபவர்க்கு எனது அருள் நிச்சயம் கிட்டும் ; ருத்ராட்ச மணியை பிரணவ மந்திரமான 'ஓம்' என்ற மந்திரத்தை உச்சரித்து அணிந்து கொள்ள வேண்டும்

Koviloor Digital Library

சதாசிவரின் சக்தியாகிய மனோன்மணி ருத்ராட்ச ஜப மாலை கொண்டு ஜபம் செய்யும் காட்சி ரூபத்தியானத்தில் கூறப்பட்டுள்ளது. அந்தப் பாடல் வருமாறு:

இந்து நிபவேத கர வன்னி நயனம் ஸ்யாத்
பங்கஜ வரதாபய ஜபாக்ஷ பல யுக்தம்
அங்க ஹிம பூஷண விசித்ர நயனம் ஸ்யாத்
துங்க மகுடோத்பல மனோன்மணி ஸ்வரூபம்

இப்பாடலில் ஜபாக்ஷ என்ற வார்த்தை ஜபமாலையாகிய ருத்ராட்ச மணி மாலையைக் குறிக்கிறது.

இல்லறத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள் சிறிய ருத்ராட்ச மணிகளை அணிந்து கொள்ளலாம். சன்னியாசம் பெற்ற பெண்கள் பெரிய வகை ருத்ராட்ச மணிகளை அணிந்து கொள்ளலாம். மாதவிலக்கு, குழந்தை பெற்ற தீட்டு போன்ற அசுப காலங்களில் ருத்ராட்சம் அணிவதைத் தவிர்க்க வேண்டும்.

1) ஒரு நான்குமுக ருத்ராட்சம், ஒரு ஆறுமுக ருத்ராட்சம் இந்த இரண்டையும் சிவப்பு நூலில் கோர்த்து படிக்கும் பிள்ளையின் கழுத்தில் எப்பொழுதும் அணிந்திருந்தால் ஞாபக சக்தி பெருகும், இருபத்திரண்டு வயது வரை போடலாம்.

2) ஒரு ஐந்துமுக ருத்ராட்சம் எடுத்து அதை எலுமிச்சம் சாறு விட்டு இழைத்து அந்த சாந்தை தேள் கொட்டிய இடத்தில் தடவினால் வலி குணமாகும்.

3) தூக்கம் இல்லாமல் துன்பப்படுபவர்கள் ஒரு ஐந்துமுக ருத்ராட்ச கொட்டையை எடுத்து அதைப் பால் விட்டு இழைத்து அந்தச் சாந்தை கண்ணின் இமை மேல் தடவினால் நல்ல தூக்கம் வரும்.

4) ஒரு ஆறுமுக ருத்ராட்சத்தை எடுத்து தேனில் இழைத்து அந்தச் சாந்தை மாதவிடாய் நாட்களில் பெண்களுக்கு வரும் வயிற்று வலிக்குச் சாப்பிட்டால் வலி நீங்கும்.

5) ஒரு ஐந்துமுக ருத்ராட்சத்தைத் தூளாக்கி துளசிச் சாற்றில் கலந்து சாப்பிட்டால் பக்கவாதம் குணமாகும்.

6) ஒரு ஐந்து முக ருத்ராட்சத்தை எடுத்து தண்ணீரில் போட்டு பிறகு அதை எடுத்துவிட்டு தண்ணீர் தாகம் உற்றவர்கள் சாப்பிட்டால் தாகம் நீங்கும்.

7) இரண்டு ஐந்துமுக ருத்ராட்சம் அல்லது இரண்டு ருத்ராட்சப் பழம் எடுத்து ஒரு கண்ணாடி டம்ளரில் தண்ணீர் எடுத்து அதில் இதை மூழ்கும் வரை வைத்து பிறகு இவற்றை நீக்கி வெறும் நீரை தினமும் காலையில் குடித்தால் இரத்த அழுத்தம் (பிளட் பிரசர்) நீங்கும்.

8) ருத்ராட்சத்தை நீரில் போட்டு அந்த நீருடன் பால் கலந்து சாப்பிட்டால் சர்க்கரை வியாதி குறையும்.

9) ருத்ராட்ச தண்ணீரைச் சாப்பிட்டுவிட்டு உடன் துளசி இலை சாப்பிட்டால் உடலில் உள்ள பிளட் பிரசர் உடனே குணமாகும்.

10) ருத்ராட்ச தண்ணீரில் சுக்குத் தூளும், மஞ்சள் தூளும் கலந்து குடித்தால் பக்கவாதம் குணமாகும்.

11) ருத்ராட்சத் தண்ணீரில் மஞ்சள் தூள் கலந்து குடித்தால் ரத்த வாந்தியும், இருமலும் குணமாகும்.

12) இரண்டு ருத்ராட்சம் பழம், இரண்டு மிளகு இவை இரண்டையும் கண்ணாடி டம்ளரில் போட்டு அவை மூழ்கும் வரை தண்ணீரில் வைத்து அந்தத் தண்ணீரை தினமும் காலையில் குடித்து வந்தால் குழந்தை பெறுவதைத் தள்ளிப் போடலாம். கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிட வேண்டிய அவசியம் இல்லை. குடும்ப கட்டுப்பாட்டுக்குச் சிறந்தது.

Koviloor Digital Library

சிவாலய தரிசன விதி

கதிரவ னொடுங்குங் காலம்
இரண்டரைக் கடிகை யென்ன
அதிர்புன லமையுந் தானம்
அடைந்துமெய்ச் சுத்தி செய்தே
முதிரனுட் டானம் செய்து
மொய்த்தகண் மணியும் பூண்டு
பிதிர்தலில் அன்பு வாய்ந்து
பிறங்குவார் குழாத்தி னோடும். (1) – மயிலாடுதுறைப் புராணம்.

சூரியன் மறைவதற்கு இரண்டரை நாழிகைக்கு முன் (2 ½ நாழிகை 1 மணி) நீர்நிலையை அடைந்து உடம்பைத் தூய்மை செய்து விதிப்படி அனுட்டானம் செய்து, உருத்திராக்கம் தரித்துக் கொண்டு, நீங்காத அன்புடைய சிவநேசச் செல்வர்களோடும் (திருக்கோவிலுக்குப் போக வேண்டும்)

குறிப்பு : சிவதரிசனம் அதிகாலையில் செய்தால் இரவிலே செய்த பாவம் போகும். மதியம் செய்தால் பிறந்தநாள் தொடங்கிச் செய்த பாவம் போம். மாலைக் காலத்திலே செய்தால் ஏழு பிறவிகளிற் செய்த பாவம் போம்.

சோம வாரம், அட்டமி, பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம், தக்ஷிணாயணம், சித்திரை விஷு, ஐப்பசி விஷு, மாதப் பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் சிவதரிசனஞ் செய்தால் மிக மேலாகிய புண்ணியங்கள் உண்டாகும்.

பிரதோஷ காலத்திலே, மெய்யன்பரோடு சிவ தரிசனஞ் செய்யின், கடன், வறுமை, நோய், பயம், துன்பம், மரண வேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும். முத்தி சித்திக்கும் சைவ சமயிகள் விபூதி, உத்திராக்கம் மட்டுமாவது தரித்துக் கொண்டால் போதுமானது. அவர்கள் சிவனடியார்களே எனச் சைவநூல் கூறும்.

தெங்கங்காய் அரம்பை யீன்ற தீங்கனி நறுங்கற் பூரம்
துங்கமா ரடைகா யேனும் கிடைத்ததூக் கனிகளேனும்
பங்கஞ்சா ராது கொண்டு பரமனா லயத்திற் செல்க
அங்கவை அரிதேல் முற்றத் தமைதரு துரா லொழிக்க (2)

தேங்காய், இனிய வாழைப்பழம், கற்பூரம், பாக்கு, வெற்றிலை அல்லது கிடைத்த கனிகள் ஆகியவற்றை அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப் பெற்ற கைகளால் ஏந்திக் கொண்டு போகக் கடவர்.

(சிவபெருமானது திருக்கோவிலுக்கு வெறுங்கையோடு போகக் கூடாது. பொருளில்லாதவன் இலை, மலர் கொடுத்து வணங்கல் வேண்டும், அதுவுங் கூடாதவன்) சந்நிதியில் உள்ள செத்தை முதலியவற்றைப் போக்கி வணங்க வேண்டும்.

இனமறை புகழுந் தூல லிங்கமென் றுரைக்கப்பட்ட
கனககோ புரமுன் தாழ்ந்து கனிந்தசிந் தையினுட் புக்குப்
பனகபூ டணவே ரம்பப் பண்ணவன் பாதந் தாழ்ந்து
மனனமர் நந்திப் புத்தேள் மருங்கடைந் திறைஞ்சல் செய்து (3)

Koviloor Digital Library

தூலலிங்கம் என்று சைவ நூற்களிற் கூறப்பட்ட திருக்கோபுரத்தைத் தாழ்ந்து வணங்கி கனிந்த சிந்தையினுடன் உள்ளே புகுதல் வேண்டும். அங்கு முதலில் பாம்பை அணிந்த விநாயகப் பெருமானையும், இடப தேவரையும் வணங்கி அப்பால் கோபுர வாயிலில் எழுந்தருளியுள்ள அதிகார நந்திசுவரரை வணங்கி,

குறிப்பு : இடபத்தையும் நந்தி என்று கூறுவர்.

"அடியனேன் சிவபிரானைச் சேவிப்பான் அணைந்தேன் தீமை கடிதரும்
விடைகொ டுத்துக் கடைக்கணித் தருளு" கென்று
படியற இரந்து வேண்டிப் பயத்தொடு பத்திமேவ
"முடியநீ போய்வா" என்று மொழிந்தரு ளியதா எண்ணி. (4)

அடியேன் சிவபெருமானை வணங்கி வருவதற்கு அனுமதி செய்தருளும் எனப் பிரார்த்திக்க, அவர் "நீ போய்வா" என்று உத்தரவிட்டதாகப் பாவித்துக் கொண்டு பயபக்தியுடன் உள்ளே செல்ல வேண்டும்.

இருகரங் குவித்துட் புக்காங் கிலங்கறின் றாடு மையர்
பொருவில் குஞ்சித்தாள் போற்றிப் புண்ணியச் சிவபிரான்முன்
மருவியங் காதிசைவன் மலர்க்கையினனைத்து நல்கி
யொருவற வனையான் செய்யும் உபசாரம் அனைத்து - நோக்கி (5)

(உள்ளே செல்லுங்கால்) இரு கைகளையும் குவித்துக் கொண்டு சபா மண்டபத்திலே நடனஞ் செய்யும் ஆனந்த நடராசப் பெருமானது எடுத்த திருப்பாதத்தை வணங்கிக் கொண்டு சிவனது சந்நிதியடைக. அங்கு ஆதிசைவ சிவாச்சாரியாரிடம் தேங்காய், பழம் முதலியவற்றைக் கொடுத்து அவர்கள் செய்யும் உபசாரம் அனைத்தையும் ஒன்றிய உள்ளத்தோடு கண்டு தெரிசித்திடுக.

நிறையருட் பாட லாகி நிரம்புதே வாரம் யாரும்
அறைதிரு வாச கஞ்சீ ரமையிசைப் பாபல் லாண்டு
குறைதவிர் புராணமின்ன கொண்டுறத் துதித்தல்செய்து
மறைபுகல் விபூதி மேனி வளைத்திரு கையால் ஏற்று (6)

அருளாளர்களாகிய சைவ சமயாச்சாரியார்கள் அருளிய தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் ஆகிய தமிழ்ப் பாடல்கள் பாடித் துதித்திட வேண்டும். சிவாச்சாரியர் தரும் விபூதியைத் தாழ்ந்து இருகரம் நீட்டி வாங்கிக் கொள்ள வேண்டும்.

குறிப்பு : திருக்கோவிலில் ஓதத்தக்க தோத்திரங்கள்

தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளேயாம். இதர பாடல்கள் ஓதத்தக்கனவல்ல. பூசருக்கு இயன்ற தக்ஷிணை கொடுக்கக் கடவர்.

சிறித கன்றணுவு மண்ணிற் சிந்திடா வகை தரித்துக்
குறிதரு சோமாக் கந்தர் குரவனா யமரு மையர்
செறிபுகர் முகத்தே ரம்பர் சேவலங் கொடிப்பிரானார்
முறிவறும் இவரைப் போற்றி வலஞ்செயல் முறைமையாமால் (7)

பின்பு சிறிது அகன்று விபூதியை நிலத்திலே சிந்தாத வண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று கூறி நெற்றி முதலிய இடங்களில் பூசிக் கொள்க. பின்பு சோமாஸ்கந்தர், உற்சவமூர்த்தி, தக்ஷிணாமூர்த்தி, விநாயகர், முருகர் முதலானோரை வணங்கி வலமாகச் செல்ல வேண்டும்.

Koviloor Digital Library

இருகர சலன நீக்கி இயைதரக் குவித்துக் கொண்டு
பொருவரு பெருமான் பாத தாமரை யுளம்பொ ருந்தி
வெருவறச் சிந்தித் தேனும் அவன் துதி விரித்திட்டேனும்
ஒருவரு மிரண்டு நீங்கா தொண்மையி னியற்றியேனும் (8)

வலம் வரும்போது இரண்டு கைகளையும் வீசிச் செல்லாது நெஞ்சுக்கு நேராக குவித்துக் கொண்டு சிவபெருமானது திருவடித் தாமரைகளைச் சிந்தித்துக் கொண்டோ, தோத்திரங்கள் சொல்லிக் கொண்டோ அல்லது இரண்டும் செய்து கொண்டோ வலம் வரவேண்டும்.

குறிப்பு : அபிஷேக காலத்திலே உட்பிரகாரத்தில் வலம் வருதல், வணங்கல் கூடாது. (இது முதல் சுற்று)

அறைபெரும் பத்தி வாய்ந்த அறுபத்து மூவராய
நிறையுடை யரைத்து திக்கி னிகழுந்தற்று தியின் மேலும்
குறைவிலா மகிழ்ச்சி யம்மான் கூறுமற் றாதனால் அந்த
முறையுடை யரைச்சிந் தித்து முனிவறத் துதி செய்தேனும் (9)

உலகம் போற்றும் பக்தி வாய்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களைத் துதித்தால் அது சிவபெருமானுக்கு அவரைத் துதிப்பதை விடப் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கும் அத்தகைய சிவனடியார்களைத் துதித்து வலம் வருக.

குறிப்பு : இது இரண்டாவது சுற்று

இடைவெளி தோற்று றாமல் இனிதடி யெடுத்து வைத்தும்
இடைதர முக்காற் சூழல் விதிமேலு மியம்பா நிற்பர்
கடைபடு குணுங்கே யாவன் கைகளை வீசிச்செல்லின்
உடையிராக் கதனா மார்பின் உறப்பிணித் தடையின் மாதோ (10)

வலம்வரும் பொழுது இடைவெளி விடாமல் அடிமேல் அடி எடுத்து வைத்து மூன்று முறைவலம் வருதல் உத்தமம். அதற்கு மேலும் (ஐந்து, ஏழு, ஒன்பது, பதினைந்து, இருபத்தொன்பது தரமும்) செய்தலும் உண்டு என்பர். கைகளை வீசிச் செல்வோர் பிசாசு எனப்படுவான். கைகளைக் கட்டிக் கொண்டு செல்வோன் இராக்கதன் எனப்படுவான்.

குறிப்பு : வலம் வரும் ஆவரணத்தில் உள்ள பலிபீடத்தையும், நந்தியையும் சேர்த்து வலம் வர வேண்டும். அங்கு பலிபீடமும், இடபமும் இல்லையாயின், அதற்கு வெளிப்பிரகாரத்தில் உள்ள பலிபீடத்தையும், இடபத்தையும் சேர்த்து வலம் வர வேண்டும். சிவலிங்கத்துக்கும் அந்தந்த ஆவரணத்திலுள்ள பலிபீட இடபங்களுக்கு இடையே செல்லக் கூடாது. (ஆவரணம் – சுற்று)

அஞ்சலி செய்து சூழின் அமரனே யாவனானேன்
நெஞ்சலில் சிவாகமங்கள் இயம்பலின் இந்தவாறே
மஞ்சவிர் கோயில் சூழ்ந்து(ம்) ஆண்ட தண்டீசர் பாற்போய்
தஞ்சமென்றிருகை தட்டித் தரிசனப் பலனை யின்று (11)

கைகளைக் கூப்பிப் தொழுவோன் தேவன் எனப்படுவன் என அளவற்ற சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளது.

(இவ்வாறு மூன்றாம் முறை வலம் வரும்போது சிவபெருமானால் சண்டேசப் பதம் அருளப் பெற்ற) சண்டேசுர நாயனார் திருச்சந்நிதியை அடைந்து மூன்று முறை கைதட்டி (தாளத்ரயம்) சிவபிரான் தரிசனப் பயனை இன்று.

குறிப்பு : 'கைகாள் கூப்பித் தொழீர்' என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரமும் காண்க

Koviloor Digital Library

பெற்றனள் அடியேன் என்று பேசியஞ்சலித்த பின்னர்
அற்றமிலுமையாள் கோயில் அடைந்து பசாரமாய
முற்றவும் முன்போல் ஆற்றி முனிவற நோக்கிப் போற்றிக்
குற்றமில் விபூதியோடு குலவு செஞ்சாந்துமேற்றே (12)

அடியேன் பெற்றனன் என்று கூறி வணங்கிக் கொண்டு, அம்மையார் கோயிலுக்குச் செல்ல வேண்டும். அங்கு முன்போல உபசாரங்கள் செய்து வணங்கித் துதித்து விபூதியும், செஞ்சாந்தும் (குங்குமம்) பெற்றுக் கொள்ள வேண்டும்.

குறிப்பு : அம்மையார் சன்னிதியிலும் விபூதி கொடுக்கப்பட்டது என்றும், கொடுக்கப்பட வேண்டும் என்றும் இதனால் தெரிகிறது. செஞ்சாந்து என்பது தேவாரத்தில் "குங்குமக் குழம்பு" என வருவதால் தூளாகக் கொடுக்காமல் சந்தனம் போல் (கரைத்து) கொடுக்கப்பட்டது எனவும் தெரிகிறது. தற்போதும் அவ்வாறு கொடுக்கலாம்.

உறுவலமாகச் சூழ்போந்து யர்கொடி மரப்பாற் போந்து
மறுவிலட்டாங்கமாக வணக்கமோ ரைங்காற் செய்து
பெறுமுறை யாங்க மர்ந்து பிறங்கிய மூலம் நூறு
மறுதிசெய கோர நூறும் அடையுறக் கணித்தல் வேண்டும் (13)

பின்பு வலமாக வந்து கொடி மரத்தின் (கீழ்புறம் வடக்கே தலைவைத்து) அட்டாங்க நமஸ்காரம் ஐந்து முறை செய்தல் வேண்டும். பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பின்பு வடக்கு நோக்கியிருந்து மூல மந்திரத்தை நூறுதரமும் அகோர மந்திரத்தை நூறு தரமும் செபித்துத் திருப்ப வேண்டும்.

குறிப்பு : அட்டாங்க நமஸ்காரமாவது - தலை, கைகளிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். அதாவது, தலையை வைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கை முன்னும், இடக்கை பின்னும் நேரே நீட்டி பின்பு அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படிக் கைகளை அரையை நோக்கி நீட்டி வலக்காதை முன்னும், இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்தல்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கைகள் இரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்துறுப்பும் நிலத்திலே தோயும்படி வணங்குதல். கிழக்கு, வடக்கு நோக்கி கால்நீட்டல் ஆகாது. நமஸ்காரம் ஐந்து, ஏழு, ஒன்பது, பன்னிரண்டு தரமாயினும் பண்ணல் வேண்டும். கொடிமரத்தின் உள் மண்டபங்களில் வீழ்ந்து கும்பிடல் ஆகாது. திரும்பும்போது சிவபெருமானுக்கும், இடப தேவருக்கும் புறங்காட்டாது திரும்பல் வேண்டும்.

மூலம் - என்பது சைவாசாரியர் பால் தீட்சை பெறும்போது உபதேசிக்கப்பட்ட சிவபெருமானது மூலமந்திரம். அகோரம் - அகோர மந்திரம். சைவ சமயிகள் சமயதீட்சை பெற்றுச் சைவ சமயத்தை வரம்போடு அறிந்து ஒழுகிப் பயன் அடைவார்களாக.

Koviloor Digital Library

வில்வம் சாற்றுவதன் பயன்

வில்வத்தின் மூன்று தளங்களும் ஸத்வம், ரஜஸ் தமஸ் என்ற முக்குணம், மூன்றுகண், மும்மூர்த்தி, இவ்வில்வத்தின் ஒன்று ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டால் மூன்று ஜன்மத்தின் பாவத்தைப் போக்கும். வில்வ பத்ரத்தை எடுத்து எவன் சிவார்ச்சனை செய்கிறானோ அவன் மூன்று ஜன்மாக்களின் குலங்களை உத்தாரம் செய்து சிவலோகத்திலும் கொண்டாடப்படுகிறான்.

வில்வத்தின் மூன்று தளங்களும் இச்சை, ஞானம், கிரியை என்று மூன்று சக்திகளின் வடிவம். வில்வ இலையைப் பார்ப்பதாலும், தொடுவதாலும், வணங்குவதாலும் பாவம் அகலும். காய்ந்ததானாலும், பழையதானாலும் வில்வத்தினால் சிவனைப் பூஜிப்பதால் சமஸ்த பாதகங்களில் இருந்தும் விடுவிக்கப்படுகிறான். துண்டு செய்யாத வில்வ இலையினால் எவனொருவன் ஒருதடவை லிங்கத்தை பூஜிக்கிறானோ அவன் எல்லாப் பாதகங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டவனாய் சிவலோகத்தில் கொண்டாடப்படுகிறான். பூச்சிக் கூடு, புழு இல்லாததான வில்வங்களால் யார் ஓர் தடவை லிங்கார்ச்சனை செய்பவரோ, அவர் சிவலோகத்தில் கொண்டாடப்படுவர்.

முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விளா இவைகள் பஞ்ச வில்வங்களாகும். முன்பு ப்ரம்மாதி தேவர்களினாலே வில்வபத்திரத்தின் முன்பக்கத்தில் அமுதம் வைக்கப்பட்டது. அதன் பின்பக்கத்தில் பக்தியற்றவர்களைத் தடுக்கக் கூடியவர்களான யக்ஷர்கள் வசிக்கின்றார்கள். அதன் காம்பு நுனியில் இந்திரன் முதலான லோகபாலர்கள் வசிக்கின்றார்கள். ஆகையால் வில்வ பத்திரத்தின் முன்பக்கத்தினாலே பரமேச்வரனைப் பூஜிக்க வேண்டும். எவ்விடத்திலும் புஷ்பம், பழம் இவைகளைக் கவிழ்த்து வைப்பது விரும்பத்தக்கது அல்ல. பரமேச்வரனுடைய வாக்கின்படி வில்வ இலையைக் கவிழ்த்தே வைக்க வேண்டும். இவ்விஷயம் சிவரகசியத்தில் நந்திகேச்வரர், அகஸ்தியரிஷி மற்றும் பரமேச்வரரது ஆலோசனையில் வந்த கருத்தாகும்.

வில்வபத்தரம், பச்சை, துளசி, வெட்டிவேர், மருக்கொழுந்து, அறுகு, கதிர்ப்பச்சை முதலிய பசிய பத்திரங்கள் அனைத்தும் தாமத இராஜத பத்திரங்களாகும். இவற்றால் சிவபிரானுக்கு அர்ச்சனை செய்யின் போக மோக்ஷம் இரண்டும் உண்டாகும் (அஜிதம்)

எண்ணிறைந்த வருடங்கள் கங்காஸ்நானஞ் செய்த பலனை பரமசிவத்திற்கு அர்ச்சித்த ஒரு வில்வதளம் தரும். இதனால் வில்வ தளத்திற்கு ச்சமமான தளம் (இலை) ஒன்றுமில்லை என்று கூறப்பட்டது. வில்வம் ஒரு வருடம் பூஜை செய்த பயனைத் தரும். பத்ரங்களுள் சிறந்தது வில்வமே ஆகும்.

வில்வம் எடுக்கலாகாத நாட்கள்:

சோமவாரத்திலும், சதுர்த்தி, அட்டமி, நவமி, சதுர்த்தசி, பௌர்ணமி, அமாவாசை த்திதிகளிலும் வில்வத்தைக் கொய்தல் கூடாது.

உரிய ஒரு நாளில் கொய்து வைத்த வில்வத்தை ஆறு மாதம் வரை வைத்திருந்து பூஜை செய்யலாம்.

ஞாயிறு அன்று சிவத்திற்கு வில்வம் சார்த்த நன்மை உண்டாகும்.

"நீரோடு கூவிளமும் நிலாமதியும் வெள்ளெருக்கும் கொன்றை"

– ஸ்ரீ ஞான சம்பந்த சுவாமிகள் – தேவாரம்

வில்வம் அனேக ஆலயதல மரமாகும். (கூவிளம் – வில்வம்)

"யாவர்க்கும் இறைவர்க்கொரு பச்சிலை" – திருமந்திரம்

Koviloor Digital Library

வில்வமரம் நம்நாடு முழுவதிலும், இமயமலைச் சரிவுகளிலுமுள்ள காடுகளில் வளருகின்றன. இதற்கு மேலைநாட்டு தாவர இயலின்படி Botanical Name - "Aegle Marmeles" என்றும், வடமொழியில் வில்வம், ஸ்ரீபத்ரம் என்றும், தமிழில் வில்வம், மாலூரம், கூவிளம் என்பதாகவும், ஆங்கிலத்தில் "Bael Fruit" என்றும் பெயர்கள் உள்ளன.

வில்வ தளத்தில் அனேகம் உண்டு. அவைகள் 3, 5, 7 என்ற படியும் அமைந்திருக்கும். ஏழு தளங்களைக் கொண்ட வில்வமரத்தை காண்பது அரிது. இதனை மகாவில்வம் எனக் கூறுகின்றனர். ஒரு ஒரு வில்வ தளம் மட்டுமே இறைவர்க்குச் சாற்றிவர நூறாயிரம் தங்கப்பூக்களுக்குச் சமம். வில்வத்திற்கு நிர்மாலியக் குற்றம் இல்லை.

வில்வ மரத்தை வளர்ப்பதினால் ஆயிரம் 'அசுவமேதயாகம்' செய்த பயன் கிடைக்கும். ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பயன் கிடைக்கும். கங்கை முதலான நதிகளில் நீராடிய பயன் உண்டாகும். காசி முதலான தலவழிபாட்டுப் பயன் உண்டாகும். ஆயினும், வீட்டில் வளர்ப்பது கூடாது.

வில்வத்தளிர்

அலைதவழும் திருப்பாற் கடலைத் தேவர்கள் யாவரும் நுரை எழக் கடைந்த பொழுது வில்வப் பத்திரமும், வாசனை பொருந்திய துளசியும் தோன்றியமையால் அவை நமக்கு விருப்பந்தருவன.

விளரிப்பண்ணைப் போன்ற மொழியினையுடையாய்! துளசியினும் சிறந்தது வில்வத் தளிர். அத்தளிர் மிக முதிர்ந்தாயினும், சருகாய் உலர்ந்ததாயினும், அவ்விலை இரண்டொன்று ஒட்டியிருந்தாலும் விளக்கத்தகாதது. நெய் பூசப்பெற்ற கரிய கூந்தலையுடைய நிமலையே ! திருமகளுக்கு வளப்பத்தைத் தரும் செல்வந்தரும் அதிகாரம் தந்ததே இவ்வில்வத்தளிரே. ஆகலான் அப்பூமகளுக்கு எப்பொழுதும் வாழுமிடம் வில்வத்தளிர்களே. நோய்கள் நீங்க வேண்டுமாயினும், வலிமை மிக வேண்டுமாயினும், இப்புவியோர் அனைவரும் தம்மை அடியில் விழுந்து வணங்க வேண்டுமாயினும், விண்ணுலகு வேண்டினும் வில்வத்தளிர்களால் எம்மைப் பூசித்துப் பெறலாம். அன்றியும் மும்மலம் நீங்கிய முத்திப் பேற்றை நல்குவதும் வில்வத்தளிர்களே. அஷ்டோத்தர சத (நூறெட்டு) நாமங்களைச் சொல்லியும் சகஸ்ரநாமங்கள் (ஆயிரம் பெயர்கள்) கூறியும் விரும்பி எமதடியிலிட்டுப் பூசிக்கும் வில்வத் தளிர்களால் பெறும் பயனை தேனொழு கூந்தலை உடையவளே! இதன் பயனைச் சொல்ல முடியாததாம். – பேரூர்ப் புராணம்.

வில்வத்தின் மருத்துவப் பயன்

வைத்திய முறையில் சிறந்த மூலிகையாகவும் வில்வம் உபயோகிக்கப்படுகிறது. இதன் வேர் பட்டை, மரப்பட்டை, இலை, பிஞ்சு, காய், பழம், பால் கசிந்து பிசின் போன்ற இதன் பல பகுதிகள் வைத்தியத்திற்குப் பயன் ஆகின்றன.

இதன் பழத்தில் லோகசத்துக்கள், உப்புச் சத்துக்கள் உள்ளன. சற்றுக் கடுப்பும் வெடுப்பும் கொண்ட இதன் இலைகள் மிக வீரியம் உள்ள கற்பம் ஆகும்.

காலையில் வெறும் வயிற்றில் ஆரம்பத்தில் மூன்று, பின் ஐந்து, ஏழு தளங்களாக மிளகு சேர்த்து உட்கொள்ள வீரிய விருத்தி உண்டாகும். இவ்விதம் யோகிகள் உட்கொண்டு இந்திரியத்தை தடுத்துக் கட்டி அதை நேரடியாக நாடி நரம்புகளிலே பரவச் செய்து உடல் தளர்ச்சி, நரை, திரை, மூப்பு இவைகள் வராமல் தடுத்து இளமையோடு வாழ்கிறார்கள்.

Kovilöor Digital Library

தவிரவும், இதன் இளம் தளிர்களை செப்புப் பாத்திரத்தில் தண்ணீர் விட்டு ஒருநாள் ஊற வைத்து அருந்தினால் உடல் வெப்பம், பித்த ஆதிக்க ரோகங்கள், ஸ்த்ரீகளுக்கு உண்டாகும் பெரும்பாடு போன்ற நோய்கள் தீரும்.

வில்வ தளங்களைச் சீரகம், மிளகு, சுக்கு சேர்த்து கசாயம் செய்து சாப்பிடில் குடல் தொடர்பான புண்கள், குமட்டல் போன்றவைகள் தீரும்.

இதன் இலைச்சாறும் மிளகும் சேர்த்துக் கொடுக்க காய்ச்சல் தீரும். இதன் பழம், கத்தைப் காம்பு, மாதுளைப் பட்டை இவைகளைப் பொடியாக்கிக் கொடுக்க சீதபேதி, அதிகாரம் நீங்கும்.

வில்வப் பழம் மலம் நீக்கும் குணமுடையது. இதன்காயை வெய்யிலில் உலர்த்தி நெருப்பில் கருக்கி, உப்பு சேர்த்து பல்பொடியாக உபயோகிக்க பல் ஈறுகளில் வீக்கம், ரத்தம் கீழ் உண்டாதல், பல்வலி ஆகியவை தீரும்.

வில்வ வேர் 30 பலம் எடுத்து இடித்துச் சூரணம் செய்து, தண்ணீரைக் காய்ச்சி வடிகட்டி, வெல்லம் 30 பலத்தைப் பாகு செய்து அத்துடன் கலந்து அதில் சுக்கு 3 பலம், மிளகு 4 பலம், திப்பிலி 2 பலம், செவ்வியம், தாளிச பத்திரி வகைக்கு 1 பலம், காககேசரம் 1/2 பலம், திப்பிலி மூலம் 2 பலம், சித்ர மூலம் 2 பலம், த்ரிஜாதம் வகைக்கு 1/4 பலம், ஜீரகம் 2 பலம், இவைகளைப் பொன் முறுவலாக வறுத்துச் சூரணம் செய்து சேர்த்து நெய் கூட்டி லேகியமாக தேன் சேர்த்துக் கிளறி, லேகியத்தைக் காலை, மாலை கழஞ்சிக்காய் அளவு உட்கொள்ளின் அஜீரணம், பசியில்லாமை, வாந்தி, காமாலை, குன்மம், பாண்டுரோகம் போன்றவைகள் நீங்கும்.

வில்வ வேரைத் தூளாக்கி, ஜலத்திலிட்டுக் கசாயமாக்கி அருந்திவரில் இந்திரியம் விருத்தியாகும். போக சக்தியையும் தேஜஸையும் கொடுக்கும்.

இது (வில்வம்) இருமல், கண்ணோய், கல்லீரல், புற்றுநோய், காய்ச்சல், சீதபேதி, தலைவலி, தாதுபலவீனம், தொண்டைக்கட்டு, மலச்சிக்கல், மேகநோய், வயிற்றுக் கடுப்பு, வயிற்றுப்புற்று, வயிற்றுவலி, வெட்டை வெள்ளை முதலிய பல நோய்களுக்கு மாமருந்தாகும்.

குறிப்பு : வைத்தியரைக் கொண்டு தகுந்த முறையில் வைத்தியம் செய்ய நன்மை பலவும் உண்டாகும். நாமாகவே வைத்யம் செய்யக் கூடாது. அளவு கூடினாலும் குறைந்தாலும் குற்றமாகும்.

வில்வ மரம் வைப்பதால் உண்டாகும் பயன்

ஓரர சாலு வேம்பு
ஒருபத்துப் புளியு மூன்றும்
சீர்பெறு விளாவும் வில்வம்
முன்றுடன் சிறந்த நெல்லி
பேர்பெறு மைந்து தெங்கும்
பெருகுமா வைந்து பேணி
ஆரெனுஞ் செய்தா னாகி
லவர்க்கில்லை நரகத் தானே.

என்றது, ஒரு அரசும், ஒரு ஆலும், ஒரு வேம்பும்/ பத்துப் புளியும், மூன்று விளாவும், மூன்று வில்வமும், ஐந்து நெல்லி மரமும், ஐந்து மாமரமும், ஐந்து தேங்கும் எவராகிலும் வைத்துப் பயிர் செய்தார்களேயாகில், அவர்களுக்கு ஒருக்காலும் நரகமில்லை யென்றவாறு.

Koviloor Digital Library

சிவபுண்ணியங்கள்

சிவப்புண்ணியங்கள் எண்ணிறைந்தன. பலவாய் அவற்றை விரிந்து அறிந்து கொள்வதிலும் நமது ஆற்றலுக்கு ஏற்பன வரைந்து அறிந்து கொள்வோம்.

சிவப்புண்ணியங்களாவன

1. விபூதி தரித்துக் கொள்ளலும், பிறருக்கு வழங்கலும்
2. உருத்திராக்ஷம் தரித்துக் கொள்ளலும், தக்கோருக்கு வழங்கலும்
3. சிவாலயங்களில் அலகிடுதலும், மெழுகிடுதலும்
4. திருநந்தனவனம் அமைத்துப் புஷ்பப் பணி செய்தல்
5. சிவாலயங்களில் திருவிளக்கிடுதல், தூபமிடுதல்
6. சிவபூஜை செய்தலும், செய்வோருக்கு உதவுதலும்
7. சிவாலயங்களில் கீதம் இசைத்தல்
8. சிவாலயம் எடுத்தல், பழைய ஆலயம் புதுக்குதல்
9. சிவாலய தரிசனம் செய்தல்
10. குரு பூஜை கொண்டாடுதல்
11. குருவழிபாடு செய்தல்
12. சிவவிரதங்கள் மேற் கொள்ளல்
13. சிவதீக்ஷை ஏற்றுக் கொள்ளல், தக்கவரை ஏற்றுக் கொள்ளச் செய்தல்
14. நாற்பாதங்களில் நின்று ஒழுகல்
15. வேதசிவாகமத் திருமுறைகள், சாத்திரங்களைப் படித்தல்

சிவப்புண்ணியங்கள் மேலும் பலவுள. ஆயினும் இப்பதினைந்தும் இக்காலத்திற்கு மிக இன்றியமையாதனவாகக் கொள்ளப்பட்டு ஒவ்வொன்றும் ஏற்றப்பெற்றிக் கூறப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

சிவாலயங்களில் அலகிடுதலும், மெழுக்கிடுதலும்

அலகிடுதல்:-

சிவாலயங்களில் அலகிடுதல் பெரும் புண்ணியமாம். தென்னை ஈர்க்குகளை கணிசமாகச் சேகரித்து, அவற்றைத் திருவலகு ஆக்கி திருக்கோயிலின் உள்ளும், புறமும் அலகிடுதல் வேண்டும். அலகிடுங்கால் சிற்றுயிர்கள் மடிந்து விடாதபடி அலகிடுதல் வேண்டும். ஆலயத்தின் புறத்துக் பகுதிகளை அலகிடுதற்கும், அகப்பகுதியில் அலகிடுதற்கும் தனித்தனியே அலகுகள் வைத்து அலகிடுவது உத்தமம்.

மெழுகிடுதல்:-

நல்ல ஆன் சாணத்தை வடித்த நன்னீரில் கலந்து திருமெழுக்கிடுதல் வேண்டும். நிலப்பகுதி, செங்கற்பகுதியாலும், திருமெழுக்கிட வேண்டும். கற்பாவிய தரைப்பகுதியை மெழுக்கிடாமல் நன்னீரால் கழுவி விடுதலே செய்யல் வேண்டும். அவ்விடத்து ஆன் சாணநீரால் மெழுக்கிட வேண்டாம்.

திருவலகால் தூர்த்துச் சேர்ந்த குப்பைகளை நெடுந்தூரத்தில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். நிர்மால்ய புஷ்பங்கள், மாலைகள் முதலியவற்றைத் தனித்தெடுத்து பாதம் படாப் பகுதியில் சேர்ப்பிக்க வேண்டும். நிர்மால்ய புஷ்பங்களையோ, மாலை முதலியவற்றையோ கடந்தவர்க்கும், மிதித்தவர்க்கும் செல்வங் குறைந்து தரித்திரம் சேரும். இவ்வாறு அலகிடுதல் முதலிய தாமே செய்பவர் கைத்தொண்டு செய்தவராய் சிவபுண்ணியம் பெற்று, பலவகையான பாவங்களும் நோய்களும் நீங்கியவராவார்.

திருவலகிட்டவர்கள் பதினாயிரம் சாந்திராயணம், கிரிச்சரம் ஆகிய விரதங்கள் அநுட்டித்த பலன் பெறுவர்.

திருமெழுக்கிட்டவர்கள் மேற்கண்ட விரதப் பயனினும் நூறுமடங்கு அதிகம் பெறுவர்.

'சிவாயநம' வென சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை

திருநந்தனவனம் அமைத்து புஷ்பப்பணி செய்தல்

புண்ணியஞ் செய்யார்க்குப் பூவுண்டு நீறுண்டு என்பது பெரியோர் வாக்கு. பூக்கள் சிவபூசைக்குரியன. நிலவளமும், நீர்வளமும் அமைந்த ஒரு பகுதியில் நந்தவனம் அமைத்தல் வேண்டும். அருகே எவ்வகை அசுத்தமும் நிகழாதவாறு காத்தல் வேண்டும். நந்தனவனத்திற்கு நல்ல வேலி கோலிக் கொள்ளல் மிக நல்லது. கோட்டுப்பூ, கொடிப்பூ, செடிப்பூ, நீர்ப்பூ ஆகிய நால்வகைப் பூக்களும் எடுக்குமாறு நந்தனவனம் அமைக்க வேண்டும்.

நந்தனவன புஷ்பத் தாவரங்கள்:

சுரபுனனை, மந்தாரம், நந்தியாவர்த்தம், ஸ்ரீயாவர்த்தம், அலரி, எருக்கு, மகிழம், மருதாணி, வெள்ளைலொத்தி, நூறு இதழ் தாமரை, ஊமத்தை, பலாசம், பாடலம், சண்பகம், கொன்றை, மயிற்கொன்றை, தேவதாரு, பச்சிலை மரம், முன்னை, மருக்கொழுந்து, அசோகம், பத்ரா, அபராஜிதம், ஆயிரம் இதழ் தாமரை, செங்கழுநீர், செந்தாமரை, நீலோற்பலம், குசும்பம், குங்கும மரம், மலை மல்லி, தர்ப்பை, நாயுருவி, கையாந்தரை, கமுகு, சரளம், மலையத்தி, கடம்பம், மா, இலும்பை, நாகம், ஹேமாகுலி, குன்றிச்செடி, நிலப்பனை, வேஜிகை, ஜாதி மல்லிகை, பட்டி, மாலதி, ரித்தி, நொச்சி, விஷ்ணு கிராந்தி, வாழை, நன்னாரி, வேதாளம், த்விகண்டி, இந்த்ரபர்ணி, தும்பை, வில்வம், கந்தபத்ரிகா, வெண் தாமரை, கொக்கு மந்தாரை, சங்கம், கண்டங்கத்தரி, சதாபத்ரா, மிளகு, பெருந்தும்பை, துளசி, கருந்துளசி, இந்திரவல்லி, கரும்பு, விஜயம்,

Koviloor Digital Library

வெள்ளை விஷ்ணுகிராந்தி, சிறுசண்பகம், கதலி, சகதேவி, நாகதந்தி, சூரியாவர்த்தம், சிங்ககேசரம், மகாபத்திரம், செல்வரத்தம், புன்னாகம், வெள்ளைமந்தாரம், வால் நெல், நீவாரம், நெல், விலாமிச்சை, மஞ்சாடி, மலைம்பூ, பாடலி, மல்லிகை, சுஜாதம், புரசு, பட்டி, சிவந்த அகஸ்தியம், வியாக்கிரம், குரண்டம், குருவேரு, பத்ராமுஸலீ, ரோஜா, தந்தி ஆகியன சிவார்ச்சனா சந்திரிகையில் கூறப்பட்டுள்ளன. நில, நீர்வளங்களுக்கேற்ப இவற்றைப் பயிரிட்டு, பராமரித்து, உரிய காலங்களில் இவற்றை சிவாலயங்களுக்கும், சிவ பூஜகர்களுக்கும் சமர்ப்பிப்பது உத்தம சிவப்புண்ணியமாம். திருநாகைக் காரோண புராணத்தில் புண்டரீக முனிவர் இரண்டாங்காட்சிப் படலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட புஷ்ப வகைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் மேலே கூறப்பட்டவையும் பலவுள. அவை நீங்கலாக மற்றவை வருமாறு :-

சந்தனம், கூதாளிச்செடி, ஞாழல் (புலிநகக் கொன்றை) கோங்கு, நாரத்தை, நெல்லி, குரவம், செவ்வகத்தி, நீர்மிட்டான், செருந்தி, வேங்கை, பொன்னாவிரை, குருந்து, நாணல், காயா, ஒரிதழ் தாமரை, தான்றி, பொன் ஊமத்தை, கூத்தன் குதம்பை, விளா, பூளை, மாவிலிங்கம், பன்னீர், எள், பருத்தி, வெண் காக்கணம், செங்கீரை, சதகுப்பை, வெட்சி, கருஞ்செம்பை, கண்டங்கத்தரி, கிளுவை, சிவகரந்தை, நுணா எனப்படும் மஞ்சணத்தி, வெற்றிலை, அருகு, கருங்காலி, மலை மல்லிகை, விபூதிப்பச்சை, மாசிப்பச்சை, அழிஞ்சில் வழுதுணை, இருவாட்சி, தாளியருகு, இலந்தை, எலுமிச்சை, புலிதொடக்கி முதலியனவாம்.

பூஜைப் புஷ்பங்களின் பயன்கள் :-

மேலே கண்ட புஷ்பங்களில் வெள்ளை நிறப் பூக்கள் சாத்துவிகம் அவை முத்தி கொடுக்கும்.

செந்நிறப்பூக்கள் - இராஜஸம் - அவை போகத்தைக் கொடுக்கும்.

பொன்நிறமுடைய பூக்கள் - போக மோக்ஷத்தைக் கொடுக்கும் - சகல காரிய சித்தி தரும் - புத்திரபௌத்திர் விருத்தி தரும்.

கருமை நிறப்பூக்கள் - தாமஸம் - நீலோற்பலம், விஷ்ணு கிராந்தி பூக்கள் தவிர மற்றைய கருநீலப்பூக்கள் பூஜைக்கு உதவா.

எல்லா நிறத்துப் பூக்களாலும் (கருமை நீங்கலாக) பூஜை செய்வது உத்தமம்.

ஒரே வர்ணத்தில் மாலை கட்டிச் சாத்துவது உத்தமம்.

பல வர்ணமுடைய மாலை சாத்துவது மத்திமம்.

இலையும் பூவும் கலந்து கட்டப்பட்ட மாலை அதமம்.

Koviloor Digital Library

சிவாலயங்களில் திருவிளக்கிடுதல், தூபமிடுதல்

திருவிளக்கிடுதல் :-

ஆலயங்களில் சிவபிரான், உமையன்னை திருச்சந்நிதியிலும் ஏனைய பரிவார மூர்த்திகள் சந்நிதியிலும் திருவிளக்கிடுதல் உத்தம புண்ணியமாம். தீபத்துக்குக் கபிலைப் பசுவின் நெய் உத்தமத்தின் உத்தமம். மற்றைப்பசுக்கள் நெய் உத்தமத்தின் மத்திமம். ஆட்டு நெய், எருமை நெய் உத்தமத்தின் அதமம். வெள்ளை எள்நெய் மத்திமத்தின் உத்தமம். மற்றை எள்ளின் நெய், மத்திமத்தின் மத்திமம். மரக்கொட்டைகளின் நெய் அதமத்தின் அதமம்.

எனவே தீபத்திற்கு நெய், எள்ளின் நெய் ஆகிய இரண்டையே உபயோகித்தல் நன்று. எள்ளின் நெய்யும் கைச்செக்கினால் ஆட்டியதே உத்தமம். எள்ளை வண்டு முதலிய பழுதறப் பார்த்து, புதிய பாண்டத்தில் நல்ல நீர் விட்டு, அதில் எள்ளையிட்டு, கையால் பிசைந்து கருந்தோலைப் போக்க வேண்டும். பின் காகம், கோழி, நாய், பன்றி ஆகிய இவை வாயிடல், மிதித்தல் செய்யாவண்ணம் உலர்த்தி, கல்செக்கு அல்லது புளியமரச் செக்கில் ஆட்டி எடுத்தல் வேண்டும்.

தீபத்திற்குத் தாமரை நூல், வெள்ளெருக்கு நூல், பருத்தி நூல் என்பவற்றுள் 21 இழையாலேனும், 16 இழையாலேனும், 14 இழையாலேனும், 7 இழையாலேனும் கர்ப்பூரம் கூட்டித் திரிசெய்து தீபம் ஏற்றல் வேண்டும். திரியில் எரியும் சுடர் நாலங்குல உயரமாயின் உத்தமம், மூன்றங்குல உயரமாயின் மத்திமம், இரண்டங்குல உயரமாயின் அதமம்.

ஆகலான் அவரவர் சக்திக்கியன்றவாறு திருக்கோயில் மூர்த்திகளின் முன்னர் திருவிளக்கேற்றுவது பெரும் சிவபுண்ணியம். கலிய நாயனார் *அல்லார் கண்டத் திறைவர் தமக்கு அல்லும் பகலும் விளக்கிட்டார்'*. நாமும் நமக்கு, வாய்ப்பு ஏற்பட்ட காலமெல்லாம் திருவிளக்கேற்றி உய்ய வேண்டும். புண்ணிய காலங்களிலேனும் திருவிளக்கிடுதல் வேண்டும்.

தூபமிடுதல்:-

சிவபிரான் திருச்சந்நிதியில் தூபமிடுதல் சிறந்த சிவபுண்ணியமாம் இது தூப உபசாரமெனப்படும். தூபத்திரவியங்கள் பல. தூப உபசார முறை பற்றிக்கூறும் சிவார்ச்சனா சந்திரிகா என்னும் நூல் விரிவாக விளக்குகிறது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் சைவ சமயநெறி உரையில் பின்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

Koviloor Digital Library

குங்குலியம் இரண்டு பாகமும், அகிற்பொடி ஒரு பாகமும், சந்தனப்பொடி மூன்றுபாகமும், சிறிது கர்ப்பூரப் பொடியோடுங் கூட்டி நல்ல தழலிலே இட்டுத் தூபம் பணிமாறப் பண்ணுக. இது 'மீதாரி' எனப்பெயர் பெறும். இங்ஙனமன்றி குங்குலியமும், நெய்யுங் கூட்டியேனும், குங்குலியமும், வில்வக்கட்டைப் பொடியுங் கூட்டியேனும், குங்குலியமும், சந்தனப் பொடியும் செங்கழுநீர்க் கோட்டப்பொடியுங்கூட்டி நெய் கலந்தேனும் தூபங் கொடுக்க. இவையெல்லாம் ஒன்றாகக்கூட்டித் தூபங் கொடுத்தலுமாம். எ∴குபொடி ஒரு கூறும், குங்குலியம் இருகூறும், சந்தனப்பொடி மூன்றுகூறும் சிறிது கர்ப்பூரப் பொடியோடு தேனும் கூட்டி இடுவது உத்தம தூபம்.

இலாமிச்சம் வேர்ப்பொடி ஒரு கூறும், குங்குலியம் இரு கூறும், சந்தனப்பொடி மூன்று கூறும், நெய் தேனொடும் கூட்டி இடுவது மத்திம தூபம், குங்குலியமும் நெய்யுங்கூட்டி இடுவது அதம தூபம்.

சிவார்ச்சனா சந்திரிகா தூபவகைகளை விரித்துக் கூறிவிட்டு முடிவில் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

'ஒன்றுங்கலவாத தனிக்குங்குலியத் தூபம் ஏழுபிறவிகளில் செய்த பாவங்களைப் போக்கும். சந்தன தூபம் எல்லாப் பாவங்களையும் போக்கும். சௌகந்திக தூபம் எல்லாக் காரியங்களையும் சாதித்துத் தரும். கரிய அகிலின் தூபம் எல்லாப் பாவங்களையும் போக்கும். வெண்மையான அகிலின் தூபம் முக்தியைக் கொடுக்கும். அரக்கு, கஸ்தூரி என்னுமிவை சேர்ந்த தூபம் நான்கு வேதங்களையும், அத்தியயனம் செய்யும் நல்ல பிராமணப் பிறவியைத் தரும். நெய் சேர்ந்த குங்குலியத் தூபத்தை பதினைந்து நாட்கள் சமர்ப்பித்தால் ஆயிரங்கோடி கற்பகாலம் சிவலோகத்திலுள்ள போகத்தையும், சக்கரவர்த்தியின் பிறப்பையும் தரும். எருமை நெய்யால் செய்யப்பட்ட குங்குலியத் தூபம் இரண்டாயிர வருஷம் பலனைத்தரும். பச்சிலை மாப்பொடியுடன் கூடின குங்குலியத் தூபம் சிவசாயுஜ்யத்தைக் கொடுக்கும்.

இந்த ஒப்புயர்வற்ற குங்குலிய தூபம் பணிமாறியே குங்குலியக்கலய நாயனார் சிவசாயுஜ்யம் பெற்ற வரலாற்றைப் பெரியபுராணத்தில் அறியலாம்.

ஆகலான் திருவிளக்கிடுதலும், வாசனைத் தூபம் பணிமாறுதலும் பெரும் சிவபுண்ணியமாம்.

Koviloor Digital Library

சிவபூஜை செய்தலும், செய்வோர்க்கு உதவுதலும்

சைவாசாரியரை அடைந்து வணங்கிச் சமயதீக்ஷை பெற்றுப் பின் விசேட தீக்ஷையும் பெற்றவர்களே சிவபூசை ஏற்றுக் கொள்ளுந்தகுதியுடையார். அவ்வாறு உரிமையுடையோர் ஆசாரியன் எழுந்தருளிப் பண்ணிக் கொடுத்த சிவலிங்கத் திருமேனியில் சிவபிரானைப் பூசிக்க வேண்டும். இச்சிவபூசையை நாள்தோறும் மூன்று முறையேனும், இருமுறையேனும், அன்றி ஒருமுறையேனும் அவசியம் செய்ய வேண்டும். ஒருவன் எத்தனை யாகம் செய்தாலும், எத்தனை பெரிய தவம் செய்தாலும், எத்தனை அறங்களைச் செய்தாலும், எத்தனை பரிபாகம் முற்றுவிக்கும் சாத்திரங்கள் கற்றாலும் சிவபிரானைப் பூசியாவுயின் ஒரு பயனும் பெறமாட்டான். அன்போடு சிவபூசை செய்யாதவன் நரகில் அழுந்துவான். அன்பின்றிச் செய்யப்படும் பூசை, செய்வோனைப் பாலை நிலத்தை அடையச் செய்யும், பேய், மலைக்காகம், நாய், கழுகு, நரி முதலிய பிறவியில் சுழல்வான். சிவபிரானே தொழத்தக்க தெய்வம். சிவபூசை போலப் பிறவியை நீக்குவது வேறு ஒன்றில்லை. ஆகலின் சிவபூசையே செய்யத்தக்க பேறாம்.

சிவபூஜையின் சுருக்கம்

முன்னர் சங்கல்பம் கூறிக் கொண்டு பூதசுத்தி, திரவிய சுத்தி, ஆத்ம சுத்தி, மந்திரசுத்தி, லிங்க சுத்தி ஆகிய ஐவகை சுத்திகள் செய்து அகப்பூசையை முதலில் செய்து, பின்பு புறத்தில் பாத்தியம், ஆசமனம் அருக்கியங்களைச் சுத்தி செய்தமைத்து சத்தியாதி, சத்தி ஈறான ஆசனத்தில் எம்பெருமானை எழுந்தருளப் பண்ணித்துதித்து ஆசமனம், அருக்கியங்களையும் கொடுத்து, மதுபருக்கத்தையும் மந்திரப்பூர்வமாகக் கொடுக்க வேண்டும். மீண்டும் ஆசமனம் அளித்து, நெய், பால் பெய்த இன்னமுது அளித்து, வாசம் மிகுந்த எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிப் பொடிக்காப்பு, மஞ்சட்காப்பு, பஞ்ச கௌவியம், பால், தயிர், நெய், செந்தேன், இளநீர், கருப்பஞ்சாறு, பழச்சாறுகள், குங்குமப்பூக் கலந்த சந்தனக்குழம்பு முதலிய அபிஷேகங்கள் செய்து இடையே நன்னீரும் ஆட்டி, அவ்வபிடேக காலத்தில் ஸ்ரீருத்ரமந்திரங்கள் ஓதிக்கொண்டும் நிறைவில் திரு ஒற்றுடை கொண்டு பெருமான் திருமேனி ஈரம் நீங்க ஒற்றியெடுத்தல் வேண்டும். பெருமாற்குப் பட்டாடை சாத்தி, முந்நூல் சாத்தி மான்மதம், கர்ப்பூரம், சந்தனக் கலவை சாத்தி ஆபரணங்கள் இண்டை, தாமம் தார் முதலிய பூமாலைகள் சாத்தி, வாசனைத்தூபம் காட்டி, தீபம் காட்டி, அறுசுவையோடு கூடிய நால்வகை உண்டியும் நிவேதித்து, கை, வாய்பூச சீதநீர் தந்து, தாம்பூலம் முகவாசம் மந்திரம் சொல்லி நல்கி அகிற்புகை, தீபம் எல்லாம் காட்டி, வழிபாடு செய்து, அரக்கு நன்னீரால் ஆலத்தி எடுத்துப் பலமுறை வலஞ்செய்து வணங்கல் வேண்டும். பின் அஞ்செழுத்துக் கணித்துப் பின் விதிப்படி எஞ்சியதை செய்ய வேண்டும். இதனிலும் சிறந்த சிவபுண்ணியம் வேறு யாதுளது?

இவ்வாறு நியமமாகச் சிவபூஜை செய்வோர்க்கு அபிஷேகத் திரவியங்கள், மலர்கள், வாசனைத் திரவியங்கள், தாம்பூலம் முதலிய கொடுத்தலும் சிவபுண்ணியமாம். ஏலம், கர்ப்பூரம், சாதிக்காய், தக்கோலம் ஆகிய நான்கும் 'முகவாசம்' எனப்படும். இவை போல் வன பூஜகர்க்குக் கொடுப்பதும் சிவாலயங்களுக்குக் கொடுப்பதும் சிவபுண்ணியமாம்.

Koviloor Digital Library

சிவாலயங்களில் கீதம் இசைத்தல்

'பாட்டுக்குருகும் பண்பன்' எனச் சிவபிரானைத் திருமுறை கூறுகிறது. *அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள் தாமருளுமாறே'* என்றும் அத்திருமுறை பேசிற்று. எனவே அப்பெருமானாரைக் கீதம்பாடி மகிழ்வித்து உய்யலாம் என அறிகிறோம்.

ஆலயத்தில் சிவபெருமான் பெருமையையே பேசும் தேவாராதி பஞ்ச புராணங்களையே பாடிப் போற்றல் வேண்டும். வேதகீதமும் அப்பெருமானுக்கு மிக இனியதே. 'தேவாரம்' ஏழுதிருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளது. 'தேவாரம்' பண் அடைவோடு கூடியது. அவற்றில் பேசப்படும் பண்களே தமிழ்ப் பண்கள். இசைத் தமிழுக்குத் தேவாரத்தை விட்டால் நாதியில்லை. இத்துணைப் பெருமையுடைய தேவாரத்தில் 24 பண்கள் உள்ளன. யாழ்மூரி ஒரு தனிப்பண். திருவிசைப்பாவில் சாளரபாணி என ஒரு பண் உள்ளது. இப்பண்களில் பகற்காலத்திற்கு 12 பண்களும், இராக்காலத்திற்கு 9 பண்களும், இராப்பகல் ஆகிய இரண்டு காலத்திற்கும் பண்களும் உள்ளன.

பகற்பண்கள் 12

1. இந்தளம்
2. கௌசிகம்
3. சாதாரி
4. தக்கேசி
5. நட்டபாடை
6. நட்டராகம்
7. புறநீர்மை
8. பழம்பஞ்சுரம்
9. பஞ்சமம்
10. காந்தார பஞ்சமம்
11. காந்தாரம்
12. பியந்தைக் காந்தாரம்

இராப்பண்கள் - 9

1. சீகாமரம்
2. தக்கராகம்
3. பழந்தக்கராகம்
4. கொல்லி
5. கொல்லிக்கௌவாணம்
6. குறிஞ்சி
7. அந்தாளிக் குறிஞ்சி
8. மேகராகக் குறிஞ்சி
9. வியாழக் குறிஞ்சி

பொதுப்பண் - 3

1. செவ்வழி 2. செந்துருத்தி 3. திருத்தாண்டகம்.

திருக்கோயில் வழிபாடு பகற்காலத்தில் செய்வோர் பகற்பண்களையும், இராக்காலத்தில் செய்வோர் இராப்பண்களையும், இருகாலங்களிலும் பொதுப்பண்களையுப் ஓதி வழிபடலாம்.

Koviloor Digital Library

இனி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் சைவசமயநெறி உரையில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்கள்:-

முப்பதிரண்டு இராகங்களாவன:-

1. பைரவி	2. தேவக்கிரியை	3. மேகரஞ்சி
4. குறிஞ்சி	5. பூபாளம்	6. வேளாவளி
7. மலகரி	8. பௌளி	9. ஸ்ரீராகம்
10.இந்தோளம்	11.பல்லதி	12.சாவேரி
13.படமஞ்சரி	14.தேசி	15.லலிதை
16.தோடி	17.வசந்தம்	18.ராமக்கிரியை
19.வராளி	20.கைசிகம்	21.மாளவி
22.நாராயணி	23.குண்டக்கிரியை	24.கூர்ச்சரி
25.பங்காளம்	26.தன்யாசி	27.காம்போதி
28.கௌளி	29.நாட்டை	30.தேசாக்ஷரி
31.காந்தாரி	32.சாரங்கம்	

வசந்தகால இராகம்:-

1. காம்போதி 2. அசாவேரி 3.தன்யாசி

மாலை இராகம்:-

1. கலியாணி 2. காபி 3. கன்னடம் 4. காம்போதி
யாம இராகம்:-. 1. ஆகரி

விடியல் இராகம்:-

1. இந்தோளம் 2. இராமகலி 3. தேசாக்ஷரி 4. நாட்டை
5.பூபாளம்

உச்சி இராகம்:-

1. சாரங்கம் 2. தேசாக்ஷரி

அன்றியும் ஆகரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம், பூபாளம் நீக்கி நின்ற மற்றவை எக்காலத்துக்கும் பொது

முப்பதிரண்டு இராகங்களுள் அவ்வக் காலத்துக்கேற்ற இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லி வணங்குக.

மிக மேலாகிய சிவஸ்தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாக்களைந்துமாம்'.

Koviloor Digital Library

மற்றுமொன்று தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடான 'தமிழகக் கோயில் கலைகள்' என்ற புத்தகத்தின் 35, 36ஆம் பக்கங்களில் கீழ்க்கண்ட ஆகம சுலோகம் காட்டப்பட்டுள்ளது.

பூர்வ சந்தியாம் து காந்தாரம்
ஷாடவம் ச தத: பரம்
மத்யான்ஹே நட்டராகம் ச்யாத்
கௌசிகம் ச தத: பரம் |
ஸாயே து சைந்தளம் ப்ரோக்தம்
அதிராத்ரே து பஞ்சமம்
பரதோக்தம் யதா நிருத்தம்
ஸந்திம் பிரதி ஸுகாரயேத் ||

இதன் பொருளாவது, '(ஆலயங்களில்) அதிகாலையில் காந்தாரப் பண்ணையும், பின்னர் ஷாடவத்தையும் நடுப்பகலில் நட்டராகத்தையும், பின்னர் கௌசிகத்தையும் மாலையில் இந்தளம் என்ற பண்ணையும், அர்த்தராத்திரியில் பஞ்சமம் என்ற பண்ணையும் பாடி, பரத முனிவர் நாட்டிய நன்னூலில் கூறிய வழிப்படி சந்திகளில் நிருத்தம் செய்ய வேண்டும்' என்பதாம்.

ஷாடவம் இன்னபண் அல்லது இராகம் என விளங்கவில்லை. ஏனைய 1) காந்தாரம் 2) நட்டராகம் 3) கௌசிகம் 4) இந்தளம் 5) பஞ்சமம் ஆகிய பண்கள் நமது தேவராத்தில் காணப்படுகின்றன. பஞ்சமம் பகற் பண்ணாக விருப்ப இச்சுலோகத்தில் அர்த்த ராத்திரியில் பாடச் சொல்லிய காரணம் புலப்படவில்லை. ஆகமம் வல்லோர்கள் தெளிவு செய்யுமாறு பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீகயிலாயத்தைப் பெயர்த்தெடுத்த இராவணன், இறைவனார் தமது திருவிரலால் அழுத்திய பொழுது அம்மலையடியில் அகப்பட்டு நைந்து அழுதான். பின் சாமகானம் பாடி உய்ந்தான். சிவபிரானுக்கு உகந்தனவே செய்ய வேண்டும். மாறிச் செயல்பட்டால் தண்டனை உண்டு.

ஆகையால் மேலே கூறப்பட்ட சிவபிரானுக்கு உகந்த பண்களில் அவனைப் போற்றித் துதிக்க வேண்டும். விதிவழியான பண்களில் அவன் பெருமையை உணர்ந்து அருள்பாக்களைப் பாடிச் சிவபுண்ணியத்தை நாம் ஈட்டிக் கொள்வோம்.

Koviloor Digital Library

சிவாலயம் எடுத்தல், பழைய ஆலயம் புதுக்குதல்

சைவசமயிகள் பாரத தேசம் முழுவதும் வாழ்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப இப்பொழுது கோயில்கள் இல்லை. வடநாட்டில் குறிப்பாகக் காஷ்மீரத்தில் - பல கோயில்கள் வேற்று நாட்டு அரசர்கள், சமயிகளால் இடிக்கப்பட்டுப் போய்விட்டன. தென்னாட்டிலோ, பல ஆலயங்கள் புறக்கணிக்கப்பட்டு போய்விட்டன. சைவாலயங்கள் அனைத்தும் அரசின் கையகப்பட்டுத் திருக்கோயில் பூசை விழா முதலியன புறக்கணிக்கபட்டு லௌகீக காரியங்களுக்கென கோயில் வருவாய்கள் செலவிடப்படுகின்றன. சைவ சமயிகளோ கும்பகர்ணனை விஞ்சிய தூக்கத்தில் ஆழ்ந்து போய் விட்டார்கள்.

ஆலயமில்லா ஊரில் ஆலயம் எடுப்பது உத்தமச் சிவபுண்ணியமாகும். ஆலயம் எடுப்போர் தம் வருவாய்க்கேற்ப ஆலயம் எடுத்தல் வேண்டும். மணிகளால், பொன்னால், செம்பால், வெள்ளியால் ஆலயம் எடுப்பது உத்தமமானது என நூல்கள் கூறுகின்றன. இக்காலத்தில் அஃது இயலாது. ஆகையால் கல்லாலேனும், சுடுசெங்கலாலேனும், மரத்தாலேனும் ஆலயம் எழுப்பலாம். இயலாதாயின் மண்ணாலேனும் ஆலயம் எழுப்பலாம்.

கந்தமாதனம், இமாசலம், கயிலை, மந்தரம், ஏமகூடம், நிடதம், மகாமேரு ஆகிய மலைகள் பெயரில் ஆலயம் எழுப்பலாம். மேனிலைக் கோபுரங்கள், மண்டபங்கள் முதலிய நிரப்பி, திருக்குளங்கள் தோண்டி கிணறுகள் அமைத்து அபிஷேக தீர்த்தங்களையும் ஆக்கல் வேண்டும், சாமரை, மாலை, நெய்த்தீபம், சுண்ணச்சாந்து, நறுந்தூபம், வெள்ளையாடை, வெள்ளைக்குடை, வாகனங்கள், ஆபரணங்கள் திருவமுது, நிருத்ய உபசாரம் செய்யத் தாதியர், செந்நெல் விளையும் கழனிகள், சிவபெருமானுக்குச் சூட்டத்தக்க நால்வகைப் பூக்கள் தரும் திருநந்தனவனம் முதலியவற்றைத் திருக்கோயிலுக்குக் கொடுத்தல் மிக்க சிவபுண்ணியந் தரும். நித்ய உத்ஸவம், பக்ஷ உத்ஸவம், மாத உத்ஸவம் ப்ரும்ம உத்ஸவம் ஆகியவற்றை நிகழ்த்துவித்தலும் பெரும் சிவபுண்ணியமாம். ஆதிசைவரைக் கொண்டு சிவபூஜை செய்வித்தலும், அவரைப் பேணிக் கொள்ளுதலும் சைவமக்கள் கடனாகும்.

ஆலயமில்லாத ஊரில்தான் புதிய ஆலயம் எழுப்ப வேண்டும், சிவபிரான், உமையன்னை, விநாயகக் கடவுள், சுப்பிரமணியக் கடவுள், சிவகணங்கள் என்னுமிவர்க்கு ஆலயம் எடுக்க வேண்டும்.

Koviloor Digital Library

சிவபிரான் முதலியவர்க்கு ஆலயம் ஒரு ஊரில் இருந்து பழுதடைந்து விட்டால், அவற்றை மீளப் புதுப்பிக்க வேண்டும். வழிபாடு நின்று போய்விட்ட ஆலயங்களில் அவ்வழிபாட்டை மீள நிலைத்து நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும். புதுக்கோயில் எழுப்புவதினும், பழங்கோயிலைப் புதுக்குவது பெரிய சிவபுண்ணியமாம். முரிந்து வீழ்ந்து கிடக்கும் ஆலயங்கள், வெடித்துக் கிடப்பன, உடைந்து கிடப்பன, கோபுரம் நெரிந்து கிடப்பன, மதில்கள் பிளந்து கிடப்பன ஆகிய ஆலயங்களை அறிந்து அவற்றை முன்னையினும் சீர்பெறப் புதுக்க வேண்டும். இவ்வாறு அழிந்த ஆலயத்தை எடுப்பித்தோர், புதிய ஆலயம் எடுத்தோரினும் நான்குமடங்கு பலன் பெறுவர். உடல் விருத்தியைக் கருதி ஒருவன் பழைய ஆலயத்தைப் புதுப்பித்தால், எல்லா யாகங்களையும் செய்த பயனினும் அதிகம் பயன் பெறுவான் என்றால் உறுதியோடு சிவாலயப்பணி செய்வோன் அடையும் மேன்மையைச் சொல்லவும் கூடுமோ?

ஆலயத்திருப்பணிக்கு ஒருவன் எட்டுச் செங்கற்கள் கொடுத்தானாயின் அவன் பிறப்பெடுத்ததன் பயனைப் பெற்றவனாவான்.

தூர்ந்து போன, சிவாலயங்களை ஒட்டியுள்ள தீர்த்தக் கட்டம், குளம் ஆகியவற்றைத் தூர்வாரி கரைகளைச் செம்மைப்படுத்தி அதற்கு நன்னீர் வரும் வழியைத் துலக்கிச் செய்யும் திருப்பணி மிகச்சிறந்த சிவபுண்ணியத்தை நல்கும்.

தீர்த்தக்கட்டம், திருக்குளம் ஆகியவற்றில் அசுத்தம் செய்யவொட்டாமல் பாதுகாத்தலும் சிவபுண்ணியமாம்.

சிவாலயாத்தில் விநாயகர், சுப்பிரமணியர், சிவலிங்கம், உமையம்மை, மாகேசுவர மூர்த்திகள் ஏனைய பரிவார மூர்த்திகள், ரிஷபதேவர், சண்டேசுவரர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்தோர் கலக்கத்தை உண்டு பண்ணும் பாவங்களில் விலகி, பிரமாண்டங்களைத் கடந்து மயக்கம் மிகு வினைப்பகையையும், பிறவிப் பழம் பகையையும் தோல்வியுறச் செய்து விளக்கம் மிக்க சிவபதத்தை அடைவர்.

Koviloor Digital Library

10. குருபூஜை கொண்டாடுதல்

ஸ்ரீசிவ பிரானே முதற்கடவுள், அவர் அருளிச் செய்த முதல் நூல்கள் வடமொழியிலுள்ள ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும் காமிகம் முதல் வாதுளம் நிறைவாக 28 சிவாகமங்களும் என்று கொள்பவர் சித்தாந்த சைவர். 'முதல் நூல்களில் வேதம் பொது நூல் ஆகமம் சிறப்புநூல் எனவும் கொண்டு விபூதி உருத்திராக்ஷங்கள் சிவசின்னங்கள், ஸ்ரீ பஞ்சாக்ஷரமே மூலமந்திரம், சிவலிங்க வழிபாடே மி மேலான வழிபாடு, சிவாகம வழியே தீக்ஷை பெற்றுக்கொண்டு ஞான சாதனம் பற்றி நிற்பதே முத்திக்கு வழி' என்றும் கொள்பவர் சைவராவார் இக்கொள்கைக்கு மாறானவர் சைவசமயியல்லர். அவர் எவரோ?

அறுபான்மும்மை நாயன்மார்களாலும், மணிவாசக பெருமானாலும், சேக்கிழார் சுவாமிகளாலும், சைவசித்தாந்த சாத்தி உபதேசம் செய்தருளிய ஸ்ரீ மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள், மறைஞான சம்பந்த சிவாச்சாரிய சுவாமிகள், உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் ஆகிய திருக்கைலாய பரம்பரை சந்தான குரவர்களாலும் திராவிட மகாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞான சுவாமிகளாலும் தமிழ்நாடு முழுவதும் சித்தாந்த சைவம் வளர்ந்து ஓங்கியது.

ஆகையால் சைவசமயிகள் யாவரும் மேலே காட்டிய உண்மை நாயன்மார்கள் அனைவருக்கும் அவரவர் முத்தி பெற்ற நாட்களில் விதிப்படி சிரத்தையோடு குருபூசை நடத்தல் வேண்டும்.

குருபூசை செய்தற்குப் பொருள் இல்லாதவர்கள் தங்களால் இயன்ற குருபூசைக்குப் பயன்படும் பதார்த்தங்களில் சிலவேனும் கொண்டு போய் குருபூசை நடக்கும் இடத்தில் சேர்த்தல் வேண்டும். அதுவும் கூடாதவர் கைத்தொண்டாவது செய்தல் வேண்டும்.

குருபூஜை செய்யும் முறைமை:-

அந்தந்த நாயனாருக்கு, அவரவர் முக்தி பெற்ற நக்ஷத்திர நாளில் திருக்கோயிலிலே விசேட பூஜையும் வேத பாராயண தேவார பாராயணங்களோடு உற்சவம் செய்வித்தலும் வேண்டும்.

திருமடங்கள், இல்லங்களிலாயினும் சமய விசேட நிர்வாணதீக்ஷை பெற்ற அடியார்களை அழைத்து வந்து, அவர்களுடைய திருவடிகளை தீர்த்தத்தினால் விளக்கி, அத்தீர்த்தத்தைச் சிரசில் தெளித்துக் கொள்ள வேண்டும். பின் அவர்களைப் பந்தியாக இருத்தி ஓதுவார்கள் தேவாரம் ஓத, அன்னம், கறி முதலியவற்றைப் படைத்து அவ்வடியார்களை அத்திருநக்ஷத்திரத்திலே முத்திபெற்ற நாயனாராகப் பாவித்து, பத்தி புஷ்பங்களால் அர்ச்சனை செய்து, வாசனைத் தூபந் தீபங் கொடுத்து,

Koviloor Digital Library

கர்ப்பூராராத்திகம் பணிமாறச்செய்து, மூன்றுதரமாயினும் ஐந்து தரமாயினும் நமஸ்காரம் செய்து, திருவமுது செய்வித்தல் வேண்டும்.

வைதிகப்பிராமணர் ஆயிரம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும், சமய தீக்ஷிதர் ஒருவருக்கு மாகேசுர பூசை செய்த பலமும் சமம். வைதிகப் பிராமணர் பதினாயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலமும் விசேட தீக்ஷிதர் ஒருவர்க்கு மாகேசுர பூசை செய்த பலமும் சமம். வைதிகப் பிராமணர் லக்ஷம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும், நிர்வாண தீக்ஷிதர் ஒருவருக்கு மாகேசுர பூஜை செய்த பலமும் சமம். வைதிகப் பிராமணர் கோடிப் பேருக்கு அன்னதானஞ் செய்தபலமும், சைவாசாரியர் ஒருவரைப் பூசித்துத் திருவமுது செய்வித்த பலமும் சமம்.

குருபூசை செய்பவர்களும், செய்விப்பவர்களும், குருபூசையிலே அர்ச்சனை ஏற்று அமுது செய்யப்புகும் மாகேசுரர்களும் அத்தினத்திலே குருபூசைக்கு முன்னே, யாதொன்றும் புசிக்கலாகாது. அன்றிரவிலே பசித்ததாயின், சோறு உண்ணாது பால்பழம் முதலியவற்றில் இயன்றது உட்கொண்டு சுத்தர்களாகிச் சிவபெருமானையே சிந்தித்துக் கொண்டு நித்திரை செய்தல் வேண்டும்.

திருஞானசம்பந்த சுவாமிகள் இப்புண்ணிய செயலைத் திருவுள்ளங் கொண்டு *'ஒட்டிட்ட பண்பின் உருத்திரப் பல்கணத்தார்க்கு, அட்டிட்டல் தானாதே போதியோ பூம்பாவாய்'* என அருளிச் செய்தார்கள்.

ஆகலான் நாயன்மார் உள்ளிட்ட சைவசமய, சந்தான பாஷ்ய ஆசார்யர்களுக்குக் குருபூசை செய்து மாகேஸ்வர பூசை செய்தலும் பெரும் சிவபுண்ணியமாகும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

– திருஞான சம்பந்த சுவாமிகள்

Koviloor Digital Library

குரு வழிபாடு செய்தல்

பள்ளிக்கூடத்தில் அவரவர் மொழியிலாவது அந்நி மொழியிலாவது உலக ஞானங்களைக் கற்பிக்கிறவன் உபாத்தியாயன் இங்கு 'குரு' என்று கூறப்படுபவன் பள்ளியில் கற்பிப்பவன் அல்லன். 'குரு என்ற தொடக்கு 'அகத்திருளைப் போக்கி ஞானஒளியைத் தருபவன் என்பது பொருள். தானும் நல்லொழுக்கத்தைப் பின்பற்றித் த மாணவரையும் அவ்வொழுக்கத்தில் நிறுத்துபவனே ஆசாரியன்.

ஆசாரியன் சுத்த குலத்தில் உதித்தவனாயும், உடல் உள்ளத்து குற்றங்கள் நீங்கியவனாயும், சமய விசேட நிர்வாணதீக்ஷை பெற்று ஆசாரி அபிஷேகம் செய்யப் பெற்றவனாயுமிருத்தல் வேண்டும். தம ஆசிரியனிடத்து அன்புடையனாய், வேத சிவாகமங்களைக் கற்று துறைபோயவனாய் அநுபவமுடையவனே ஆசாரியன். ஆசாரிய மாணாக்கர்க்குத் தீக்ஷை பண்ணுமிடத்துத் தன்னுள்ளே சிவபிரானை தரிசித்துச் சிவோகம் பாவனை பண்ணி, மலத்தை நீக்கும் போ மாணாக்கனுக்குச் சத்திநிபாதங்களால் விளையும் குறிகளின் பேதங்கள் ஆராய்ந்தறிந்து, அவற்றிற்கேற்ற தீக்ஷை செய்விக்கும் அநுபவ உடையவன் ஆவான். அவ்வாசாரியனும் பிரேரக ஆசாரிய போதகாசாரியன், ஞானாசாரியன் என மூவகைப்படுவர்.

பிரேரக ஆசாரியன் சைவத்துக்கு யோக்கியமான மாணாக்கர்கள் நோக்கி 'உமக்கு அருள் செய்தற்குரிய ஆசாரியன் இவன்' என்று சுட்டி காட்டிச் செலுத்தி உய்விப்பவன்.

தன்மேல் அன்புகொண்டு தன்னையடைந்த மாணாக்கனுக்கு சமயதீக்ஷை விசேடதீக்ஷைகளைச் செய்து ஆசாரங் கற்பித்து அருளுபவ போதகாசாரியன் ஆவான்.

இவ்வாறு சமய விசேட தீக்ஷைகளைப் பெற்ற மாணாக்கனை பன்னிரண்டு ஆண்டுகள் பக்குவம் சோதித்தறிந்து நிர்வாணதீக்ஷை செய் மாணாக்கனுடைய பாசத்தை நீக்குபவன் ஞானாசாரியன் அல்ல பாசமுத்திதன் எனப்படுவான்.

அநாதி மலமுத்தராகிய சதாசிவமூர்த்தியுடைய திருவாக்காகிய வே சிவாகமங்களைக் குருமுகமாகக் கேட்டு மனசிலே தரித்து அவற்றி கூறப்பட்ட பதி,பசு, பாச அர்த்தங்களையும் சந்தேகமும் விபரீதம் அறும்ப ஆராய்ந்தறிந்தவர்களே ஆசாரியர் ஆவர்.

சிவபிரான் இம்மூவகை ஆசிரியர்களை அதிட்டித்து சைவநன்வெ மக்களுக்குப் படி முறையான் அநுக்கிரகம் செய்து முடிவில் தம்திருவடி கலப்பித்து அந்தமில் இன்பத்து அழிவில் வீடுபேற்றை அருளுவான்.

'குரு வழிபாடு' சிறந்த சிவபுண்ணியமாகும்.

Koviloor Digital Library

சிவ விரதங்கள் மேற்கொள்ளல்

சைவ மக்களுக்குப் பண்டிகைகள் கிடையா. விரதங்கள் மேற்கொண்டு சிவபுண்ணியங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். விரதமாவது, மனம் பொறிவழி போகாது நிறுத்தற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும், மெய்யன்போடு கடவுளை வழிபடுதலாம். சிவபிரான், உமையன்னை, விநாயகர், சுப்பிரமணியர், வீரபத்திரர், பைரவர் ஆகிய மூர்த்திகளைக் குறித்து விரதம் அநுட்டித்தல் வேண்டும். விரதம் அநுட்டிப்போர் விரதநாளுக்கு முன்தினமே இரவு உணவை நீக்கல் வேண்டும். விரதமிருந்து பூர்த்தியான பின் சிவனடியார் சிலரையேனும் அல்லது ஒருவரையாவது உண்பித்துப் பின் தனது உறவினரோடு உண்ண வேண்டும். விரத காலத்திலும், முடிவிலும் வேத சிவாகம பன்னிரு திருமுறை பாராயணமும், சிவபுராணம் கேட்டலும் செய்தல் வேண்டும்.

விரதப்பெயர் சிவபெருமானுக்-குரியன	அநுட்டிக்கும் காலம்	அநுட்டிக்கும் முறைமை
1. சோமவார விரதம்	1. கார்த்திகை முதல் திங்கட் கிழமை தோறும் அநுட்டிப்பது	முழுஉபவாசம் உத்தமம். இயலாதவர் அஸ்தமனத்துக்குப் பின் ஒருவேளை . உண்ணலாம். சிவாலய வழிபாடும், பிராமண தம்பதியர்க்கு தானம் வழங்கலும் உத்தமம்.
2. திருவாதிரை விரதம்	மார்கழி திருவாதிரை நக்ஷத்திர நாள்	முழுஉபவாசம் உத்தமம். சிதம்பரத்-திலிருந்து அநுட்டிப்பது விசேடம்.
3. உமாமகேசுவர விரதம்	கார்த்திகை மாதத்துப் பௌர்ணமி நாள்	பொன் அல்லது வெள்ளியால் உமாமகேசுவரர் ஆக்கி வழிபடல் வேண்டும் ஒரு வேளை உண்ணலாம்.
4. சிவராத்திரி விரதம்:-		
நித்திய சிவராத்திரி	மாதந்தோறும் வரும் 2 சதுர்த்தசி திதி நாட்கள் (மொத்தம் 24)	உபவாசம் இருந்து சிவாலய விசேட வழிபாடு தரிசனம் செய்வது
மாத சிவராத்திரி	தேய்பிறை சதுர்த்தசி திதிநாள் (மொத்தம் 12)	உபவாசம் இருந்து சிவாலய விசேட வழிபாடு தரிசனம் செய்வது.
யோக சிவராத்திரி	திங்கட்கிழமை இரவில் அமாவாசை வருவது	உபவாசம் இருந்து சிவாலய விசேட வழிபாடு தரிசனம் செய்வது.
பட்ச சிவராத்திரி	தைமாதம் தேய்பிறை பிரதமை தொடங்கி சதுர்த்தசி திதி வரை	ஒருநாளுக்கு ஒரு வேளை உணவு உண்டு சிவாலாய தரிசனம் செய்வது.
மகா சிவராத்திரி	மாசி மாதத்து த் தேய்பிறை சதுர்த்தசி திதி	முழு உபவாசம். இரவில் கண் துயிலாது சிவாலயத்தில் 4 யாம பூஜை தரிசனம் செய்தலும், நெய் விளக்கேற்றுதலும் உத்தமம்.

Koviloor Digital Library

5. கேதார விரதம்	புரட்டாசி மாதம் வளர்பிறை அஷ்டமி தொடங்கி அமாவாசை முடிய 23 நாட்கள்	விரதம் தொடங்கிய நாளில் ஆண் மக்கள் வலக்கையிலும், பெண்கள் யாலான நூல் அணிந்து இடக்கையிலும் 21 இழை அஸ்நமனத்துக் பின் ஒரு வேளை உண்டு விரதம் இருப்பது. நாள்தோறும் சிவாலய தரிசனம் அவசியம்.
6. திருமண விரதம்	பங்குனி உத்திர நாளில் அநுட்டிப்பது	திருமணக் கோலத்தில் எம்பிரானை வழிபடல் வேண்டும். அந்தணனை அவன் மனைவியோடும் வழிபட்டு தானம் செய்தல் உத்தமம். பகலில் உபவாசம் இருந்து இரவில் ஒருவேளை உண்ணலாம்.
7. பாசுபத விரதம் (குல விரதம்)	தைமாதத்து சதுர்த்தசி கழிந்த மறுநாள்	உபவாசம் உத்தமம். பொன் அல்லது வெள்ளியால் குலம் செய்து எம்பிராற்குச் சாத்தி வழிபடல் வேண்டும். எல்லா நோய்களையும் நீக்கவல்லது.
8. அஷ்டமி விரதம்	வைகாசி வளர்பிறை அஷ்டமி நாள்	முழு உபவாசமிருந்து சிவபிரானை வழிபடல் வேண்டும்

உமையன்னைக் குரியன

1. சுக்கிர வார விரதம்	சித்திரைப் பிரதமை திதியோடு கூடிய வெள்ளிக்கிழமை	இரவில் பழம் மட்டும் உண்ணலாம். அம்பிகைக்குச் சர்க்கரைப் பொங்கல் நிவேதித்து, மறைக்குலமகளிர் எட்டுப்பேரை வழிபட்டுத் தானம்செய்தல் வேண்டும்.
2. உத்திர விரதம்	ஐப்பசி உத்திர நக்ஷத்திர நாள்	இரவில் பழம் மட்டும் உண்ணலாம். ஆலயத்தில் அம்பிகைக்கு விசேட வழிபாடுசெய்தல் வேண்டும்.
3. மகா நவமி	புரட்டாசி வளர்பிறைப் பிரதமை தொடங்கி நவமி ஈறாக 9 நாட்கள்	ஆரணி, ஜனனி, ரோதயித்திரி என்ற மூன்று சக்திகளாக அம்மையை வழிபடல் வேண்டும்.

விநாயகர்க்குரியன

1. சுக்கிர வார விரதம்	சித்திரை மாதத்து வளர்பிறையில் வரும் வெள்ளிக்கிழமை	பகலில் ஆலய வழிபாடு செய்து விநாயகரை 100 முறை வலம் வரல் வேண்டும் இரவில் பழங்கள் மட்டும் உண்ணலாம்.
2. சதுர்த்தி விரதம்	ஆவணி மாதத்து வளர்பிறை சதுர்த்தி நாள்	பகல் முழுவதும் விநாயகரை விசேட வழிபாடு செய்து 21 பத்திரங்களால் பூசித்தல் வேண்டும்.இரவில் நிவேதித்த பழங்கள் மட்டும் உண்ணலாம்.
3. சஷ்டி விரதம்	மார்கழி மாதத்துத் தேய்பிறை சஷ்டி திதி நாள்	சதுர்த்தி விரதம் போல் அநுட்டிப்பது.

Koviloor Digital Library

முருகப் பெருமாற்குரியன

1. கந்திர வார விரதம்	ஐப்பசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை	ஆலயத்தில் ஷண்முகர் உருச்சமைத்து ஸ்நபன கும்பம் வைத்து வழிபட்டு இரவில் பழம் மட்டும் உண்ணலாம். மறுநாள் 4 நாழிகைக்குள் பாரணை செய்க
2. கார்த்திகை விரதம்	சித்திரை தொடங்கி மாதந்தோறும் வரும்	உபவாசம் உத்தமம். ஆலயத்தில் முருகப் பெருமானை வழிபடல் கார்த்திகை நாள் வேண்டும்.
3. சஷ்டி விரதம்	ஐப்பசி வளர்பிறை பிரதமை தொடங்கி சஷ்டி முடிய 6 நாட்கள்	6 நாளும் உபவாசம் உத்தமம். இயலாதாயின் முதல் 5 நாள் ஒருவேளை உண்டு, 6வது நாள் முழு உபவாசம் இருத்தல் வேண்டும்.
	கார்த்திகை மாத சஷ்டி தொடங்கி 24 சஷ்டி நாள்	நாள் முழுவதும் உபவாசம்.

வைரவமூர்த்திக் குரியன

1. ஆதி வார விரதம்	தை மாதம் முதற் செவ்வாய்க்கிழமை	ஒரு வேளை உணவு உண்டு உபவாசமிருத்தல் வேண்டும். வைரவரை வழிபடுக.
2. சித்திரை பரணி விரதம்	சித்திரை மாதத்து பரணி நக்ஷத்திர நாள்	உபவாசமிருந்து வைரவக் கடவுளை வழிபடுதல் வேண்டும்.
3. ஐப்பசி பரணி விரதம்	ஐப்பசி மாதத்து பரணி நக்ஷத்திர நாள்	உபவாச மிருந்து வைரவக் கடவுளை வழிபடுதல் வேண்டும்.

வீரபத்திரமூர்த்திக் குரியது

1. மங்கள வார விரதம்	சித்திரை மாதத்து முதற்செவ்வாய்க் கிழமை	உபவாசம் உத்தமம். விருத்தர்கள் மட்டும் பழம் உண்ணலாம்.
பிரதோஷ விரதம்	மாதந்தோறும் வளர்பிறை தேய்பிறை திரயோதசி திதிகளில் அநுட்டித்தல். சனிக் கிழமையில் வரும் திரயோதசி திதியில் முதலில் தொடங்க வேண்டும்.	சிவபிரானைக்குறித்த இவ்விரதத்தில் உபவாசம் உத்தமம். பிரதோஷ காலத்தில் சிவபிரானைத் தரிசிப்பது சகல பாவங்களையும் போக்கும்.

Koviloor Digital Library

சிவதீக்ஷை ஏற்றுக்கொள்ளல், தக்கவரை ஏற்றுக் கொள்ளச் செய்தல்

சைவராய்ப் பிறந்தோர் அனைவரும் சிவாகம முறைப்படி தீக்ஷை பெற்றுக் கொள்ள வேண்டும். மேன்மையான சிவாச்சாரியரை அடைந்து முறையாக வணங்கித் தன்னுடைய பக்குவநிலைக்கேற்ப ஆசாரியன் அநுக்கிரகிக்கும் தீக்ஷையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சைவர் அனைவரும் 6 முதல் 7 வயதுக்குள்ளாக சமய தீக்ஷை பெற்றுக்கொள்ள வேண்டும். தீக்ஷை பெற்றுக்கொண்டவர்களுக்கே மந்திரசப அதிகாரமும், பூசை செய்யும் அதிகாரமும், இதர சிவ கைங்கர்யம் செய்யும் அதிகாரமும் உண்டு.

சிவபிரானே ஆசார்யனாய் வந்து நயன தீக்ஷை, ஸ்பரிசதீக்ஷை, வாசக தீக்ஷை, பாவனா தீக்ஷை, சாஸ்திர தீக்ஷை, யோக தீக்ஷை, ஔத்திரி தீக்ஷை ஆகியவற்றால் மாணாக்கர் பக்குவத்திற்கேற்பச் செய்து உரிய அதிகாரங்களைத் தந்தருளுவான்.

தீக்ஷை சமயம், விசேடம், நிர்வாணம் என மூவகைப்படும். சமய தீக்ஷையால் விரும்பப்பட்ட மந்திரங்கணிப்பதற்கு உரிமை உண்டு. விசேட தீக்ஷையால் விரும்பப்பட்ட மந்திரம் கணிப்பதற்கும், சிவபூசை செய்வதற்கும், யோகம் செய்வதற்கும் உரிமை கிடைக்கும். நிர்வாண தீக்ஷையால் மந்திரம் முதலிய ஆறு அத்துவாக்களையும் நீக்கி, முத்தியை அடையும் ஞான சாதனம் கிடைக்கும்.

சைவ சாஸ்திரப் பிரவேசம், சிவ கைங்கர்யம் செய்யும் அதிகாரம் சமய தீக்ஷை பெற்றோர்க்கே உண்டு. ஆகலான் அனைவரும் அத்தீக்ஷை பெற்றுக் கொள்வது சிறந்த சிவபுண்ணியமாகும்.

தக்க பக்குவமுடையார் அத்தீக்ஷை பெற்றுக்கொள்ள உதவுவதும் பெரிய சிவபுண்ணியமாகும்.

Koviloor Digital Library

நாற்பாதங்களில் நின்று ஒழுகல்

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன சிவாகமங்களில் கூறப்படும் நாற்பாதங்கள். அவற்றின் வழி நின்றொழுகுதல் சிவபுண்ணியங்களாம்.

சரியையாவது வைகறையில் எழுந்து காலைக் கடன்களை ஆக்கி நீராடி அநுட்டானம் செய்து, சிவாலயங்களிற்சென்று திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், நந்தனவனம் அமைத்துப் பூக்கொய்து, பூமாலை தொடுத்துச் சிவபிரான்குச் சாத்தக் கொடுத்தல், பூசனைபுரிதல், பெரியோர் அடியார்களைக் கண்டு வழிபடல், அவரோடு இணங்கி வாழ்தல், சிவாலயம் - சத்திரம் -சாவடி முதலியவற்றை புதுவதாகச் செய்வித்தல், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் நீராடல், சிவாலயங்களில் அங்கப்பிரதக்ஷிணாதிகளைச் செய்தல், தருமத்தின் வழிநின்று பொருள் ஈட்டல், அப்பொருளைக்கொண்டு சைவ,சன்னியாசி, பிரம்மச்சாரி, வானப்பிரத்தன் ஆகிய ஆச்சிரமிகளை, பசிப்பிணி முதலிய இடையூறுகள் உறாவண்ணம் காத்தல், பிதிர் தேவர்களுக்கு யாகாதி கருமங்கள் நீர்க்கடன் முதலியவற்றால் திருப்தி செய்தல், வந்த மாகேசுரரைப் பாதுகாத்தும் வரும் மாகேசுரர்களை எதிர்பார்த்தும் வாழ்தல். இனி பொது ஒழுக்கமாகிய உறவினர்களுக்கு உதவுதல், தானுந் தன் மனைவியும் ஒருமனப்பட்டு நடுவு நிலையை அனுசரித்திருத்தல், அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை என்னும் நன்னெறிகளைப் பொருந்தி வாழ்தல். பிறர் பொருள் கவர்தல், புறங்கூறுதல், பயனிலவற்றைப் பேசுதல், அநுசரித்தல் முதலிய தீயநெறிகளை விலக்குதல். இவற்றைப் பின்பற்றுவோர் சமய தீக்ஷை பெற்று அவ்வழிநின்று ஒழுகின் சிவலோகத்தையடைவர்.

கிரியையாவது: சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம், கோசலம், கோமயம், பால், தயிர், நெய், தேன், வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி, நாரத்தங்கனி, எலுமிச்சைக்கனி, மாதுளங்கனி, தமரத்தங்கனி, கொளுஞ்சிக்கனி, தேன், இளநீர், பனிநீர் முதலிய பூசாதிரவியங்களைக் கொண்டு சிவபிரான்குத் திருமஞ்சனாதிகளைச் செய்தல், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னுமிவற்றின் வழியாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐந்தாசைகளையும் நாளுக்குநாள் அடக்கல், விரதம், தேவதாபூசை, மந்திரம், யந்திரம், [illegible]ம், யாகம் என்னும் இவைகளை அனுசரித்தல். ஓர் உயிர்க்கு இடையூறு வாராமற் காத்தல், தவங்களில் நிற்றல் மனதை அடக்கி அறிவொடு கலந்து தற்பதத்தை உணரும் வரையில் சதாசாரியன் கட்டுரையையும், சாத்திரவிதியையும் கடைப்பிடித்திருத்தல் காம, குரோத, லோப,மோக, மத, மாத்சரியங்களை நீக்கல் முதலியனவாம்.

Koviloor Digital Library

இவற்றை அநுட்டிப்பவர் விசேட தீக்ஷை பெற்றுச் சிவபூஜை செய்தல் வேண்டும். இவர்கள் முடிவில் சிவபிரான்குச் சமீபத்தில் இருக்கும் பதவியைப் பெறுவார்கள்.

யோகமாவது: இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டுவகைப்படும். இயமம் என்பது கொல்லாமை, மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர் பொருள் விரும்பாமை, இந்திரியங்களை அடக்குதல் முதலியவாம். நியமம் என்பது தவம் தூய்மை, தத்துவநூல் ஆராய்தல், மனம் மகிழ்ந்திருத்தல், தெய்வம் வழிபடல் முதலியவாம். ஆதனம் என்பது சுவஸ்திகம், கோமுகம், பத்மம், வீரம், கேசரி, மயூரம், பத்திரம், முத்தம், சுகம் என்னும் ஒன்பதாம். இவை யோகம் செய்யும் பொழுது அமரும் நிலைகளாம்.

பிராணாயாமம் என்பது பிராணவாயுவை ரேசக பூரக கும்பகஞ் செய்தலாம். ரேசகம் - மூச்சு விடுதல், பூரகம் - மூச்சை இழுத்து உள்ளே வாங்கல் கும்பகம் - வாங்கிய மூச்சை உள்ளே நிறுத்துதல்.

பிரத்தியாகாரம் என்பது உபாதியை நீக்கி உள்நோக்குதலாம். தாரணை என்பது கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவற்றில் ஒன்றில் எப்பொழுதும் சிந்தையை நிறுத்துதலாம். தியானம் என்பது ஐம்புலம் அடக்கிச் சிவயோகம் செய்தலாம். ஆதார யோகம் பற்றி நின்று பின் நிராதார யோகத்தில் நிற்றல். சமாதி என்பது இந்திரிய முதலிய தத்துவ சேட்டைகட்கு ஏதுவாகிய உடம்புள்நின்று அவற்றோடு கூடினும், அவற்றிற் பற்றின்றி ஆன்மாவாகிய தன்னைத்தான் காணுதலாம். சிவயோக நெறி நின்றோர் சாரூப பதவியை அடைவர்.

ஞானமாவது: ஞானசாரியன் செய்யும் தீக்ஷா கிரமத்தால் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களையும், ஆத்ம தத்வம், வித்யா தத்வம் சிவ தத்வம் என்னும் மூவகைத் தத்துவக்கொத்தையும், தத்துவ ரூபதரிசன சுத்தம்-ஆன்ம ரூபதரிசன சுத்தம் - சிவரூபம் தரிசனம், யோகம், போகம் ஆகிய பத்துக் காரியங்களையும் அறிந்து அஞ்ஞானத்தினின்று நீங்கலாம்.

நிர்வாண தீக்ஷை பெற்றுச் சிவபுண்ணியம் மேலோங்கையால் மலபரிபாகமும் சத்திநிபாதம் உற்ற இருவினை ஒப்புடையவர்கட்கு சிவகுரு உணர்த்துவதாம். இந்த ஞானத்தை அநுட்டித்தவர்கள் முடிவற்ற பேரின்ப நிலயராயுள்ள சிவபெருமானையுற்று ஒற்றித்து நின்று சிவானந்தமடைவார்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களைத் தலைப்படுவது உண்மைத் தவமாகும். பெரும் சிவபுண்ணியமாகும்.

Koviloor Digital Library

வேத சிவாகம - திருமுறைகள் சாத்திரங்களைப் படிப்பித்தல்

வேத சிவாகமங்கள் சிவபிரான் திருவாக்கு. இவ்வுண்மையை சங்க இலக்கியங்கள் முதல் திருமுறையாதி பெரியோர் வாக்கு வரை உறுதிப்படுத்துகின்றன. நம்மவர்களாகிய சைவாசிரியர் வாக்கைப் புறக்கணித்து விட்டு, மேற்கு நாட்டு அறிஞர்கள் வாக்கைப் பிரதானமாகக் கொள்வோர் இப்பொழுது பெருகி வருகின்றனர். அதனால் வேதங்களையும், ஆகமங்களையும் பயில்வோரும், படிப்பிப்போரும் இல்லாது போய்விட்டனர். சைவநூற்கல்வியை மீண்டும் தழைக்கச் செய்யவேண்டும். கற்பார் இல்லாமையால் அந்நூல்களும் வழக்கிழந்து வருகின்றன. சைவசமூகம் அவற்றை இழந்து தவிக்க நேரிடும். சைவத் திருமடங்கள் செயலிழந்து வருகின்றன. ஆகையால் மீண்டும் அவ்வறங்களைக் கவனமாகப் பேணித்தனியாக சைவப்பிரபுக்களே வளர்த்தல் வேண்டும்.

வேதம் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என நான்காகும். சிக்ஷை வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிடம் என்பன இவ்வாறு அங்கங்களை வளர்த்து, வேதப் பொருளையும் முறையாகக் கற்பித்தல் சைவர் கடனாகும். *'நால்வேதம் ஆறங்கமானாய் போற்றி'* என்ற திருமுறை வாக்கையும் கருதுக.

இனி, சிவாகமங்களையும் முறையாகக் கற்பித்து ஆகமக் கலைகளையும் வளர்த்தல் சைவர்களுடைய முக்கிய கடனாகும். சைவமக்களுடைய இல்லங்களில் செய்ய வேண்டிய சுபக்கிரியைகள், அபரக்கிரியைகள் முதலியன செய்யவே இப்பொழுது ஆட்கள் அருகிவிட்டனர். அக்கிரியைகளின்றிச் செய்யப்படும் எச்செயலும் நன்மையைத் தரமாட்டாது. ஆலயங்களில் செய்யப்படும் பூஜை, யாகம், கும்பாபிஷேகம் முதலிய நற்செயல் சிவாகமங்களின் துணைக்கொண்டே நிகழுதல் வேண்டும். ஆலயபூஜை முறைமையறிந்து மந்திரம்-கிரியை-பாவனை கலந்து செய்ய வேண்டுமாயின் கட்டாயம் ஆகம அறிவு வேண்டும். ஆகமங்கள் பல்துறை அறிவுக் களஞ்சியம். அவற்றைப் புறக்கணிப்பது தற்கொலைக்குச் சமம். கிராமநிர்மாணம், சாலை நிர்மாணம், ஆலய நிர்மாணம், மண்டப நிர்மாணம் முதலிய பொறியியல் அறிவையும் அதற்குரிய அளவுகளையும், கட்டடத்திற்குரிய குற்றமற்ற கற்கள், மரங்கள் பற்றிய விபரங்களையும், உலோகங்களின் தன்மைகளையும் கூட ஆகமங்கள் தெரிவிக்கின்றன. பூஜை, அக்னிகாரியம், ஜபம், தியானம் ஆகியவை பற்றித் தெளிவான விபரங்களை ஆகமங்களே தெரிவிக்கின்றன. இவற்றை முறையாகக் கற்குந்தகுதி உடையார்க்குக் கற்பிப்பது சிவபுண்ணியமாம்.

Koviloor Digital Library

'தேவாரம்' முதலிய பன்னிருதிருமுறைகளையும் நமது இனங்குழந்தைகளுக்கு அவசியம் கற்பிக்க வேண்டும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்தும் பஞ்சபுராணம் எனப்படும். பூஜா காலங்களில் வேத பாராயணத்தை அடுத்துப் பஞ்சபுராணம் அவசியம் ஓதல் வேண்டும். பண்ணோடு ஓதுவதே உத்தமம். எனவே திருமுறைகளைக் கற்பிக்கப் பாடசாலைகளை ஏற்படுத்துவதும், அவற்றைப் பரிபாலிப்பதும் உத்தமச் சிவபுண்ணியமாகும். திருமுறைகளில் தான் தமிழ்ப்பண்கள் உள்ளன. தமிழ்ப்பண்களைப் பேணுதற்காகவாவது திருமுறைகளைப் பண்ணோடு கற்பிக்கவேண்டும். 1915 தொடங்கிச் சென்னையில் பத்தாண்டுக்கு மேலாகச் 'சைவம்' என ஒரு மாத சஞ்சிகை வெளிவந்தது. அச்சஞ்சிகையின் 1921 வருடம் ஆகஸ்டு மாத இதழில் கீழ்க்கண்டவாறு ஒரு பகுதி வெளிப்பட்டது.

'இக்காலத்தில் தேவாரபாரயணஞ் செய்வோருள் பெரும்பாலோர் தாங்கள் ஓதும் அருட்பாக்களின் பொருளைச் சிறிதளவாயினும் அறிந்து ஓதுவதில்லை. குருட்டுப் பாடஞ் செய்தோதுகிருர்கள். இவர்கள் அர்த்த ஞானமின்றி இராக ஞானமிருந்தாற் போதுமென்றெண்ணிக்கொண்டு இலக்கிய இலக்கணப் பயிற்சியும், சாஸ்திரப்பயிற்சியும் சிறிதுமின்றியே, இராகம் இழுக்கவும் தாளம் போடவுமாத்திரம் கற்றுக்கொண்டு, தாங்கள் நெட்டுருப் பண்ணி வைத்திருக்கும் செய்யுட்கள் ஒவ்வொன்றையே நீண்ட நேரமாக இராகமிழுத்திழுத்துப்பாடிக் காலங்கழிக்கின்ருர்கள். இவர்கள் பாடும் அருட்திருப்பாக்களுக்கும், கீர்த்தனைகளுக்கும் வித்தியாசம் காண்பதரிதாயிருக்கின்றது. இவர்கள் தங்களுக்குள்ள இராக ஞானத்தைக் காட்டிக்காட்டிப் பாடுகின்ருர்களேயன்றி, தாங்கள் பாடும் பாக்களின் பொருளையுணர்ந்து மனமுருகப் பாடுகிறதில்லை. இவர்கள் 'வயிறது குழிய வாங்கல், அழுமுகங்காட்டல், புருவமேறல், சிரம் நடுக்குறல், கண்ணுடல், மிடறுவீங்கல், பையென வாயங்காத்தல், எயிறது காட்டல், வெள்ளை, காகுளி, கீழோசை முதலிய குற்றங்களை இயன்றவரையிலேனும் அகற்றிப்பாடமுயல்வதில்லை. போதிய புலமையில்லாமையால் இவர்கள் கற்றவர் கழகத்தில் கல்லாதாரோடொப்ப எண்ணப்படுகின்றார்கள்.

தேவாரத்தின் மீது வைத்த ஆர்வமிகுதியால் ஜனங்கள் இவர்களிடத்திலுள்ள குறைகளை நோக்காமல் இவர்களை மிகவும் உபசரித்தலால் இவர்கள் தங்களை அதிகமாக மதித்துக் கொண்டு தங்களை உபசரிப்பவர்களுக்கு அதிகப்பிரயாசையைத் தருகின்றர்கள். நெஞ்சு நோமென்று பாடப் பயப்படுகிறர்கள். திருவிழாக் காலங்களில் சுவாமி எழுந்தருளுமுன் இவர்கள் பாராயணஞ் செய்ய எழுந்தருளுவதில்லை. இலக்கிய இலக்கணப் பயிற்சியின்மையால் பிழையறப் பாடுவதுமில்லை.

Koviloor Digital Library

பதங்களை யொன்றோடொன்று பிரிக்கத்தகாதவிடங்களிலும், நடுப்பாதியிலும் பிரித்தும், சேர்க்கத் தகாத இடங்களில் சேர்த்துப் பாடிப் பாராயணத்தை அவலமாக்கி விடுகிறார்கள். சிவபெருமான் திருவருள் பெற்ற பெரியோர்கள் தேவாரத்திருப்பதகங்களுக்குப் பண்ணடைவு வகுத்திருந்தும், அவரவர்கள் தங்கள் தங்கள் மனம் போனபடியெல்லாம் பாடுகின்றார்கள். ..... நம்மவர்கள் இனி இயன்ற அளவிலாயினும் முற்கூறிய குறைகளையகற்றிப் பாராயணஞ் செய்தும், செய்வித்தும் அதனாலாய பெரும்பயனை அடையுமாறு சிந்தித்து வரையலானோம். இதுபற்றிப் பெரியோர்கள் எம்மீது சீற்றங்கொள்ளற்க - என்பதாம். 1921 இல் சைவம் பத்திராதிபர் எழுதிக்காட்டிய மேற்கண்ட குறைகள் இன்றும் நம்முடைய தேவார வாணர்களிடம் காணப்படுவனவே. அக்குறைகளைக் களைந்து கற்றும் கற்பித்தும் வருவாராயின் பெரும் சிவபுண்ணியமாம்.

ஸ்ரீ மெய்கண்ட தேவர் அருளிய சிவஞானபோதம் முதல் பதினான்கு சித்தாந்த சாத்திரங்கள் தமிழ்மொழியில் உள்ளன. அவை ஞான சாத்திரங்கள். அவற்றைக் கற்போரும், கற்பிப்போரும் சைவநல் ஒழுக்கத்தில் நிற்பவராதல் அவசியம். பல்கலைக்கழகங்களில் இப்பொழுது சைவசித்தாந்த சாத்திரங்கள் கற்பிக்கப்படுகின்றன. அச்சாத்திரங்களைக் கற்பிக்கிற பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சைவசமயியாக இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. மாணவர்களும் அன்னரே.

சிவதீக்ஷை பெற்று நித்திய ஒழுக்கத்தில் நின்று இலக்கிய இலக்கண தர்க்க நூற்பயிற்சி பெற்ற சைவாசிரியர்களைக் கொண்டு சித்தாந்த சாத்திர பாடம் கற்பிக்க வேண்டும். சந்தான ஆசிரியர்களை மதித்துப் போற்றி சற்சம்பிரதாய வழி நன்மாணாக்கர்க்கு சித்தாந்த சாத்திரங்களைக் கற்பிக்க வேண்டும். அப்படிப்பட்ட பாடசாலை ஏற்படுத்திக் கற்பிப்பதும் சிவபுண்ணியம்; கற்பதும் சிவபுண்ணியமாம்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

அபிஷேகத் திரவியங்களும் அதன் பயன்களும்

சுத்தஜலம்	–	மனச் சாந்தியைத் தரும்
சந்தனாதி தைலம்	–	சுகத்தைத் தரும்
நல்லெண்ணை	–	மனத்தூய்மை தரும்
அரிசி மாவு	–	கடனைப் போக்கும்
நெல்லி முள்ளி	–	ரோக நிவர்த்தி
மஞ்சட் பொடி	–	ராஜவசியத்தைத் தரும்
பஞ்சகவ்யம்	–	தூய்மை தரும்
பஞ்சாமிருதம்	–	வெற்றியைத் தரும்
நெய்	–	பேரின்பத்தைத் தரும்
பால்	–	ஆயுளை வளர்க்கும்
தயிர்	–	புத்திரப் பேற்றைத் தரும்
தேன்	–	இனிய குரலைத் தரும்
கருப்பஞ்சாறு	–	ஆரோக்யத்தைத் தரும்
சர்க்கரை	–	பகைனை நீக்கும்
பழபஞ்சாமிர்தம்	–	செல்வத்தைத் தரும்
வாழைப்பழம்	–	பயிர் வளர்ச்சி தரும்
பலாப்பழம்	–	உலக வசியத்தைத் தரும்
மாம்பழம்	–	நல்ல ஞானத்தைத் தரும்
தேவதாம்ரம்	–	முக்தி பேறு தரும்
தமரத்தம் பழம்	–	பூமிலாபத்தைத் தரும்
மாதுளை	–	க்ரோத புத்தியைப் போக்கும்
கொழுஞ்சி, நார்த்தை	–	சோகத்தைப் போக்கும்
சாத்துக்குடி & கமலாரஞ்சு	–	ஆலோசனை கூறும் தகுதியைத் தரும்
எலுமிச்சை	–	அகால மரணத்தைப் போக்கும்
இளநீர்	–	ராஜ்யத்தைத் தரும்
அன்னாபிஷேகம்	–	அன்னப் பெருக்கத்தைச் செய்யும்
சந்தன குழம்பு	–	ஸாயுஜ்யத்தைத் தரும்

Koviloor Digital Library

மந்திரான்னம்	-	தானிய விருத்தி
பாத்யம்	-	பாபங்களைப் போக்கும்
ஆசமனீயம்	-	செல்வத்தைத் தரும்
அர்க்கியம்	-	கர்மாவின் பயனடைதல்
ஆஸனம்	-	புத்திரப்பேறு
தூப தீபங்கள்	-	நல்ல அழகைத் தரும்
ஸ்நபனம்	-	பிறவிப் பயன் தரும்
வில்வஜலம்	-	சாலோகத்தைத் தரும்
ஸஹஸ்ர தாராபிஷேகம்	-	சிவஞானத்தைத் தரும்
கோசிருங்கம்	-	வியாதி இல்லாத வாழ்வு
சங்க பூஜாபிஷேகம்	-	புண்ணியப் பேறுகளைத் தரும்
விபூதி அபிஷேகம்	-	சத்ருக்களைப் போக்கும்
சுத்தான்னம்	-	புத்திர விருத்தி
வஸ்திரம்	-	தரித்திரத்தைப் போக்கும்
பச்சக்கற்பூரம்	-	உட்பகை நீக்கம்
புனுகு	-	வெற்றி
சந்தனம்	-	பாக்கிய மேன்மை
அக்ஷதை	-	ஆணவாதி மலநீக்கம்
புஷ்பம்	-	துக்கத்தைப் போக்கும்
புஷ்பமாலை	-	எட்டுவிதமாத ஐசுவர்யங்களைத் தரும்
தாம்பூலம்	-	நிறைவுதரும்

இவ்வாறு ஸ்ரீமத் காமிக ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ளது

"பாலினால் நறு நெய்யால் பழத்தினால் பயின்றாட்டி"

- திருமுறை

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 30177

Koviloor Digital Library

விழா நாயகரின் மாமனார், மாமியார்

'ஸ்ரீ பரமகுருநாதர்' ஸ்வர்க்கஸ்ரீ **M. கிருஷ்ணக் குருக்கள்** அவர்கள்

ஸ்வர்க்கஸ்ரீ **K. முத்து அம்மாள்** அவர்கள்

விழா நாயகரின் தந்தையார், தாயார்



ஸ்வர்க்கஸ்ரீ **R. முத்துசுவாமி பட்டர்** அவர்கள்

ஸ்வர்க்கஸ்ரீ **M. அகிலாண்டம்** அவர்கள்

Koviloor Digital Library

பிள்ளையார்பட்டி
ஸ்ரீ கற்பக விநாயகர்

இலண்டன் ஸ்ரீ முருகன்

ஸ்ரீ சங்கரலிங்க சுவாமி ஸ்ரீ கோமதி அம்பாள்
அம்பை சின்னசங்கரன்கோவில்

கல்யாண தீர்த்தம்
(தாமிரபரணி)

அகஸ்தியர் அருவி

ஸ்ரீ அகஸ்த்தீஸ்வரர் ஸ்ரீ உலோபாமுத்திரை

கோமதி ஆப்செட் பிரிண்டர்ஸ். அம்பை. Ph : 250655